இலக்கிய வரலாறு

இரண்டாம் பாகம்

ஆசிரியர்:

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்.

மூன்றாம் பதிப்பு

[முதலாம் இரண்டாம் பதிப்புக்களிற் காணப்படாத
புதிய பொருள்கள் பல இப்பதிப்பில் உள்ளன.]

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

பவழக்காரத் தெரு :: சென்னை 1

1949

பதிப்புரிமை]

[விலை ரூ. 3

மூன்றாம் பதிப்பு (திருத்திய பதிப்பு) நவம்பர் 1949.

6471a

The Progressive Printers, Madras 1.

பொருளடக்கம்

அதிகாரம்			பக்கம்
அ.	மாணிக்கவாசகர் காலம்	....	271
கூ.	சமணர் ஆட்சிக் காலம்	....	277
ய.	தேவாரக் காலம்	....	304
கக.	ஆழ்வார் காலம்	....	313
கஉ.	திருவிசைப்பாக் காலம்	....	324
கந.	சித்தரும் சித்தர் நூலும்	....	333
கச.	பதினொராந் திருமுறை	....	339
கரு.	சமணரது நூற்கிளர்ச்சி	....	346
கசா.	சைவ காப்பியக்காலம்	....	359
கஎ.	உரையாசிரியர் காலம்	....	378
கஅ.	தத்துவ நூல்கள்	....	386
ககூ.	பதினைந்தாவது நூற்றாண்டு	....	396
உய.	பதினாறும் நூற்றாண்டு	....	406
உக.	பதினேழாம் நூற்றாண்டு	....	412
உஉ.	பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி	....	426
உந.	சிவஞான முனிவர் காலம்	....	434
உச.	ஆங்கிலச் சார்புக் காலம்	....	440
உரு.	தற்காலம்	....	477

இலக்கிய வரலாறு

அதிகாரம் அ

மாணிக்கவாசகர் காலம்

கடைச்சங்கப் புலவர் காலம் மூன்றாவது நூற்றாண்டின் முற்பாதியோடு முடிகின்ற தென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. அதற்குப் பின் மாணிக்கவாசகப் பெருமானது காலம் ஆயத்தக்கது.

உயர்திரு மறைமலையடிகள் செய்த விரிந்த நுண்ணிய ஆராய்ச்சியால் உக்கிரப் பெருவழுதிக்குப் பின் மாணிக்கவாசக அடிகள் திருக்கோவையாருட் குறித்த (௩0௧) வரகுணனும் அவனுக்குப் பின் அடிகள் காலத்தில் வாழ்ந்திருந்த அரிமர்த்தனனும் அரசாண்டனரெனத் தெரிகிறது. போர்புரிவதில் வல்லவனாய் எட்டாவது நூற்றாண்டுக் கல்லெழுத்துக்களிற் பேசப்பட்ட வரகுணன் இவனின் வேறு. வரகுணன் என்ற பேர் வடமொழித் தொடராதலின், அப்பெயருடைய மன்னன் மூன்றாவது நூற்றாண்டில் திகழவில்லை யென்று கூறுதல் தவறு. உக்கிரப் பெருவழுதி யென்ற சொற்றொடரில் 'உக்கிர' என்ற சொல் வடமொழியாதல் காண்க. வரகுணன் என்ற சொற்றொடரைத் தமிழ் என்று கொள்வாருமுளர். எட்டாவது நூற்றாண்டில் திகழ்ந்த வரகுணன் முன்னையோன் போலச் சிவனடிப் பேரன்பு மிக்கவனல்லன்.

புத்த மதத்திலிருந்து வேறல்ய மதமாகிய சைவத்திற்குச் இவர் வந்ததாக மகாவமிச மென்னும் புத்த நூலிற் குறித்த காலம் சுமார் கி. பி. 302 முதல் 315 வரை உள்ள தாகும். மாணிக்கவாசகர் புத்தரை வென்ற காலமும் அஃதென்றே கருதப்படுகின்றது. கி. பி. மூன்றாவது நூற்றாண்டில் மலையாளக் கரைக்கு வந்த சிரியக் கிறித்துவ பாதிரிமார்கள் மாணிக்கவாசக அடிகளைக் குறித்துத் தம் நாட்டினருக்கு எழுதியுள்ள கடிதங்களிலுைலே மூன் றாம் நூற்றாண்டின் இறுதியே அடிகள் காலமென்று விளங்குகின்றது.

அடிகள் காலத்தில் தில்லைக்கருகில் கடற்கரை இருந் தது. திருஞான சம்பந்தர் காலத்தில் கடல் சற்று வில கிப்போய்விட, கழி அவ்விடத்தில் இருந்ததாகத் தெரி கிறது. "கடல் தில்லை யன்னாய்" எனத் திருக்கோவை யாரும், "கழிசூழ் தில்லை" எனத் தேவாரமும் கூறுதல் காண்க. "புலியூர் சுற்றும் போர்க்கடலே" என்ற திருக் கோவையார் அடியுங் காண்க. திருப்பெருந்துறையும் அடிகள் காலத்தில் கடற்கரைப் பட்டினமாக இருந்தது.

திருவாசகம் தேவாரத்திற்கு முன் என்பது பாவியல் வேற்றுமையால் அறியற்பாலது. அடிகள் காலத்திலே தான் அகவற்பாவோடு விருத்தப் பாக்களும், கட்டளைக் கலித்துறைகளும் விரவிவழங்கலாயின. திருவாசகத்துள் சுமார் ௩௨௯ விருத்தப் பாக்களே உள்ளன. தேவார காலத்தில் அகவற்பாக்கள் ஒழிந்து விருத்தப்பாக்களே மிகுவனவாயின. வடசொற்களும் தேவாரத்தில் உள்ள அளவு திருவாசகத்துட் காணப்படவில்லை.

திருவாசகத்துள் பாடல்களுக்குப் பண் ஏற்படாமை, அங்ஙனஞ் செய்வாரின்மையாலும், திருவாசக காலத்தில்

இசைத்தமிழ் குன்றியிருத்தல் கூடுமாதலானுமென்க. திருவாசகத்திலுந் தேவாரத்திலும் வழங்குஞ் சைவநூற் சொற்றொடர்கள் மிக வேற்றுமை யுடையனவல்ல. இரண்டினும் ஆகமத்தைப் பற்றிய குறிப்பும், சிவபெருமான் மூவர்க்குந் தலைவராய கடவுளென்பதும், மலம், பாசம் என்ற சொற்களுங் காணப்படுகின்றன. தேவார காலத்தில் சமணர் முயற்சியால் திருமந்திர முதலிய நூலாராய்ச்சி மிகவுங் குன்றியிருந்தமையால், மும்மலம், முப்பத்தாறு தத்துவம் முதலிய சொற்றொடர்கள் இப்பொழுது கிடைத்துள்ள தேவாரங்களிற் காண்டற் கரியனவாயிருக்கின்றன. ஆயினும் அப்பர் பெருமான் தேவாரத்துள் தொண்ணூற்றாறு தத்துவங்களைக் குறிக்குஞ் சில திருப்பாட்டுகள் உள்ளன. திருவாசகத்தின் பழமை அதனுள் தேவாரத்துட்போலப் பல்லவரைப் பற்றி யாதுங் கூறாமையானுந் தெளியப்படும்.

எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களினும் மிக அதிகமாக மூன்றாம் நூற்றாண்டிலே தோன்றிய திருவாசகத்துள் வடசொற்கள் காணப்படுவது எற்றாலோவெனின், புத்தப் பெருங்காப்பியங்கள் எழுந்த காலத்தில், சமயக் கருத்துக்களைத் தெரிக்குஞ் சொற்றொடர்கள் வடமொழியினின்றே பெரிதும் எடுத்தாளப்பட்டன. புத்தமும் சமணமும் வடநாட்டிற் றோன்றினமையின், அச்சமய நூல்களுள் வடசொற்கள் பெரிதும் வழங்கின. சமயக் கணக்கர் பலர்க்கும் தமது கொள்கை விளங்கும் பொருட்டுச் சைவர்களுந் தம் கருத்துக்களை வடசொற்களால் விளக்கத்தொடங்கினர். அங்ஙனந் தொடங்கி ஒரு நூற்றாண்டு கழிந்தபின்னரே திருவாதவூரடிகள் திருவாசகம் அருளிச்செய்தமையால், அத் திருமுறைக்கண் பல வடசொற்கள் புகுவனவாயின.

சைவசித்தாந்தத்தைப் பற்றிய தெளிவான கொள்கைகள் ஆகமச் சொற்றொடர்களால் முதன் முதல் திருவாசகத்திலே விளக்கப்பட்டுள்ளன. சில உபநிடதங்களிலும், மணிமேகலையிலும், 'ஆகமம்' என்ற சொல் காணப்படுதலால், மணிவாசகப் பெருமான் காலத்துக்கு முன்னேயே ஆகமங்கள் இருந்தனவென்பது தெளிவு. திருவாசகத்திலே 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்றும், 'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க' என்றும் வரும் அடிகளால், வேதத்தினும் ஆகமமே சிறந்ததென்ப துணர்த்தப்பட்டது. ஆகமங்களை மகேந்திரத்திருந்து ஐம்முகங்களால் இறைவன் பணித்தருளின னென்றமையாலும், மகேந்திரம் பொதியின் மலைக்குத் தெற்கிலிருந்ததென்று சிவதருமோத்திரங் கூறுதலாலும், வடமொழியாகமம் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட அருள் நூல்களின் மொழிபெயர்ப்பாமென்று கொள்வதற் கிடமுண்டு. திருவாசகத்திற்கு முன்னிருந்த திருக்குறளொழிந்த தமிழ்ச் சமய நூல்கள் மறைந்தொழிந்தன. அவைகள் ஆகமங்களென்ற பெயரால் அக்காலத்தில் வழங்கியிருத்தல் கூடும். திருமூலர் தாமியற்றுஞ் செந்தமிழ் அருநூலை ஆகமமென்றார். 'சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே' யென்றது காண்க.

மாணிக்கவாசகர் தமது நாடு பாண்டிநாடென்று குறித்தாரே யொழியத் தாம் பிறந்த திருப்பதி வாதவூரென்று கூறவில்லை. அவர் தமக்குச் சிவபெருமான் பெருந்துறையில் பேரருள் புரிந்ததையும், புத்தரை வென்ற குறிப்பையும், பாண்டிய மன்னன் பொருட்டு இறைவர் மண்சுமந்ததையும், நரிபரியாக்கியதையும், உத்தரகோச மங்கையில் அடியார் பலரை ஆட்கொண்டதையும், தில்லை, திருக்கழுக்குன்றம் முதலிய

வற்றைத் தாம் வணங்கியதையுந் திருவாசகத்திற் குறித்துள்ளார். தேவாரமூவருக்கு இறைவர் அருள் செய்ததை அவர் யாண்டும் இயம்பாமையாலும், திருவாசகம் தேவாரத்திற்கு முற்பட்ட தென்பது தெளிவு. அப்பர் பெருமான் தேவாரத்துள் மணிவாசகரைப்பற்றி 'நரியைக் குதிரை செய்வானும்', 'வையைத் திருக்கோட்டில் நின்ற திறமுந் தோன்றும்' என்றருளிச் செய்தலுங் காண்க. மாணிக்கவாசகர் 'ஆதிசைவமரபின'ரென்று வடமொழி ஆலாசிய மான்மியத்துட் கூறப்பட்டது. 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' என்று நம்பியாண்டார் நம்பி இவரை ஓதிதந்தமையாலும் அது தெளியப்படும்.

திருவாசகம் நான்கு அகவல்களையும், அந்தாதித் தொடையாற் பாடப்பட்ட 'திருச்சதகம்' என்பதனையும், மகளிர்நீராடல், பூக்கொய்தல், உந்தி, அம்மானை, ஊசல், தோணோக்கம், சாழல் முதலியவற்றை வாயிலாக்க் கொண்ட பல பதிகங்களையும், குயிற்பத்து, கிளிப்பத்து, திருப்பள்ளியெழுச்சி முதலியவற்றையுங் கொண்டிலங்கும் போக்கினை நோக்குமிடத்து, அது பண்டைத் தமிழரது பாட்டிலக்கிய நெறியைத் தழுவியுள்ள தென்பது தெளிவு. தலங்களின் பேரையுடைய பதிகங்கள் ஒன்றிரண்டே காணப்படுகின்றன. இத்தகைய முறை தேவாரத்துள் பெரிதுங் காணப்படாமை உற்று நோக்கத் தக்கது. மணிமேகலையுட் கூறிய இறைவனது எண் வடிவம் திருவாசகத்துட் பெரிதும் போற்றப்படுகின்றது. சமண சமயத்தைப்பற்றித் திருவாசகத்துள் யாதுங் குறிக்கப்படவில்லை. திருவாசகமானது இனிய செஞ்சொற்களமையப்பெற்றுக் கனிவு மிகுந்து, பாநயஞ் செறிந்து, மனவுருக்கத்தையுங் கடவுட் பேரன்பையும், பேரின்ப நுகர்ச்சியையும் விளைப்பதில் இணையற்றதாய்த் திகழ்

கின்றது. அந்நூலின் நயங்கள் முழுவதும் விரித்த லியலாது.

திருக்கோவையார் என்னும் நூலானது இப்பொழுதுள்ள கோவை நூல்களுள் தொன்மையுந் தலைமையுமுடையது. அதன் பேரின்பக் கருத்துஞ் சிற்றின்பக் கருத்தும் அறியற்பாலன. முன்னையது 'சிவாநுபவம்' உடையார்கே முற்றிலும் விளங்குமென்றும், பின்னையதனையே பிறர் ஆயக்கடவரென்றும் அந்நூற்கு உரைசெய்த பேராசிரியர் மொழிந்தனர். தலைவன் றலைவியர்க் குரிய களவு கற்பென்னும் அன்பின் ஐந்திணை யொழுக்கத்தை இருபத்தைந்து பகுதியாகப் பகுத்து, நானூறு துறைகளாற் புனைந்துரைத்த இத்தகைய நூல் பிறமொழிகளிற் கிடையாது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தைக் குறித்த பாட்டு வருமாறு:-

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தையுள்ளு
முறைவா னுயர்மதிற் கூடலி
னாய்ந்தவொண் டீந்தமிழின்
றுறைவாய் நுழைந்தனை யோவன்றி
யேழிசைச் சூழல்புக்கோ
விறைவா தடவரைத் தோட்கென்கொ
லாம்புகுந் தெய்தியதே." (உ0)

இந் நூல் கட்டளைக் கலித்துறையில் இயற்றப்பட்டது. தில்லைப்பெருமான் கோவை பாடும்படி அடிகளைக் கட்டளை யிட்டமையால் இந்நூல் அருளிச் செய்யப்பட்டது. பன்னிருதிருமுறையிற் சேர்க்கப்பட்டது திருவாசகமே; திருக்கோவையார் சேர்க்கப்படவில்லை. இருநூலினையும் சிவபெருமானே அந்தணனாகி வந்து எழுதிப் போந்தனன் என்று புராணங் கூறுகின்றது.

மூன்றாவது நூற்றாண்டின் பிற்பகுதி முதல் நான்காவது நூற்றாண்டு முற்பகுதி முடியச் சைவந் தழைத்தோங்கிய கால மென்னலாம். இக்காலத்திலே தமிழ்ச்சமயக் கருத்துக்களை வடசொற்களால் தெரிவிக்கும் வழக்கம் ஏற்பட்டிருத்தல் கூடும். இவ்வழக்கம் புத்தர்களோடு தொடங்கியதாகும். மணிமேகலையிற் புத்தசமயக் கருத்துக்களும், பிறசமயக் கொள்கைகளும் கூறிய பகுதியுள் வடசொற்கள் மிகுதியும் பயின்று நிற்றல் காண்க. வடநூற் கருத்துக்கள் ஒரு சிலவே இக்காலத்திற்குமுன் தமிழ் மக்களுட் பயின்றுவந்தன. மாணிக்கவாசகர் காலத்துக்குப் பின் பல்லவ மன்னர் காலத்திலே வடசொற்களும் ஆரியக் கருத்துக்களும் தமிழருட் பரவி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதிகாரம் க

சமணர் ஆட்சிக் காலம்

நான்காவது நூற்றாண்டின் நடுவிலிருந்து ஐந்தாம் நூற்றாண்டின் நடுவரை, சைவமும் வைணவமும் ஆரியத்தொடர்புற்ற கால மென்னலாம். ஐந்தாம் நூற்றாண்டு நடு முதல் சமணசமயமும் சமணப்புலவர் வாயிலாக மிகுந்த வடசொல் வழக்கும் தென்னாட்டில் ஏற்பட்டன. இக்கால முதற்றான் கல்லெழுத்துக்களும் மிகுதியாக ஏற்படலாயின. ஆறாம் நூற்றாண்டிலே சமணப் பெருங்காப்பியங்களும், சைவசித்தாந்தப் பெருநூல்களும், முதல் நிகண்டு நூல்களும் இயற்றப்பட்டன. அகவற்பாவே பெரிதுங் காப்பியக் கருவியாகத் திகழ்ந்தது. திருமந்திர யாப்பானது வெண்

பாவின் சார்பானது. அஃது இந் நூற்றுண்டிற்குப் பின் பெருவழக்கிறுய்ப் பெருங்காப்பிய யாப்பென வந்த விருத்தப்பாவிற்கும், இந்நூற்றுண்டிற்கு முன் அத்தகைய கருவியாய்நடந்த அகவற்பாவிற்கும் நடுவில் நின்று, காலப் போக்கின் வேறுபாட்டைத் தெள்ளிதிற் குறிப்பதாகும். ஆருவது நூற்றுண்டு முதல் உலா, பரணி முதலிய சிறு காப்பியங்கள் பல்கிப் பெருகத்தொடங்கின. கி. பி. ஏழாவது நூற்றுண்டின் முற்பகுதியிலே விருத்தப்பாவால் சம்பந்தரும் அப்பரும் தேவார மியற்றியருளினர். ஏழாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே நிகண்டு நூல்கள் எழுந்தன. ஒன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலே சுந்தர மூர்த்திகளால் தேவாரத்திருப்பதிகங்கள் இயற்றப்பட்டன.

கீழ்க்கணக் கென்பது அறம் பொரு ளின்ப மென்னும் மூன்றையும் பற்றிப் பெரும்பாலும் வெண்பாவினுற் பாடப்பெற்றவை.

" அடிநிமிர் பில்லாச் செய்யுட் பகுதி
அறம்பொரு ளின்பம் அடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்."

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் கடைச்சங்க நூல்கள் யாவற்றிற்கு முன்னுக இயற்றப் பட்டது. வேறு சில கடைச்சங்கத்தார் காலத்திலே கபிலராலும் பிறராலும் இயற்றப்பட்டன. எஞ்சியவை மணிவாசகப் பெருமான் காலத்திற்குப் பின்னும், கி. பி. ஐந்தா நூற்றுண்டி னிறுவப்பட்ட சமண சங்க காலத்திலும் இயற்றப்பெற்றன. கார்நாற்பது, களவழி நாற்பது, இன்னு நாற்பது இனியவை நாற்பது என்னும் நான்கு நூல்களும் கடைச்சங்கத்தார் காலத்தில் இயற்றப்பெற்றனவே.

கார் நாற்பது

இது மதுரைக் கண்ணங் கூத்தனா ரென்னும் புலவராற் பாடப்பெற்றது. கண்ணன் என்பது புலவரின் தந்தை யார் பெயர். தலைமகனைப் பிரிந்த தலைமகள் கார்காலத் திலே அவன் மீள்வதை எதிர்பார்த்திருப்பதைக் கூறுவதே இந்நூலின் பொருளாகும். இந்நூலின் ஒவ்வொரு செய் யுளிலுங் காரினைப்பற்றிய புனைந்துரை காணப்படுதலின், இந்நூல் காலத்தாற் பேர் பெறுவதாயிற்று. இதில் கார் காலமும், முல்லை நிலமும், அக்காலத்திற்குரிய தம்பலப் பூச்சி கருவிளம்பூ முதலிய கருப்பொருள்களும் மிகவும் நயம் பெறக் கூறப்பட்டுள்ளன. கார்நாற்பதில் முதற் செய்யுளுள் திருமால் வணக்கங் குறிப்பாக உணர்த்தப் பட்டது. கார்த்திகை விளக்கீடும் வேள்வித் தீ மினுக்கமும் அக்கால வழக்கங்களைக் குறிப்பன. பிரிவாற்றாமையான் ஏற்பட்ட தலைவியின் மேனி வாட்டமும், பசலையும் உரிப் பொருட் பகுதியாக அமைந்தன.

களவழி நாற்பது

இது பொய்கையா ரென்னும் புலவரா லியற்றப் பட்டது. இவர் தம் அரசனாகிய சேரமன்னனைச் சோழன் செங்கணானது சிறையினின்றும் மீட்பதற்காக இதைப் பாடினா ரென்ப. இப்புலவர் சேரநாட்டில் தொண்டி நகரத்தில் வதிந்தவர். இவர் பொய்கையாழ்வா ரல்லர். களவழி சோழமன்னனது போர்க்களவென்றியை வியந்து கூறுவதாய்ப் படை அழிவுடன், வென்றுகொண்டதைப் பரிசிலர்க்கு ஈதலைப் புகழ்ந் துரைப்பது. இந்நூலின் பதினேழாம் பாட்டில் கார்த்திகை விழா விதந்தோதப் பட்டது. அதில் சோழன் செங்கணான் செங்கட்சினமா லெனப் புகழப்படுதல் காண்க. இந்நூல் பதினான்காம்

பாட்டில் செங்கணான் கொங்கு நாட்டினரை வென்றதாகக் கூறப்பட்டது. அந்நாடு சேர அரசனைச் சார்ந்தது.

இந்நூலினுள் நயமிக்க உவமைகள் பல உள்ளன. ஆசிரியர் இரண்டு சிறகின்கண் ணுள்ள ஈர்க்குகளைப் பரப்பிப் பிணங்கவர வரும் கழுகுகள் திறமான ஓசையுடைய முழவுபோல்வன வென்றும், குருதிபடிந்த போர்க்களமானது நிலமடந்தை செம்போர்வை போர்த்தது போலு மென்றுஞ் செப்பினர். இந்நூலின் ஒவ்வொரு செய்யுளும் 'அட்டகளம்' என்ற சொற்றொடரில் முடிகின்றது.

இனியவை நாற்பது

இது பூதஞ் சேர்ந்தனு ரென்னும் புலவராற் பாடப்பெற்றது. இவருங் கபிலரைப் போல மூவரைப் பாடினர். மதுரை எழுத்தாளர் சேந்தன் பூதனு ரென்னும் புலவர் அகநானூற்றுள் ஒரு செய்யுள் செய்துள்ளார். அவரும் இவரும் உறவினராயிருத்தல் கூடும். இவருடைய சில கருத்துக்கள் பின் வரும் அடிகளால் விளங்கும்.

"பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே"

"கற்றலிற் காழினிய தில்"

"ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிது"

"ஒப்ப முடிந்தால் மனைவாழ்க்கை முன்னினிது"

"குழவி தளர்நடை காண்ட லினிது"

"கடன்கொண்டு வாழாமை காண்ட லினிது"

நால் நாற்பதைப் போலவே ஐந்திணையைப் பற்றிய நான்கு கீழ்க்கணக்கு நூல்களும், கடைச்சங்கத்தார் காலத்திலேயே இயற்றப்பட்டன வென்று தெரிகின்றது.

திணைமொழி ஐம்பது

திணைமொழி ஐம்பது என்னும் நூல் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியைப் பாடிய சாத்தந்தையாரின் புதல்வராகிய கண்ணன் சேந்தனாரால் பாடப்பட்டது. ஒவ்வொரு திணைக்கும் பப்பத்துப் பாட்டாக இயற்றப் பட்டது. குறிஞ்சித்திணைப் பாட்டுக்கள் சேட்படுத்த விடத்து வரைவு கடாதலையே மிகுதியுங் கூறுவன. அருவியின் வனப்பு இப்பகுதியுள் அழகாகப் புனைந்துரைக் கப்பட்டது.

> " யாழுங் குழலு முழவு மியைந்தென
> வீழு மருவி விறன்மலை நாடே"

என்றது காண்க.

இதில் பாலைத்திணையிற் பொருள்வயிற் பிரிவும் உடன் போக்குங் கூறப்பட்டன; பாலையின் இயற்கை இனிதியம்பப்பட்டது.

> " கதிர்சுடக் கண்ணுடைந்து முத்தஞ் சொரியும்
> வெதிர்பிணங்குஞ் சோலை வியன்கானஞ் செல்வரால்"

என்றது காண்க.

பாலையுள் கல்லதர், சிறுபுறவு, சிறிய புல்லூறு, குருந்து, நுணு, மராமரம் முதலியன புனைந்துரைக்கப் பட்டுள்ளன. முல்லையுள் காயா, கோடல், குருகு முதலிய கருப்பொருளும்; கார்வரவு, பசலையூர்தல், தலைவர் வரவு முதலியனவு மினிதுரைக்கப்பட்டன. மருதத்துள் சூள் பிழைத்தலும், வாயில் மறுத்தலும் உரிப்பொருளாக வந்துள்ளன. நெய்தற்கண் தலைவன் வரவைத் தலைவி தனது உடற்பூரிப்பா லறிந்ததாகத் தோழிக்குக் கூறுவது மிகவும் நயமானது.

"தவழ்திசைச் சேர்ப்பன் வருவான்கொல் தோழி
திகழுந் திருவமர் மார்பு"

என்றது காண்க.

திணைமாலை நூற்றைம்பது

திணைமாலை நூற்றைம்பது என்னும் நூல் கணி மேதாவியார் என்னும் புலவரால் இயற்றப்பெற்றது. இத னுள்ளும் ஒவ்வொரு திணைக்கு முப்பது பாட்டுக்கள் உள்ளன. இம்மையிலேயே நன்முயற்சி திண்ணமாயின், இம்மையிலே அதற்குப் பயனுண்டென்று இவர் கூறுதல் காண்க. அதில்,

"இம்மையாற் செய்ததை இம்மையே யாம்போலும்
உம்மையே யாமென்பா ரோரார்காண்"

என்றனர்.

ஆசிரியர் மணத்திற்குப் பொருள் வாங்குதல் நன் றன்றென்று பிறிதோரிடத்திற் கூறியுள்ளார்.

ஐந்திணையைம்பது

ஐந்திணையைம்பது என்னும் நூல் மாறன் பொறை யனா ரென்பவராற் செய்யப்பட்டது. மாறனென்ற சொல் பாண்டிய மரபையும், பொறைய னென்ற சொல் சேரமரபையுங் காட்டுகின்றன. இந்நூன் முதற்பாட்டில் திருமால், சிவபிரான், முருகன் என்னும் மூவர்க்கும் வணக்கங் கூறப்பட்டது. இந்நூலுள் களிறு பிடியைக் குளிப்பாட்டுதல், கலை பிணையை நீருண்பித்தல், மக ளிருக்கு மாந்தளிர் மேனியும், கருங்கூந்தலும் வனப்புத் தருதல், பிரிவாற்றாமையால் வளை கழலுதல், யானை புலிக்கு வெருவுதல், முத்தினை விளக்காகக் கருதுதல் முத லிய கருத்துக்களும், 'கொற் சேரியில் ஊசி விற்றல்' முத லிய பழமொழிகளும் வந்துள்ளன.

ஐந்திணையெழுபது

ஐந்திணையெழுப தென்பது மூவாதியா ரென்பாரார் பாடப்பெற்றது. பிரிந்தார்க்கு மாலை கொல்வது போலு மென்னுந் திருக்குறட் கருத்து இந்நூலுள் வருதல் காண்க.

"புல்லுந ரில்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்."

முதுமொழிக்காஞ்சி

முதுமொழிக்காஞ்சி யென்பது ஐங்குறுநூறு தொகுத்த கூடலூர் கிழாரார் பாடப்பெற்றது. இவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறையின் சாவுக்காக வருந்தினவர். எல்லா மக்கட்குங் கல்வியைப் பார்க்கிலும் ஒழுக்கம் சிறந்த தென்பதை இவர்,

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என்னும் அடிகளில் தெரிவித்தார். இது,

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்னுந் திருக்குறளானுந் தெளியப்படும். இந்நூல் குறட்டாழிசையா லியற்றப்பெற்ற பப்பத்துச் செய்யுளை யுடைய பத்துப் பகுதிகளை யுடையது. பத்துச் செய்யுளை யுடைய பகுதியைப் பத்து என்று வழங்குதல் இந்நூலுள்ளுந் திருவாசகத்துள்ளுங் காணப்படுகிறது. இதனாலுந் திருவாசகத்தின் பழமை விளங்கும். இந்நூலிலுள்ள சில அரிய கருத்துக்கள் வருமாறு: "வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை" என்றமையால், கொடையைப் பார்க்கிலும் மெய்ம்மையையே இப்புலவர் பெரிதாகப் போற்றுகின்றார். இங்கே,

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்ற குறள் ஆயத்தக்கது. பெரிய குடும்பத்திற் பிறந்தவர்களுக்கு இரக்கமே அடையாள மென்பார்,

"பேர்ற் பிறந்தமை ஈரத்தி னறிப"

ன்றனர். பிறருடைய வழக்கத்தை நமக்குப் புதிதாயிருத்தல் பற்றி நாம் பழிக்கக்கூடாது என்பதை, 'அறியாத் தேசத் தாசாரம் பழியார்' என்னும் அடிகளால் அவர் தெரித்தனர்; ஈகை அறவழியிலேயே இருத்தல் வேண்டு மென்பதையும், மூப்புடையவர்கள் மறு பிறப்பைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்பதையும், 'அறத்தாற்றின் ஈயாமை ஈகையன்று', 'மறுபிறப் பறியா மூப்பன்று' என்று கூறி விளக்கினர். அவர் அறிவுடையவனுக்கே வாழ்வுஞ் சாவும் வெவ்வேறா மென்றும், அறிவில்லாதவர்க்கு வாழ்வுஞ் சாவும் ஒன்றேயா மென்றுங் குறிப்பா லுணர்த்துவார், 'உணர்வில னுதலிற் சாக்காடில்லை' யென்றார்.

இன்னிலை

இன்னிலை யென்னும் நூலானது பொய்கையார் பாடியதென்ப. அஃது அறம் பொரு ளின்பம் வீடாகிய நான்கினையுங் கூறுவது. அறத்துப்பாலிற் பொது அறமே கூறப்பட்டது. இந்நூலாற் பொய்கையார் சிவ வழிபாட்டின ரென்று தெரிகின்றது. அதன் முப்பதாவது செய்யுளுள் அவர்,

"ஆக்கி யளித்தழிக்குங் கந்தழியின் பேருருவே"

யென்றது காண்க. திருவள்ளுவ நாயனார் சார்பு என்றதைப் பொய்கையார் சார்பொரு ளென்றனர்.

"உண்மை மாலீர்த்து விருள்கடிந்து"-41 "ஐயுணர்வாயைந்து வறஞ் சார்பா"-44 என்னுமிடங்களில் குற்றிய

லுகரத்தின் முன் வந்த உயிர்க்கு உடம்படுமெய் புணர்த்து ஓதினமையாலும், அத்தகைய பகுதி காணப் படாத களவழி நூலியற்றிய பொய்கையாருக்கு இன் னிலை யாசிரியர் பிற்பட்டவராவர். இன்னிலையாசிரியர், "அடித்தடித்து வக்காரம்" என்று முதன் முதலாக ஓரிடத் துமட்டும் குற்றுகரத்தின் முன் வந்த உயிர் உடம்படு மெய் பெற ஓதிய மணிவாசகர் காலத்துக்குச் சற்று முந் தியவர் ஆதல் வேண்டும். எனவே, அவர் காலம் கி. பி. மூன்ரும் நூற்ருண்டிற்குச் சிறிது முன்பு என்க. காஞ்சி யில் பல்லவ மன்னர் சுமார் கி. பி. 300 முதல் 750 வரை அரசாண்டனர். பல்லவரும் சிலர் திருமால் வழிபாட்டின ராக இருந்தனரென்று தெரிகின்றது. கி. பி. 340-ல் காஞ்சியி லாண்ட பல்லவ மன்னன் பெயர் விட்ணுகோபன் என்பது. பல்லவர்க்கு முன் மாணிக்கவாசகர் காலத்தில் சைவசமயத்தின் ஒளி சிறந்து விளங்கினமையால், ஆரியப் பிராமணர் புத்தர் முதலிய பலரும் சைவநெறியைக் கைக் கொண்டொழுகினர். பல்லவர் ஆட்சித் தொடக்கத்தில் திருமால் வழிபாடுஞ் சிறிது தலையெடுத்தது. அக்காலத்தி லேயோ அதற்கு முன்னேயோ ஆசாரக்கோவை, திரி கடுகம், நான்மணிக்கடிகை யென்னும் நூல்கள் இயற்றப் பட்டு இருத்தல் வேண்டும். கருநாடக வேந்தர் ஐந்தாம் நூற்ருண்டிலே மதுரையிற் பாண்டியரை வென்று, தமது ஆளுகையை நிலைநாட்டிய பின்பே, சமணசங்கம் ஏற்பட் டுச் சமண சமயம் தென்னுட்டிலே தழைத்தோங்க லாயிற்று. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுட் சமணர் செய்தவை, வச்சிரநந்தி யென்னுஞ் சமண முனிவர் ஏறக் குறைய கி. பி. நானூற்றெழுபதில் மதுரையில் நிலைநாட் டிய தமிழ்ச்சங்கத்திருந்த புலவரால் இயற்றப்பட்டிருத்தல் கூடும். ஆருவது நூற்ருண்டில் மூர்த்தி நாயனர் காலத

தோடு கருநாடக வேந்தரது ஆட்சியொழிந்து சைவ மன்னர் காலம் தொடங்கிற்று. சமண் சங்கத்தாராலே பதினெண்கீழ்க் கணக்குத் தொகுக்கப்பட்டிருக்கலாம்.

ஆசாரக்கோவை

மாணிக்கவாசகர் காலத்திற்குப் பின் ஆசாரக் கோவை யென்னும் நூலியற்றப்பட்டது. இந்நூல் பெருவாயின் முள்ளியா ரென்னும் புலவரா லியற்றப் பட்டது. இருடிகளது விதிகளைத் தாம் அறிந்த அளவிற் கூறுவதாக மொழிவதால், இவர் ஆரியக்கருத்துக் களை உரைப்பவ ரென்பாரு முளர். இந்நூலுட் பல கருத் துக்கள் பண்டைத் தமிழரின் கருத்துக்களாகவே தோன்று கின்றன. இந் நூலாசிரியர் சைவரென்பது கடவுள் வணக் கத்தால் விளங்குகின்றது. அவர் இந்நூல் முதற் செய் யுளிற் சிறந்த எட்டுக்குணங்களை எடுத்துக்கூறி, அவற் றுள் நன்றியறிவினை முதற்கண் வைத்தனர். நீராடல், உண்டல், வழிபடுதல், துயிலுதல் முதலியவற்றைப் பற் றிய விதிகள் இந்நூலிலே சிறப்பாகக் காணப்படுகின்றன. தம்பொருட்டு ஊன்கொள்ளாமை, வேதமோதல், நான் மறையாளரைக் குரவரைப்போற் போற்றுதல், அறியாத தேசத்தாரை ஆசாரமிலாதா ரெனக் கணித்தல் முதலி யன ஆரியக் கலப்பால் ஏற்பட்ட கருத்துக்களாகும்.

நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை யென்பது விளம்பி நாகனு ரென் னும் புலவரால் இயற்றப்பெற்றது. நான்கு மணி போன்ற உண்மைகளை யடக்கிய பாட்டுக்களை உறுப்பாக உடைய அணிபோல்வ திந்நூலென்று அதன் நூற்பெயர் விளங்கு கின்றது. நல்ல மக்கள் எக்குடியிலும் பிறத்தல் கூடுமென் பதை இந்நூலின் சு-வது செய்யுள் அறிவுறுத்துகின்றது.

கல்வியின் பயன் வீடென்று இவர் கூறுஞ் செய்யுளினும், இவரது சமயம் இன்னதென்று கூற இடமுண்டு.

"கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவமான நெறிபடரு-மந்நெறி யிப்பாலுலகத்
திசைநிறீஇ-யுப்பா-லுயர்ந்த வுலகம் புகும்."

"கள்ளி வயிற்றி னகிற்பிறக்கு மான்வயிற்றி
னொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி."

இந்நூலாசிரியர் உயிர்க்கொலையையும் நன்கு கடிந்துள்ளார்; 'எல்லா விடத்துங் கொலை தீது,' 'ஊனுண்டல் செய்யாமை செல்சார் உயிர்க்கு,' இனிதுண்பானென்பான் உயிர்கொல்லா துண்பான்' என்றதுங் காண்க. 'அந்தணரின் நல்ல பிறப்பில்லை' யென்னும் ஆரியக் கொள்கை வாசனையுடைய இந்நூலாசிரியர், 'எருதுடையான் வேளாளன் ஏலாதான் பார்ப்பான்' என்றதுங் காண்க. (இந்நூலில் வடமொழி வாசனை யுண்டென்பது பசுக்கூட்டத்தைக் குறிக்கும் 'காலேயம்' முதலிய சொற்கள் வழங்கப்படுதலால் அறியப்படுமென்பு.)

திரிகடுகம்

திரிகடுகம் என்னும் நூல் நல்லாதனுர் என்னும் புலவராலியற்றப்பட்டது. இவருந் திருமால் வழிபாட்டினரே. சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த மருந்து போல மூன்று அருமையான உண்மைகளை இந்நூலின் ஒவ்வொரு பாட்டுந் தெரிக்கின்றது. கடன்படாது வாழ்தல், வருவாயுட் கால்வழங்கி அறஞ்செய்தல், உண்பொழுது நீராடியுண்டல் முதலிய பல ஒழுக்கங்கள் (இந்நூலிற் கூறப்பட்

டன. தீவேந்தன், கூடாவொழுக்கத்தான், பொய் புகல்வோன் என்போரால் மழை குறையுமென்று இந்நூலின் ஐம்பதாவது செய்யுளிற் குறிக்கப்பட்டது. சஉ-வது செய்யுளிற் 'பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுக வேண்டு மென்றது காண்க. தவவேடங்கொண்ட சைவர்கள் சமயவாதத்தில் வெற்றியடையும் நோக்க முடையராயிருந்தன ரென்பது 'சொல்வென்றி வேண்டும் இலிங்கியும்' என்றதாற் புலப்படும். இந் நூலாசிரியர் காலத்தே வேள்வியாலுங் கொலை கூடாதென்ற கொள்கை நன்கு நிலைபெற்ற தென்பது,

"ஊனுண் டுயிர்கட் கருளுடையே னென்பானும்
தானுடன் பாடின்றி வினையாக்கு மென்பானும்
காமுறு வேள்வியிற் கொல்வானு மிம்மூவர்
தாமறிவார் தாங்கண்ட வாறு"

என்றமையா னறிக.

ஏலாதி

ஏலாதி யென்பதன் பெயர்க் காரணம்: ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்னும் ஆறு மருந்துச் சரக்குகளினாற் செய்த பொடி போல நன்மை பயத்தலின், இந்நூற்கு 'ஏலாதி' யென்ற பெயர் ஏற்பட்டது. ஏலாதி யென்னும் நூலினை யியற்றியவர் மாக்காயனார் மகனார் கணிமேதாவியா ரென்பவர். திணைமாலை நூற்றைம்பது இயற்றியவர் இவரோ வேறோ தெரியவில்லை. ஏலாதியுள் வடமொழிப் பெயர்கள் மிகுதியும் வந்துள்ளன. 'ஔரதன்' 'கேரசன்' 'கூடோத்து பன்னன்' 'கானீனன்' பவுனற்பவன்' 'சகோடன்' 'கிருத்திரமன்' 'அவவித்தன்' 'உபகிருது' 'சௌத்திரன்' என்னும் பல்வகை மக்களைப் பற்றி இந்நூலாசிரியர் பேசுகின்றார். இந்நூலாசிரியருங் கொல்

லாமையையே நன்கு வற்புறுத்துகின்றார். இவர் கொலை புரியான், கொல்லான், புலால் மயங்கான் என்பவர்களைப் புகழ்ந்தனர். தண்ணீர்ப்பந்தல் முதலிய அறங்களும், மாதவர்க்குப் பொன், குதிரை, யானை, பசு, கன்னி, சோறு, உடை முதலியன வழங்குவதையும் இவ்வாசிரியர் விதந்தோதினர். புலவர், அன்புடையார் செயல்களாவன, சாவிற்சாதல், ஒண்பொருள் கொடுத்தல், இன்சொற் புணர்ப்பு, உவப்பின் உவத்தல், நோவின் நோதல், பிரிவிற் கவலல் என்றார். இவர் 'நான்மறை புரிந்து வாழுமேல்' என்றவிடத்து நான்மறை யென்றது அறம், பொருள், இன்பம், வீடென்று நாற்பொருட்குச் சாதனமானவற்றை யென விளக்கினர். 'நற்கதிக்குந் துன்ப நவைதீர்த்த' லென்ற அடியால், இவர் சமணராயிருத்தல் வேண்டு மென்று கருத இடமுண்டு. (இந்நூலின்கண் முத்தி யிலக்கணம் எதிர்மறையாகவே கூறப்பட்டிருத்தலால், இவருடைய சமயத்தைத் தெளிவாக அறியக்கூடவில்லை.)

சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம் என்பது மாக்காயனார் மாணாக்கராகிய **காரியாசான்** என்பவரா லியற்றப்பட்டது. இவ் வாசிரியர் சமணரென்பது இதன் காப்புச் செய்யுளால் விளங்குகின்றது. புலாலுண்பானுடைய நாக்கு இறந்துபோ மென்று இவர் குறித்துள்ளார். 'கொன்றுண்பான் நாச் சாம்' என்றனர். அக்காலத்திலே நெய்தற்பூவளவு குடுமிவைப்பது வழக்கமென்பது இந்நூல் முப்பதாவது செய்யுவில், 'நெய்தல் முகிழ்த் தனையாங் குடுமி' யென்பதால் விளங்கும். இந்நூல் எகூ-ம் பாட்டில், 'பலி' என்பது 'கொடுக்குஞ் சோறு' என்னும் பொருளில் வந்துள்ளது. 'குழவி பலி கொடுப்பான்' என்ற சொற்றொடர்க்குப் பிள்ளைச்சோறு கொடுத்தலாகிய

அறத்தைச் செய்வா னென்பது பொருள். 'தோற்கன்று காட்டிக் கறவார்' என்றமையால் அக்காலத்திலும் அவ் வழக்கம் இருந்ததென்பது தெளிவு.

"தானத்தாற் போகம் தவத்தாற் சுகம்சுகமா
ஞானத்தால் வீடாகும் நாட்டு"

என்றமையால், ஞானத்தாலே தான் வீடு கிடைக்குமென் பது இவ்வாசிரியர் கருத்து என்பது புலனும்.

பழமொழி

பழமொழி யென்பது முன்றுறை யரையனு ரென்னுஞ் சமணப்புலவரியற்றிய நானூறு வெண்பாக்களை யுடையது. ஒவ்வொரு பாட்டி னிறுதியிலும் ஒவ்வொரு பழமொழி யமைக்கப்பட்டது. அக்காலத்துப் பழமொழிகளிற் சில இக்காலத்து வழக்கி லில்லை. இந்நூல், கல்வி, ஒழுக்கம், முயற்சி, ஊழ், நட்பு, சான்றோர், கீழ்மக்கள், அரசியல், இல்வாழ்க்கை, வீட்டு நெறி முதலிய பல அரும்பொருள் களைப்பற்றி வகுத்தோதுகின்றது. இந்நூலின் ௩௬௩-வது செய்யுளில் உயிர்ப்பலி கூடாதென்பது வற்புறுத்தப் பட்டது. பண்டைப் பழமொழி நானூறும் என்றமையால், இந்நூலாசிரியர் காலத்திலேயே இந்நூலிற் கண்ட பழ மொழிகள் பண்டையன வென்று கருதப்பட்டன. 'அயிலாலே போழ்ப அயில்' என்பது முள்ளை முள்ளாலே களையவேண்டு மென்பதற்கு நேராகும். 'நிறைகுடம் நீர் தளும்ப லில்', 'கொற்சேரி துன்னூசி விற்பவ ரில்', 'மக னறிவு தந்தை யறிவு', 'மதிப் புறத்துப் பட்ட மறு' என்பன பிறசொற்றொடர் வடிவோடு இன்றும் வழங்கு கின்றன. நள்ளிரவிற் கற்புடை மங்கையைக் காத்தற் பொருட்டு அவள் வீட்டுக் கதவைத் தட்டினதிற்காகத் தன் கையைக் குறைத்துக்கொண்ட பொற்கைப் பாண்டி

யனது கதையைக் கூறி, அதற்கு மேற்கோளாகத் 'தனக்குக் கரியாவான் தான்' என்னும் பழமொழியை அவர் எடுத்துரைத்தார் (எஅ-ம் பாட்டு). ஒருவன் கடுமையான ஒன்றைச் சொன்னால் அவனுக்கு விடை சொல்லுகின்றவ னுண்டு என்பதைக் கண்ணன் கதையை வைத்து அவர் விளக்கினர். புலவர்,

> "நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்
> உரைத்தா லுரைபெறுத லுண்டு"

என்றனர்.

நாலடியார்

நாலடியார் என்னும் நூல் சமணமுனிவர்கள் பலரா லியற்றப்பட்ட செய்யுட்டொகை நூலென்ப. பாண்டிய நாட்டிற் பஞ்சம் வந்தபோது அயல்நாட்டிற்குப் புலவர்கள் சென்ற காலை, அவர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாட்டைச் செய்து வைத்துவிட்டுப் போனதாகவும், அப் பாட்டுக்கள் எண்ணாயிரம் இருந்தனவெனவும், அவற்றுள் வையையாற்றை எதிர்த்துச் சென்றன நானூறு எனவும் ஒரு வரலா றுண்டு. அவ்வரலாற்றினல் எண்ணித் துணிவது யாதெனில், வச்சிரநந்தி யென்பான் நிலைநாட்டிய சங்கம் இறுதியுற்ற காலை, அச்சங்கப் புலவர்கள் பாடிய தனிப் பாடல்களின் திரட்டாக இந்நூல் அமைந்திருக்கலா மென்பதே. (இந் நூலுள் முத்தரையர் என்பார் பேசப்படுகின்றார். பல்லவர்க்குக் கீழ் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளிப் பகுதிகளில் ஆட்சி செய்த முத்தரையருள் ஒருவரை 8-ம் நூற்றாண்டுச் சாசனம் குறிக்கிறது.) முத்தரையர் வேளிர் குலத்தவர். அவர்கள் எக்கால முதல் அரசாண்டன ரெனத் தெரியவில்லை. இந்நூலைப் பாடிய புலவர்கள் யாவரும் சமணரென்று தோன்றவில்லை. நாலடியார்ச் செய்யுட்களை இயற்படுத்து வகுத்தவர் 'பதுமனு' ரென்பவர்.

அவர் சமணராயிருந்திருத்தல் கூடும். இந்நூலுள் அறவற இயலே முதற்கண் வைக்கப்பட்டது. இந்நூலில் 'வெள்ளாண் மரபிற்கு வேதமெனச் சான்றோர் எல்லாருங் கூடி எடுத்துரைத்த' என்ற ஒரு பாட்டுமிருக்கிறது. இந்நூலுள் ஒரு சமயமும் விதந்தோதப்படவில்லை. ௯எ௯-ம் பாட்டில் செங்கண் மாலையும், ௪௦-ம் பாட்டில் கண்மூன்றுடையானையும் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. திருவள்ளுவர் குறளின் சொற்களும் கருத்துக்களும் பல விடங்களில் வந்துள்ளன. ௯௪௪-ம் பாட்டில்,

"தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா யுள்ளுவர் சான்றோர்"

என்ற அடிகள்,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்"

என்ற திருக்குறளை நினைப்பூட்டுகின்றன.

திருக்குறளில் வாராதவடமொழிச் சொற்கள் பல இந்நூலில் வந்துள்ளன. ௯௧௧-வது செய்யுளில் ஞானம், அஞ்ஞானம் என்ற சொற்கள் வருதல் காண்க.

துறவற இயலுள் நிலையாமையே பெரிதும் விதந்தோதப்பட்டது. திருக்குறளிற் போல மெய்யுணர்தலைப் பற்றி இதில் யாதுங் கூறப்படவில்லை. சினமின்மையைக் கூறும் அதிகாரத்துள் பிறரது இழிபுரையைப் பொறுக்கும் மேன்மக்க ளியல்பு அழகிய ஒரு பாட்டில் தக்கதோர் உவமையால் விளக்கப்பட்டது.

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு."

இல்லற இயலுள் நண்பர்பால் எத்தகைய பொறை யுடைமை வேண்டு மென்பது ஒரு செய்யுளால் விளக்கப் பட்டது.

" வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்கப் பொறானாயின்
தூற்றாதே தூர விடல். "

காமத்தீயின் கொடுமையை ஒரு பாட்டினுள் நயம் உற உரைத்தார் ஒரு புலவர்.

" ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருள்
ஒளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும். "

பழவினை யென்பதில், வினை தனக்குரிய ஒருவனைத் தானே நாடிக்கொள்ளும் என்பதைப் பின்வருஞ் செய் யுளிற் காண்க.

" பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. "

பொருட் பாலிற் கல்வியழகை இனிது விளக்கிய செய்யுள் வருமாறு:—

" குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

'கல்வி கரையில கற்பவர் நாள்சில' என்றும், 'கல் லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின் - நல்லறிவு

நாளுந் தலைப்படுவர்' என்றும், அறிவுநூல் கல்லாது உலக நூல் ஓதுவது கவ றென்றுங் கூறிக் கல்வியின் சிறப்பை இந்நூல் தனிவிதந்தமை காண்க. கற்றவர் தம்முள் அளவளாவி யெய்தும் இன்பத்தினும் விண்ணுல கின்பம் சிறந்ததன் றென்பதை விளக்குவார் ஒரு புலவர்,

"நவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி"

என்றார்.

மேன்மக்க ளியல்பை இந்நூல்,

"கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தோரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்"

என்னும் பாட்டினும்,

"பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு"

என்னும் பாட்டினும் விளக்குகின்றது.

இந் நூலுட் பொருட்பாலினுங் காமத்துப்பாலினும் இன்ப துன்ப இயல்கள் வெவ்வேறாகக் கூறப்பட்டன. காமத்துப்பாலுள் பொதுமகளிர், கற்புடைமகளிர், பிரிவாற்றாமை என்னும் பகுதிக்குரிய மூன்றதிகாரங்களே உள்ளன. கற்புடை மகளிரது கடனாற்றுந் திறத்தை ஒரு செய்யுளாற் குறித்துள்ளார்.

"குடநீ ரட்டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யார்."

கொங்குவேள் மாக்கதை

வச்சிரநந்தியால் ஐந்தாவது நூற்றாண்டில் நிலைநாட்டப்பட்ட தமிழ்ச் சங்கத்தினை மருவிய பெருங் காப்பியங்களுள் தலைசிறந்தது கொங்குவேள் மாக்கதையாகும். கொங்குவேள் மாக்கதை கொங்கு நாட்டில் வாழ்ந்த வேளாண் தலைவருள் ஒருவரால் ஆசிரியப்பாவா லியற்றப் பட்ட ஒரு பெருங்காப்பியமாகும். ஆரியத்திற் பைசாச மொழியிற் குணாட்டியர் என்னும் புலவர் கி. பி. முதல் நூற்றாண்டில் கோசாம்பி நகரத்தில் அரசாண்ட உதயணன் என்னும் வீரனைப்பற்றி இயற்றிய பெருங்கதையைத் தழுவி இந்நூல் இயற்றப்பட்டமையால், இதற்குப் பெருங்கதை யென்ற பெயர் வழங்கலாயிற்று. குணாட்டியரது நூல் சைவசமயக் கொள்கைகளை இடையிடையே எடுத்துக் கூறினும், இந்நூலாசிரியர் சைனராயிருந்திருப்பின் தமது சமணக் கொள்கையையே தமது நூலிற் சிறப்பாக எடுத்து மொழிதல் இயல்பே. சிலப்பதிகாரத்துக்குப் பின் எழுந்த பெருங்காப்பியம் இஃதென்று கொள்ள வேண்டும். கி. பி. ௬-வது நூற்றாண்டில் கங்கை நாட்டையாண்ட துர்விநீதன் என்பவன் வடமொழியில் மொழி பெயர்த்துச் செய்த நூலின் வழித்தாக இந்நூல் இயற்றப் பட்டதென்று கொள்ளின், ஆறாவது நூற்றாண்டின் இறுதியில், அல்லது ஏழாவது நூற்றாண்டில் இந்நூல் இயற்றப் பட்டிருத்தல் வேண்டும். இந் நூலாசிரியர் ஊர் விசய மங்கை யென்று தெரிகின்றது. இந்நூலை இயற்றுவதற்கு இடையூறாக மரணம் வராது தடுத்தற்பொருட்டு இல்

லறத்தில் நின்று வானப்பிரத்த நிலைக்கும், அதனினின்று துறவுக்கும் சென்ற காரணத்தால், இவரை மூன்று பிறப் புற்ற கொள்கை யுடையரென்று கொங்குமண்டல சதகம் கூறியது. இவர் காலத்தே இவர் நாட்டிலிருந்த ஒரு தமிழ்ச்சங்கத்தார் கேட்ட கேள்விக்குத் தம்முடைய வேலைக்காரி வாயிலாகத் தக்க விடையளித்தாரென்று அச் சதகம் கூறுகின்றது. இந்நூல் சைனச் சார்பினுள்ள தென்பது தெளிவு.

இதனுட் பாண்டவர் குலத்தில் வந்த இருபதாவது அரசனைப்பற்றிய வரலாறு கூறப்படுகின்றது. கௌசாம்பி நகரத்தை அரசாண்ட சதாநிகன் மனைவி கருத்தரித்த பத் தாந்திங்களில் சிவந்த போர்வையால் தன்னை மூடிக் கொண்டு தூங்குகையில், ஒரு சிம்புட் பறவை அவளைத் தசைத்தொகுதி யென்று நினைத்து, ஒரு மலையின் பக்கத்தே எடுத்துக் கொண்டுபோய் வைத்தவுடன் அவள் விழித்துக் கொண்டாள். பறவை ஓடிப்போயிற்று. விடியற்கால மானபோது அவள் உதயணனைப் பெற்றாள். அம் மலைச் சாரலில் தவஞ்செய்திருந்த அவள் தந்தை, தாயையுங் குழந்தையையும் கண்டு அவர்களைப் பாதுகாத்தனன். குழந்தையாகிய உதயணன் மற்றொரு முனிவரின் குமார னாகிய யூகி யென்பவனோடு மிகுந்த நட்புடையவனாய்ப் பல கலைகளுங் கற்று யாழ்இசையிலே வல்லவனானான். அவன் தனது யாழிசையால் வியத்தகு தன்மைவாய்ந்த ஒரு யானையைத் தன் வசப்படுத்தி, அதனுதவியால் தன் மாமன் தந்தை யென்னு மிருவ ரரசினையுங் கைப்பற்றி, மிக மேம் பாடுற்றுத் திகழுங்காலை, யானையோடு செய்த உடன் படிக்கைக்கு மாறாக, அதற்குமுன் தான் உண்டமையால் அது மறைந்துவிட்டது. அதைத் தேடி யலைந்த காலத்தே, அவன் உச்சினி நகரத்தை யாண்ட பெருமன்னனுக்கு

இறை செலுத்தாமையால், அவனால் தந்திரமாகச் சிறை வைக்கப்பட்டான். பின்னர்த் தன் நண்பனாகிய யூகியின் சூழ்ச்சியால் சிறை விடுவிக்கப்பெற்று, உதயணன் உச்சினி மன்னனுடைய பட்டயானையின் மதத்தை யடக்கினமை யால், அவன் மகள் வாசவதத்தையை மணந்தனன். அவளோடு இடைவிடாமல் இருந்தது கண்டு, அரசகாரி யங்கள் நடத்தற்பொருட்டு யூகி சூழ்ச்சிசெய்து உதய ணனை அவளினின்று பிரித்தனன். பின்னர் அவன் பதுமாவதி யென்பவளை மணந்ததும், யூகியால் வாசவதத் தையினை மீளப்பெற்று இரு மனைவியரோடும் கௌசாம்பி யில் அரசாண்டதும், யூகி முதலிய நண்பர் பலருக்கும் பரிசளித்ததும், பின்னர் இன்னும் சில பெண்டிரை உதய ணன் மணந்ததும், வாசவதத்தையின் மகனான நரவாண தத்தன் மதனமங்கை யென்பவளை மணந்ததும், மதன மஞ் சிகையைக் கைக்கொண்டு சென்ற வித்தியாதரன் ஒருவனை யடக்குவதற்காக உதயணன் வித்தியாதர உலகஞ் சென்று, அங்குள்ள அரசர்களை வென்று, மதனமஞ்சிகையைப் பெற்று வித்தியாதரப்பெருமன்னனாய் வாழ்ந்ததும், பதுமா வதியின் மகனுக்கு அரசாட்சியை யளித்துவிட்டு, உதய ணன் தவஞ்செய்யப் போந்ததும் இக் கதையிற்போந்த பிற செய்திகளாகும். இந் நூலுள் ஊழின் வலியும், யூகி முத லிய அமைச்சர்களின் சூழ்ச்சித் திறனும், அரசாட்சி முறையும், நட்பினர் கடமையும், நீத்தார் பெருமையும், விமானம் ஊர்தல் முதலிய அக்காலத்து வழக்கங்களும், சமணசமயக் கொள்கையும், பிறவும் விளக்கமாக அறியக் கிடப்பன. இந் நூலின் கதைத்தலைவனது பிறப்பும், மண முறையும் சீவகன் பிறப்பு மண முதலியவற்றோடு ஒற்றுமை யுடையன. (சிந்தாமணிக்கு முன் ஆசிரியப்பாவி லமைந்த சைவப்பெருங்காப்பியம் இந் நூலாகும்.)

ஐந்தாவது நூற்றாண்டினிறுதியில் வடுகக்கருநடவேந்தரது அரசு முடிவெய்தி, மூர்த்திநாயனாராகிய சைவமன்னர் அரசாளத் தொடங்கினர். வேள்விக்குடிப் பட்டயத்தினால் திருஞானசம்பந்தர் காலத்திலாண்ட நெடுமாறர் காலத்துக்கு முன் செழியன் சேந்தன், மாறவர்மன், கடுங்கோன் என்னும் மூன்று மன்னர்கள் அரசாண்டனரென்று தெரிகின்றது. அவர்கள் காலம் ஆறாவது நூற்றாண்டாகும். கி. பி. ஆறாவது நூற்றாண்டில் பல அரிய சைவநூல்கள் தோன்றின.

கல்லாடம்-சைவரெழுச்சி

கல்லாடமென்னும் நூலானது திருவாலவாய் அண்ணலைப்பற்றிய நூறு அகவற்பாக்க ளடங்கிய அகப்பொருளிலக்கியம். அதனுள் மதுரையில் நடந்த திருவிளையாடல்கள் பலவுங் கூறப்பட்டன. பிட்டுக்கு மண் சுமந்தது, நரிபரியாக்கியது என்னுந் திருவிளையாடல்களும் இதனுட் குறிக்கப்பட்டமையாலும், தேவார மூவரைப்பற்றி இதில் யாதுங் கூறப்படாமையாலும், கருநடவேந்தர் மூர்த்திநாயனாருக்குச் செய்த இடையூற்றினை விதந்தோதினமையாலும், இந்நூலுள் அகவற்பாவே பயின்று வந்தமையாலும் இந்நூலின் காலம் ஆறாவது நூற்றாண்டென்பது தெளிவாகும். பாணபத்திரர் வரலாறும் இதனுட் காணப்படுகின்றது. குடக்கோச்சேரன் என்று இந்நூலுட் குறிக்கப்பட்ட சேரன், சேரமான்பெருமாள் நாயனாரல்லனென்று உயர்திரு மறைமலையடிகள் தமது 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் நூலில் ஆராய்ந்து முடிவு கட்டியிருக்கின்றார்கள். இந் நூலானது சங்கச் செய்யுள் நடையிலெழுதப்பட்டுப் பொருள் வளஞ் செறிந்துள்ளது. இந் நூலாசிரியர் சிவபிரான்பாலும் முருகப்

பிரானிடத்துங் கழிபேரன்புடையவர். இந் நூலியற்றியவர் பெயர் கல்லாடரெனின், கடைச்சங்கப் புலவராகிய கல்லாடரின் இவர் வேறுவர். கல்லாடத்தின் சிறப்பு 'கல்லாடம் படித்தவனோடு மல்லாடாதே' யென்னும் பழமொழியால் இனிது விளங்கும். இந் நூலுள் விநாயகர் வணக்கம் கூறப்படுகின்றது.

ஞானமிர்தம்

ஞானமிர்தமென்னுஞ் சைவசித்தாந்த நூலானது ஆறுவது நூற்றாண்டிலே இயற்றப்பெற்றிருத்தல் கூடும். இதுவும் செவ்விய எழுபத்தைந்து பாக்களால் ஆயது. இதுவும் சங்கத்தமிழ் நடையிலேயே எழுதப்பட்டது. இது நிறைந்த நாயனார் சந்தானத்தில் வந்த வாகீச முனிவராற் செய்யப்பட்டது; சிவஞான சுவாமிகளாற் பெரிதும் எடுத்தாளப்பட்டது; பதிபசுபாசங்களின் பொதுவியல்புகளைத் திறம்பட விளக்குவது. உவமைகளை அடுக்கிச் சொல்வதில் இவ்வாசிரியர் இணையற்றவர்.

திருமந்திரம்

இந் நூற்றாண்டிலேயே திருமந்திரம் என்னும் அரிய நூல் இயற்றப்பட்டிருத்தல் கூடும். இந் நூலிலுள்ள செய்யுளடிகள் வெண்டளை பயின்று வருகின்றன. வெண்பாவிற்கும் விருத்தப் பாவிற்கும் இதன் யாப்பு நடுநிலையாக உள்ளது. இதற்குப் பின்னமைந்த பெருநூல்கள் விருத்தப் பாக்களினாலேயே பெரிதும் ஆக்கப்பட்டுள்ளன. திருமந்திரமென்னும் நூலானது திருவாவடுதுறையிற் கயிலையினின்றும் போந்த திருமூல ரென்னுஞ் சித்தரா லியற்றப்பட்டது என்று பெரியபுராணங் கூறுகின்றது. அவர் மூவாயிரமாண்டு தவங்கிடந்திருக்கலாம். இந்நூல் அத்தவ முடிவில் ஒரு காலத்திற் செய்யப்பட்டதாகவே தோன்று

கின்றது. இந்நூல் திருஞானசம்பந்தர் காலத்திற்கு முன்னேயே செய்யப்பட்டதென்று கருத ஓர் ஐதிகம் இடங்கொடுக்கின்றது. நம் சமயாசாரியர் துறைசைக்குச் சென்ற காலை, திருமூலர் திருமந்திரம் கொடிமரத்தின்கீழ் அடக்கஞ்செய்து வைக்கப்பட்டிருந்ததாகவும், கொடிமரத்திற்கருகே அவர் சென்ற காலை தமிழ் மணம் வருவதாக அவர் இயம்பினரென்றும், அப்போது அஃது ஆண்டுக் கண்டெடுக்கப்பட்டதென்றும் துறைசைப் புராணங் கூறுகின்றதாம். திருமூலர் வரலாற்றிற் 'சேர்ந்திருந்தேன் சிவனுவடு தண்டுறை' என்பதால், அவர் துறைசையி லிருந்தமை தெளிவு. அவர் இருவகை ஆறு சமயங்களைக் குறித்துப் பேசுகின்றார். அவர்,

> "ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
> ஆறு சமயப் பொருளும் அவனலன்"

என்று நி-ம் தந்திரம் புறச்சமய தூடணத்துட் கூறினர்.

இதில் புறச்சமயங்களுள் உலகாயதம், பௌத்தம், சாங்கியம், சமணம், என்பனவும், தார்க்கீகர், கோதமர், கணாதர், வாதராயணர், கபிலர், சைமினி, சமணர் என்பாரின் மதங்களுமே குறிக்கப்பட்டுள்ளன.

> "கத்துங் கழுதைகள் போலுங் கலங்கள்
> சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றான்"

என்றது காண்க.

ஆதலால், இவர் காலத்திலே புத்தர், சமணர் வாது செய்து தம்மதம் போதித்தனரென்பது கருதப்படும். 'தமிழ்ச் சாத்திரம் பொங்கி மிகாமை வைத்தா' னென்றதும், தேவார காலத்திற்கும் முற்பட்டது திருமந்திரமென்றறிவுறுத்துகின்றது. மணிவாசக முடையாரும் புறச்சமயங்களை இகழ்ந்துரைத்தது உற்றுநோக்கத்தக்கது. திரு

மந்திரமுடையார் ௧௫௯௦-ல் உலகாயதத்தையும் ௧௫௯௨-ல் ௧௫௯௫-ல் புறச்சமயங்களாகிய தருக்கம், மீமாஞ்சை மதங்களையும் மறுத்தனர்.

திருமந்திரத்தில் முதற்பாட்டு 'ஒன்றவன்றானே' யென்று தொடங்குவதாகப் பெரிய புராணங் கூறு கின்றது. மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாட்டுக்கள் காட்டப்படுதலால், சில பாட்டுக்கள் பின் சேர்க் கப்பட்டன வென்று கொள்ள இடமுண்டு. இத் திரு மந்திரத்துள் ஆகமங்கள் ஒன்பதா மென்றும், அவற்றின் சணின்று உ௮-ஆகமங்கள் வெளிப்பட்டன வென்றுங் குறித்தது காண்க. சிவபரம் பொருளது வழிபாடும், சிவசத்தியின் வழிபாடுமே நூலெங்குங் கூறப்பட்டுள்ளன. திருமூலர் நந்தியிடத்தில் அருள் பெற்ற எண்மருள் தாமு மொருவராகக் குறித்தனர். அவர் தமக்குச் சீடர் எழுவ ரென்றுங் கூறினர். சித்தரைப் பற்றிய விவரங்கள் இந் நூலுள் தெளிவாகக் காணப்படும். இந் நூல் ஒன்பது தந்திரமாகப் பகுக்கப்பட்டுள்ளது. பாயிரம் முதற்கண் உள்ள ௧௨-பாட்டை அடக்கின்றது. அதனுள் திருமூலர் வரலாறு கூறப்பட்டது.

முதற்றந்திரத்துள் உபதேச மென்ற பகுதியுள் இந் நூலின் சிறந்த பொருளாகிய ஞானோபதேசம் வலியுறுத் தப்பட்டது; யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வநிலையாமை, உயிர் நிலையாமை, கொல்லாமை, புலான் மறுத்தல், பிறர் மனை நயவாமை, வான் சிறப்பு, அறத்தின் திறம், அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவு நிலைமை, கள்ளுண்ணாமை, அக்கினி காரிய முதலியன கூறப்பட்டன. இவை ஒழுங்காகத் தொகுக்கப்படவில்லை. எச் சமயத்தார்க்கும் இன்றியமை யாத பொது அறங்கள் இதனுட் போந்தன.

இரண்டாவது தந்திரத்துள் இறைவன் அன்பர்க்கருள் புரிந்தமை, அவனது ஐந்தொழில், மூவகைச் சிவவருக்கம் முதலியனவும், சமயப்பற்றிற்கு மாறான ஒழுக்கக் குறைவுகளுங் கூறப்பட்டன. இதனுட் போந்த பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் என்பன முதற்றந்திரத்துள் வைத்தற்குரியன.

மூன்றாந் தந்திரம் அட்டாங்க யோகத்தைப் பகர்கின்றது. அட்டமாசித்தி, சரீரசுத்தி, சோதிடப்பகுதிகள், பல்வகை யோகப்பயிற்சிகள் என்னுமிவற்றையும் இது கூறும். இவை காமியப்பயன் கருதுவார்க் குரியனவும், வீட்டுநெறி செல்வார்க்குச் சிறந்த கருவியாவனவும் என இருவகைப்படும்.

நான்காம் தந்திரம் மந்திர நூற்கருத்துக்களை வெளியிடுவது. பலவகை மந்திரங்கள், சக்கரங்கள் முதலியன கூறுமிடத்துச் சிவசத்தி வழிபாடே விதந் தோதப்பெற்றது.

ஐந்தாம் தந்திரம் சுத்தசைவம், அசுத்தசைவ முதலிய சைவ சமய பேதங்களும், புறச்சமய பேதங்களும், சரியை கிரியை யோக ஞான மார்க்கங்களும், அவற்றின் பத முத்திகளும், சத்திநிபாத இயல்பும் இயம்புகின்றது. சைவ சித்தாந்த மென்ற சொல் இதனுட் காணப்படுகின்றது.

"கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக
முற்பத ஞான முறைமுறை நாடியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே"

என்றது காண்க.

ஆறாந்தந்திரத்துள் சத்திநிபாத முற்ற உயிர்களுக்கு வேண்டுஞ் சிவகுருதெரிசனம், திருவடிப்பேறு, ஞானே

பதேசம், துறவு, தவம், வேடம், நீறு, பக்குவ அபக்குவ இலக்கணம் கூறப்பட்டன.

ஏழாம் தந்திரம் : இதில் ஆறுதாரம், சிவலிங்க பேதம், சிவபூசை, குருபூசை, மகேசுரபூசை, அடியார் பெருமை, போசன விதி, முத்தி பேதம், சமாதி, விந்துசயம், ஆதித்த நிலை, ஆன்மவிலக்கணம், இந்திரிய வடக்கம், சற்குரு, அசற்குரு முதலியன கூறப்படுகின்றன. இஃது ஐந்து ஆறும் தந்திரங்கட்கு முன் வைத்தற்குரியது.

எட்டாந் தந்திரம் அவத்தை யிலக்கணத்தை விரிவாகக் கூறுவது. இதனுள் முக் குற்றமாகிய காம வெகுளி மயக்கத்தைக் கூறும் பகுதி திருக்குறளை நினைவுறுத்து கின்றது.

ஒன்பதாந் தந்திரம் ஞானிகட்குரிய சாதனமாகிய திருவைந்தெழுத்தின் பேதங்களையும், அவர்கட் கநுபவ மாகிய திருக்கூத் திலக்கணத்தையுங் கூறுகின்றது. சித்தி மார்க்கமும் முத்திமார்க்கமுஞ் சைவத்திற்குரிய முறைப் படி முழுதும் இந்நூல் கூறுகின்றது. சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கும் எழுவதற்கு முன் நம் சமய முழு முதல் நூலாக விளங்கியது திருமந்திரமே. இஃது ஒரே வகையான பாட்டினாலேயே பெரிது மமைந்துள்ளது. திருமூலர் தமது அநுபவச் சிறப்பை இதனுட் கூறுவதால், இது சிறந்த ஆகமமாகச் சைவராற் போற்றற்பாலது.

அதிகாரம் ௩

தேவாரக் காலம்

அப்பரும் சம்பந்தரும்

காஞ்சியிற் பல்லவ மன்னர் 4-ம் நூற்றாண்டு முதல் 8-ம் நூற்றாண்டு வரை அரசாண்டனர். முதல் மகேந்திரவர்மன் என்னும் பல்லவன் 7-வது நூற்றாண்டின் முற்பகுதியில் (600-630) ஆட்சி செய்தனன். அவனுக்குக் குணபரன் என்னும் பெயரும் உண்டு. குணதரன் என்பதும் குணபரன் என்பதும் ஒன்று. குணதரன் என்பான் அப்பர் சுவாமிகளிடம் சரண் புகுந்து சைவசமயத்தைத் தழுவினானென்று பெரிய புராணத்தி லறிகின்றோம். ஆதலால், அவன் காலத்தில் அப்பர் சுவாமிகள் திகழ்ந்தன ரென்பது தெளிவு. அவர் நெடுநாள் சமணத் தலைவராயிருந்தமையால், 7-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர் திருவருள் பெற்றிருக்கலாம். பல்லவ மன்னர் சாளுக்கிய வேந்தரோடு அடிக்கடி போர் புரிந்துவந்தனர். சாளுக்கிய வேந்தர் பம்பாய் மகாணத்துக் கருகேயுள்ள பாதாமி என்னு மிடத்தில் அரசாண்டிருந்தனர். பல்லவ மன்னருக்குச் சேனைத்தலைவராய் உடன்சென்று, பாதாமி என்னும் நகரத்தை முற்றுகையிட்டு வெற்றிகொண்டவர் சிறுத்தொண்ட நாயனார் ஆவர். சிறுத்தொண்ட நாயனார் திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு போற்றினா ரென்பது பெரிய புராணத்தால் இனிது விளங்கும். சிறுத்தொண்டரால் வெல்லப்பட்ட சாளுக்கிய வேந்தன் இரண்டாவது புலிகேசன் என்பான். அவன் அரசாண்டகாலம் கி. பி. 609 முதல் 642 வரை ஆகும். வாதாபி தாக்கப்பட்டது 642-ல்தான். ஆதலால், கி. பி. 570 முதல் 655

வரையுள்ள காலமே தேவார முதல்வராகிய அப்பர், சம்பந்தர் காலமென்று எளிதில் ஊகிக்கலாம்.

தேவார முதல்வராகிய ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும் சமணக் கொள்கையை மறுத்து உலகத்துக்கு இறைவன் ஒரு முழுமுதற் கடவுள் உண்டென்றும், அன்பு செலுத்தி அவனது திருவருளைப் பெறலாமென்றும் நிலைநாட்டினவராவர். ஆளுடைய பிள்ளையார் சீர்காழியிலே சிவநெறி ஒழுகும் அந்தணமரபில் தோன்றி, மூன்றுவதாண்டிலேயே சிவபெருமான் உமையம்மையோடு விடையின்மேலெழுந்தருளித் திருமுலைப்பால் ஊட்டப்பெற்றுத் தமிழ்நாடெங்குமுள்ள சைவத் திருப்பதிகள் அனைத்திற்கும் சென்று, அருட்பாமாலை சாத்தி, எலும்பைப் பெண்ணுக்குதல் முதலிய பேரருட்செயல்கள் நிகழ்த்தித் திருமண நல்லூரில் மணந்த காதலியுடன் உடன் வந்தார்க்கெல்லாம் திருக்கோயில்மாட்டுத் தோன்றிய அருட்பெருஞ் சோதிவீடு நல்கித் தாமும் இறைவனுடன் இரண்டறக் கலந்தனர்.

ஆளுடைய அரசு நடுநாட்டில் திருவாமூரிலே வேளாண் குலத்தில் தோன்றி, அறநெறி நின்று, சமண சமயம் புக்கு, அதன் தலைவராய்த் திகழ்ந்தகாலைத் தமக்கு நேர்ந்த கொடிய சூலை நோயைத் தீர்ப்பான் வேண்டித் தம் தமக்கையாகிய திலகவதியாரை நாடிச் சைவத்திற்கு மீண்டு, திரு வீரட்டானத்துள் இறையருள் பெற்றுச் சமணர் விளைத்த நீற்றறை இடுகை முதலிய பேரிடர்களைத் திருவருளாற்றலினால் வென்று, ஆளுடைய பிள்ளையாருடன் பெரு நட்புக் கொண்டிருந்து, விந்தைச் செயல்கள் பல இயற்றித் திருக்கயிலைக் காட்சியைத் திருவையாற்றிற் கண்டு களித்துத் திருப்புகலூரினில் சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தனர்.

அப்பர் திருஞான சம்பந்தரைச் சந்தித்த காலம் கி.பி. 643 ஆக இருக்கலாம். அவர்கள் புகலூரில் மறு படியும் சந்தித்த காலம் 647 ஆகும். இருவரும் மறைக் காடு சென்று அற்புதம் நிகழ்த்திப் பிரிந்தபின் அப்பர் வட நாட்டு யாத்திரை முடித்துத் தெற்கே திரும்பிவந்து திருப்பூந்துருத்தியில் சம்பந்தரைச் சந்தித்த காலம் இரண்டாண்டுகள் பின்னிருக்கலாம். அதற்குப் பின் இரு வரும் சந்திக்கவில்லை. அவர் வட நாட்டு யாத்திரையை முடித்துத் திருப்புகலூருக்குத் திரும்பி அங்கேயே தங்கி வீடடைந்தார். அப்பர் திருப்புகலூரில் வீடடைவதற்கு முன், திருநீலநக்கர், முருகனார் முதலியவர்கள் ஆச்சா புரம் சென்று சம்பந்தருடன் சோதியில் கலந்தனர் போலும். கடைசியாக அப்பர் திருப்புகலூரில் தங்கிய காலத்தில் அங்கே முன்னே அவரையும், சம்பந்தரையும் வரவேற்ற முருகனாரைப்பற்றிய விவரம் காணப்படவில்லை.

திருஞான சம்பந்தர் சிறுத்தொண்டரைச் செங்காட் டங் குடியிற் சந்தித்த காலம் சுமார் கி. பி. 647-ஆக இருக் கலாம். ஏனெனில், வாதாபி நகரத்தில் வெற்றியடைந்த பின் திருச்செங்காட்டங் குடியிலேயே சிறுத்தொண்டர் தங்கினர். தங்கியபின் தான் சீராளன் என்னும் அருமைப் புதல்வன் அவருக்குப் பிறந்தான். பிறந்த நாலாவதாண் டில் திருஞான சம்பந்தர் அவண் சென்றதாகப் பெரிய புராணங் கூறுகின்றது.

திருஞான சம்பந்தர் செங்காட்டங்குடி வந்தபோது, அவருக்கு வயது பத்திற்கு மேலிருக்கலாம். ஏனெனில், ஏழாவதாண்டில் உபநயனம் செய்யப்பட்டபின் சோழ நாடு கொங்கு நாடுகளிலுள்ள நூற்றுக்கணக்கான திருப் பதிகளுக்கு யாத்திரைசெய்து திருச்செங்காட்டங்குடி சென்றதாகப் பெரிய புராணம் கூறும். அதனால் அவர்

திரு அவதாரம் செய்த காலம் சுமார் கி. பி. 636, 637 ஆக இருக்கலாம். அவர் நிலவுலகில் நிலவிய காலம் பதினாறுண்டாகும். அதனால் அவர் சோதியிற் கலந்த காலம் 652, 53 ஆக இருக்கலாம். அதற்குப் பின்னரே அப்பர் திருப்புகலூரில் தங்கி சோதியில் கலந்தனர். ஆகவே, அவர் காலம் கி. பி. 655-க்குள் முடிவடைந்திருக்கலாம்.

இரு பெரியாரும் அளவிறந்த தேவாரப் பதிகங்களைப் பாடியருளினார்கள். அப்பர் சுவாமிகள் சகஎ பதிகங்களும், சம்பந்தர் கசஎ பதிகங்களும் அருளிச்செய்தனரெனினும், இப்போதுள்ள அவர்கள் தேவாரப் பதிகங்கள் எண்ணூற்றுக்கு மேற்படவில்லை. விருத்தப்பாக்கள் பெரிதும் தேவாரத்திலேதான் முதற்கண் எடுத்தாளப்பட்டன. இசைத்தமிழும் இக்காலத்திலே பெரிதும் தழைத்தோங்கிற்று. இன்றும் தேவாரப்பண், தாளம் என்பவைகளாலேயே இசைத்தமிழுணர்ச்சி நிலைபெற்று வருகின்றது. தாண்டகம் என்னும் சிறந்த பாவினத்தாலேயே அப்பர் சுவாமிகளது மூன்றுந் திருமுறை அமைக்கப்பட்டுள்ளது. இதனாலவர்க்குத் "தாண்டக வேந்த"ரென்ற திருப்பெயரெழுந்தது. திருஞான சம்பந்தப் பெருமானது தேவாரங்களுள் யமகம், திரிபு, ஏகபாதம் முதலிய சொல்லணிகள் நிரம்பி உள்ளன. இருவர் தேவாரங்களுள்ளும் கடவுளைத் தலைவனாகவும், உயிரைத் தலைவியாகவும் கருதிப் பாடிய அகத்துறைகள் பல வந்துள்ளன. சேர சோழ பாண்டியர், பல்லவர் முதலியவரைப் பற்றிய குறிப்புகள் சிற்சில இடங்களில் வந்துள்ளன. திருஞான சம்பந்தருடைய திருப்பாடல்கள் இயற்கை வருணனை மிக்கனவாயும், செந்தமிழ்ப் பெருமித நடையில் இணையற்றனவாயும் இலங்குகின்றன. அப்பர் சுவாமிகள் தேவாரம் தத்துவப் பொருளை இனிதாய செஞ்

சொல்லால் விளக்கும் நயம் சிறந்தது. தேவாரம் முழுவதும், மும்மூர்த்திகளுக்கும் அப்பாலான சிவபரம் பொருளையே பகர்வதாய்ச் சமண புத்த மதங்களைக் கண்டிப்பதாய், இராவணன் மனந்திரும்பி இறைவனருள் பெற்ற கதையையும், மாலயன் கடவுளரல்லர் என்பதையும் எடுத்து மொழிந்து சைவ சித்தாந்தத்தை நிலைநாட்டுகின்றது. தேவார மென்ற சொல் 'கடவுளை அன்பினூற் பாடிய பாடல்' என்று பொருள்படும். (தே - கடவுள்; வாரம் - அன்பு) இப் பெயர் பிற்காலத் தெழுந்ததாகும்.

சுந்தரனார்

இவருடைய தேவார காலத்திலிருந்த வேறு புலவர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. தேவார காலத்திலாண்ட பல்லவன் பெயர் முதல் நரசிம்ம வர்மன் (630—655). அவனுக்குப் பின் இரண்டாவது மகேந்திர வர்மனும், முதற் பரமேச்சுர வர்மனும் ஆண்டனர். அதற்குப்பின் இரண்டாவது நரசிம்ம வர்மன் காலத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் திகழ்ந்தன ரென்பது, "காடவர் கோன் கழற்சிங்கன்" என்று திருத்தொண்டத் தொகையில் வருவதா லறியப்படும். இம் மன்னன் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசாண்டதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள். சுந்தரமூர்த்திகள் பாடிய திருக்கச்சி மேற்றளிப் பதிகத்தில், 'பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி' என்ற திருப்பாட்டு பல்லவ மன்னர் பெருமை குறைந்ததைக் குறிப்பதால், குறுநில மன்னர் அவரை எதிர்த்த காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுந்தர மூர்த்திகள் தேவாரம் பாடியருளினர் என்றலும் ஒன்று. சேரமான் பெருமாளின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கமாயின் இக்கருத்து வலியுறும்.

திருநாவலூரில், நம்பியாரூரர் ஆதிசைவ குலத்திற் பிறந்து நரசிங்க முனையரையரால் வளர்க்கப்பட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் தமது மணம் நிகழவொட்டாதபடி தடுத்தாட் கொள்ளப்பட்டுத் திருவாரூரிலே பரவையாரையுந் திருவொற்றியூரிலே சங்கிலியாரையும் மணந்து வாழ்ந்திருந்து திருத்தொண்டத்தொகை பாடிச் சேரமான் பெருமாளோடு கயிலை சென்ற கதை பெரிய புராணத்துட் கூறப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரத்தில் திருஞான சம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் நாவினுக்கரையன் நாளைப்போவான்' என்றது காண்க. திருக்கோலக்காவில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பொற்றாளம் ஈந்ததை வியந்து சுந்தரர் ஒரு பதிகத்திற் பாடியுள்ளார்.

"நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை யென்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடு
மங்க ணன்தனை யெண்கண மிறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயிலுள் ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே."

சுந்தரமூர்த்திகள் சிவபெருமானுக்குத் தோழராயிருந்தமையால், தம்பிரான்தோழ ரெனப் பெயர் பெற்றனர்.

இவர்,

"ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய்"

என்றது காண்க.

இன்னும் இவர் தேவாரத்துள் நகைச்சுவை மலிந்துள்ளமை குறித்தற் குரியது.

" மண்ணுலகும் விண்ணுலகு மும்மதே யாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்வீர்
திண்ணெனவென் னுடல்வருத்தந் தீரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாட னென்றுரைக்க வேண்டா
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே."

திருஞானசம்பந்தர் காலத்தில் அரசாண்ட பாண்டிய மன்னன் திருநெல்வேலிப் போரை வென்ற நின்ற சீர் நெடுமாறன் என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையுட் குறித்துள்ளார். அவன் பேரனாகிய பராங்குசனென்பவன் சங்கமங்கையிற் பல்லவனை வென்றவன். சங்கமங்கைப் போர் சுந்தரமூர்த்திகளுக்குப் பிற்காலம் எட்டாவது நூற்றாண்டி னடுப்பகுதியில் அரசாண்ட இரண்டாவது நந்திவர்மன் காலத்திலாதல், அதற்குப் பின்னாதல் நடந்திருத்தல் வேண்டும். பராங்குசனுக்குப் பின் நெடுஞ்சடையன் என்னப்படும் பாண்டியன் கி. பி. எசுகூ-ற் பல்லவரைப் பெண்ணாடகத்தில் வென்றோட்டியதாகத் தெரிகிறது. அவனே வேள்விக்குடிப் பட்டயத்திற்குத் தலைவன். பராங்குசனைப் பற்றிய ஒரு கோவையிலிருந்தே மிகுந்த செய்யுட்கள் இறையனா ரகப்பொருளுரையிற் காணப்படுவதால், நக்கீரர் காலம் முதல் கர்ணபரம்பரையாக வழங்கிவந்த அவ்வுரை பராங்குசன் காலத்திலாதல், அதற்குப் பின்னாதல் இப்பொழுதுள்ள வடிவை அடைந்திருக்க வேண்டும். ஆகவே, எட்டாம் நூற்றாண்டின் நடுவிலேதான் இப்பொழுதுள்ள இறையனா ரகப்பொருளுரை

எழுத்துரு வெடுத்த தென்பது தெளியப்படும். இவ்வுரையானது கவிநய மிக்கதாய் இப்பொழுதுள்ள உரைநடை நூல்கட்கெல்லாம் தலையாயதாய்க் கற்பனை நயங்களும் ஆராய்ச்சி முறைகளும் ததும்பி யிருப்பதால், அது தமிழ் மாணவர் யாவராலும் பாராட்டத் தக்கது.

புறப்பொருள் வெண்பாமாலை

இதற்குப் பின் ஐயனாரிதனா ரென்பவரால் இயற்றப் பட்ட புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிருபடலத்தின் வழிநூலாய் வெண்பா யாப்பில் இந்நூற்றாண்டி னிறுதியில் வெளிப்போந்த தென்னலாம். இந்நூலுள் பிள்ளையார், சிவபெருமான் முதலியவருடைய வணக்கம் காணப்பெறு வதால் இவர் சைவ ரென்பது தெரிகின்றது.

நிகண்டுகள்

இந் நூற்றாண்டின் பிற்பாதியிலே திவாகரம் பிங் கலந்தை யென்ற நூல்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். திவாகரம், அம்பல் என்ற ஊரில் வாழ்ந்த திவாகரரா லியற்றப்பட்டுச் சேந்தன் என்னு மரசனா லேற்றுக் கொள்ளப்பட்டது. இந்நூல் எழுதப்பட்ட காலத்துக்கு முன், அதாவது இந்நூற்றாண்டின் முற்பாதியிலே சாளுக் கிய வேந்தர்கள் தென்னாட்டிற் படையெடுத்துப் பல்லவ ரோடு போர்புரிந்தார்கள். சளுக்குவேந்த ரென்பவர் வேள்புல அரசரென்று இந்நூலுள்ளும் பிங்கலந்தையிலுங் கூறப்பட்டது. மாமாத்திரர் என்பது மருத்துவர் வகை யைச் சார்ந்தவ ரென்று இரு நூலிலுங் குறிக்கப்பட்டது. இந் நூலார் காலத்திலே நான்கு சாதிகளும் ஏற்பட்டுவிட் டன. இருவரும் வேளாளரைச் 'சதுர்த்தர்' என்றனர். வேளாளருக்குப் பத்துவகைத் தொழில் இந் நூலுட் கூறப் பட்டது.

" ஆணைவழி நிற்றல் அழிந்தோரை நிறுத்தல்
கைக்கட னாற்றல் கசிவகத் துண்மை
ஒக்கல் போற்றல் ஓவா முயற்சி
மன்னிறை தருதல் ஒற்றுமை கோடல்
விருந்துபுறந் தருதல் திருந்திய ஒழுக்கம்"

'ஒருமை' யென்பதற்கு 'இறையுணர்வு' என்று பொருள் சொல்லப்பட்டது.

'பிங்கலந்தை' யென்பது திவாகர முதல்வரின் புதல்வராகிய பிங்கல முனிவரா லியற்றப்பட்டது. இருநூலும் நூற்பாவிலேயே இயற்றப்பட்டன. இந் நூலிற் சிவாகம நூற்பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்றும், சிவ பூசை யென்பது சரியை கிரியை யோகம் ஞான மென்றும் எடுத்துரைக்கப்பட்டது. (இருநூலுஞ் சைவப் புலவர்களாலேயே இயற்றப்பட்டன வென்று தெரிகின்றது. உரிச்சொல்நிகண் டென்பது இதற்குப் பின் இயற்றப்பட்ட நூலாகும்.)

எட்டாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாவது வரை

தேவார காலம் அ-ம் நூற்றாண்டின் முற்பகுதியோடு முடிந்தது. (அ-ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் க೦-ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை வைணவ ஆழ்வார்கள் தங்கள் சமயத்தை நிலைநாட்டினர்.) இக் காலத்திலேதான் சங்கராசாரியரும் சுமார்த்த சமயத்தைப் பெரிதும் பரவச் செய்தனர். இந் நூற்றாண்டிற் புத்தமுஞ் சமணமும் சிறுபான்மையே நிலவின. அப்பொழுதுதான் வளையாபதி, குண்டலகேசி முதலிய சிறு காப்பியங்கள் இயற்றப்பட்டன போலும். பத்தாம் நூற்றாண்டிலே சமணரது இலக்கியக் கிளர்ச்சி மைசூரரசரால் ஆதரிக்கப்பட்டுச் சிறந்தது.

அக் காலத்தே சமண காவியங்கள் சிறப்புற்றன. அடுத்த மூன்று நூற்றாண்டுகளிலே பல இலக்கண நூல்களும் உரைநடை நூல்களும் இயற்றப்பட்டன. பவணந்தி முனிவர் இலக்கணமே சமணரது இயக்கத்தின் முடிவைக் குறிப்பதென்னலாம். பத்தாவது நூற்றாண்டிலே சோழமன்னர் தலையெடுத்துச் சைவத்தை வளர்த்த காலத்தில் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு இயற்றப்பட்டன. சிவாகம முதலியவற்றுள்ளும் சாதி யொழுக்கம் ஒருவாறு தழுவப்பட்டது. சாதிமுறைகள் இலக்கணத்தினும் புகுவவாயின. யாப்பணி நூல்கள் வடமொழிப் போக்கைத் தழுவித் தமிழி லியற்றப்பட்டன. பதினோராவது பன்னிரண்டாவது நூற்றாண்டுகளிலே பெருங்காப்பியங்கள் எழுந்தன. பன்னிரண்டாவது நூற்றாண்டும் பதின்மூன்றாவது நூற்றாண்டும் தொல்காப்பிய உரையாசிரியர் காலமாகும்.

அதிகாரம் கக

ஆழ்வார் காலம்

தேவாரக் காலத்திற்குப் பின் வைணவத் திருநெறித் தலைவர்களாகிய ஆழ்வார்கள் காலம் ஆயப்படுதற்குரியது. ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்கள் வரிசையைப் பல ஆசிரியர்கள் பலவாறு தொகுத் துரைத்தனர். இதனைத் தமிழ் வரலாறுடையார் எடுத்துக்காட்டினார். அவர்களுடைய பிறப்பு வரிசை பின் பழகிய ஜீயர் என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது. அது பின் வரும் வெண்பாவினால் குறிக்கப்படும்.

"பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசை
ஐயனருள் மாறன் சேரலர்கோன் துய்யபட்ட
நாதனன்பர் தாட்டுளி நற்பாண நற்கலியன்
ஈதிவர்தோற் றத்தடைவா மிங்கு."

இம் முறையையே வேதாந்த தேசிகரும் பிரபந்த சாரம் என்னும் தமது நூலுள் தழுவியுள்ளார்.

"வையக மெண் பொய்கை பூதம்
பேயாழ்வார் மழிசையர்கோன்
மகிழ் மாறன் மதுரகவி
பொய்யில் புகழ் கோழியர் கோன்
விட்டுசித்தன் பூங்கோதை
தொண்டரடிப்பொடி பாணாழ்வார்
ஐயனருட் கலியன்"

என்றது காண்க. இவ் வரிசையே இவர்கள் காலத்தின் வரிசையாகும்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகிய இம் மூவரும் ஒரு காலத்தவர். இம் மூவரும் முறையே நாலாயிரப் பிரபந்தத்துள் முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றும் திருவந்தாதி பாடினவர். பொய்கையார் திருக்காஞ்சியிலும், பேயாழ்வார் திரு மயிலையிலும், பூதத்தாழ்வார் மாவலிபுர மென்னுந் திருக்கடல் மல்லையிலும் பிறந்தவர்கள். பொய்கையார் திருக்கோவலூர்க்குச் சென்று திருமாலை வழிபட்டபின் ஓரன்பர் வீட்டின் இடைக்கழியில் துயிலக் கருதியிருக்கும்போது பேயாழ்வாரும் அங்கே சென்று இடம் வேண்ட, அதற்கிணங்கிய பொய்கையார் அவருடன் ஆண்டிருந்த காலை, பூதத்தாழ்வாரும் அவண் போந்து இடம் வேண்டினர். ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும் மூவர் நிற்கவும் இட மிருநதது. அப்போது இருட் காலமா யிருந்தது.

இம் மூவர்க்கும் இடையில் யாரோ ஒருவர் மூவரையும் நெருக்குவதாகத் தெரிந்தமையால், அவர் யாரென்று மூவரும் ஆராய்ந்துணர்ந்தகாலை, அவர் திருமாலென்றறிந்தனர். உடனே மூவரும் பாடினர்.

பொய்கையார்,

"வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூடினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று"

என்றும், பேயாழ்வார்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று"

என்றும், பூதத்தாழ்வார்,

"அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்றும் அருளினார்.

இவர்கள் பாடல்கள் மிகுதியும் வெண்பா யாப்பினாலேயே இயற்றப்பட்டிருக்கின்றன. இவர்களது வெண்பாச் சொன்னடையை நோக்குமிடத்துப் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றப் பெற்ற காலத்திலேயே இவர்கள் பாடல்கள் எழுந்தன என்று கொள்ள இடமுண்டு. ஆகவே, இவர்கள் காலம் எட்டாம் நூற்றாண்டாக இருத்தல் வேண்டும். பொய்கையார், "விண்ணகரம் வெஃகா

விரிதிரைநீர் வேங்கடம்'' என்ற செய்யுளில் கச்சியி லுள்ள பரமேசுர விண்ணகரத்தைக் குறித்துள்ளனர். பரமேசுரவிண்ணகரம் இரண்டாம் பரமேசுர பல்லவனுல் அமைக்கப்பெற்றது. அவன் கி. பி. 715-ல் ஆட்சி செய்து கொண்டிருந்தது ஒரு கல் வெட்டினுல் தெரியவருகின்றது.

பூதத் தாழ்வார் 'மாமல்லன்' எனப் பெயர் பெற்ற நரசிம்மவர்மனுல் ஆக்கப்பெற்ற மாமல்லை நகரைத் தனது பாட்டினுள் குறிக்கின்றமையால், (மாமல்லை கோவல் மதிட்குடந்தை என்பரே ஏவல்ல எந்தைக் கிடம்) நரசிம்ம வர்மன் கால முடிவாகிய 660-க்கு முன் அவர் காலம் இருக்க முடியாது.

எனவே, மூவர் காலமும் எட்டாம் நூற்ருண்டின் முற்பகுதி என்பது தேற்றம்.

திருமழிசை ஆழ்வார் திருமழிசையிற் பிறந்தவர். இவர் கொடிய வைணவரென்பது இவர் உருத்திரனை வென்ருர் என்ற கதையால் அறியப்படும். இவர் காஞ்சியில் பல்லவன் தம்மை இகழ்ந்ததற்காக ஆழ்வாரையும் அழைத்துக்கொண்டு அவ்வூரைவிட்டுப் போயினுரென்று ஒரு வரலாறு கேட்கப்படுகின்றது. காஞ்சியிலிருந்து வெளிப்போந்தகாலை இவர் பாடிய பாட்டு வருமாறு:

''கணிகண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.''

இதனுல் இவர் சைவத்தில் சிறந்து விளங்கிய இரண்டாம் நந்திவர்மன், தந்திவர்மன் ஆகியோர் காலத்தவர் என்று ஊகிக்க இடமுண்டு.

இவர் 'குணபரன்' என்ற சொல்லைத் திருமாலுக்கிட்டு வணங்குகின்றார். குணபரன் என்ற பெயர் அப்பர் சுவாமி காலத்திலிருந்த மகேந்திரவர்மனைக் குறிக்கும். ஆதலின், இவர் அவர் காலமாகிய 7-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டவர். தோற்ற வரிசையில் முதலாழ்வார் மூவர்க்குப் பிற்பட்டாராதலின் இவர் 8-ம் நூற்றாண்டினர் என்று கொள்ளலாம்.

இவ்வாழ்வார் தம்மைச் சூத்திரர் என்றிகழ்ந்த வேதியரை வென்று, திருக்குடந்தையில் யோகத்திலமர்ந்து திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் நாலாயிரப் பிரபந்தத்துள் திருச் சந்தவிருத்தம், நான்முகன் திருவந்தாதி என்பவற்றைப் பாடினர்.

நம்மாழ்வார் ஆழ்வாரிற் றலையானவரென்பது வைணவ சமயத்தவர் கருத்து. அவர் திருநெல்வேலிச் சில்லா ஆழ்வார் திருநகரியில் வேளாண்குலத்துட் பிறந்து தாய்ப்பாலுண்ணாது வளர்ந்தனரென்ப. அவர் அவ்வூர்ப் பெருமாள் கோயிலின் வடபுறத்திருந்த புளியமரமொன்றனடியில் குழந்தைப் பருவத்திலேயே யோகிருந்து திருமால் திருவருள் பெற்றனரென்ப. நம்மாழ்வார் காலத்தைப்பற்றி ஆராய்ச்சிக்காரர்கள் பலவாறு கூறுகின்றனர்.

அவர் தமது திருவாய்மொழி யொன்றில் 'புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கையி லிருந்து' என்பதால், வரகுணன் பெயராலேற்பட்ட திருப்பதியை நம்மாழ்வார் பாடினராவர். கி. பி. எஎ0-ல் ஆண்ட மாறன் நெடுஞ்சடையன் காலத்திற்குப் பின்பே பிற்காலத்து முதலாவது வரகுணன் அரசாண்டவனாவான். நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் மிகுதியும் பயின்றுள்ள வடமொழிப் பகுதிகளினாலும், சொன்னடையினாலும் அவர் நூலை அ-வது நூற்றாண்டுக்கு முற்பட்டதென்று கூற முடிய

வில்லை. மாறன் நெடுஞ்சடையன் காலத்திற்குப் பின் உண்டான சீவரமங்கை யென்னும் தலத்தையும் நம்மாழ்வார் பாடியிருத்தலால், அவர் அ-ம் நூற்றுண்டி னிறுதியிலாதல், ஒன்பதாவது நூற்றுண்டின் தொடக்கத்திலாதல் வாழ்ந்திருக்கவேண்டும். அவர் தம்முடைய நூல் முழுதையும் அந்தாதித் தொடையாற் பாடவேண்டுமென்று கருதியே பாடியதாகத் தெரிகின்றது. அவர் திருமாலைச் சிறப்பாக வழிபட்டாலும், மும்மூர்த்திகளையும் பலவிடங்களிற் பொதுமையாக வழிபட்டுள்ளார்.

நம்மாழ்வார் திருப்பாடல்கள் திருவாய்மொழி யெனப்படும். ஏனையோர் செய்தவை திருமொழி யெனப்படும். திருவாசிரியம், திருவாய்மொழி, திருவிருத்தம், பெரிய திருவந்தாதி என்பன இவர் பாடல்கள்.

" அவாவறச்சூழ் அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் "

என்றது காண்க.

தேவாரச் சொற்றொடர்கள் சிலவற்றையும், திருவாசகப் பிரபந்த முறையினையும் இவர் எடுத்தாண்டுள்ளார்.

மதுரகவி யாழ்வா ரென்பவர் பாண்டிய நாட்டிலே திருக்கோளூர் என்னுமிடத்திற் பிறந்து, அயோத்திக்குச் சென்று, நம்மாழ்வார் புகழ் கேட்டு மீண்டு திருக்குருகூர்க்கு வந்து, அவர் திருவடிகளை வணங்கி, அவர் திருப்பாடல்க ளனைத்தையுந் தாமே யெழுதிக் 'கண்ணிநுண் சிறுதாம்பு' என்னும் பதிகம் அருளிச்செய்து, நம்மாழ்வார் திருநாட்டுக் கெழுந்தருளியபின் ஐம்பதாண்டு அவர் திருவடிவத்தை வைத்து வணங்கி, வைணவத்தை நிலைநிறுத்தினவராவர். இவர் வைணவ அந்தணர்.

குலசேகர ஆழ்வார் திருவஞ்சைக் களத்தில் பிறந்த அரசர். இராமாயணப் பிரசங்கம் கேட்டபோது தம்மை மறந்த பேரன்பினலே இராக்கதரை வெல்லப் பெருமாளுக்குத் தாம் 'துணை செய்வன்' என்றெழுந்தார். இராக்கதரை வென்று பிராட்டியைப் பெருமாள் தழுவினுரென்று கூறியவுடன் ஆழ்வார் அமைதியுற்றூர். இவர் சில அற்புதங்கள் இயற்றினர் என்ப. தம் மகனுக்குப் பட்டமளித்துவிட்டுச் சீரங்கம், காஞ்சி முதலிய திருப்பதிகளை வணங்கி, வீரநாராயண புரத்திலுள்ள மன்னனுர் கோயிலென்னுமிடத்தில் திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் செய்த வடமொழி நூல் 'முகுந்த மாலை' என்பது.

குலசேகர ஆழ்வார் சேரமான் காலத்திற்குப் பிற்பட்டவர். சேரமான் காலம்வரை சேரமரபு சைவமதத்தைத் தழுவிவந்ததாகத் தெரிகிறது. இவ் வாழ்வார் தம்மைக் கூடற்கோமா னென்றும் கூறுவதால், இவர் காலத்தில் பாண்டிய அரசு வலி குன்றியிருத்தல் வேண்டும். சோழ மன்னன் விசயாலயன் காலமாகிய ஒன்பதாம் நூற்றுண்டின் நடுவுக்கு (கி. பி. 849) முன்னும், மூன்றும் நந்திவர்மனல் தெள்ளாற்றில் வெல்லப்பட்ட வரகுணனுக்குப் பின்னும் இவ்வாழ்வார் திகழ்ந்திருத்தல் வேண்டும். கி. பி. 825-க்கு மேல் 849-க்குள் இவர் வெற்றியுடன் ஆட்சி செய்த காலமாயிருக்கலாம். இவர் இராமபிரானிடம் அளவிறந்த பற்றுடையவர். இவர் பாடியது பெருமாள் திருமொழி.

பெரியாழ்வார் என்பவர் பாண்டிநாட்டிலுள்ள வில்லிப்புத்தூரில் பிறந்தவர். இவர் காலத்தில் மதுரையில் ஆட்சிசெய்த மன்னன் வல்லபதேவன் என்பான். அவன் ஆண்ட காலம் கி. பி. 815 முதல் 840 வரையாகும். அவன்பாற் சென்று இவர் வைணவத்தை நிலைநாட்டிப் பொற்கிழி

பெற்றவர் என்பர். இவரியற்றிய பாடல்கள் பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு என்பன.

இவர் தமது பாடல்களில் 'அபிமான துங்கன்' என்று மோ ராசனைப் பற்றியுங் கூறுகின்றார். அவன் யாரென்று தெரியவில்லை. பெரியாழ்வாருடைய மகளையே சூடிக் கொடுத்த நாச்சியா ரென்றும், ஆண்டா ளென்றும் கூறுவார்கள்.

பெருமாளுக்குப் பெரியாழ்வார் தொடுக்கும் திருமாலையாகிய கோதையை அவர் மகள் ஆண்டாள் சூடியெடுத்து வைத்திருந்த தறிந்து வேறு மாலை தொடுத்துச் சாத்த முயன்றகாலை, பெருமாள் அவற்றை மறுத்துச் சூடிக்கொடுத்த மாலையே வேண்டு மென்றார். அவ்வாறே செய்து பெருமாள் கட்டளைப்படி சூடிக்கொடுத்த நாச்சியாரைப் பெருமாளுக்குத் திருமணம் செய்வித்தார். அவர் பாடிய பாடல் திருமொழி, திருப்பாவை முதலியன.

தொண்டரடிப் பொடியாழ்வார் திருமண்டங்குடி என்னுமிடத்திற் பிறந்து, திருவரங்கம் பெரிய கோயிலில் திருமாலைப்பணி யியற்றிப் பெருமாளால் ஆட்கொள்ளப் பட்டவர். பின்பழகிய ஜீயர் குருபரம்பரைப் பிரபாவத்தில் திருமங்கை மன்னன் கோயிற்றிருமதில் கட்டும்போது தொண்டரடிப் பொடியார் திருத்தொண்டு செய்கின்ற இடம் ஒதுங்கக் கட்டுவித்ததாகக் குறித்துள்ளார். அதனால் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கை மன்னனுக்கு முன்னேயே திருப்பணி செய்துகொண்டிருந்தா ரென்று தெரிகிறது.

திருப்பாணாழ்வார் என்பவர் உறையூரிற் பிறந்து, பஞ்சமரால் வளர்க்கப்பட்டமையின், திருவரங்கம் பெரிய கோயிலுட் செல்ல இயலாமல் காவிரிக் கரையிலிருந்து

இன்னிசையுடன் பெருமானைப் பாடினர். பெருமான் கட்டளையின்படி கோயிலருச்சகர் ஆழ்வாரைத் தோள் மேலேற்றிச் சென்று பெருமாள் திருமுன் இறக்கிச் சென்றனர். ஆழ்வார் பெருமானைக் கண்ணாரக் கண்டு களித்து 'அமலனாதிப்பிரான்' என்னும் திருப்பாசுரம் அருளிச்செய்தனர்.

"இழிகுலத்தவர்களேனும் எம்மடியார்களாகில்....... ....நின்னொடு மொக்க அருளினாய்" என்ற தொண்டரடிப்பொடி ஆழ்வாரது திருப்பாசுர அடிகள் திருப்பாணாழ்வாரைக் குறித்தல் கூடுமெனக் கொள்ளின், அவரோடொத்த காலத்தவர் திருப்பாணாழ்வார் என்று கொள்ளலாம்.

திருமங்கையாழ்வார் திருவாலி நகரத்தில் நீலி என்னும் படைத்தலைவனுக்கு மகனாய்த் தோன்றி, பல சிற்றரசரைச் சில தோழர்களின் உதவியைக் கொண்டு வென்றாரென்ப. அவர்கள் பெயர் நகைச்சுவை விளைப்பன. அவை தாளூதுவான், நீர்மேல் நடப்பான், நிழலின் மறைவான், தோலா வழக்கன், சாயை பிடிப்பான் என்பன. இவர் குமுதவல்லி என்னும் வைணவப் பெண்ணினை மணத்தற் பொருட்டுத் திருநறையூர் நம்பி என்னும் ஆசிரியனிடத்துத் திருவிலச்சினை பெற்றுத் திருமால் திருவருளுக் குரியவரானார். இவர்க்கு நாலுகவிப்பெருமா ளென்றும் பெயருண்டு. இவர் ஆழ்வார் திருநகரியில் அத்தியயனத் திருவிழா நிகழ்வித்தனர். திருக்குறுங்குடியில் இவர் திருநாட்டுக் கெழுந்தருளினர். இவரியற்றிய நூல்கள் சிறிய திருமடல், பெரிய திருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, பெரிய திருமொழி என்பன. இவ்வாறினையும் நம்மாழ்வா

ரியற்றிய நான்கு திருப்பாடற் றொகையாகிய நான்மறைக்கும் ஆறங்கமாக வைணவர்கள் கருதுவார்கள்.

பல்லவர்களுள் சிறந்து விளங்கிய மூன்றாவது நந்திவர்மன் இயற்றிய திருப்பணியையே திருமங்கை மன்னர் தம்முடைய பாடலுள் 'நந்தி பணி செய்த' என்று குறிப்பதாகத் தெரியவருவதாலும், 'பணிசெய்த' என்று இறந்த காலத்தால் கூறினமையாலும், மூன்றாவது நந்திவர்மன் பணிசெய்த காலத்தின்பின் இவர் இருந்திருக்கவேண்டும். "நீண்முடி வணங்கும் வைரமேகன்" என்று திருமங்கையார் நிகழ்காலத்துக் கூறுவதால் இவர் அவன் காலத்தவர் ஆவர். (வைரமேகன் காலம் திருவொற்றியூர்க் கல்வெட்டொன்றினால் கி. பி. 880 என்பது பெறப்படும். எனவே, திருமங்கையாழ்வார் 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியி லிருந்தோராவர்.)

இதுகாறுங் கூறியவாற்றான் ஆழ்வார்கள் காலம் 8-வது நூற்றாண்டும் 9-வது நூற்றாண்டுமா மென்பது தெளியப்படும்.

நந்திவர்ம பல்லவன் (830-854)

ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திகழ்ந்த நந்திவர்ம பல்லவ னென்பான், தெள்ளாறு என்னுமிடத்தில் வரகுண பாண்டியனை முறியடித்தான் என்று தெரிகின்றது. இஃது 9-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்திருக்கவேண்டும். இவன் காலத்தில் தான் பெருந்தேவனார் என்பவர் பாரத வெண்பாப் பாடினார். கடைச்சங்க காலத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் இவரின் வேறாவர். இக் காலத்திலே நந்திக்கலம்பக மென்னும் கலம்பகமும் நந்திவர்ம பல்லவன்மீது பாடப்பட்டது. நந்திக்

கலம்பக மென்பது நந்திப் பல்லவனைக் கொல்வதற்காக அவன் தம்பியாகிய குலமகனாற் பாடப்பட்ட தென்ப.

“ நந்தி கலம்பகத்தான் மாண்டகதை நாடறியுஞ்
சுந்தரஞ்சேர் தென்குளத்தூர்ச் சோமேசா—சந்ததமும்
வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை ”

என்றார் சிவஞான முனிவர்.

குலமகன் என்பான் நந்தித் தொண்டைமானோடு பகைமை கொண்டவன்; நந்தித் தொண்டைமானது தந்தையின் காதற் கிழத்திப் புதல்வன். தன் தந்தையாலே முடிசூட்டப்பெற்ற நந்திபாற் பொறாமைகொண்ட குலமகன் நந்தியின் கழிபெருந் தமிழ்ச் சுவையை யறிந்து கலம்பக மொன்று பாடி, அதன் ஒரு பாட்டினை நந்தியினிடங் கூறியவளவில், அவன் கலம்பக முழுதுங் கூறும்படி வேண்டக் குலமகன் நீ பல்லக்கேறி இடுகாடடைந்து சிதையின் மீது இருந்து கேட்டல்வேண்டு மென்ன, அவன் அதற்கிணங்கி நூல்முழுவதையுங் கேட்டு இறந்தன னென்பது கதை.

“ பொள்ளா நுழைவழிப் பொய்த்தலை நீட்டும் புலவன்முன்சொல்
கள்ளாருஞ் செஞ்சொற் கலம்பக மேகொண்டு காயம்விட்ட
தெள்ளாறை நந்தி யெனுந்தொண்டை மான்கலி தீர்ப்பதற்கு
வள்வார் முரச மதிர்த்தாண்ட துந்தொண்டை மண்டலமே.”

நந்திவர்மன் காலத்திற்குப்பின் பல்லவ மன்னர் வலி குன்றி அவர்கள் அரசுஞ் சீர்கேடுற்றது. (பல்லவ மன்னர்களுள் இறுதியாய் அரசாண்ட அபராசித னென்பான், ஆதித்திய சோழனால் சுமார் கி. பி. அஅ௫-ம் ஆண்டில் வென்றொழிக்கப்பட்டான்.)

அதிகாரம் கஉ

திருவிசைப்பாக் காலம்

சைவத் திருமுறைகளை வகுத்த சோழ மன்னன் இராச இராசனென்பது பெரியபுராணத்தால் இனிது விளங்கும். இராச இராசன் என்ற பெயரையுடைய சோழமன்னர் பலர். திருவாரூரிலே தியாகராசரைப் பணிந்து அரசுசெலுத்திய இராச இராசன் கி. பி. கஅரு முதல் - க0கக-வரை அரசாண்டவன். இவனே திருமுறை வகுத்தவன். இவன் பேரனாகிய இராச இராசன் கங்கைகொண்ட சோழபுரத்தில் அரசாண்டதாகத் தெரிவதால், அவன் திருமுறை வகுத்தவன் என்று கொள்ள இடமில்லை. ஆனால் திருவாரூரிலாண்ட இராச இராசன் காலத்திற்குப்பின், கங்கைகொண்ட சோழபுரம் ஏற்பட்டிருப்பின், கங்கைகொண்ட சோழேச்சரத்தைப் பாடிய கருவூர்த் தேவரது திருவிசைப்பா, திருமுறை வகுத்தபின் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். கருவூர்த்தேவரின் சில பதிகங்கள் திருமுறை வகுத்த காலத்திற் சேர்க்கப்பட்டிருப்பின் எஞ்சியவற்றைப் பின்னர்ச் சேர்த்தல் இழுக்காகா தென்றுணர்க. தஞ்சை இராச இராசேச்சுர மென்னுந் திருப்பதி இராச இராசன் காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது. அதைப்பற்றிய கருவூர்த் தேவரது திருவிசைப்பா, திருமுறை வகுப்பிற்கு முன்னரே ஏற்பட்டிருத்தல் வேண்டும். இராச இராச மன்னன் காலத்திலே கருவூர்த் தேவர் திகழ்ந்தன ரென்பது தெளிவு.

திருவிசைப்பா ஆசிரியர்களாவார்:—(1) திருமாளிகைத்தேவர், (2) சேந்தனார், (3) கருவூர்த்தேவர், (4) பூந்துருத்திநம்பி காடவநம்பி, (5) கண்டராதித்தர், (6) வேணாட்டடிகள், (7) திருவாலி யமுதனார், (8) புருடோத்தம நம்பி, (9) சேதுராயர் என்பவர்.

திருமாளிகைத் தேவர்

இவர் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த சைவர்; சிவ பூசையில் தலைசிறந்தவர். இவர் போக முனிவரின் மாணுக்கரென்ப. போகர் திருமூலர் மாணுக்கராகிய காலாங்கி நாதருக்கு மாணுக்கரென்ப. கருவூர்த் தேவரும் போகருக்கு மாணுக்கர். ஆதலால் இருவரும் ஒரே காலத்தவரென்றும், சித்தர்கள் நெறியில் நின்றனரென்றுங் கொள்ள இடமுண்டு. திருமாளிகைத்தேவர் இறைவன் வழிபாட்டையும், கருவூர்த்தேவர் இறைவி வழிபாட்டையுஞ் சிறப்பாகச் செய்தனரென்ப. திருமாளிகைத் தேவர் சேந்தனுருடன் சிதம்பரத்துக்குச் சென்று, அங்குச் செல்லாதிருந்த தேரை வடமில்லாமல் ஓடச் செய்தனரென்று கேட்கப்படுகின்றது. சேந்தனுரையுந் திருமாளிகைத் தேவரையும் பற்றிய சாசனமொன்று திருவீழிமிழலையிற் கிடைத்திருப்பதாலும் இருவரும் ஒரு காலத்தவரே. திருமாளிகைத்தேவர் பாடிய திருவிசைப் பாப் பதிகங்கள் நான்குந் தில்லையிற் பாடப்பெற்றன. அவர் தம் மூன்று பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளிலும் மகேந்திர மலையைப் புகழ்ந்திருத்தல் காண்க. நான்காவது பதிகத்தில் அவர் காலத்திருந்த புறச்சமயிகளைக் கடிந்துரைத்தனர்.

"திசைக்குமிக் குலவுசீர்த்தித் தில்லைக்கூத் துகந்துதீய
நசிக்கவெண்ணீறதாடு நமர்களை நணுகாநாய்க
ளசிக்கவா ரியங்களோது மாதரைப் பேதவாதப்
பிசுக்கரைக் காணகண்வாய் பேசாதப் பேய்களோடே"

"புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே"

என்றது காண்க.

திருமாளிகைத்தேவர் கோயில், திருவாவடுதுறை ஆதீன மடத்துள் இருக்கின்றது.

கருவூர்த் தேவர்

இவர் கொங்கு நாட்டுத் தலங்களு ளொன்றாய கருவூரில் வாழ்ந்தவர். நெல்லைத் தல புராணத்திலும் கருவூரைப்பற்றி விவரங் காணப்படுகின்றது. அதிற் கருவூர்ச் சித்தரென்று இவர் அழைக்கப்படுகின்றார். இவர் பல விந்தைகளியற்றினதாகப் புராணங் கூறுகின்றது. இவர் தஞ்சை இராச இராசேச்சுரத்திற் சிவலிங்கப் பிரதிட்டையைச் செய்ய உதவினரென்ப. திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் "செந்தமிழ்ச் செல்வியில்(Vol. IV. & V.)" இவரது வரலாற்றைத் தெளிவாக எழுதியுள்ளார்கள். கருவூர்த்தேவர் கோயில், திருக்களந்தை ஆதித்தேச்சரம், கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, திருவிடைமருதூர், தஞ்சை இராச இராசேச்சரம், கங்கைகொண்ட சோளேச்சரம் என்னுந் திருப்பதிகளுக்குத் திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் அருளிச்செய்தனர். சிவபெருமான் கருதுவார் கருதும் வடிவமாய் நின்றருள்வான் என்பதைப் பின்வரும் பாட்டுக் காட்டும்.

"சுருதிவா னவனுந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பினிந் திரனும்
பருதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனு மகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனு மெயில்கள்மூன் றெரித்த
வேறுசே வகனுமாம் பின்னுங்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே."

மகளிர்மாட்டு வைக்குங் காதலை இறைவன் மாட்டு வைக்க வென்பார் இவர்,

“ தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்தகங்
கைகொண்டசோ ளேச்சரத் தானே”

என்றார்.

இவர் சிவபெருமான் யோகவடிவங்கொண்ட காலை யும் போகவடிவ முடையா ரென்பார், ‘ மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை’ யென்றார். பெருமானைச் சைவனென் றழைக்கு மரபு இவர் திருப்பாட்டிலும் காணப்படும்.

“ தனியனே னுள்ளங் கோயில்கொண் டருளுஞ்
சைவனே. ”

சேந்தனார்

இவர் திருவீழிமிழலையில் இருந்தவர் போலும். பட்டினத்தடிகள் அமைச்சராய்க் காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்து, அடிகள் ஏவலால் அவர்கள் பொருளைப் பலர்க்குங் கொள்ளைகொடுத்தாற்போல் அவர் வழங்கு வதைக் கண்ட அரசன் அவரைச் சிறையிலிடத் தமது ஆசிரிய ரருளால் சிறை நீங்கித் தில்லை சென்று, விறகு விற்பதால் வரும் ஊதியத்தால் நாளும் ஒரு சிவனடி யவரை உண்பித்துத் தாமும் மனைவி மக்களுடன் வாழ்ந்திருந்தனர். சிவபெருமானே நள்ளிரவில் அவர் வீட்டுக்குச் சென்று கூழுணவு பெற்று அதன்

மிகுதியைத் தமது திருமேனியிற் காட்டிச் சேந்தனார் பேரன்பை உலகவர்க் கறிவித்தன ரென்ப. தில்லையிற் றேரோடும்படி இவர் திருப்பல்லாண்டு பாடினரென்பது கேட்கப்படுகின்றது. திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி யென்னு மிடங்கட்கு இவருடைய திருவிசைப்பாப் பதிகங்கள் உள்ளன. சம்பந்தர்க்கும் அப்பர்க்கும் படிக்கா சருளியதை இவர்,

"பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
 பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
 நெஞ்சினுள் நிறைந்துநின் றானை"

என்ற அடிகளிற் குறித்தமை காண்க.

திருவிடைக்கழித் திருவிசைப்பா முருகப் பெருமானைப் பற்றிப் பாடப்பெற்றது. அதன்கண் 'நற்றா யிரங்கல்' என்னும் அகத் துறையிற் பல பாடல்கள் வந்துள்ளன.

"மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம்
 வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
 குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
 றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
 னென்னுமென் மெல்லிய லிவளே."

சுப்பிரமணியன் என்ற வடமொழி நாமம்,

"தூவிநற் பீலி மாமயி லூருஞ்
 சுப்பிர மண்ணியன் றானே"

என்ற விடத்து வந்தமை காண்க.

கடவுளது பெருவடிவம் பின்வருந் திருவிசைப் பாவினுள் வரும்.

"எண்ணில்பல் கோடி சேவடி முடிக
ளெண்ணில்பல் கோடிதிண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாம
மேர்கொண்முக் கண்முக மியல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தரேர் வீழி
யிவர்நம்மை யாளுடை யாரே."

பூந்துருத்தி நம்பி காடவ நம்பி

இவர் திருவிசைப்பா வாசிரியர். இவர் திருப்பூந் துருத்தியில் வாழ்ந்த ஆதிசைவர் போலும்.

"அல்லியம் பூம்பழனத் தாமூர்நா வுக்கரசை"

என்றும்,

"எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளுஞ்
சம்பந்தன்"

என்றும்,

"களையா வுடலோடு சேரமா னாரூரன்
விளையா மதமாறு வெள்ளானை மேல்கொள்ள"

என்றும் இவர் அருளிச்செய்திருப்பதால், தேவார மூவர் காலத்துக்கு இவர் பிற்பட்டவரென்பது தெளிவு. (இவர் திருவாரூர்க்குந் தில்லைக்குமே திருவிசைப்பாப் பாடினர்.) இவரது அழகிய திருவிசைப்பா ஒன்று வருமாறு:

"பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தவா பாரீர்

சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே.''

இதன் கணே 'சத்தியாய்ச் சிவமாய்' என்ற பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணக் காப்பு முதற்குறிப்பும், 'உலகெலாம்' என்னும் பெரியபுராண முதற்குறிப்பும் அமைந்துகிடத்தல் வியக்கத் தக்கதன்றே!

கண்டராதித்தர்

இவர் சோழர் மரபினர். இவர் தம்மைக் 'காரார் சோலைக் கோழிவேந்தன் றஞ்சையர்கோன் கலந்த, ஆராவின்சொற் கண்டராதித்தன்' என்றதுங் காண்க. இவர் காலம் பத்தாம் நூற்றாண்டில் நடுப்பகுதி யென்ப. இவர்,

'' வெங்கோல் வேந்தன் தென்னனுடும்
ஈழமுங் கொண்டதிறற்
செங்கோற் சோழன் கோழிவேந்தன்
செம்பியன் ''

என்றமையால், சோழமன்னர் பிற அரசரை வென்று சிறப்புற்றோங்கிய பத்தாம் நூற்றாண்டிலே இவர் பாடியருளின ரென்று கருதப்படும். இவர் திருவிசைப்பா தில்லைக்கு மாத்திரமே யுள்ளது.

வேணாட்டடிகள்

இவர் தில்லைக்கு ஒரு திருவிசைப்பாப் பதிகம் பாடியுள்ளார். வேணாடு என்பது சேரநாட்டின் தென்பகுதியாகிய திருவாங்கூ ரென்ப. இவர் சொன்னடையால், இவர் பத்தாம் நூற்றாண்டினராதல் கருதப்படுவதேயன்றி, இவரைப்பற்றிய வேறு செய்தி யாதுந் தெரிந்திலது.

திருவாலியமுதனர்

இவர் கோயிற்குரிய நான்கு திருவிசைப்பாப் பதிகங்கள் இயற்றியருளினர். இவரது முதற் றிருப்பதிகத்தில் திருவடிமுதற் சென்னிவரையுள்ள இறைவரது திருமேனிப் பகுதிகளை முறையே பத்துப் பாட்டிலும் புகழ்ந்து பாடியிருப்பதால், அதற்குப் 'பாதாதிகேச' மென்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இவர் திருஆலி யென்னும் ஊரிற் பிறந்த அமுதனரென்னுஞ் சிவனடியா ரென்பது இவரது திருப்பெயரால் விளங்குவதாயினும், 'ஆலைகள் சூழ்மயிலை மறைவல வாலி சொல்லை' என்று இவர் தமது நான்காம் பதிகத்திறுதியுட் கூறிப்போந்தமையால், இவர் திருமயிலையுள் வாழ்ந்தவ ரென்றும், 'ஆலி' யென்ற பெயர் இவர்க்குண்டென்றுந் தெரியவருகின்றது. இவரது மூன்றும் பதிகத்துப் பத்தாம் பாட்டில்,

> "நெடியசமணு மறைசாக் கியரு
> நிரம்பாப் பல்கோடிச்
> செடியுந் தவத்தோ ரடையாத் தில்லைச்
> சிற்றம் பலந்தன்னுள்
> அடிக ளவரை யாரூர்நம்பி
> யவர்க ளிசைபாடக்
> கொடியும் விடையு முடையகோலக்
> குழக னடுமே"

என்ற விடத்து, சமண் முதலிய புறச் சமயங்களும், நம்பியாரூரரும் விதந்தோதப்பட்டமையால், இவருந் தேவார காலத்திற்குப் பிற்பட்டவ ரென்பது தெளிவு.

புருடோத்தம நம்பி

இவர் இரண்டு திருப்பதிகங்கள் தில்லைப் பெருமான் மீது பாடியுள்ளார். 'மாசிலா மறைபல ஓதுநாவன்'

என்று இவர் தமது முதற்பதிகத் திறுதிச் செய்யுளிற் கூறினமையால், இவரை வேதிய ரென்ப. இவர் பாடல் களில் அகத்துறைகள் மிகப் பயின்றுள்ளன. இவரது ஊருங் காலமுந் தெளிவாக விளங்கவில்லை.

சேதிராயர்

இவர் திருக்கோவலூர்ப் பாங்கருள்ள மெய்ப்பொரு ளுயனாரது சேதிநாட்டு மன்னர் மரபினர். இவர் தம்மைச் 'சேதியர்கோன்' என்றது காண்க. இவர் பாடி யது தில்லைப் பெருமான்மீது ஒரு திருவிசைப்பாப் பதிக மே. அது முழுதும் அகத்துறைக ளமைந்த பாட்டுக் களையே உடையது.

"மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பனென்
றோதி லுய்வனென் பைங்கிளி யேயெனுஞ்
சேதித் தீர்சிர நான்முக னைத்தில்லை
வாதித் தீரென்ம டக்கொடி யையயே."

இவ் வொன்பது சைவப் பெரியார் இயற்றியருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் பதிகங்கள் ஒன்பதாந் திருமுறையாக அமைந்துள்ளன. பத்தாந் திருமுறை திருமந்திர மென்று முன்னே கூறினும்.

அதிகாரம் கஙு

சித்தரும் சித்தர் நூலும்

சித்தர்களென்பார் பண்டைக் காலத்து அறிவருள் ஒரு சாரார். அவர்க்கு அறிவரென்ற பெயரே அமைந்திருந்தது. யோகம் பயின்று விரிந்த காட்சியுற்றுப் பொருள்களின் உண்மையியல்புகளையும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அறிந்து, அவர்கள் தமிழிலே மருத்துவநூல், மந்திரநூல், இரசவாத நூல், யோகநூல் ஞான நூல் என்னும் பலவகை இலக்கியங்களை உலகுக்கீந்தனர். சித்த நூலோர் கொள்கைப்படி சிவனாரிடத்து நந்தி, அகத்தியர் முதலியோர் ஆதியில் மருத்துவ முறையைக் கேட்டனர் எனவும், அம் மருத்துவ முறையைத் திருமூலர் முதலிய பதினெண் சித்தர்கள் வளர்த்துப் பரவச்செய்தன ரெனவுங் கேட்கின்றோம். சித்த மருத்துவம் தமிழர்க்குரிய தென்பதைக் காலஞ் சென்ற சர். சுப்பிரமணிய அய்யர், பண்டிதர் கோபாலாச்சாரியார் என்பவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். சிலர் பதினெண் சித்தர்களுள் நந்தி, அகத்தியர் முதலியவர்களை உட்படுத்திக் கூறுகின்றார்கள். அவர்கள் கூறும் பதினெண் சித்தராவார்: அகத்தியர், புலத்தியர், புசுண்டர், நந்தி, திருமூலர், காலாங்கி நாதர், போகர், கொங்கணர், உரோமமுனி, சட்டமுனி, மச்சமுனி, கரூரார், தன்வந்திரி, தேரையர், பிண்ணாக்கீசர், கோரக்கர், யூகிமுனி, இடைக்காடர் என்பவர்களே. பண்டைச் சித்தருள் தலையாயவர் அகத்தியர். ஆனால் அகத்தியர் செய்த ஒரு நூலும் இப்பொழுது கிடைக்கவில்லை. அவருடைய நூல்களென்று இப்பொழுது சொல்லப்படுபவைகள் மிகவும் பிற்காலத்து

நூல்களே. அகத்தியர் காலந்தொட்டுப் பரம்பரையாய் வந்த கருத்துக்களை அகத்தியர் அடியர் சிலர் பல நூல்களுள் அமைத்திருத்தல் கூடும். அந்நூல்களை அகத்தியருடையன என்று கூறுதல் ஒருவகை மரபாம். அமுதகலை ஞானம், நோயின்சாரம், வைத்தியக்கும்மி, வைத்திய சாரம், சங்குசுத்தி, செந்தூரமுறை, அவிழ்த சாரம், பூரண சூத்திரம் முதலிய நூல்களும், பஞ்சகாவிய நிகண்டு, ஐம்புள் நூல் என்பனவும் அகத்தியரால் இயற்றப்பட்டன வென்ப.

வட நாட்டிற் கண்ணனையுந் தென்னாட்டில் திருவள்ளுவரையுஞ் சித்தரென்றே கூறுப. 'பிறவிக்கடல்' (சனன சாகரம்) என்னும் ஒரு சித்தர் நூலில் உலகத்தில் நிலவிய சித்தர்கள் தொகை கணக்கிடப்பட்டிருக்கின்றது. திருவள்ளுவனாரும்;

"வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல,"

என்றமையால், துறக்க விரும்புவோர் வாழ்நாள் வீண்படாது விரைவிற் றுறந்து ஒருமையின் நிற்பதால் பல்வகை ஆற்றல்களும் பெரும் பயன்களும் உளவாம் என்பது தெளியப்படும். 'கூற்றங் குதித்தலுங் கைகூடும்' என்றதுங் காண்க. திருவாசகத்தில் திருப்படையாட்சியில் 'திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்' என்றவிடத்துச் சித்தர்களை விதந்தமை காண்க. திருமூலமாமுனிவரது நூலே இப்போதுள்ள சித்தர் நூல்களுள் முதல் நிற்பது. திருமந்திரத்தின் வேறாக அத்துணை யளவுடைய பிறிதொரு நூல் மருத்துவச் சார்பாக இயற்றப்பட்டுள்ளது. 'திருமூலர் எண்ணாயிர' மென்று ஒரு நூல் உண்டென்றுங் கூறுப. 'திருமூலர் கருக்கிடை அறுநூறு' என்னும் நூல் ஒன்று சித்தர் நூற் பதிப்புக் கழகத்தா

ரால் வெளியிடப்பட்டுள்ளது. திருமூலர் எண்பெருஞ் சித்திகளையும் பற்றித் திருமந்திரத்துட் கூறியுள்ளார்.

திருமூலர் யோகிருந்த திருவாவடுதுறைக்கு நவகோடி சித்தபுரம் என்ற பெயருண்டு. திருஞானசம்பந்தப்பெருமானுந் தேவாரத்துள் 'தேவராயுஞ் சித்தராயும்' என்றும், 'அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி' யென்றும் அருளிச்செய்தது காண்க. திருமூலரின் மாணக்கர் எழுவர். அவருட் காலாங்கிநாதரின் மாணக்கர் போகமுனிவர். இவர் ஒரு பெரிய சித்தர் தலைவர். ஆதியில் சிவனார் அருளிச் செய்தவாகக் கூறப்படும் எழுநூறாயிரம் சூத்திரங்களை இவர் ஏழு காண்டத்துள் அடக்கித் தம் மாணக்கருக்கு அறிவுறுத்தின ரென்ப. இவரும் இவர் மாணக்கராகிய புலிப்பாணி யென்னுஞ் சித்தரும் பழனி மலையின் அடிவாரத்திலுள்ள வைகாவூரில் வாழ்ந்தன ரென்பது கொங்குமண்டல சதகம் ௯௯-ம் பாட்டினாற் றெரிகின்றது. பாண்டி நாட்டிலுள்ள சதுரகிரி, சிவகிரி யென்னும் இடங்களில் இவர் வசித்ததாகத் தெரிகின்றது. இவர் முருகர் வழிபாட்டிற் சிறந்தவ ரென்ப. இவர் தம் நூல்கள் வைத்தியம் ஏழாயிரம், யோகம் எழுநூறு, நிகண்டு பதினேழாயிரம், போகர் திருமந்திரம் முதலியன. இவருக்கு மாணக்கர் பலர்.

புலிப்பாணி இயற்றிய நூல்களாவன:—வைத்தியம் ஐஞ்ஞூறு, சாவாத்திரட்டு நூறு, சிதம்பரம் இருபத்தைந்து, பலதிரட்டு நூறு முதலியன.

கொங்கணர் என்பவர் இரசவாதத்திற் சிறந்தவர். இவர் கொங்குநாட்டிலுள்ள ஊதியூர் மலையில் வசித்தவர். அதற்குக் கொங்கணகிரி யென்ற பெயரும் உண்டு. இவரைத் திருமழிசை யாழ்வார் காலத்தவ ரென்று கூறுவாரு

ளார். இவரைப்பற்றிய செய்தி கொங்குமண்டல சதகம் ௯௭-ம் பாட்டிலுங் காணப்படும். இவரியற்றிய நூல்கள் கடைக்காண்டம், திரிகாண்டம், கொங்கணர் ஞானம், குணவாகடம் முதலியன.

இவர்தம் மாணுக்கர் இடைக்காட ரென்பவர். இவர் கடைச்சங்ககால இடைக்காடரின் வேருவர்.

இவர்தம் மாணுக்கர் கமலமுனி யென்பவர் கம்மாள மரபினர். 'கமலமுனி மூந்நூறு' என்னும் நூல் இவரால் இயற்றப்பட்டது. இவர் இரேகை சாத்திர வல்லுந ரென்ப.

சட்டைமுனி யென்பவர் போகரின் மற்ருெரு மாணுக்கர். இவர் சேணிய மரபினர். இவர் சடாட்சரக் கோவை, கல்பம்நூறு, ஞானநூறு, வாதநிகண்டு, சட்டைமுனி ஆயிரத்து இருநூறு, நவரத்தினவைப்பு முதலிய நூல்க ளியற்றியவர்.

மச்சமுனி போகரின் மற்ருெரு மாணுக்கர். இவரைச் செம்படவ ரென்று கூறுவர். இவர் திராவகம் எண்ணூறு, வைத்தியம் எண்ணூறு என்னும் நூல்க ளியற்றியவர். சுந்தராநந்தர், நந்தீசர் முதலியோரும் போகர் மாணுக் கர்களே.

உரோமமுனி யென்பார் சட்டைமுனி காலத்தவ ரென்று தெரிகின்றது. இவர் புசுண்டர் குமாரர். இவர் உரோமமுனி நூறு, உரோமமுனி ஐந்நூறு, ஐம்புள் நூல் என்பன இயற்றியவர்.

யூகிமுனி யென்பவர் தேரையர் மாணுக்கருள் ஒரு வர். இவர் தமது வீரச்சுன்னத்தினுல் காக்கையினை வெண் ணிற மாக்கின ரென்ப. இவர் வைத்திய சிந்தாமணி முத லிய நூல்களியற்றியவர்.

கோரக்கர் என்பவர் கஞ்சாவை முதற்பொருளாகக் கொண்டு மருந்து பல செய்தனர். இவர் மச்சேந்திரர்

மாணாக்கர். 'கோரக்கர் வைப்பு' என்று ஒரு மருத்துவ நூல் உளது. இவர் அல்லம தேவர் காலத்தவராதலின், பத்தாவது நூற்றாண்டினரோடு ஒருங்குவைத் தெண்ணப் படுதற்குரியரே.

தேரையர் என்பார் அகத்தியர் மாணாக்க ரென்ப. ஆனால் அவர் நூல்கள் கருவூர்ச் சித்தர் முதலியோர் காலத்தினவாகவே கருதப்படுதற் குரியன. இவரைத் தருமசௌமிய ரென்பாரின் மாணாக்கரென்பாரு முளர். இவர் செய்த வைத்திய நூல்களுள் 'நோயணுகா விதி' யென்பது யாவரானுங் கைக்கொள்ளத்தக்கது. பிற, நீர்க்குறி நூல், நெய்க்குறி நூல், பதார்த்தகுண சிந்தாமணி, தயிலவருக்கச் சுருக்கம், சிகிச்சையாயிரம், சிகாமணிவெண்பா, மருத்துப் பாரத முதலியன.

தேரையர் போலத் தன்வந்தரி யென்பாரும் சித்த நெறியைச் சேர்ந்தவரே. அவர் வடநூல்களிற் கூறுந் தன்வந்திரியின் வேறானவர். வைத்திய சிந்தாமணி, கலைஞானம், சிமிட்டு இரத்தினச் சுருக்கம், தன்வந்திரி நிகண்டு முதலிய இயற்றினவர். கஞ்சமலைச் சித்த ரென்பவர் திருமூலர் மாணாக்கர். கொங்கு நாட்டிலுள்ள கஞ்சமலையி லுறைந்த சித்தர். (கொங்குமண்டல சதகம், ௩௫.)

பாம்பாட்டிச்சித்த ரென்பவர் பாண்டி நாட்டின ரென்றும், சட்டைமுனி யென்பார்பால் தீக்கைபெற்றவ ரென்றுங் கூறுப. கொங்கு நாட்டில் மருதமலையி லுறைந்தவ ரென்பாரு முளர். தனிப் பாடல்கள் தவிரச் சித்தராரூடம் என்னும் நூலொன்று மிவர் இயற்றியதாகத் தெரிகின்றது.

அகப்பேய்ச் சித்தர் என்பவர் மனம் பேய்போலலை வதென்ற கருத்தைத் தம் பாடல்களில் வற்புறுத்தினமையால் அப்பெயர் பெற்றார்.

குதம்பேய்ச் சித்தர் பெண்களைப் பேயென்று கருதுபவர் என்பர். இவர்கள் பெயர்கள் முறையே அகப்பைச் சித்தர், குதம்பைச் சித்தர் என மருவி வழங்குவன. பல சித்தர்கள் இவ்வரிசையி லுள்ளார். அவர்கள் அழுகிணிச் சித்தர், கடுவெளிச் சித்தர் முதலியோர்.

தமிழ்நாட்டுச் சித்தர், மருத்துவத்தில் முப்பு என்பதைச் சிறந்த கருவியாகக் கொண்டவர்கள். கன்னடநாட்டுச் சித்தர்கள் சூதத்தை அங்ஙனம் கொண்டமையால், இராசேசுரதெரிசனக் கூட்டத்தார் என்னப்படுவர். அவர்களிற் பலர் வீரசைவத் தலைவராய அல்லமதேவர் காலத்தவர். அவருள் ஒன்பதின்மர் நவநாத சித்தரெனப்படுவர். தமிழ்நாட்டுச் சித்தர் பதினெண்மர். இவரின் வேறாகப் பதினெண்மர் சித்தரெனக் காமிகாகமம் பூர்வபாகம் சிநாநவிதிப்படலத்திற் கூறப்பட்டது. அபிதான சிந்தாமணி யுடையார் அகத்தியர், திருமூலர், போகர், கோரக்கர், சட்டைமுனி, நந்தீசர், கொங்கணர், கமலமுனி, இடைக்காடர், சுந்தரானந்தர், உரோமமுனி, பிரமமுனி, மச்சமுனி, வராகமுனி, கூர்மமுனி, புண்ணாக்கீசர், கைலாச நாதர், கூன்கண்ணர் என்பார் பதினெண் சித்தராவா ரெனக் குறித்துள்ளார்.

பிற்காலத்தோருட் சிறந்தவர் சிவவாக்கிய ரென்பார் 'சிவா' என்ற ஒலியுடன் ஞாலத்திற் பிறந்தவ ரென்ப. சிவவாக்கிய மென்ற நூல் சிறந்ததோர் அறிவுநூலாகத் திகழ்கின்றது. இவரைத் தாயுமான அடிகள் விதந்தோதினர்.

சித்தர் நூல்கள் எளிய தெளிவான பேச்சுநடையிலெழுதப்பட் டிருப்பதால், அவற்றுட் கணக்கில்லாதன சொன்னயந் தேரும் புலவராற் பாதுகாக்கப்படாது இராமபாணத்திற்குங் கறையானுக்கும் இரையாய்க் கழிந்

தொழிந்தன. இருப்பவற்றைக் கோவைசெய்து செம்மையாக அச்சிடுதற்குரிய முயற்சியைத் தமிழ்ச்செல்வர் விரைவிற் கடைப்பிடிக்கக் கடவர். சித்தர் முறைகளைச் சமணசமயத்துறவிகள் புலர் பத்தாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னுந் தமிழ்நாட்டிற் கைக்கொண்டொழுகுவராயினர். அவர்கள் முனியென்ற பட்டமுடைய ரென்ப. வாக்கானந்த முனி முதலியோர் அவ்வகையினர். திருவிசைப்பாக் காலத்தை யொட்டிச் சித்தர் நூல்களின் காலம் ஈண்டுக் குறிக்கப்பட்டதெனினும், அக்காலத்திற்கு முன்னும் பின்னும் சித்தர் கருத்துக்க ளடங்கிய பல நூல்கள் வெளிப்பட்டுள்ளன. அவற்றுள் தக்கவற்றைப் பழுதுபடாமற் பாதுகாக்க வேண்டியது தமிழர் கடனே.

அதிகாரம் ௰௬

பதினொராந் திருமுறை

பதினொராந் திருமுறையுள் பன்னிரு அருட் புலவர்கள் இயற்றிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

முதற்கண் திருவாலவா யுடையார் திருமுகப் பாசுரம் வைக்கப்பட் டிருக்கின்றது. அது சேரமான் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது. அதனைச் சேரமான் பெருமாள் நாயனாருக்குக் கொடுக்கப்பட்ட தென்று கூறுவர். அங்ஙனமாயின், அஃது எட்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும். உயர்திரு மறைமலையடிகள் முதலியவர்களின் ஆராய்ச்சியால் ஆறாவது நூற்றாண்டிற்கு முன்னேயே அது இயற்றப்பட்டதென்று கருத இடமுண்டு. தேவார மூவரைக் கூறாத கல்லாடம் ஆறாவது நூற்றாண்

MARAIMALAI ADIGAL LIBRARY
64710

டில் எழுந்ததா மாகலின், அதனுட் குறிக்கப்பட்ட பாண பத்திரர் வரலாறு அதற்கு முன்னேயே நடந்திருக்க வேண்டும். சமண சமயத்தைத் தழுவிய கருநட வேந்தர் அல்லது களப்பிரர் மதுரையில் அரசாண்டபோது சேர மன்னர் சைவரா யிருந்தனர். அக்காலம் நாலாவது ஐந்தாவது நூற்றாண்டு ஆதலால், பாணபத்திரர் பரிசு பெற்றது ஆறாவது நூற்றாண்டிற்கு முன்னே நிகழ்ந்ததாகும்.

திருமுகப் பாசுரத்துக்குப் பின் காரைக்காலம்மையார் அருட்பாடற் றொகுதி வைக்கப்பட்டுள்ளது. அவை திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டும், திருவிரட்டை மணிமாலை ஒன்றும், நூற்றொரு வெண்பாக்களடங்கிய அற்புதத் திருவந்தாதி ஒன்றுமாம். சோழநாட்டிலே காரைக்கால் என்னும் ஊரில் எல்லா நலங்களினுஞ் சிறந்த வணிக னொருவனுக்கு இவர் மனைவியாய் இருந்தகாலை, அவன் கொடுத்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றினைச் சிவனடியவர் ஒருவருக்குப் படைத்துவிட்டமையால், அதனைக் கணவன் கேட்டபோது திருவருளால் ஒரு கனியை வருவிக்க, அவன் மீட்டுமோர் கனி வேண்ட, அதனையும் அவ்வாறே வருவிக்கவும், அதுகண்டு திடுக்குற்று, அவர் தெய்வமென்று வணங்கி அவன் அகன்றுவிடவே, அவர் பேய் வடிவம் ஒன்றனையே விரும்பிப் பெற்றுக் கயிலைமலைமீது தலையால் நடந்து, சிவபெருமானால் அம்மையே யென்று அழைக்கும் பேறு பெற்றுத் திருவாலங்காட்டுக்கு மீண்டுவந்து, கூத்தப் பெருமானது எடுத்த திருவடிகளின்கண் என்றும் இருந்து பாடும் இறவா நிலையுற்றனர்.

திருஞான சம்பந்தப் பெருமான் அம்மையார் பொருட்டுத் திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சினமையால், இவர் பெருமை தெற்றென விளங்கும். ஆதலால், இவர்

அருட்பாடல்கள் ஆறும் நூற்றாண்டிற்குப் பிற்பட்டன அல்ல என்பது தெளிவு. இவர் பாசுரங்களிலே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பியுள்ளன. அறிவின் பெருமையும் அருளின் பெருமையும் பின்வரும் பாட்டுக்களால் விளங்கும்.

அருளே யுலகெலா மாள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தாஞல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே னெஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெமக்கு.

அறிவானுந் தானே யறிவிப்பான் றானே
அறிவா யறிகின்றான் றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே யவன்.

கல்லாடனா ரென்பவர் இயற்றிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம், சிறந்ததோர் அகவற்பாவாக இத் திருமுறைக்கண் விளங்குகின்றது. இக் கல்லாடனார் கல்லாடம் இயற்றிய புலவர் போலும். அங்ஙனமாயின், இஃதும் ஆறும் நூற்றாண்டிலே எழுந்த நூலாகும். பதினொராந் திருமுறையில் நக்கீரர் பாடியவாகப் பத்துச் சிறுகாப்பியங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன: கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருஈங்கோய் மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, பெருந்தேவபாணி, திருவெழுகூற்றிருக்கை, கோவப் பிரசாதம், காரெட்டு, போற்றிக் கலிவெண்பா, திருக்கண்ணப்ப தேவர் திருமறம், திருமுருகாற்றுப்படை யென்பன. இவற்றுள் திருமுருகாற்றுப்படை யொன்றுமே சங்கச் சொன்னடை யுடையது. ஏனைய நான்கும் அங்ஙனம் அன்மையின், அவை கடைச்சங்க காலத்தன அல்லவென்றறியப்படும். அவ்வாறாயின், அவைகளை யியற்றிய

நக்கீரர் கடைச்சங்க கால நக்கீரரின் வேறானவர். இவைகள் பெரும்பாலும் வெண்பாவினாலும் அகவற்பாவினாலும் இயற்றப்பட்டுள்ளன. திருவலஞ்சுழி மும்மணிக்கோவையுள் கலித்துறைப்பாக்களுங் கலந்துள்ளன. இந் நூல்கள் இயற்றப்பட்டகாலத்தே விருத்தப்பாக்கள் தோத்திரச் செய்யுள் வழக்கிலிருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால், இவைகள் ஆறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டன அல்ல வென்று தெரிகின்றது. கோவப்பிரசாதத்துள்,

> "ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
> வட்டணை பேசுவார் மாநுடம் போன்று"

என்றற் றொடக்கத்து அடிகள் காணப்படுதலால், அந் நூல் ஆரிய சமயக் கொள்கைகள் மிக்குப் பரவிய சங்கரர் காலத்திற்குப் பின் எழுந்ததா மென்று கூறுவாரு முளர்.

கபிலர் பாடிய மூத்தநாயனார் இரட்டைமணி மாலையும், சிவபெருமான் திருவிரட்டை மணிமாலையும் வெண்பாவுங் கலித்துறையுங் கலந்து வந்தன. அவரது சிவ பெருமான் திருவந்தாதியும், பரணரது சிவபெருமான் றிருவந்தாதியும் வெண்பா யாப்பி லமைந்தன. பதினொராந் திருமுறைக் கபில பரணரும், கடைச்சங்ககாலத்துக் கபில பரணரும் வெவ்வேறானவர்.

அதிராஅடிகள், இளம்பெருமானடிகள் என்னும் இருவரும் முறையே மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை, சிவபெருமான் திருமும்மணிக்கோவை என்பவற்றை இயற்றியருளினர். இவைகளுள் அகவற்பா, வெண்பா, கலித்துறை யென்னும் பாவகைகளே காணப்படுகின்றன. இவைகளின் சொன்னடையும் ஆறாவது நூற்றாண்டின் போக்கினையே ஒத்திருக்கின்றது. அடிகள் இருவரையும் பற்றிய வரலாறு யாதுந் தெரியவில்லை.

அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவராகிய ஐயடிகள் காடவர்கோன் என்னும் நாயனார் இயற்றிய 'சேத்திரத் திருவெண்பா'வும் ஆறாம் நூற்றாண்டினதே போலும். இந்நாயனார் காலம் திருத்தொண்டத்தொகை பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திற்கு முற்பட்டதென்பது தெளிவு.

சேரமான் பெருமாணாயனார் சுந்தரமூர்த்திகளுக்கு நண்பராயிருந்த சேரமன்னராதலால், இவர் காலம் சுந்தரமூர்த்திகள் காலமென்பது தெளிவு. இவர் தமது குதிரையின் காதில் திருவைந்தெழுத்தை யோதி, அதன் வழியால் வான்வழிச் சென்று, சுந்தரமூர்த்திகளுடன் திருக்கயிலையடைந்தவர். இவர் வரலாறு பெரிய புராணத்துள் விரிவாகக் காணப்படும். இவர் பாடிய நூல்கள் சிவபெருமானைப் பற்றிக் கலித்துறையி லமைந்த பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, ஞானவுலா என்பன. இவர் பாடிய அந்தாதி 'பொன்வண்ண' மென்று தொடங்கி அச்சொற்றொடரால் முடிகின்றது. மும்மணிக்கோவை பாடுதல் அக்கால வழக்கு. 'உலா' என்பது வீதியில் உலாப்போகுந் தலைவனைக் கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை பேரிளம்பெண் என்னும் எழுவகைப் பருவப்பெண்டிரும் விழைவுறுவதாகப் பாடுவது. திருக்கயிலைப் பெருமான்மீது கலிவெண்பாவாற் சேரமான்பெருமாள் பாடிய உலாவே இப்பொழுதுள்ள உலா நூல்களிலே முதன்மையாயிருப்பது. ஆதலால் இஃது 'ஆதியுலா' வெனப்படுகிறது.

இவர் காலம் கி. பி. 825-ல் முடிவதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். அதுவே கொல்லம் ஆண்டின் தொடக்ககாலமாகும்.

பட்டினத்தடிகள் பாடல்கள் பதினொராம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருப்பதாலும், சேந்தனார் அவருடைய கணக்கராயிருந்தா ரென்று கேட்பதாலும், அடிகள் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் அல்லர் என்பது

*

தெளிவு.) இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் மரபில் பெருஞ்செல்வத்திற் பிறங்கி வாழ்ந்து, உலக நிலையாமை கண்டு, சிவப்பேறு கருதித் துவரத் துறந்தவராவர். இவரது உள்ளத்துறவை,

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை அரிதரிது"

என்று தாயுமானச் செல்வரும் பெரிது பாராட்டினர்.

பட்டினத்தடிகட்கு இயற்பெயர் திருவெண்காடர் என்பது. இவர் திருவிடைமருதூரிற் சிலநாள் தங்கிப் பத்திரகிரியாரோடு உடனுறைந்து, பின்னர்ப் பல திருப்பதிகளையும் வணங்கி, திருவொற்றியூரை யடைந்து, சமாதியிலிருந்து, இறைவனோடு இரண்டறக் கலந்தனர். இவரைப்பற்றிய கதைகள் பல.

பதினொராந் திருமுறையுள் இவர் பாடியருளியவை கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பவை. இவைகளுள் அகவற்பாக்கள் பல வந்துள்ளன. அவை மிக்க ஆண்மையும் அழகும் உடைய செவ்விய நடையில் அமைந்துள்ளன. பிற்காலத்திலே **பட்டினத்துப் பிள்ளையார்** பாடலென்று சொல்லப்படும் திருவேகம்பமாலை முதலிய சிறு காப்பியங்கள் இவரால் இயற்றப்பட்டன வென்று தோன்றவில்லை. இவரால் இயற்றப்பட்டிருக்குமாயின், அவை பதினொராந் திருமுறையுள் சேர்க்கப்பட்டிருக்கும். ஆதலால், இவர் பெயருடைய பிறிதொருவரால் அவை இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

பதினொரு திருமுறைகளையும் இராசராசனோடு வகுத்தமைத்த பெரியார் **நம்பியாண்டார் நம்பி**யென்பவர். எனவே, இவர் காலம் பத்தாம் நூற்றாண்டென்பது தெளிவு.) இவர் திருநாரையூரிலே ஆதிசைவ மரபிற் றோன்றித் தம் தந்தையார் அயலூருக்குப் போயிருக்கும் பொழுது பொல்லாப் பிள்ளையார்க்குத் தமது ஐந்தாம்

ஆண்டிற் பூசனைபுரிய நேர்ந்து, தாம் வைத்த திருவமுதைப் பிள்ளையார் அருந்தாமையால், தமது தலையைக் கல்லில் மோதப்புகுஞ் சமயத்தில் பிள்ளையாரால் தடுக்கப்பெற்று ஆட்கொள்ளப்பெற்று, அவர்மாட்டே அறிவுநூல் முழுதுங் கற்றுத் திகழ்ந்தவர். இராசராச மன்னன் வேண்டுகோளுக் கிரங்கிப் பொல்லாப் பிள்ளையார் வாயிலாகத் தேவாரத் திருமுறைகள் தில்லையிற் சேமிக்கப் பட்டிருப்பதை யறிந்து, அரசனோடு தில்லை சேர்ந்து அவற்றை யெடுப்பித்து, அவற்றைப் பிற அருட்பாக்களோடு சேர்த்துத் திருமுறை வகுத்த பெருமை இவர்க்கே உரியது. இவர் பல அழகிய புகழ்க்காப்பியங்கள் இயற்றியுள்ளார். கூத்தப்பெருமான் மீது 'கோயிற் றிருப்பண்ணியர் விருத்த' மென்பது அந்தாந்தித்தொடையால் இவராற் பாடப்பட்டது. அறுபான்மும்மை நாயன்மார்களின் வரலாறுகளைச் சுருக்கமாகத் திருத்தொண்டத் தொகை முறைப்படி 'திருத்தொண்டர் திருவந்தாதி' யென்னும் நூலுள் இவர் அமைத்தார். இதுவே பெரிய புராணத்திற்கு முதனூலாகும். திருஞான சம்பந்தப் பெருமான்மீது திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக் கோவை, திருஉலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை யென்பவற்றை இவர் திருவாய் மலர்ந்தருளினர். திருநாவுக்கரசு நாயனார்மீது ஏகாதசமாலை யொன்று இவராற் பாடப்பெற்றது. உதாரணம் ஒன்று:

" பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி
    பரசநா வரசான பரமகா ரணவீசன்
அதிகைமா நகர்மேவி யருளினா லமண்மூடர்
    அவர்செய்வா தைகள்தீரும் அனகன்வார் கழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை யுடையரா குவர்வாய்மை
    நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
மதியரா குவரீச னடியரா குவர்வான
    முடையரா குவர்பாரின் மனிதரா னவர்தாமே.

இவருடைய புகழ் நூல்கள் இராசராச மன்னரால் பதினோராந் திருமுறையுட் சேர்க்கப்பட்டன. இவரைத்

'தமிழ் வியாச' ரென்ப. பெரிய புராணம் அநபாய சோழமன்னனாற் பன்னிரண்டாந் திருமுறையாக அமைக்கப்பட்டது.

அதிகாரம் கரு

சமணரது நூற்கிளர்ச்சி

(க0-ம் நூற்றாண்டு முதல் கஉ-வரை)

பத்தாம் நூற்றாண்டிற் சமணர்களது கல்வித்திறன் சிறப்புற் றொளிர்வதாயிற்று. மைசூரிலே கங்கா அரசர் மரபு புகழ்பெற் றோங்கிய காலமு மதுவே. அவர்களின் ஒரு பகுதியார் கலிங்க நாட்டிலும் அரசு செலுத்தி வந்தனர். தென்னாட்டிலே அக் காலத்திலே தமிழ்ச் சங்கங்கள் தீபங்குடி, திருமயிலை முதலிய பல விடங்களிலிருந்தன வென்று தெரிகின்றது.

சீவக சிந்தாமணி

இவ் விருத்தப் பெருங்காப்பிய நூலாசிரியராகிய திருத்தக்க தேவர், சோழ அரசர் மரபினராய்த் துறவறம புகுந்து பாவியற்றும் வன்மை பெற்றுத் திகழ்ந்தகாலை, சமண முனிவர்க்கு இன்பச்சுவை யமைத்துப் பாவியற்றுதல் இயலாததொன் றென்ற குறைச்சொல்லை யொழித்தற் பொருட்டுச் சீவகனது மணப் பெருங்கதையை விருத்தப் பாக்களாற் சிறந்ததோர் காவியமாக இயற்றினர். இதுவே விருத்தத்திலமைந்த முதற்றமிழ்ப் பெருங்காப்பியமாகும். இந் நூலை யியற்றியும் உண்மைத் துறவியாகவே தாம விளங்கின ரென்பதற் கறிகுறியாக 'நரிவிருத்த' மென்ற நிலையாமை நூலொன்றும் தேவர் இயற்றின ரென்ப.

இந் நூலுள், சீவகனுக்குங் கந்தருவதத்தைக்கும் மண நடந்த காலத்தைப் பற்றிய சில குறிப்புக்களால், ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இஃது எழுந்த தென்பர்

ஒரு சாரார். மற்றொரு சாரார் சீவகன்கதை சைனமா புராணத்தின் பிற்பகுதியிற் கூறப்பட்டதென்றும், அதுவே திருத்தக்கதேவர் காப்பியத்திற்கு மூலநூலா மென்றும், மகாபுராணம் இராட்டிரகூட மன்னனாகிய அகாலவருடன் ஆட்சியில் (கி. பி. 874-914) ஒன்பதாம் நூற்றாண்டி னிறுதியி லியற்றப்பெற்றதென்றும், ஆகவே தமிழ்ச் சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தி லியற்றப் பட்டதா மென்றுங் கூறுவர். 'பொய்யாமொழி புகழ் மையறு காட்சித் திருத்தகு முனிவன்' என்று பாயிரத்துட் காணப்படுவதாலும், அப் பொய்யாமொழி யாவான் மைசூர்க் கங்கா மன்னனாகிய 'சத்திய வாக்கிய' னாதலால், அவனது காலமாகிய பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியே திருத்தக்க தேவர் கால மென்றலும் பொருத்தமே.

இந் நூல் பதின்மூன் றிலம்பகங்களை யுடையதான மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாட லுடையது. இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களே திருத்தக்க தேவருடையன வென்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருதுகின்றார். இதன் கடவுள் வாழ்த்து, சித்தசரணம், அருகசரணம், சாது சரணம், தன்மசரணம் என்னும் நாற்பகுதி யுடைத்து. ஏமாங்கத நாட்டில் சச்சந்த னென்னு மன்னன் விசையை யென்னும் பட்டத்தரசியோடு அந்தப்புரத்திலிருந்து நுகரும் இன்பவாழ்க்கையையே பொருளாகக் கருதித் தன் அமைச்சனாகிய கட்டியங்காரனிடம ஆட்சியை ஒப்புவித்திட்டுத் தான் எல்லா வளங்களும் பொருந்தியதோர் அரண்மனைக்கண் வாழுநாளில், மந்திரி அரசனைக் கொல்லமுயன்று அவன் அரண்மனையைச் சூழ்ந்தகாலை, மயிற்பொறி யொன்றிற் சூலியாகிய தன் மனைவியையேற்றி விண்வழியே செலுத்திவிட்டு அரசன் பொருது மடிந்தான். மயிற்பொறி ஒரு மயானத் திற் றங்கச் சீவகன் பிறந்து பின் ஒரு வணிகனால் எடுத்து வளர்க்கப்பட்டுக் கலை பயின்ற நிகழ்ச்சியைக் கூறும் பகுதி நாமகளிலம்பகம் எனப்படும். சீவகன் தன்றோழன் பதுமுக னென்பானுக்குக் கோவிந்தை என்ற நந்தகோபன்

மகளை மணஞ் செய்வித்த வரலாற்றினைக் கூறுவது கோவிந்தையாரிலம்பகம். சீவகன் வித்தியாதர அரசன் மகள் காந்தருவதத்தையை வீணையில் வென்று, மணமாலை சூடிப் பகைவருடன் போர் புரிந்து மேம்பட்டதைக் கூறுவது காந்தருவதத்தையாரிலம்பகம். அவன் கட்டியங்காரனது மதயானையை யடக்கியொழித்து, குணமாலையை மணந்தது கூறும் பகுதி குணமாலையாரிலம்பகம். கட்டியங்காரன் காவலிற் றப்பிப் பல்லவநாடு புக்குச் சீவகன் அரசன் மகளாய பதுமையை விடந்தீர்த்து மணந்த வரலாறு கூறுவது பதுமையாரிலம்பகம். அவன் கேமமாபுர மடைந்து வணிகப் பெண் கேமசரியை வென்று மணந்த செய்தி கேமசரியிலம்பகத்திற் கூறப்பட்டது. ஏமமாபுரத்து மன்னன் மகள் கனகமாலையை, அரசிளங்குமரர்க்கு விற் பயிற்றுவித்துச் சீவகன் மணந்ததைக் கூறுவது கனகமாலையாரிலம்பகமாகும். சீவகன் தண்டகாரணியஞ் சேர்ந்து, ஆண்டுத் தவஞ்செய்யுந் தன் தாயைக் கண்டு, ஏமாங்கத நாட்டிற்கு மீண்டு, விமலை யென்பாரை மணந்த வரலாறு விமலையாரிலம்பகத்துட் கூறப்பட்டது. தனது சுண்ணத்தைப் பழித்ததற்காகச் சினந்து, ஆடவற் பேணா விரதங் கொண்ட சுரமஞ்சரியை அவன் வேற்றுருக்கொண்டு இசையான் மயக்கி மணந்த வரலாறு கூறுவது சுரமஞ்சரியாரிலம்பகம். அவன் சூழ்ச்சியாற் கட்டியங்காரனை வென்று கொன்றது மண்மகளிலம்பகப் பொருள். சீவகன் முடி சூட்டப்பெற்று ஆட்சியெய்தியதைப் பூமகளிலம்பகங் கூறும். அவன் மாமன் மகளாய இலக்கணையைமணந்து பிற தேவிமாரோடும் வைகி உலகுபுரந்தது இலக்கணையிலம்பகத்திற் காணப்படும். மக்கட்பே றெய்தியபின் உலக நிலையாமை கண்டு வீடு காதலித்து, அவன் நோயற்ற வரலாறு கூறுவது முத்தியிலம்பகமாம்.

இந் நூற்குச் சிறந்ததோ ருரை நச்சினார்க்கினியராற் செய்யப்பட்டுள்ளது. இந்நூற் சொற்பொருள் வனப்பினை ஈண்டு விளக்க இடம் போதாது. ஒன்றல்லது இரண்டு உதாரணமே சுட்டப்படும்.

"இன்பமற் றென்னும் பேரா னெழுந்தபுற் கற்றை தீற்றித்
துன்பத்தைச் சுரக்கு நான்கு கதியெனுந் தொழுவிற் சேர்ந்து
நின்றபற் றார்வ நீக்கி நிருமலன் பாதஞ் சேரின்
அன்புவிற் றுண்டு போகிச் சிவகதி யடைய லாமே"

என்பதிற் சமணர் உயர்கதி 'சிவகதி' யென்றமை காண்க. புலவர்,

"சாமெனிற் சாதனோத றன்னவன் றணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுதுவாழ்வார்
தேமலர்த்திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்ல நீர்ப்பார்"

என்பதிற் பெண்ணலங் கூறினர்.

"கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின்
மெலிவிற்கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும்
புகழுமாந் துணைவி யாக்கு
மிப்பொரு ளெய்தி நின்றீ
ரிரங்குவ தென்னை யென்றான்"

என்னுஞ் செய்யுளிற் கல்வியின் சிறப்புக் கூறப்படுகின்றது.

வளையாபதி

வளையாபதி யென்னுங் காவியம் சமணச் சார்பாயதே. இஃதும் சிந்தாமணி யெழுந்த காலத்ததே. இதன் காப்புச் செய்யுளும் சிந்தாமணி காப்பின் கருத்தே கொண்டுள்ளது.

"உலக மூன்று மொருங்குட னேத்துமாண்
டிலக மாய திறலறி வன்னடி
வழுவி னெஞ்சொடு வாலிதி னுற்றவுந்
தொழுவ ரெல்வினை நீங்குக வென்றியான்."

இது சிந்தாமணிக்கு முற்பட்டதென்பர் சிலர்

குண்டலகேசி

குண்டலகேசி யென்னும் நூல் அப்பெயருடைய ஒரு வணிகக் கன்னிகை, புத்தகுருவி னுபதேசம் பெற்று, அருகசமயத்தை வென்று, புத்தமதத்தை யாண்டும் பரப்பிய கதையைக் கூறுவது. இது மேற்கூறிய இரண்டு காவியங்கட்கு முற்பட்ட தென்பர். குண்டலகேசி இலிங்கங் கட்டிய சைவரை வாதுக்கழைத்தன ளென்பது,

"என்கருமம் வினவுதியே லிலிங்கியரி லென்றேடு
நன்குரைப்பார்த் தரல்வேண்டி நாவலங்கொம் பிதுநட்டேன்"

என்னு மடிகளாற் போதரும். இக் கதை வட நாட்டில் நடந்ததாகத் தெரிகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சிந்தாமணி யென்னும் ஐந்தையும் பஞ்ச காவிய மென்று வழங்கும் வழக்கம் பிற்காலத்தது.

புத்த நூலாகிய குண்டலகேசிக்கு எதிரிடையாக எழுந்த சைனகாவியம் நீலகேசித்தெருட்டென்பது. அதனுள் குண்டலகேசியைச் சமணர் வென்றதாகக் கூறப்பட்டது.

சூளாமணி

சூளாமணி யென்பது சோழமொழித் தேவராற் சிந்தாமணிக்குப் பின் இயற்றப்பட்டது. சூளாமணி யியற்றிய ஆசிரியர் பெயர் சீவர்த்ததேவ ரென்று மைசூர்க் கல்வெட்டொன்றினால் புலனாகின்றது. இவர் குணபத்திர ரென்னுஞ் சைன ஆசிரியர் வழியில் வந்தவர். குணபத்திரர் காலம் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம். இவர்க்குப்பின் குமாரசேனர், திருத்தக்கதேவர் இருந்தன ரெனவும், அவர்கட்குப் பின் சீவர்த்தர் இருந்ததாகவும் ஆராய்ச்சி

யாளர் கருதுவதால், சூளாமணி பத்தாம் நூற்றூண்டின் பிற்பகுதியிலே யாக்கப்பட்ட தென்னலாம். சூளாமணி யாசிரியரை யாதரித்த மன்னன் கார்வெட்டி நகர்த் தலைவன் விசய னென்பான். கார்வெட்டி நகர் வடஆற் காட்டிலுள்ள தென்பர். சேந்தன் என்னும் புலவர்பால் இந்நூல் அரங்கேற்றப்பட்ட தென்பது இதன் றமிழ்ப் பாயிரத்தாற் றெரிகின்றது. அச் சேந்தனர் யாரென்பது விளங்கவில்லை. அவர் திருவிசைப்பாச் சேந்தனர் பரம் பரையில் வந்திருக்கலாம்.

சூளாமணியுள், திவிட்டன் என்பான் சுரமை நாட் டிலே போதனமா நகரத்திலிருந்த பயாபதி யென்னும் அரசன் புதல்வனய்ப் பிறந்து, தன் பகைவனை அயக்கி ரீவ பிரதிவாத தேவனை வென்றமை கூறப்பட்டது. இவன் கண்ணனையும் இவன் தமையன் விசயன் பலராம னையும் ஒத்தவர்கள். இவர்கள் பகைவன் கஞ்சன்போல் வான். விவரம் விரிக்கிற் பெருகும். சூளாமணி யாப்ப ருங்கலத்திற்கு முற்பட்டது. இது சிறு பஞ்சகாவிய மாகிய ஐந்து நூலின் முதனூலாகும். நீலகேசித்தெருட்டு, உதயணன் கதை, யசோதரகாவியம், நாககுமார காவிய மென்பன அவற்றுட் பிற்பட்டனவாகும். இவைகள் யாவும் பதினோராம் நூற்றூண்டி னியற்றப்பட்டன.

யசோதர காவியம்

யசோதர காவியம் மாரிதத்தன் என்னும் இராசமா புர மன்னனுக்கு உயிர்ப்பலி தீயதென்று அறிவுறுத்தற் பொருட்டு யசோதரன் என்பானின் பல பிறப்புக்களைப் பற்றிச் சொல்லப்பட்ட கதையாகும். அதைக் கேட்ட மாரிதத்தன் துறவடைந்து மாதவ நோற்றனன்.

மேருமந்தர புராணம்

(பன்னிரண்டாவது நூற்றாண்டிலோ, பதினான்காவது நூற்றாண்டிலோ வாமனாச்சாரியா ரென்னுஞ் சமண முனிவர் மேருமந்தர புராண மென்னுங் காவியத்தை இயற்றியருளினர். இது மேருமந்தர் என்னுங் கணதரர்களுடைய வரலாறுகளைக் கூறுவதால், இப்பெயர் பெற்றதென்ப.) இதனுட் சிம்மசந்திரன் பூரணசந்திரன் என்னும் உடன்பிறந்தார் இருவர், ஒரு கெட்ட அமைச்சன் வசப்பட்டுத் தீங்கிழைத்துப் பல பிறவி யெடுத்துப் பின் தவங்கிடந்து முத்தி பெற்றதும், அமைச்சன் நரகெய்தியதும் கூறப்பட்டன. சமணர் செய்த காவியங்களிலே, தமிழில் புராணமென்ற பெயரால் நிலவுவனவற்றுள் இதுவே முதலாவதாகும். சேக்கிழாரது பெரிய புராணம், கந்தபுராணம் முதலியன எழுந்த பின் இது தோன்றிற்றென்று கருத இடமுண்டு. இந் நூலுக்குப் பின்னர், சிறந்ததொரு சைன காவியம் வேறொன்றும் பிற்காலத்தில் தோன்றியதாகத் தெரியவில்லை.

காஞ்சிபுரத்துக் கடுத்த திருப்பருத்திக் குன்றம் என்ற ஊரில் வாமன முனிவர் தங்கி மேருமந்தர புராண மியற்றினர். அவருக்கு மல்லிசேன ரென்ற பெயரிருப்பதாக அவ்வூர்ச் சைனக் கோயிலில் குறிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சீடர் புஷ்பசேனர் என்பவர், அவர் காலத்து விசயநகர வேந்தனுடைய சேனாதிபதியாகிய இருகப்பத்தண்ட நாதனுக்கு ஆச்சாரியார். அத் தண்டநாதர் தன் ஆச்சாரியாரின் விருப்பப்படி கி. பி. 1387-ல் ஒரு மண்டபம் கட்டுவித்தார் என்பது அவ்வூர்ச் சிலாசாசனத்தால் தெரியவருகிறது. அவ்வூர்க் கோயிலிலுள்ள மற்றொரு சிலாசாசனத்தில் குறிக்கப்பட்ட வாமன

முனிவர் என்பவர் நீலகேசிக்கு உரை இயற்றியவர். அச் சாசனத்தின் காலம் கி. பி. 1518.

சைனர்கள் தமிழிலே காவியம், இலக்கணம், நிகண்டு, நீதி நூல் என்பனவே இயற்றினர். தமது சமயக் கொள்கைகளை அவர்கள் காவியங்களில் சிற்சில இடங்களிலும், காப்புச் செய்யுள்களிலுமே தோன்றவைத்துள்ளார். அவர்களுடைய தனிச் சமய நூல்கள் தமிழிற் பெருவரவிற்றாய் வழங்கவில்லையோ, அல்லது பிற்காலத்தே மறைந்தொழிந்தனவோ? அவற்றைப்பற்றி யாதுந் தெரியவில்லை.

யாப்பருங்கலம்

யாப்பிலக்கண நூல்களுட் சிறந்த யாப்பருங்கலம் என்பது கி. பி. 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமிதசாகர ரென்பவரால் இயற்றப்பட்டது. மாயூரத்திற் கருகிலுள்ள நீடூர்ச்சிவாலய சாசனமொன்றில் குலோத்துங்க சோழனுடைய (1070-1118) 46-வதாண்டில் அமித சாகரர் என்பவர் இருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவர் வேளாளர் என்று தெரியவருகிறது. இவர் தீபங்குடியிலிருந்த சமணர் சங்கப் பிரிவாகிய 'அருங்கலான்வயம்' என்னும் குழுவினைச் சேர்ந்தவரென்பது நூற்பெயரால் குறிக்கப்பட்டது. இதற்குச் சைவரொருவர் பேருரை செய்துள்ளார். குணசாகரர் அமிதசாகரரியற்றிய யாப்பருங்கலக் காரிகைக் குரை வகுத்துள்ளார். இக் காரிகை கட்டளைக்கலித்துறை யாப்பா லியற்றப்பட்டது. இஃதே பிற்காலத்திற் பெரிதும் வழங்குகின்றது.

வீரசோழியம்

'வீரசோழிய' மென்னும் இலக்கண நூல் வீரசோழனென்னும் மன்னன் (1063-1070) பெயரால், புத்தமித்திரனென்பாரா லியற்றப்பட்டது. நூலாசிரியர் ஊர் பொன்

பற்றியூர். இந் நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐந்திணையு முணர்த்துஞ் சிறு நூல். ஐந் திலக்கணங்களையும் வகுத்தோதிய சிறு முதனூல் இஃதே போலும். இதற்குப் பெருந்தேவனா ரென்பவரால் உரை யியற்றப்பட்டது. இவர் பாரதம் பாடிய பெருந்தேவனாரின் வேறாவர்.

நேமிநாதம்

புகழேந்திப் புலவரால் வெண்பா நயங்கள் துலக்க மடைந்தபின் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே, குணவீர பண்டித ரென்னுஞ் சமணப் புலவர் நேமிநாதஅடிக ளென் னுஞ் சைன முனிவர் பெயரால், எழுத்துஞ் சொல்லும் பகரும் இலக்கண நூலொன் றியற்றினர். இந் நேமிநாதம் பண்டித முனிவன் முன் அரங்கேற்றப்பட்டது. திரிபுவன தேவ னெனப் பெயர்பெற்ற இரண்டாங் குலோத்துங்க மன்னன் காலத்தே இந்நூ லியற்றப்பட்ட தென்ப. இவர் தொண்டைநாட்டுக் களந்தை யென்னு மூரிற் பிறந்தவர். இன்னும் இவர் வச்சணந்தி யென்னுஞ் சமண அடிகள் பெயரால் வெண்பாப் பாட்டியலென்னும் யாப்பிலக்கண நூலு மியற்றினர். அது வச்சணந்திமாலை யெனவும் பெயர் பெறும். ('நந்தி' யென்பது நந்தி கணத்தைச் சார்ந்த சமணத் துறவிகளின் பட்டப் பெயராகும்.) அந் நூல் மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என்று மூன்று பகுதியுடைத்து. இலக்கிய வமைப்பிற்குரிய மங்கலப் பொருத்தம், சொற்பொருத்தம், எழுத்துப் பொருத்த முதலிய பத்துவகைப் பொருத்தங்களைப் புதுவதாக எடுத்துமொழிவது.

தொண்டைநாட்டிலே புளியங்குடி யூரிலிருந்த உய்யவந்தார் மகனார் நாற்கவிராசநம்பி யென்னுஞ் சைனப்

புலவர் குலசேகர பாண்டியன் காலத்திலே, அதாவது கஉ-ம் நூற்றாண்டி னிறுதியிலே ஓர் அகப்பொருளிலக் கண மியற்றினர். அது 'நம்பி யகப்பொரு' ளென்று வழங்குகின்றது. அதன் விதிகளை விளக்குஞ் செவ்விய இலக்கியம் தஞ்சைவாணன் கோவை யென்ப.

பதினோராவது நூற்றாண்டு முதல் பதின்மூன்றாவது நூற்றாண்டுவரை யுள்ள காலத்திலே பல புலவர் பெய ரமைத்த பன்னிரு பாட்டியலும், மயேச்சுர னென்னுஞ் சமண முனிவரால் இயற்றப்பட்ட மயேச்சுரயாப்பும், யாமளேந்திரரா லியற்றப்பட்ட இசைத் தமிழ் நூலாகிய இந்திர காளியமும், அறிவனரா லியற்றப்பட்ட 'பஞ்சமர' பென்னும் இசை நூலும், நாரதனது 'பஞ்சபாரதீய' மென்னும் இசை யிலக்கணமும், ஆதிவாயிலார் என்பாரது நாட்டிய நூலாகிய பரத சேனபதீயமும் பிற இலக்கண நூல்களுந் தோன்றியிருக்கலாம்.

பவணந்தி முனிவர் நன்னூல்

மூன்றாவது குலோத்துங்க சோழன் காலத்தவனாகிய (1178-1216) சீயகங்கன் என்னும் மைசூர்க் கங்க அரசன் மரபைச் சார்ந்தவனாய், கோலா ரென்னு மிடத்தில் அரசாட்சி செய்த சிற்றரசன் வேண்டுகோட் கிணங்கி, தொண்டைநாட்டுச் சனகாபுரத்தூரிற் பிறந்த சன்மதி முனிவன் மகனார் பவணந்தி யென்பாரால் பதின்மூன்றா நூற்றாண்டின் தொடக்கத்தில் 'நன்னூல்' இயற்றப்பட்டது. இஃதே இக் காலத்திற் பெருவழக்கிற்றாய்த் திகழ்கின்றது. அரும்பொரு ளைந்தையும் 'யாவரு முணர' என்ற இதன் சிறப்புப்பாயிரப் பகுதியால், இஃது ஐந்திலக்கணமு முடையதென்று கொள்ளவேண்டும். ஆனால் இப்பொழு துள்ள நன்னூலின்கண் எழுத்துஞ் சொல்லுமே காணப்படு

கின்றன. கூரத்தாழ்வார் பாடிய தனியன் ஒன்றில் 'தமிழ் நன்னூற் றுறைக ளஞ்சிற் கிலக்கியம்' என்ற வாக்கியத் திற்குப் பொருள் கூறும் பிள்ளை லோகாச்சாரியார், அஃது ஐந்திலக்கணமுடைய நன்னூலைக் குறிப்ப தென்று கூறினர். அதனால் நன்னூல் பொருள், யாப்பு, அணியினை யுங் கூறியதென்பர் ஒரு சிலர். அச் சொற்றொடருக்குப் பொதுப்பொருள் கொண்டால் நன்னூலின்கண் பொருள் யாப்பு அணி இயம்பப்பட்டனவாகக் கருத இடமில்லை.

அறநெறிச்சாரம்

அறநெறிச்சாரமென்னும் நீதிநூலும் இக் காலத்திலே தான் இயற்றப்பட்டதென்று கருத இடமுண்டு. அது பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேற்பட்டிருக் கலாம். அதன் ஆசிரியர் முனைப்பாடியா ரென்னுஞ் சமணப் புலவர். அவர் தீபங்குடியில் திகழ்ந்த அருங்க லான்வயத்தாரால் இயற்றப்பட்ட 'அருங்கலச் செப்பு' என்னும் அறநூலின் வைப்பினைப் பின்பற்றிக் காட்சி, ஒழுக்கம், ஞானம் என்னும் மூன்று பெரும்பகுதிகளை யுடைத்தாயும், இருநூற்றிருபத்திரண்டு வெண்பாக்கள் கொண்டதாயு முள்ள இந்நூலை இயற்றினர். இந் நூலுள் அருகனைச் சிவனென்று சொல்லிய முறை மிக வியப்பைத் தருகின்றது.

"அவன்கொல் இவன்கொலென் றையப் படாதே
சிவன்கண்ணே செய்ம்மின்கள் சிந்தை—சிவன்தானும்
நின்றுகால் சீக்கும் நிழல்திகழும் பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து."

ஒவ்வொருவனும் பெருமையையுஞ் சிறுமையையும் தன்னாலேதான் தேடிக்கொள்கின்றான் என்னுங் கருத் தினை ஆசிரியர் மிகத் திட்பமாக இந்நூலுள் தெரிவிக் கின்றார்.

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி."

"தன்னெக்குந் தெய்வம் பிறிதில்லை"

என்றதுங் காண்க.

பதினொன்காவது நூற்றாண்டு

பதினொலாவது நூற்றாண்டிலே சமண முனிவருள் அவிரோத நாதர் என்பவர் அருகக் கடவுள்மீது திருநூற்றந்தாதி பாடினர். உதீசித்தேவர் என்பவர் திருக்கலம்பகமியற்றினர். பொன்னவன் என்பார் அம்பரிலிருந்த கணபுரத்தேவன் விரும்பியவண்ணம் கனு நூலொன் றியற்றினர்.

இதற்குப்பின் பதினொருவது நூற்றாண்டிற் றோன்றிய சூடாமணி நிகண்டினைத் தவிர வேறு சிறந்த சமண நூல் யாதுந் தெரிந்திலது. தொண்டைநாட்டுப் பெருமண்டூரினராகிய மண்டலபுருடர் என்னும் சைனப் பெரும்புலவரா லியற்றப்பட்ட சூடாமணி நிகண்டு பன்னிரண்டு தொகுதிகளையுடையது. அதற்குமுன் திவாகரம், பிங்கலந்தை, உரிச்சொல் நிகண்டு என்பன இயற்றப்பட்டனவென்பதை அதன் சிறப்புப்பாயிரம் பகர்கின்றது. அப்பாயிரத்துள் அது கிருட்டின தேவராயர் என்னு மன்னர் காலத்தே இயற்றப்பட்டதென்று குறித்திருக்கின்றது. மண்டல புருடர்க்கு ஆசிரியர் குணபத்திரர். குணபத்திர சைன மகாபுராணம் வடமொழியி லியற்றியவர். அஃது இயற்றப்பட்ட காலம் கி. பி. அகூஅ என்று அப்புராணத்தாற் றெரியவருகின்றது. குணபத்திரர் காலத்தே அரசாண்ட சைனமன்னன் அகாலவருடன் என்பவன். அவனுக்குக் கிருட்டினராய னென்ற பெயருண்டு. அவன்

காலம் அளச-முதல் கூகச-வரை யாகும். ஆதலால், மண்டலபுருடர் காலமும் அதுவே என்பது ஒரு சாரார் கொள்கை. சிலர் சூடாமணி நிகண்டிலே பன்னிரண்டாம் தொகுதியுள் பாற்கரர் செய்த கணித நூலைக் குறிப்பதாலும், அது கஉ-ம் நூற்றாண்டிலே இயற்றப்பட்டதாலும், அவ்வாறே பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட பல செய்திகள் அதனுட் காணப்படுதலாலும் சூடாமணி நிகண்டு விசயநகரத்தில் 1508-30-வரை ஆட்சிசெய்த கிருட்டினராயன் காலத்திலேதான் இயற்றப்பட்டதென்பர்.

இந் நிகண்டுட் குறித்த குணபத்திரரைக் குருமூர்த்தியாக அவர் காலத்திற்குப் பின் மண்டல புருடர் வழிபட்டிருத்தல் கூடும். அவர் "மகிழ் குணபத்திர னெங்கள் வழித்தெய்வம் போல்வான்" என்றது காண்க. "மருவு முத்தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியரே போல.... கருதிய வெல்லாந் தந்து" என்றமையால், பாண்டிய அரசு இறுதியுற்றபின் தென்னாடு முழுவதும் அரசாண்ட கிருட்டினராயனே மண்டல புருடராற் குறிக்கப்பட்டானென்று கருதுதல் பொருத்தமானதே. மண்டல புருடர் சைனர். கிருட்டினராயன் சைவன். இதனால் புலவர் எச் சமயத்தினராயினும் மன்னன் போற்றுதற்குத் தடையுண்டென்று தோன்றவில்லை.

ஆதலால், சூடாமணி நிகண்டு பதினாறுவது நூற்றாண்டின் தொடக்கத்திலெழுந்த நூலென்றே கொள்க. இந் நிகண்டே பிற்காலத்திற் பெருவழக்கிற்றாய் வழங்கலாயிற்று.

அதிகாரம் கரு

சைவகாப்பியக் காலம்

(கி. பி. 11-ம் 12-ம் நூற்றாண்டுகள்)

கலிங்கத்துப் பரணி

சைவ இலக்கியங்களுக்கும் சமண இலக்கியங்களுக்கும் நடுநிகர்த்ததாய்ச் சிறந்திலங்குஞ் சீருடைச் சிறு காப்பியம் கலிங்கத்துப் பரணி யாகும். அது முதற் குலோத்துங்க சோழன் காலமாகிய (1078-1118) பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சயங்கொண்டார வியற்றப் பெற்றது. பரணி யென்பது போரில் ஆயிரம் யானையை வென்ற வீரனைப் பாடும் பிரபந்தம். போரினின்று மீண்ட தலைமகன்பாற் புலவியுற்ற தலைமகளது ஊடலைத் தீர்த்தற் பொருட்டுப் புலவர்கள் வாயிலாதலும், புலவியாற்றிய பின்னர், தலைவன் சென்ற காட்டின் கொடுமையையுந் தலைவன் வீரத்தையும், அக் காட்டிலுள்ள பேய்கள் காளிக்குச் சொல்லுவதையும், காளி பேய்கட் குரைப்பதையும் எடுத்தியம்பும் வடிவுடன் பரணி யென்பது திகழும். குலோத்துங்க மன்னன் கலிங்கத்தை வென்று மீண்டதை இப் பரணி புனைந்து கூறுகின்றது. கலிங்கத்துப் பரணியே அவ் வகைப் பிரபந்தத்துட் சிறந்ததாயும், முதன்மையாயு முள்ளது. இதன் ஆசிரியர் தீபங்குடியைச் சார்ந்தவராதலின் அருக ரென்ப. இந்நூற் காப்புச் செய்யுளால் அவர் சிறந்த சைவ ரென்றே தெரிகின்றது. இந்நூலின் கடவுள் வாழ்த்தில் முதற்பாட்டு உமாபதிக்கும், இரண்டாவது செய்யுள் திருமாலுக்கும், மூன்றாவது நான்முகனுக்கும், பின் இரவி, பிள்ளையார், முருகன், நாமகள், உமையவள், எழுமாதர் என்பார்க்கும் வணக்கமாகக் கூறப்பட்டன. உமாபதி துதி வருமாறு:—

" புயல்வண்ணன் புனல்வார்க்கப் பூமிசையோன்
ருெழில்காட்டப் புவன வாழ்க்கைச்
செயல்வண்ண நிலைநிறுத்த மலைமகளைப்
புணர்ந்தவனைச் சிந்தை செய்வாம்"
" அருமறையி னெறிகாட்ட வயன்பயந்த
நிலமகளை யண்டங் காக்கு
முரிமையினிற் கைப்பிடித்த வுபயகுலோத்
தமனபயன் வாழ்க வென்றே."

இதனுள் உபயகுலோத்தம னென்றது சாளுக்கிய அரசன் மரபினைச் சார்ந்த முதல் இராச இராசனுக்கும், சோழமன்னர் மரபினில் வந்த அம்மங்கதேவிக்கும் பிறந்த முதற் குலோத்துங்கனை யென்க. இன்னுங் கடைதிறப்பில் வரும்,

" பேணுங் கொழுநர் பிழைகளெல்லாம்
பிரிந்த பொழுது நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் கபாடந் திறமினோ"
" நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர்
மணிப்பொற் கபாடந் திறமினோ"

என்னும் பாட்டுக்களும், பாலை வருணனையாக வரும்,

" செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புரு வதனி டைப்புரு."

என்னும் பாடலும் உற்றுநோக்கற்பாலன.

செயங்கொண்டார் செட்டிகள் மீது 'இசையாயிரம்' நூல் செய்ததாகக் கேட்கப்படுகின்றது.

பெரிய புராணம்

பெரிய புராண ஆசிரியராகிய சேக்கிழார் காலம் முதலாம் இராசேந்திரன் காலமாகிய 1012-1042 என்ற பகுதியைச் சேர்ந்ததாகும் என்று துடிசைக்கிழார் சிதம்பரனார் பல காரணங்களைக் கொண்டு நிறுவியுள்ளார். சென்னி, அனபாயன், குலோத்துங்கன், அபயன் என்ற பெயர்கள் அவனுக்கு உள்ளனவாகக் கல்வெட்டுகளாலும் சாசனங்களாலும் புலனாவதுடன், உத்தம சோழபல்லவன் என்ற பெயர் அவனுக்கே அமைந்திருப்பதாலும், அப் பெயரையே அவன் சேக்கிழாருக்குப் பட்டமாக அளித்ததாகச் சேக்கிழார் புராணங் கூறுவதாலும், அவனே இமசேது பரியந்தம் ஆட்சிசெய்தவன் என்று தெரிவதாலும், சைனர்களுக்கும் சைனப்பள்ளிகளுக்கும் முதலில் அவன் தானம் வழங்கியதாகத் தெரிவதாலும், 1920-ம் ஆண்டில் வெளியான 350-ம் எண் கல்வெட்டில் விக்கிரம சோழவள நாட்டின் அரசரான குலோத்துங்கன் சிதம்பரம் பேரம்பலம் பொன் வேய்ந்தார் என்று குறிப்பித்திருப்பதாலும், விக்கிரம சோழன் என்ற பட்டமும் இராசேந்திரனுக்கிருப்பதாலும், கங்கைகொண்ட சோழன், பண்டித சோழன் என்ற பட்டங்களும் அவனுக்கே உள்ளன ஆதலாலும் அவனே சேக்கிழார் காலத்து மன்னன் என்பது புலப்படுகின்றது.

திருநாகேஸ்வரம் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அநபாயன் என்பவனும் முதலாம் இராசேந்திரனே என்பர் துடிசைக் கிழார். இரண்டாம் குலோத்துங்கன் முதலியோர் சைனமதத்திலிருந்து சிந்தாமணி கற்றுப் பின்னர் சைவத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. (அடங்கன் முறை ஆராய்ச்சி)

முதலாம் குலோத்துங்கன் காலம் 1071-1120. இரண்டாம் குலோத்துங்கன் காலம் 1136-1146. மூன்றாம் குலோத்துங்கன் காலம் 1178-1216. வீரசோழன் காலத்தில் தோன்றிய வீரசோழியத்திற்குப் பின் கந்தபுராணம் இயற்றப்பட்டதென்றால், அது பெரியபுராணத்துக்குப் பின்னரே தோன்றிய நூலாகும். விருத்தப் பெருங்காப்பியங்களில் சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டிலும், பெரிய புராணம் பதினோராம் நூற்றாண்டின் இறுதியிலும், கந்த புராணம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், கம்பராமாயணம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இயற்றப்பட்டனவாகும். விருத்தப்பாவிலமைந்த காவியங்களுள் இந்நான்குமே தலைசிறந்தனவாம். சிந்தாமணி கந்தபுராணம் என்னும் இரண்டும் ஒத்த சொல் நடை யுடையன. இவ் விரண்டும் ஆண் அழகுடையன வென்னலாம். கம்பராமாயணம் பெண்நடை யுடையது. இருவகை நயமும் உடையது பெரிய புராணம். மென்மையிலும் இனிமையிலும் இணையற்ற மொழிகளால் தொடுக்கப்பட்ட பாமாலைச் செறிவாகப் பெரிய புராணம் இலங்குகின்றது. அதனினும் இனிய சொன்னடையி லமைந்த பெருங்காப்பியம் வேறு யாதும் இல்லை. சிவனடிப் பேரன்பு மிக்க அறுபான்மும்மை நாயன்மாரது சரிதங்களைச் செவ்விதின் எடுத்துரைத்து, அறிவினையும் அன்பினையும் வளர்ந்தோங்கச்செய்வதில் பெரியபுராணம் ஒப்புயர்வற்றது. ஆசிரியர் சேக்கிழார் பத்திச் சுவையை மிகுத்துக் கூறியதுடன் காப்பிய நயங்கள் பலவும் பெரிய புராணத்துள் அமைத்துவைத்துள்ளா ரென்றறிக. சுந்தரமூர்த்தி நாயனார் புராணத்தில் இன்பச்சுவையையுந், திருக்குறிப்புத்தொண்டர் புராணத்தில் ஐந்திணை வளங்களையும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலுஞ், சிறத்

தொண்டர் புராணத்திலும் வீரச்சுவையையும் அவர் இனி தெடுத்து விளக்கியது காண்க. பிறவும் அன்ன. விரிப்பிற் பெருகும். அன்பின் சிறப்புக் கூறும் பகுதிகள் சில வருமாறு:—

"கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

(திருக்கூட்டச் சிறப்பு.)

"இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்"

(காரைக்காலம்மையார்.)

"உள்ளத்திற் றெளிகின்ற அன்பின் மெய்ம்மை
யுருவினையும் அவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளைச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையு முடன்கொண்ட விருப்பும் பொங்கிப்
பள்ளத்தி விழிபுனல்போல் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தில் ஞானவா ரமுத முண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார்.

பெரிய புராணத்துட் பேசப்படுந் தொண்டர்கள் அனைவரும் தமிழ்நாட்டிற் பிறந்த தமிழ்ப் பெருமக்களே யென்பது உற்றுநோக்கத்தக்கது. அவருட் பெரும்பான்மையோர் இல்லறத்திலே தவங்கிடந்து திருவருள் பெற்றவர். அவர்கள் ஆசிரியர் தொல்காப்பியனா ரியம்பிய.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (கற்பு. ருக.)

என்னும் நூற்பாவிற் குறித்த உயர்நெறியில் நின்று வீடெய்தியவர் ஆவர். சங்கப் புலவருள் திருவருள் பெற்ற பெரியாரும் பெரியபுராணத்துட் கூறிய தொகை

யடியாருள் அடங்குவர். பெரியபுராணத்துக்குப் பிற் காலத்திலிருந்து திருவருள் பெற்ற அடியார்கள் அப் புராணத்துட் கூறிய 'அப்பாலும் அடிச்சார்ந்தார்' என் பாருள் அடங்குவர். பெரியபுராணமானது திருத்தொண் டத்தொகை, நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி என்னும் இரண்டையும் அடிப்படையாகக்கொண்டு ஆசிரியர் சேக் கிழார் பெருமான் செய்தருளிய தனிமுதல் நூலாகும். இதற்கு வடமொழியிலே சில தவறுகளுடன் இரண்டு மொழிபெயர்ப்பு நூல்கள் அமைந்திருக்கின்றன. அவை உபமந்யு பக்தவிலாசம், அகத்திய பக்தவிலாசம் என் பன. அந் நூல்களைப் பெரியபுராணத்துக்கு முதனூல்க ளென்று கூறுவது வரலாற்றுக்கண் ணில்லாதவர்களது பெருந் தவறுதலாகும்.

கந்தபுராணம்

கந்தபுராணம் உண்டான காலத்தை 'எண்ணிய சகாத்த மெழுநூற்றின் மேலாய்' என்று தெரிவித்த செய் யுளினால், கந்தபுராணம் சிந்தாமணி யெழுந்த காலத்தி லேயே ஏற்பட்டதென்ப. எழுநூற்றின் மேலாய் என்ப தனால், எண்ணூறு தொடங்குவதற்கு முன்னை மென்று கொள்ளுமிடத்து, சாலிவாகன சகாப்தம் எகூ0-ல் கந்த புராணம் ஏற்பட்டிருப்பின், அக் காலம் ஒன்பதாம் நூற் றூண்டின் பிற்பகுதியிலாமென்று கொள்ள இடமுண்டு. சிந்தாமணி கூ-ம் நூற்றூண்டின் முற்பகுதியி லெழுதப் பட்டதென்று கொள்வார் கந்தபுராணத்தை ஒன்பதா நூற்றூண்டின் பிற்பகுதி யென்பர். அவ்வாறன்றி வீர சோழிய மேற்பட்டதின் பின் கந்தபுராணம் ஏற்பட்ட தென்பாரும் உளர். ஏனெனில், கந்தபுராண முதற்பாட் டின்கண், 'திகடசக்கரன்' என்ற சொற்றொடர்ப் புணர்ப்

பிற்கு விதி வீரசோழியத்திற் காணப்படுகின்றது. வீர சோழியம் பதினோராம் நூற்றாண்டி னிறுதியில் எழுந்த தாகும்.

(கந்தபுராண காலம் பதினோரா நூற்றாண்டினிறுதி, அல்லது பன்னிரண்டா நூற்றாண்டின் தொடக்கமாகும்.)

எவ்வாறாயினும் கந்தபுராணத்தை நோக்குமிடத்து அது சிந்தாமணியின் ஆண்மைப் பெருநடையுடன் றிகழ் கின்றது. ஆனால், சிந்தாமணியினும் எளிய இயற்றமிழ் மொழிகளா லியன்றது. அந் நூல் வடமொழிக் கந்த புராணத்தின் ஒரு பகுதியாகிய சங்கரசங்கிதையிற் கூறும் அறுமுகக்கடவுள் வரலாற்றை யோதும் தமிழ்ப் பெருங் காப்பியமாகும். இது பதினாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்க ளுடையது. கம்ப ராமாயணத்துக்கு முற்பட்ட முதற்பெருங் காப்பியமாகும். இது காஞ்சிபுரத்திற் குமர கோட்டத்திற் பூசனைசெய்யு முரிமையினராயிருந்த ஆதி சைவ மரபினராய கச்சியப்ப சிவாசாரியரால் இயற்றப்பெற் றது. இது ஆறு காண்டங்களை யுடையது. இஃது ஆறு முகக்கடவுள் சிவபிரானது நெற்றியினெழுந்த ஆறு பொறிகளின் சேர்க்கையாற் சரவணப் பொய்கையி லுதித்துக் கார்த்திகை மாதரால் வளர்க்கப்பெற்றுத் திரு விளையாடல்கள் நடத்திய வரலாற்றினையும், சூரபன்மன் காசிபருக்கு மாயையிற் றோன்றி, வீரவேள்வி செய்து, சிவ பிரான்பால் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்களாக ஆளும் பெருவரம் பெற்றுத் திருமால் முதலிய தேவரைச் சிறை செய்த வரலாற்றினையும், அவன் உடன் பிறந்தாரையும் அவனையும் பொருதுவென்று, தேவர் சிறை நீக்கி, விண்குடி யேற்றிய வரலாற்றினையும், ஆறுமுகக் கடவுள் தெய்வயானையையும், வள்ளிநாயகியையும் மணந்த வரலாற்றினையும், இந்திரன் மகனாகிய சயந்தனுக்கு வியாழ

பகவான் தேவர் அசுரர் சிறைப்பட்ட காரணங்கூறும் வரலாற்றினையும் விரிவாகக் கூறுகின்றது. இது 'நவிற்றொறும் நவிற்றொறும் நானயம் பயப்பது. பயிற்றொறும் பயிற்றொறும் அறுமுகக்கடவு டிருவடிப்பத்தி ஞானம் விளைப்பது.'

இதன்கண் காவியப் பன்னயங்களோடு சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தெள்ளிதில் விளக்கப்பட்டுள்ளன. முருகப்பிரான் மாறின்றி வைகும் பரமன் வடிவின ரென்பதைச் செவ்விதின் வற்புறுத்து முதற்காப்பிய மிஃதே.

"முழுமதி யன்னவாறு முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்றோ."

செவ்வேளது உண்மையியல்பு:—

"ஊரிலான் குணங்குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்."

அகத்துறை:—

"மொழியொன்று புகலாயாயின் முறுவலும் புரியாயாயின்
விழியொன்று நோக்காயாயின் விரகமிக் குழல்வேனுய்யும்
வழியொன்று காட்டாயாயின் மனமுஞ்சற் றுருகாயாயின்
பழியொன்று நின்பாற்சூழும் பராமுகந் தவிர்தி யென்றான்."

ஒட்டக்கூத்தர்

முதற் குலோத்துங்கனுக்குப் பின் அரசாண்டவன் விக்கிரம சோழன் என்பவன். இவன் காலத்திலே ஒட்டக்கூத்தர் சோழமன்னர் அவைக்களத்திற் பாவலர் திலகராக விளங்கினர். அவர் செங்குந்தர் மரபிற் றோன்றிய சைவப் புலவர் ஆவர். அவர் அம்மரபின் பெருமை விளங்க ஈட்டியெழுபது என்னும் நூலினைப் பாடியுள்ளார்.

கலைமகளின் திருவருள் பெற்றுப் பல மக்களுடைய வெட்டுண்ட தலைகளை அவ்வவற்றிற்குரிய தலைகளிற் பொருந்தும்படி செய்தன ரென்று ஒரு பரம்பரைக் கதை வழங்குகின்றது. அவர் சோழ மன்னன் அவைக்கு வருவதற்கு முன், வெண்ணெய் நல்லூரிலே சடையப்ப வள்ளலின் தந்தையாகிய சங்கரன் என்பவருக்குத் துணையாக உதவி புரிந்து வாழ்ந்தன ரென்றும், புதுவை யென்னும் ஊரின்கண் கொடையாளியாய் விளங்கிய காங்கேயன் என்பான் மீது நாலாயிரக்கோவை யென்னும் நூல் செய்தன ரென்றுந் தெரிகின்றது. விக்கிரமசோழன்மீதும், அவனுக்குப் பின் வந்த இரண்டாவது குலோத்துங்கன் இராசராசன் என்னும் அரசன்மீதும் ஒட்டக்கூத்தர் தனித்தனி உலாப் பாடியுள்ளார். இரண்டாவது குலோத்துங்கன்மீது 'பிள்ளைத்தமிழ் மாலை' யொன்று இவர் பாடினர். இவர் பாடிய பிற நூல்கள் தக்கயாகப்பரணி, அரும்பைத் தொள்ளாயிரம், இராமாயண உத்தரகாண்டம் முதலியன. இவரை இரண்டாவது குலோத்துங்க மன்னன் தன் ஆசிரியராகக் கொண்டிருந்தான். இவன் காலத்திலே புகழேந்திப் புலவரும் கம்பரும் சோழன் அவைக்களத்தை அணிபெறச் செய்து இவருக்கு எதிர்நின்றதாக வரலாறு கூறுகின்றது.

புகழேந்திப்புலவர்

புகழேந்திப்புலவர் தொண்டைநாட்டிலே பொன் விளைந்தகளத்தூர் என்ற இடத்திற் பிறந்த வைணவப் புலவர். இவர் பாடிய நளவெண்பாவில் முரணைநகர்ச் சந்திரன்சுவர்க்கி என்னும் சிற்றரசனைப் புகழ்ந்து பாடியுள்ளார். முரணைநகர் உறையூர்ப் பக்கத்தி லிருந்தது. செஞ்சியர் கோனாகிய கொற்றந்தை மீது ஒரு கலம்பகமும் இவர் பாடியுள்ளார். இவர் தம் காலத்துப் பாண்டியமன்னர்

அவைக்களத்திற் சென்று பரிசுபெற்று அரண்மனைப் புலவ ராய்த் திகழ்ந்தனரெனவும், பாண்டியன் மகளைச் சோழன் மணந்தகாலை அம் மகளோடு சோழன் அவைக்கு அனுப் பப்பட்டனரெனவுங் கூறுப. சோழன் தேவியோடு நிகழ்ந்த ஊடலைத் தீர்ப்பதில் இவர் ஒட்டக்கூத்தரினும் திறமைவாய்ந்தவராய்த் திகழ்ந்தனர் என்ப. வெண்பாப் பாடுவதில் இவர் இணையற்றவராதலால், 'வெண்பாவில் புகழேந்தி' என்று விதந்தோதப்பட்டார்.

புகழேந்தி செஞ்சியர்கோன் கொற்றந்தையைப் புகழ்ந்து கலம்பகமொன்று பாடியிருக்கின்றார். ஒட்டக் கூத்தர் விக்கிரம சோழனுலாவில் கூறும் செஞ்சியர் கோன் காடவன் அவனானால், அவர் விக்கிரம சோழன் காலத்தவர் என்பது தெளிவாகும்.

புகழேந்திப்புலவர் இலங்கையில் 13-வது நூற்றாண் டில் ஆட்சிசெய்த ஆரியசேகரன் என்பவனைக் குறித்துப் பாடினார் என்றது உண்மையானால் அவர் ஒட்டக்கூத்தரோ டொத்த காலத்தவர் அல்லர் என்பது முடியும்.

ஔவையார்

ஒட்டக்கூத்தர், புகழேந்தி இவர்கள் திகழ்ந்த பன் னிரண்டாவது நூற்றாண்டிலேயே ஔவையா ரென்னும் பெண்மணியும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நீதி நூல்களையும், அசதிக் கோவை முதலிய சிறுகாப்பியங்களையும், அட்டாங்க யோகக்குறள் என்னும் ஞான நூலினையும் இயற்றியும், பெண்ணையாற்றில் ஒரு புறம் பாலும் ஒருபுறம் நீரும் செல்லப் பணித்தது முதலிய அற்புதங்கள் நிகழ்த்தியும், பெரும் புலவரொடு வாதாடி வெற்றியடைந்தும், பெரும் புகழொடு திகழ்ந்த தாக அறிகிறோம்.

பொய்யாமொழிப்புலவர்

அவரோடு ஒத்த காலத்தவராய் (பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் கோவை யென்னும் அழகிய சிறு காப்பியத்தை நாற்கவிராச நம்பியகப்பொரு ளிலக்கணத் திற்கு ஏற்புடையதோ ரிலக்கியமாகப் பாடி யுதவின ரென்ப.) இதனுள் நானூற்றிருபத்தைந்து துறைகள் வந்துள்ளன. இப் புலவர் சைவரென்று கருத இடமுண்டு. வழியின் கடுமையுரைக்கும் பாட்டு அதற்கு ஒருவாறு சான்றாகும்.

புராந்தகர் செஞ்சடை வெண்பிறை
போனுதற் புள்ளிமிழ்பூங்
குராந்தொடை மென்குழற் கொம்பினை
வேண்டிக் கொடிமுல்லைநீள்
மராந்தழு வுந்தஞ்சை வாணன்வெற்
பாவல்சி தேர்ந்திலஞ்சிக்
கராந்திரி கல்லதர் வாயெல்வி
நீவரல் கற்பலவே. (242)

சத்திமுற்றப் புலவர்

இவரும் இக் காலத்தெழுந்த புலவரே. திருச்சத்தி முற்றம் இவர் பிறந்த வூர். அது கும்பகோணத்துக்கு அருகி லுள்ளது. இவரை ஆதரித்தவர் சோழநாட்டுக் குடிதாங்கி யென்னும் வள்ளல். இப் புலவர் வறுமையாற் பாண்டியன் அவைக்குச் செல்லக்கருதிக் கூடற்பதியினை யடைந்து ஒரு சத்திரத்திற் படுத்துக்கொண்டு தமது வறுமையை நினைந்து ஒரு நாரையைத் தம் மனைவிபால் தூது விடுப்பப் பாடிய பாட்டிற் பனங்கிழங்கினை அந் நாரையின் மூக்குக்கு உவமை கூறினமையை நகர சோதனைக்கு வந்த அரசன் கேட்டு மிகமகிழ்ந்து, அவர் வறுமையைத் தீர்த்தனன். அவர் நாரைவிடு தூதில்,

"நாராய் நாராய் செங்கா லாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கா லாராய்"

என்பது காண்க.

கம்பர்

இப் புலவர் காலம் கி. பி. ஆயிரத்து நூற்றிருபது முதல் ஆயிரத்து நூற்றுத்தொண்ணூற்றேழுவரை யென ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகின்றனர்கள். கம்பர் காலம் 9-ம் நூற்றாண்டின் இறுதியிலாண்ட முதலாமாதித்தன் காலம் என்பாரு முளர். அங்ஙனமாயின் அவர் திருமங்கைமன்னன் காலத்தவராவார். ஆழ்வார் காலத்தில் கம்பர் இருந்ததாகத் தோன்றவில்லை. மேலும் சிந்தாமணி முதலிய சமண காப்பியங்கள் விருத்தப்பாவில் முதலிலமைந்த காப்பியங்களாகும். அவைகள் 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டன என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. 'சிந்தாமணிக் கடலில் சிறிது மொண்டு கொண்டேன்' என்று கம்பர் கூறியதாகச் சொல்லுவதுமுண்டு. அங்ஙனமாயின் சிந்தாமணிக்குப் பின்னரே கம்பராமாயணம் ஏற்பட்டிருக்கவேண்டும். சேக்கிழார் காலம் வரைச் சமண இலக்கியங்கள் சிறந்து விளங்கின. சேக்கிழார் காலத்துக்குப்பின் இரண்டாம் குலோத்துங்கன் காலம் முடிய சைவ ஆதிக்கம் தழைத்திருந்தது. திருநீற்றுச்சோழன் என்ற 2-ம் குலோத்துங்கன் காலத்திற்குப்பின், அவன் காலத்தே மைசூரில் சென்று தங்கிய இராமாநுசர் மீண்டும் சோழநாடு வந்து வைணவ மதத்தை வளர்ப்பாராயினர். அவர் காலத்துக்குப்பின் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வைணவம் சிறந்திருந்தபோது இராம சரித்திரத்தைப் பலரும் விரும்புவாராயினர். அவ் விருப்பத்தை யறிந்து அக்காலத்திருந்த

கம்பர் தாமியற்றக்கருதிய பெருங் காப்பியத்துக்கு இராமகதையைப் பொருளாகக் கொண்டார். ஓரங்காலினாண்ட பிரதாபருத்திரன் கம்பரின் புலமைத்திறத்திற்காக அவரை ஆதரித்தனன். அவன் தமிழறியாதவனாயிருப்பினும், தக்க புலவரை ஆதரிப்பதற் கது தடையாகாது. வடமொழி தெரியாத மன்னர் வடமொழிப் புலவரை நம் நாட்டில் ஆதரிக்கவில்லையா.

கம்பர் தம காலத்துச் சோழமன்னரோடு மாறுபாடுற் றிருந்திருக்கலாம். அவர் பொதுவாகச் சோழன் சிறப்பைக் குறித்தாலும், தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலையே தம் நூலுள் சிறப்பாகப் பாராட்டக் கருதினர். அவனு லாதரிக்கப்பட்ட புலவர் மனை செல்வவளம் பெற்றிருந்தது என்றது காண்க. பேர் சொல்லத்தகாத சோழன் காலத்தில் புலவர்கள் வளமாய் வாழ்ந்திருத்தல் முடியாது. உக்கல் கிராமத்தார் சடையனிடம் நெல் கடன் வாங்கினதாகக் கூறும் சாசனத்தில், எச் சடையனைப் பற்றிப் பேசுகின்றதென்பதும், அவர் எக் காலத்தவர் என்பதும் தெளிவாக விளக்கப்படவில்லை. சடையன் என்ற பெயருடையார் பலர் இருந்திருக்கலாம். பாட்டன் பெயர் பேரனுக்கிடும் வழக்கம் வழக்கில் இருந்திருத்தல் கூடும். 1215-ல் திகழ்ந்த மெய்கண்டாருடைய பாட்டனர் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பவள்ள லென்பாருமுளர். 'எண்ணிய சகாத்தம் எண்ணூற்றேழின் மேல்' என்றவிடத்து சகாத்தம் என்பது விக்கிரம சகாத்தத்தைக் குறிப்பதென்க. விக்கிரம சகம் கி. பி. 320-ல் தொடங்கி நடப்பது. இதனுல் கம்பர் காலம் 12-ம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பது போதரும். அவர் சோழ்நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் பிறந்தவர். கம்பர் என்ற சொல் ஏகம்பர் என்பதன் முதற்குறை யென்ப.

அவர் குலத்தினர் காளிகோவிற் பூசனைக் குரியவர். வாணி பன் தாதன் என்னும் ஒரு புலவன் கம்பரை இகழ்ந்துரைத்த பாட்டினும் அதனைக் குறித்தது காண்க. இதனுற் கம்பர் சைவசமயத்திற் பிறந்தா ரென்பது கருதப்படும். இவருடைய புதல்வன் பெயரும் அம்பிகாபதி என்ற சைவப் பெயரே. இவர் திருமாலைச் சிறப்பாகத் தம் வழிபடு கடவுளாய்க் கொண்டிருக்கலாம். இவரது இராமாயணத் தில் சிவபெருமானையும் விண்டுவையும் ஒருபடித்தாகவே புகழ்ந்துள்ளார். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலென்னும் வேளாள குலதிலகர் இவரை வளர்த்து ஆதரித்துவந்தமையால், இவர் அவர்பால் அளவற்ற நன்றி பாராட்டியுள்ளார். இராமாயணத்துள் ஆயிரம் பாட்டிற் கொருமுறை அவ்வள்ளலைப் புகழ்ந்து பாடினர். இவர் சடையப்பவள்ளல் வண்மையைப் பின்வரும் செய்யுளிற் கூறியது காண்க.

விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னுலே
தண்ணறுங் கான நீங்கித் தாங்கரும் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையான் வெண்ணெய்
அண்ணறன் சொல்லே யென்னப் படைக்கல மருளி னுனே.

சடையப்ப வள்ளலுக்கு சரராமன் என்ற ஒரு பெயருண்டு. கம்பர் 'அடையா நெடுங்கதவும் அஞ்ச லென்ற சொல்லும் உடையான் சரராமன் ஊர்' என்றது காண்க.

'ஆதித்தன் கம்ப'னென்று வருதலால், கம்பரின் தகப்பனுர் பெயர் ஆதித்தனென்று தெரிகின்றது. கம்பர் இயற்றிய ஏரெழுபதும், திருக்கை வழக்கமும் உழவினையும் வேளாளரையும் சிறப்பித்துக்கூறும் நூல்களாம். சடை யப்பவள்ளல் முன் ஏரெழுபதை அரங்கேற்றியகாலை அதனைக் கேட்டுக்கொண்டிருந்த புதுவை வள்ளல் சேது

ராமர் என்பாருக்கு விடந்தீண்டிற்று. விடந் தலைக்கேறு வதை அவர் மறைக்க முயன்றும், பிறர் அறிந்து கம்பரி டந் தெரிவிக்க, அவர் விடத்தை இறக்கியபோது கூறிய பாட்டு வருமாறு :—

" ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட."

கம்பர் தமது இளமையில் திருவொற்றியூரி லிருந்த வல்லி குரும்பை திருக்களந்தையின் என்னும் காமக் கிழத்தியர்பால் ஈடுபட்டு இன்பவாழ்க்கை நடத்தின ரென்று தெரிகின்றது. சோழமன்னன் கம்பரைப் பெரி தும் நன்குமதித்தும், சடையப்ப வள்ளல்பால் மிகுந்த பற்றுவைத்ததின் காரணமாகக் கம்பர்பால் பொறாமை கொண்டு அவரிடம் பகைமை கொண்டனன். அவர் சோழன் அவையினின்றும் நீங்கிப் பாண்டிய மன்னர் அவைக்குச் சென்றாரெனவும், தனது அவை அவரின்மை யாற் சிறப்பிழந்தமை கண்டு சோழமன்னன் மீட்டும் அவரை வரவழைத்துப் போற்றினன் எனவுங் கூறுப. பின் னரும் தமது மகள் காரணமாகவும், மகன் காரணமாகவும் சோழருக்கும் அவருக்கும் பகை உண்டாயது. இவர்தம் மகன் அம்பிகாபதி என்பவன் சோழன் மகளைக் காதலித்த தற்காக வஞ்சித்துக் கொல்லப்பட்டான். சோழன் மகன் கம்பர் மகளை விழைந்து கைப்பற்ற நினைந்தகாலை, அவள் தனது கற்பைப் பாதுகாத்தற்பொருட்டுத் தற்கொலையுற்ற னள். இனைய துன்பங்களாற் கழிபெருங் கவலையுற்று வடபாற் சென்று, 'ஓரங்கல்' என்னுமிடத்து அரசுபுரிந்த பிரதாபருத்திரன்பாற் சார்ந்து அவனை மகிழ்வித்துப் பரிசுபெற்று, அவன் தமக்கு அடைப்பை தூக்கிவரச்

சோழநாட்டினை மீட்டும் அடையப்பெற்றார். அவன் ஆண்ட காலம் 12-வது நூற்றாண்டின் பிற்பகுதி. அவன் நாட்டிலிருந்து மீண்டபின்னரே இவர் இராமாயணம் பாடத்துவங்கினர். இவர் இயற்றிய இராமாயணம் திருவரங்கப் பெரியகோவிலின்கண் பங்குனி உத்திர நாளில் அரங்கேற்றப்பட்டது. (சடகோபரந்தாதி யென்னும் நூலும் இவரியற்றியதே யென்ப. சரசுவதியந்தாதியும் இவருடையதே.) சோழன் ஏவிய புலியை நரசிங்க தியானத்தால் இவர் கொன்றன ரென்றும், பின்னர் அவன் கையம்பினால் இவர் உயிர்துறக்க நேர்ந்தபோது, 'என் பாட்டம்பு நின் குலத்தைச் சுட்டெரிக்கு'மென்று வஞ்சின முரைத்தா ரெனவுங் கூறுப. இவர் இறுதிக் காலத்திலும் சடைய வள்ளல்பால் நன்றி பாராட்டி மொழிந்து பாடிய பாட்டொன் றுண்டு.

> "ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியும்
> தேம்பாய வுண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
> மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்ப
> னிறக்கும்போ தேனு மினி."

இவ ரியற்றிய கம்பராமாயணம் வான்மீக முனிவரது நூலினின்று இராமகதையை மாத்திரமே தழுவிக்கொண்டது. அதனையும் பல இடங்களில் திருத்திச் செம்மைப் படுத்திக் கொண்டதாகும். இது வான்மீகத்தின் மொழி பெயர்ப்பன்று. இப் பெருங் காப்பியம் தமிழ் நாட்டிற் றோன்றாது போமாயின், வான்மீகத்தை வாசிக்கும் தமிழர் இராமரை ஒரு கடவுளாக வழிபடமாட்டார். முத்தமிழ்ச் சுவைகளும் பொருந்தி, மக்களது நுண்ணிய இயற்கை முழுவதையும் படமெடுத்துக் காட்டினாற் போலக் காட்டவல்லதாய், உலக நெறிநிற்கு மாந்தர்க்கு நவில்தொறும் நவில்தொறும் வற்றாது முகிழ்த்தெழும்

பாநயம் நிறைந்த செந்தமிழ்ப் பெருங்காவியம் இது. கம்பர் குறித்த நல்லிசைப்புலவர் பாவின் தன்மைகளனைத்தும் இவர் பெருநூலகத்தே யுள்ளன. இவர் கோதாவரியைக் கூறுமிடத்து அதனை நல்லிசைப்புலவர் பாவிற்கு ஒப்பிட்டனர்.

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்த புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் படிந்து சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்."

கம்பர் இராமாயணம் பாடியது கி. பி. 1185 என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். கம்பர் மகனாற் பாடப்பட்ட அம்பிகாபதிகோவை யென்னும் ஒரு நூலும் உண்டு.

இரண்டாவது குலோத்துங்கனுக்குப் பின் இரண்டாவது இராச இராசனும், இரண்டாவது இரசாதிராசனும் அரசாண்டனர். சங்கரசோழன் உலா என்னும் நூலானது பன்னிரண்டாவது நூற்றாண்டி னிறுதியில் ஆண்ட இரண்டாவது இராசாதிராசன் மீது பாடிய நூலாக இருத்தல் கூடும். அவன் குமாரன் மூன்றாவது குலோத்துங்க மன்னன் கி. பி. 1188-முதல் 1216-வரை ஆண்டதாகத் தெரிகிறது. குலோத்துங்கன் கோவை யென்னும் நூல் இவனைப்பற்றிப் பாடப்பெற்றதே.

வள்ளல்கள்

கடைச்சங்க காலத்திலே வேளிர் பலர் இரவலர்களுக்கு வரையாதீயும் பெருவள்ளல்களாய்த் திகழ்ந்தமை போலக் கி. பி. பதினோராவது நூற்றாண்டு முதற் பதினைந்தாவது நூற்றாண்டுவரை, தொண்டைநாட்டிலும் பிற இடங்களிலும் வேளாளப் பெருஞ்செல்வர்கள் பலரும்,

பிற குலத்தவருட் சிலரும் தமிழ்ப்புலவர்களைப் பெரிதும் ஆதரித்துவந்தனர். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்தமை யார்க்கும் வெளிப்படை. புதுவைச் சேதிராயர் என்பார் தம் மகனைப் பாம்பு தீண்டியதையும் பொருட்படுத்தாது கம்பராமாயணத்தைக் கேட்டுவந்தன ரென்ப. கம்பர் காலத்திலே திருவேங்கட மென்னும் ஊரிற் றிகழ்ந்த நாவிம்பனென்னும் சிற்றரசன், பால் சுரக்கும் ஆயிரம் எருமைகளைப் புலவர்களுக்குப் பரிசளித்தன னென்று கேட்கப்படுகின்றது. தொண்டைநாட்டிலே திருவின்றையூரக் காளத்தியப்ப ரென்னும் வள்ளல் புலவரொருவர்க்கு ஈவதற்கொன்றுமில்லாமை கண்டு அரவின் புற்றினுட் கை வைத்து உயிர்விடக் கருதியகாலை, அங்கிருந்த நாகப்பாம்பு நல்கிய மணியினைக் கொணர்ந்து புலவர்க்கே அதனைப் பரிசளித்த பெருந்தகையாராவர். வல்லம் அல்லது வல்லையென்னு மூரிற் றிகழ்ந்த காளத்தியப்ப வள்ளலும், திருக்குறுங்குடி நம்பி முதலிய புலவர்களுக்குப் பல கறவைப் பசுக்களும், பசு மேய்த்தற்கும் பால் கறப்பதற்கும் அதனைக் காய்ச்சுவதற்கும் வேண்டப்படும் வேலையாட்களையும் உடனுதவிவந்தன ரென்ப. அறுபத்துமூன்று நாயன்மார் எவ்வாறு சிவனடியார்களைப் பணிந்து அவர்கள் வேண்டிய எவற்றையு மீவதிற் றலைநின்றனரோ, அவ்வாறே இவ்வேளாளப் பெரியாரும் செந்தமிழ்ப் புலவர் விரும்பிய எத்தகைய பொருளையும் நல்கினரென்று தெரிகின்றது. குன்றையூர் எல்லப்ப வள்ளல் தம் தலையையும், வீடூர் வைரப்பமுதலியார் தம்முடைய மனைவியையும் கொடுத்தன ரென்ப. அயன்றைப்பதிச் சடையர் என்பவர் ஒரு புலவர்க்குத் தம் மனைவி சூலியா யிருந்தகாலத்து அவள் முதுகிற் சோறிட்டமையும், வல்லைக் கச்சியப்பர் என்பார்

ஒரு புலவரால் மார்பிலுதைக்கப்பட்டும் அவருக்குப் பல்லக்குப் பரிசளித்தமையும், கொங்குநாட்டு ஆனூர்ச் சர்க்கரை யென்னும் வள்ளல் தமது தாயின் முதுகின்மேல் ஒரு புலவன் ஏறியகாலை, அதற்குச் சினந்த தாயை நோக்கி, 'என்னைப் பத்துமாதஞ் சுமந்தீர்களே; இப்புலவரைச் சிறிது நேரஞ் சுமக்கக்கூடாதா' வென்று கேட்டமையும், வண்ணார் மரபிற் பிறந்த புலவனொருவனைத் தாம் இகழவில்லை யென்று காட்டக் கொதிநெய்யிற் கையிட்டமையும், போரூர் வள்ள லொருவர் கொலையாளிகளிற் றப்பியோடி அடைக்கலம் புகுந்த பறையன் ஒருவனைக் காத்தற் பொருட்டு அவனோ டுடனுண்டமையும் தொண்டை மண்டல சதகம் கூறுகிறது. பிற மரபினருள் கூவத்து நாரணன் என்னும் தட்டானொருவன், திருமயிலைத் தட்டான், மாவண்டூர்க் கொல்லன், நென்மலிவாழ் தச்சன் முதலியவர்கள் பெருவள்ளல்களாய்த் திகழ்ந்தனர். இவர் வரலாறுகளைத் தொகுத்து ஒரு நூல் தனியே இயற்றப்பட வேண்டும். இவ் வள்ளல் காலத்திற்குப் பின் சிற்றரசரான செமீன்தாரர்களும், சைவ ஆதீனத்தாரும் தமிழ்ப்புலவரைப் பேணின ரெனலாம்.

இராமநாதபுரம் திருப்பத்தூர் சாசனத்தினால் மாறவர்மன் குலசேகர பாண்டியனுடைய 31-வதாண்டில் பெரும்பற்றப்புலியூர் நம்பிக்கு நிலம் அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்பாண்டியன் பட்டத்துக்கு வந்தது கி. பி. 1267-ல் ஆகும். இதனால் வேம்பத்தூரா ரியற்றிய பழைய திருவிளையாடலின் காலம் 1298 என்பர்.

இராசேந்திர சோழன் (1012-1032) தண்டி என்பவர் காவ்யாதர்சம் என்னும் வடமொழி அணி நூற்கிணங்கத் தண்டியலங்காரம் என்ற தமிழ் நூலை இயற்றினர். அந்நூற் குதாரணங்களையும் அவரே இயற்றின

ரென்று பிரயோகவிவேக நூலார் தம் நூலுட் குறித்தனர். வீரசோழிய உரையில் தண்டியலங்கார உதாரணச் செய்யுட்கள் காணப்படுகின்றன. வீரசோழிய நூலாரும் தண்டியைப் பின்பற்றியே தாம் அணியிலக்கணம் கூறுவ தாய்க் குறிப்பித்தார்.

அதிகாரம் கஎ

உரையாசிரியர் காலம்

(பதின்மூன்றும் நூற்றுண்டுக்கு மேற்பட்ட காலம்)

தொல்காப்பிய உரையாசிரியர் காலம் 12 முதல் 14-வது நூற்றுண்டுவரையா மென்று கருதலாம். ஒட்டக்கூத்தர் காலமே பேராசிரியர் காலமாகும். தொல்காப்பியத்திற்கு முதலுரையாசிரியர் இளம்பூரணர். அவர் 11-வது நூற் றுண்டின் இறுதியிலாவது 12-வது நூற்றுண்டின் தொடக் கத்திலாவது வாழ்ந்திருத்தல் கூடும். அவரே உரையா சிரியர் என்னும் பெயரால் வழங்கப்படுவர். இளம்பூரண ரென்ற பெயர் முருகக்கடவுளைத் தென்பர். அங்ஙனமாயின் இவர் சைவராய் இருத்தல் வேண்டும். பேராசிரியர் சைவர் என்பது அவர் திருக்கோவையாருக் கெழுதிய உரையால் விளங்கும். பேராசிரியர் தொல்காப்பியப் பொருளதிகார முழுவதற்கும் எழுதிய உரை இப்பொழு துள்ளது. பேரா சிரியர் குறுந்தொகைக்கும் சுருங்கிய உரை எழுதியுள்ளார். இளம்பூரணருரை தொல்காப்பிய எழுத்திற்கும் சொல் லிற்கும், பொருளதிகாரத்தின் ஒரு பகுதிக்குமே அகப் பட்டுள்ளது. சேனாவரையர் என்ற சொல் படைத்தலைவர் என்ற பொருளுடையது. அவர் பாண்டிநாட்டி லுள்ள ஆற்றூரில் படைத்தலைவர் குடும்பத்தில் பிறந்து, கி. பி.

1280-ல் உலகு நீத்தனர் என்பது சாசன ஆராய்ச்சியால் தெரியவருகிறது. சேனாவரையர் பேராசிரியர்க்குப் பின்னிருந்து சொல்லதிகாரத்திற்கு மாத்திரமே உரை யெழுதினவர். அவரது உரையே பிறர்தம் உரைகளினும் சிறந்ததாக ஆசிரியர் சிவஞான முனிவர் போற்றினர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் சேனாவரையரின் சில கருத்துக்களை மறுத்ததால், அவர் அவர்க்குப் பின்னிருந்தவராவர். அவரே மிகுந்த பண்டை நூல்களுக்கு உரையெழுதினவர். (சிந்தாமணி, பத்துப் பாட்டு, கலித்தொகை, குறுந்தொகையில் இருபது பாட்டு, தொல்காப்பியம் என்பவற்றிற்கு அவர் எழுதிய உரைகள் இப்பொழுதும் நின்று நிலவுகின்றன.) இவர் பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணரென்றும், மதுரைவாசி யென்றுங் கூறுப. திருக்குறளுக்குத்,

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்(கு)
எல்லைஉரை செய்தார் இவர்"

என்றவாறு 'கண்ட பத்து உரைகளுள் 'நச்சர்' உரையென்பது நச்சினார்க்கினியர் உரை என்று கூறுவாரும் உளர்.

இப்பொழுது பெருவழக்கிற்றாய் நிகழ்வது பரிமேலழகர் உரையாகும். இவரே பிற உரைகாரர்களுட் பிற்பட்டவர்.

இவர் வடக்கே தாரா நகரத்தில் 11-வது நூற்றாண்டில் ஆட்சிசெய்த போசராசனைப்பற்றிக் கூறுவதால் அவனுக்குப் பிற்பட்டவர் எனத் தெரிகிறது. காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள்கோயில் சாசனமொன்றில் இவர் பெயர் காணப்படுகிறது. அச் சாசனக்காலம் கி. பி. 1272. இவர் சேனாவரையரோடு

ஒத்த காலத்தவர் போலும். பரிபாடலுக்கும் இவர் உரை யெழுதியுள்ளார். இவர் காஞ்சிபுரத்திற் பிறந்து வளர்ந்த ஒரு வைணவ ஆசிரியர். இவரைச் சில சான்றோர் கள் தங்களவ ரென்றும், திருநெல்வேலிச் சில்லாவைச் சார்ந்தவரென்றும் வாதாடுகிறார்கள். இவர் நூலினாலே இவர் ஆரியக்கொள்கையின ரென்பது நன்கு தெளியப் படும். இவர் பதினான்காவது நூற்றாண்டினரென்னலாம். சிலப்பதிகாரந்திற்கு அடியார்க்குநல்லாருரை பொருணயத் தோடு சொல்வளப்பங்க ளமைந்துள்ளது. வடமொழிக் கண் பிரமசூத்திர பாடியங்கள் ஏற்பட்ட காலத்தை ஒட்டித் தமிழில் தொல்காப்பிய முதலிய பெருநூல் களுக்கு உரைகள் ஏற்பட்டன. பரிமேலழகருக்குப் பின் சிவஞான முனிவர் ஒருவரே பெரிய உரையாசிரியராகத் திகழ்ந்தனர்.

வைணவ உரையாசிரியர் காலம்

பதினான்காவது பதினைந்தாவது நூற்றாண்டுகளிலே வைணவ ஆசிரியன்மார் நாலாயிரப் பிரபந்தத்திற்கு விரிந்த உரைகளை வடமொழி மிகுதியுந் தென்மொழி சிறிதுங் கலந்த மணிப்பிரவாள நடையில் இயற்றின காலந்தொட்டுத் தமிழிலே வடசொற்கள் பெருவெள்ள மாகப் பரவலாயின. இக் காலத்திற்குச் சற்று முன்னும் பின்னுந் தோன்றிய சைவ வைணவ ஏகான்மவாதச் சமய நூல்களானும், வில்லிபாரத முதலிய காவியங்க ளானும், அருணகிரிநாதர் திருப்புகழானும் தமிழிற் புகுந்த வடசொற்களுக்கு அளவில்லை. இக்காலத்திற் போல வடமொழிக்கலப்பு இதற்கு முன்னும் பின்னு மில்லை யெனலாம். இற்றை நாளிலேயும் ஆங்கில நூல் களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பிராமணர், மிகுந்த

வடசொற்களைப் புகுத்திவருகின்றார்கள். இது தடைப் படுதற்குரிய முயற்சிகளைத் தமிழ்வாணர் கைக்கொள்ள வேண்டும்.

ஆழ்வார்கள் காலத்திற்குப்பின் நம்மாழ்வாரது திருவாய்மொழியினை யாவருங் கைக்கொள்ளத்தக்க முறையிற் பாராயணத்திலும் ஆட்சியிலும் வைத்தவர் நாதமுனிகளென்பார். இவர் வீரநாராயணத் திருந்த வைணவர். இவர் காலம் கங்கைகொண்ட சோளேச்சரத்திற் சோழமன்னர் ஆளத்தொடங்கிய பின்னரென்பது இவர் வரலாற்றால் விளங்குகின்றது. இவர் காலத்தைக் கலி 3684 என்று குருபரம்பரை நூல் கூறுவது தவறாகும். கங்கைகொண்ட சோளேச்சரத்தில் சோழராட்சி கி. பி. 1011-க்குப் பின்னாகலின், இவர் காலம் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியேயாம். அதன் பிற்பகுதி யென்பாரு முளர். அவர்கள் 1063-முதல் 1117-வரை அவர் கால மென்ப. யோக ரகசியம், நியாயதத்துவ முதலியன இவரியற்றிய நூல்கள். இவர் மாணாக்கர் உய்யக்கொண்டா ரென்பவர். அவர் மாணாக்கர் மணக்கால் நம்பி யென்பவர். அவர் மாணவர் வீரநாராயணபுரம் ஆளவந்தார். இவர்க்கு யமுனைத்துறைவ ரென்ற பெயருண்டு. இவர் மாணவர் பெரிய திருமலைநம்பி, திருக்கச்சிநம்பி, திருக்கோட்டியூர் நம்பி முதலிய பலர். நம்பி யென்ற அடைமொழி குலத்தைக் குறிப்பதன்று. திருக்கச்சிநம்பி சாத்தாத வகுப்பினர்; பிராமணரல்லர். அவர்பால் உடையவராகிய இராமநுசர் மிகுந்த அன்பு காட்டினர். ஆளவந்தார்க்குப் பின் இராமாநுசரே வைணவப் பெருந்தலைவராய் விளங்கினர். இவர்க்கு எம்பெருமானா ரென்ற பெயரு முண்டு. இவர் கலி 4118-க்குமேல் செங்கற்பட்டுச் சில்லா ஸ்ரீபெரும்பூதூரிற் பிறந்தவ ரென்ப. (குரு பரம்பரையிற்

குறித்த காலம் பிழையற்றதென்று கூற இடமில்லை. நாத முனிகள் காலம் கலி. 3684-ம், அவர்க்கு நான்கு தலை முறைக்குப்பின் வந்த இராமாநுசர் காலம் 4118-ம் ஆக விருத்தல் பொருத்த மில்லாததே.) நாதமுனிகள் காலம் பதினோராவது நூற்றாண்டும் இராமாநுசர் காலம் பன்னிரண்டாவது நூற்றாண்டுமாகக் கொள்ளுதல் பொருத்த மாகும். ஆதலால் (இராமாநுசர் ஏறத்தாழ கி. பி.1118-க்குப்பின் தோன்றியவ ரென்னலாம்.) சோழமன்னர் சைவராயிருந்தமையால், இராமாநுசரைச் சமயச் சார்பாகத் துன்புறுத்தினர் போலும்! உடையவர் வைணவ சமயத்திற்கு ஆசிரிய பரம்பரை வகுப்பான் எழுபத்திரு சிம்மாசனாதிபதிகளை நியமித்தன ரென்ப. (உடையவர் மாணவராகிய திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவர் திருவாய்மொழிக்கு ஆயிரப்படி யென்னும் உரை இயற்றினர். உடையவர் மாணக்கருட் சிறந்தவர் கூரத்தாழ்வா ரென்பவர். கூரத்தாழ்வார் மாணக்கர் திருவரங்கத்தமுதனா ரென்பார். இவர் இராமாநுச நூற்றந்தாதி யென்னுஞ் சிறு காப்பிய மியற்றினர். கூரத்தாழ்வார் குமாரர் பராசர பட்டர் என்பவர். இவர் சீ பட்ட ரெனவுங் கூறப்படுவர். பகவத் கீதையைத் தமிழில் விருத்தப்பாவா லியற்றியவர் இவரின் வேறுவர்.) இவர்க்கு வேதாந்தாசாரியர் என்ற பெயரு முண்டு. இவர் 'சகத்திரநாம பாடிய' முதலிய நூல்களியற்றியவர். இவர் சரித்திரத்தால் இவர் திரிபுவனவீர தேவர்காலத் திருந்தவ ரென்று தோன்றுகிறது. அம் மன்னன் காலம் கி. பி. 1267-க்கு மேலாதலின், இவர் பதின்மூன்றும் நூற்றாண்டினிறுதிவரை திகழ்ந்தவராவர். (பட்டரின் மாணக்கர் நஞ்சீய ரென்பார்) இவர்க்குச் சீரங்கநாதர் என்பது இயற்பெயர். இவர் திருநாராயண புரத்தினர். (இவர் திருவாய்மொழி உரை ஆயிரப்படி

யென்பதும், பெரிய திருமொழி உரையு மியற்றியவர். இவர் மாணாக்கர் நம்பிள்ளை யென்பார். இவர் நம்பூரிற் பிறந்தவர். இவருக்கு வரதராச ரென்பது இயற்பெயர். இவரியற்றிய நூல்கள் திருவாய்மொழி உரை, ஒன்பதினாயிரப் படி, திருப்பள்ளியெழுச்சி உரை, திருவிருத்தஉரை, பெரிய திருமொழி உரை என்பன.

இவர் மாணாக்கர்கள் பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பின்பழகிய பெருமாள்சீயர், ஈயுண்ணி மாதவப்பெருமாள் என்பவர்கள். இவர்கள் காலத்திலே பிள்ளையென்ற பட்டம் அந்தணர்க்கும் வழங்கிற்று. பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரப் பிரபந்த உரை 24000 படி யியற்றியவர். கத்தியத்திரயஉரை, பாசுரப்படி, இராமாயணம் முதலியனவும் இவர் நூல்களே. இவர் காலம் 15-வது நூற்றாண்டின் முற்பகுதி. இவர் தென்கலையாரால் பெரிதுங் கொண்டாடப்படுவர்.

வடக்குத் திருவீதிப்பிள்ளை யென்பவர் திருவாய்மொழிக்கு 36000படி உரை இயற்றியவர். இவரோடு ஒத்த காலத்தவராகிய கிடாம்பியூர் அப்புள்ளாரின் மாணாக்கரே வேதாந்ததேசிக ரென்னும் வடகலையாசிரியர். இவர் திருக்காஞ்சிபுரத்திற் பிறந்தவர்; திருவேங்கட முடையா னென்ற பிள்ளைத்திருநாம முடையவர். இவர் இல்லறம் நடாத்தித் திருவகீந்திரபுரமென்னும் திருப்பதியில் நோன்பிருந்து, பெரியதிருவடியைக் காணப்பெற்று, அவர்பால் அயக்கிரீவ மந்திரோபதேசம் பெற்றவ ரென்ப. இவர் பல அற்புதங்க ளியற்றினரென்ப. பாதுகா சகத்திர மென்னு நூலியற்றி அழகியமணவாள நயினாரை வென்றன ரென்ப. இவர் காலத்திலே வித்தியாரண்யர் பஞ்சதசப் பிரகரணமியற்றினார். வித்தியாரண்யரையும் இவர் வென்றன ரென்ப. இவர் நூறாண்டு உயிர்வாழ்ந்தார். இவர்

வடமொழியில் கூறு-நூல்களியற்றினர்; தமிழிலே இருபத்துநான்கு நூல்களியற்றியுள்ளார். இவர் சர்வக்கிய சிங்கப்ப நாய்க்கனுக்கு அருள்செய்தார். காஞ்சிபுர வரதராசப் பெருமாளது பெருமையை அத்திகிரி மான்மியம் என்பதில் வெளியிட்டனர். இவர் பாடிய தோத்திர நூல்கள் அடைக்கலப்பத்து, நவரத்தினமாலை, திருச்சின்ன மாலை என்பன. இவர் பகவத்கீதையின் சாரத்தைக் 'கீதார்த்த சங்கிரகம்' என்னும் நூலில் இனிது விளக்கினர். இவர் பரமதபங்கம் என்னும் நூலில் புறச்சமயங்களை மறுத்தனர். நாடோறும் செய்தற்குரிய கடமைகளை ஸ்ரீவைணவ தினசரி என்பதில் வரைந்தனர். ஆகாரணீயம் என்பதும் அதன் சார்பாயதே. இன்னும் இவர் செய்த நூல்கள் அர்த்த பஞ்சகம், பிரபந்தசாரம், மும்மணிக்கோவை, துவயச் சுருக்கு, திருமந்திரச் சுருக்கு, பரமதசோபானம், சரம சுலோகம், அமிர்தரஞ்சினி, அமிர்தாசுவாதினி, பதினேழு ரகசியம், பன்னிரு நாமம், அதிகார சங்கிரகம் என்பன.

பின்பழகிய பெருமாள் சீயரென்பவர் குருபரம்பரை நூல் வகுத்ததாகக் கூறுப. ஈயுண்ணி மாதவப்பெருமாள் முப்பத்தாறுயிரப்படி யென்னும் உரையை நம்பிள்ளைபாற் பெற்றன ரென்ப.

வடக்குத்திருவீதிப் பிள்ளையின் மக்கள் பிள்ளை லோகாசாரியாரும், அழகிய மணவாளநயினு ரென்பவரு மாவர். இவர்கள் காலத்தில் துருக்கர் தொந்தரவு தென்னாட்டில் ஏற்பட்டுவிட்டது. பிள்ளை லோகாசாரிய ரியற்றிய நூல்கள் அட்டாதசரகசியம் என்னும் பதினெட்டுத் தத்துவ நூல்களாம். அவற்றுட் சிறந்தது ஸ்ரீவசனபூடண மென்பர். பிற நூல்கள் தத்துவ சேகரம், தத்துவத்திரயம், தனிப்பிரணவம், தனித்துவயம், தனிசரமம், நவிதசம்பந்தம், நவரத்தின மாலை, பரந்தபடி, முமுட்சுப்படி, யாத்ருச்சிகபடி, சீயப்பதி

படி, பிரபந்த பரித்திராணம், பிரயோகசேகரம், சாரசங் கிரகம், அர்ச்சவதி, அர்த்த பஞ்சரம், சம்சார சாம்பிராச்சியம் என்னுமிவை. அழகிய மணவாளப் பெருமாணயினர் வேதாந்ததேசிகரோடு பகைத்து அவர் பொறுமை கண்டு அவரிடம் மன்னிப்புக்கேட்டுக்கொண்டவ ரென்ப. (இவர் செய்த நூல்கள் திருப்பாவை உரை ஆறுயிரப்படி, "அமலனாதிப் பிரான்" "கண்ணினுண் சிறுத்தாம்பு" என் னும் இரண்டுக்கும் உரை, மாணிக்கமாலை, ஆசாரிய இரு தயம், அருளிச்செயல் இரகசியம் என்பன)

பிள்ளை லோகாசாரியர் மாணவர் பலருள் விளாஞ் சோலைப் பிள்ளை யென்பார் திருவனந்தபுரத் திருந்தவர். இவர் சத்தகாதை யென்னும் நூலியற்றினர். பிள்ளை லோகாச்சாரியரின் மற்றொரு மாணவராய அண்ணர் என் பாரின் மகன் திருவாய்மொழிப் பிள்ளை. இவர்க்கு சீசை லேச ரென்ற பெயருமுண்டு. இவரே மணவாளமுனிகட்கு ஆசிரியர். மணவாளமுனிகள் காலம் 16-ம் நூற்றாண் டின் முற்பகுதியாகும். இவரே பெரிய சீயர் எனப்படு வர். இவரே தென்கலையார்க்குத் தலைவர். இவர் பாண்டி மண்டலத்திற் சிக்கிற்கடார மென்னு மூரிற் பிறந்து வளர்ந்து கலை பயின்று அரசவேலையி லமர்ந்து பின் துற வற நெறி நின்றவர். இவர்க்கு யதீந்திரப்பிரணவர் என்ற பெயரு முண்டு. இவர் முப்பத்தாறுயிரப் படியைப் பலர்க்கும் போதித்தவர். இவர்தாம் வானமாமலைச் சீயராக அழகிய வரதர் என்பாரை நியமித்தவர். இவர்தம் நூல்களுள் உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந் தாதி, பிரமேயசாரம் ஆர்த்திப் பிரபந்தம், முதலியன இவர்தம் பாட்டு நூல்கள். கீதாதாத்பர்யதீபம், திருவாராதனைக்கிரமம், விரோதிபரிகாரம் என்பன இவர்தம் உரைநடை நூல்கள். இராமாநுச நூற்றந்தாதி உரை, சப்தவியாக்கியானம், சீவ

சனபூடண உரை, ஞானசார உரை, தத்துவத்திரய உரை, பெரியாழ்வார் திருமொழி உரை, முமூட்சுப்படி உரை என்னும் பேருரை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவர்தம் மாணுக்கர் பலருள் பரவத்துபட்டரென்பாரொருவர். அவர் மாணுக்கர் பிள்ளைப்பெருமாளையங்காராவர். அவர்க்கு அழகிய மணவாளதாசரென்ற பெயருமுண்டு. சீயர் மரபிற் பிள்ளை லோகார்ய சீயர் என்பார் பல வைணவ நூல்களுக்கு உரை வகுத்தனர். அவரியற்றிய நூல்கள் இராமாநுச திவ்யசூரி சரிதை, யதீந்திரப்ரவ பிரபாவம் என்பவற்ருேடு, உபதேச இரத்தினமாலை, இராமாநுச நூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தம், நாலாயிரத் தனியன் என்பவைகளுக்கு உரைகளுமாகும். வைணவ உரையாசிரியர் பரம்பரை இதனேடு ஒருநிலைப் பட்டது.

அதிகாரம் கஅ

தத்துவ நூல்கள்

(பதினுலாவது நூற்ருண்டுக்கு மேற்பட்ட காலம்)

பதின்மூன்ரும் நூற்ருண்டிலே சமயநூல்கள் சிறப்பாகத் தோன்றுவ ஆயின. மெய்கண்டதேவரது சிவஞான போதம் சிறந்ததொரு முழுச் சைவசித்தாந்தப் பெருமறை ஆதலின், அதுவே பின்தோன்றிய சைவசித்தாந்த முதனூல்களுக்கெல்லாம் அடிப்படையாயிற்று. 13-வது நூற்ருண்டுமுதல் 15-வது நூற்ருண்டுவரை தோன்றிய வைணவப் பேருரை நூல்களும் தமிழ்நாட்டிலே வடசொற் பெருவெள்ளத்தைப் பெருக்கின. ஏகான்மவாத நூல்களும் வடசொல் வழக்கினை மிகுதிப்படுத்தின.

கரு-வது நூற்றாண்டிலே பல சைவாதீனங்களும், வைணவ மடங்களும் தமிழ்நாட்டிற் பல விடங்களிலும் தோன்றிச் சமய நூற்பயிற்சியைப் பரவச்செய்தன. பதினான்காவது நூற்றாண்டு முதல் தலபுராணங்கள் காப்பியநயங்களோடு தமிழில் எழுந்தன. பதினாறு பதினேழாவது நூற்றாண்டுகளில் பலவகைச் சிறு காப்பியங்களும், ஞான நூல் உரை நூல்களும், சில தலபுராணங்களும் பெருகி வளர்ந்தன. சைவ சமயக் கிளர்ச்சி பதினேழாம் நூற்றாண்டில் இமயம்வரை பரவிற்று. இந்நூற்றாண்டில் மகமதியப் பாவலரும் தமிழை வளர்த்தனர். பதினெட்டாம் நூற்றாண்டிலே சில இலக்கண நூல்களும் சதகமென்னும் சிறு காப்பியங்களும் தோன்றின. வீரசைவக் கருத்துக்களும் தமிழ்நாட்டிற் பரவின. மேலைநாட்டிலிருந்து வந்த பெசுக்கி (Beschi) என்னும் பாதிரியாரால் கிறித்துவ சமயமும் தலைகாட்டிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சித்தாந்தமாபாடியர் (சிவஞான போதத்தின் பேருரை) தோன்றினமையால், சைவ சித்தாந்தம் சிறப்புற் றோங்கிற்று. இசை நாடகங்களும் இந்நூற்றாண்டிலே சிறந்துவிளங்கின. பத்தொன்பதாவது நூற்றாண்டிலே சைவவைணவ ஏகான்மவாத கிறித்துவ உறழ்ச்சி தழைத்தது. ஆங்கிலச் சார்பும், உரைநடை நூல்களும், அச்சு முயற்சியும், பல்கலைக்கழகத்தார் தமிழ் வளர்ச்சியும் ஏற்பட்டன.

ஏகான்மவாத ஆசிரியர்களுள் தத்துவராய ரென்பார் பதினைந்தாவது நூற்றாண்டிலே சோழநாட்டிலே வீரை நகரிலே பிறந்த பிராமணர். இவர் சொரூபானந்த ரென்னுந் துறவியின் மாணாக்கர். இவர் அஞ்ஞைவதைப்பரணி, மோகவதைப்பரணி யென்னும் அழகிய பாட்டு நூல்களி- அறியாமையையும் அவாவையுஞ் செற்று வெ

கொள்ளும் வீரத்தைப் புனைந்துரைத்தார். இவரது பாடுதுறை யென்பது சிறுமகார்க்கும் இன்பமீயவல்ல பல்வகைப் பாவினங்களைக் கொண்டுள்ளது. இவரது சசிவர்ண போதம் என்பது ஏகான்மவாதத்தைப் போதிக்கும் தத்துவ நூல். இவர் செய்த சிறு நூல்கள் பல. அவை குறுந்திரட்டு, பெருந்திரட்டு முதலியனவாக இருபத்துமூன்றுள்ளன. தத்துவராய முனிவ ரென்பார் ஈசுரகீதை, பிரமகீதை என்னும் நூல்களை எக்காலத்திற் செய்தாரென்று விளங்கவில்லை. அவையும் ஏகான்மவாதச் சார்பான தத்துவ நூல்களே.

பாண்டிநாட்டில் வீரை என்னும் ஊரிலிருந்த ஆளவந்தார் என்னும் அந்தணப் புலவர் ஞானவாசிட்டம் என்னும் அரிய வேதாந்த நூல் இயற்றினர். இதற்குப் புரசை அருணாசலசாமி என்பார் உரை எழுதினர்.

சைவசித்தாந்த நூல்கள் :—சங்கரர், இராமானுசர் முதலிய வடமொழி ஆசிரியரின் பாடியங்கள் மிக்கு வழங்கிய காலத்தே சைவசித்தாந்த விளக்கம் தென்னாட்டிலே குறைவுற்றிருந்தது. அக்குறையை ஒழித்தற்பொருட்டுப் பதின்மூன்றாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவெண்ணெய்நல்லூரில் அச்சுதகளப்பாள ரென்னும் வேளாள குலத்தலைவராய்ச் சடையப்ப வள்ளலின் மனைவிவழி தோன்றிய உறவினராய் மெய்கண்டதேவர் பிறந்தார். அவர் சிவஞானபோத மென்னும் சைவ சித்தாந்தத் தலைமணி நூலை இயற்றி அருளினர். அது பன்னிரண்டு சூத்திரங்களையும், எண்பத்தொரு வெண்பாக்களையும் உடையது. அதற்கு முன்னரேயே திருவுந்தியார், திருக்களிற்றுப் படியா ரென்னுஞ் சைவ சிந்தாந்தச் சிறப்பு நூல்கள் இயற்றப்பட்டன. திருவுந்தியார் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனுரால் கி. பி. 1148-ல் இயற்றப்

பட்டது. உய்யவந்தாரின் மாணவர் ஆளுடைய தேவ நாயனர். அவருடைய மாணக்கர் திருக்கடவூர் உய்ய வந்ததேவ நாயனர். அவரியற்றிய நூல் திருக்களிற்றுப் படியார். அதன் காலம் கி. பி. 1178. இவ் விரண்டு நூல் களும் அனுபவ நூல் என்று கூறப்படும். இவை தமிழ்ப் போக்கில் உள்ளன. திருக்களிற்றுப்படியார் அறுபத்து மூன்று நாயன்மார் அற்புத நிகழ்ச்சிக்குக் காரணமான வல்வினை மெல்வினையைப்பற்றிக் கூறுவதுடன் ஆசிரியர் திருவள்ளுவரது குறள்களிற் சிலவற்றை மேற்கோளாகக் கொண்டு அவற்றின் பொருளை இனிது விளக்குகின்றது. ஓர் உதாரணம் :—

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னன்றமையாற்
சார்புணர்த லேனே தியானமுமாஞ்—சார்பு
கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று."

அன்பின் சிறப்பைப்பற்றிக் கூறும் செய்யுள் வருமாறு :—

"அன்பேயென் னன்பேயென் றன்பா லழுதரற்றி
யன்பேயன் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்வதெல்லாஞ்
சாற்றும் பழமன்றே தான்."

ஆசிரியர் மெய்கண்டதேவரது சிவஞானபோதம் முப் பொருளின் உண்மையையும் இலக்கணத்தையுங் கூறும் பொதுப் பகுதியும், வீட்டிற்குரிய ஞான நெறியினையும் அந் நெறியின் நின்றோர் பெறும் பயனையுங் கூறுஞ் சிறப்புப் பகுதியையு முடைய முழுமுதல் நூலாகும்.

திருவண்ணுமலையில் மூன்றுவது இராசராசன் ஆட்சியில் பதினைருவது ஆண்டில் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர் என்பாரால் விடப்பட்ட தருமப்

பொருள் சாசனமொன்று கிடைத்துள்ளது. மூன்றுவது இராசராசன் காலம் கி. பி. 1216 முதல் 1248 வரை ஆகும். ஆகவே இச்சாசனத்தின் காலம் கி. பி. 1232 ஆகும். ஆகவே அதற்கு முன்னமேயே மெய்கண்டார் வாழ்ந்திருந்தன ரென்பது தெளிவு. அவர் சிவஞானபோதமியற்றிய காலம் 1215 ஆதல் கூடும். ஆசிரியர் மெய்கண்டார்க்கு நாற்பத்தொன்பது மாணுக்கர்கள் இருந்தார்கள். அவருள் முதல் நின்றவர் மெய்கண்டாரின் தந்தையார்க்குக் குலகுருவாகிய திருத்துறையூர் அருணந்திசிவாசாரிய ரென்னும் ஆதிசைவரே. இவர் சிவஞான சித்தியா ரென்னும் வழிநூலையும், இருபாஇருபஃது என்னும் சைவ சித்தாந்தச் சிறு நூலினையும் இயற்றினர். இவருடைய மாணுக்கர் மறைஞான சம்பந்தர். மறைஞான சம்பந்தரின் மாணுக்கர் உமாபதி சிவாசாரியார்.

இவர் தில்லையிலே வாழுகின்ற திருவுடையந்தணர் மரபைச் சார்ந்தவர். இவர் சிவப்பிரகாசமென்னுஞ் சிவஞானபோதச் சார்பு நூலையும், கொடிக்கவி, உண்மைநெறி விளக்கம், நெஞ்சுவிடு தூது, வினுவெண்பா, திருவருட்பயன், சங்கற்ப நிராகரணம், போற்றிப் பஃறொடை என்னும் பிற ஏழு சித்தாந்த நூல்களையும் இயற்றியருளினுர். கோயிற் புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிகக் கோவை முதலியனவும் இவரால் இயற்றப்பட்டன என்ப. வடமொழியிற் பவுட்கரம் என்னும் உபாகமத்திற்கு இவர் இயற்றிய விரிவுரை ஒன்றுண்டு. இவர் தாம் சங்கற்ப நிராகரணம் இயற்றிய காலத்தைத் தெளிவாகக் குறித்துள்ளார். "ஏழஞ்சு இருநூறு எடுத்த வாயிரம்'' என்றதனுல் அக்காலம் சாலிவாகனன் ஆண்டு 1235-ஆகும். அது கி. பி. 1313-க்கு நேர். இவரது ஞானபரம்பரையிலே திருவாவடுதுறை யாதீனத்து முதல் தலைவ

ராகிய நமச்சிவாய தேசிகர் நான்காவதாக நின்றவர். ஆசிரியர் மெய்கண்டாரின் மற்றொரு மாணவரது ஞான பரம்பரையில் வந்த ஞானசம்பந்த தேசிகரே தருமபுரவாதீனத்தை நிறுவியவராவர். மெய்கண்டாரின் இன்னொரு மாணவர் மனவாசகங் கடந்தா ரென்பவர் கி. பி. 1245-ல் 'உண்மை விளக்க' மென்னும் சைவசித்தாந்த நூலை அருளிச்செய்தார். இதுகாறும் கூறிய சைவசித்தாந்த நூல்கள் பதினன்கும் மெய்கண்டசாத்திர மெனப்படும். அவற்றைத் தொகுத்துரைக்கும் பாட்டு வருமாறு :

"உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று."

சைவ மடங்கள்

திருவாவடுதுறை மடம்

பதினன்காவது நூற்றாண்டின் தொடக்கத்தில் உமாபதிசிவாசாரியார் சைவசித்தாந்தத் தலைவராய்த் திகழ்ந்தனர். அவர் முதன்மாணக்கர் அருணமச்சிவாய தேசிகர். அவர் திருவாவடுதுறையி லிருந்த சித்தர் சிவப்பிரகாசர்க்கு ஞான உரை பகர்ந்தார். அவர் மூவலூரில் வேளாளகுல திலகமாய்ப் பிரமசரியத்திற் றலைநின்ற நமச்சிவாய மூர்த்திகளுக்கு ஞான முரைத்தார். இவரே திருவாவடுதுறையாதீனத்தை நிலைநாட்டினர். இவரிடத்தில் அருளுரை பெற்ற சிவப்பிரகாசர் சிதம்பரத்திலே கூத்தப்பெருமான் வழிபாட்டிற்கு வைணவர்களால் விளைந்த இடையூற்றை நீக்கி ஆங்கு வீற்றிருந்து நிட்டைகூடினர்.

நமச்சிவாயமூர்த்திகள் பின்னர் மறைஞானதேசிக ரென்பார்க்கு ஞானத்தை நல்கினர். அவர் சத்திநிபாதத்

துத்தமராய் நிட்டையிலே வீற்றிருந்தார். பின் அவரால் ஆசிரிய பரம்பரை நிலைபெற இடமின்மையால், இவர் அம்பலவாண தேசிகருக்கும் தெக்கணுமூர்த்தி தேசிகருக்கும் ஆசிரியநிலை யருளினர். அக் காலத்தே பதினைந்தாவது நூற்றாண்டு தொடங்கியிருத்தலாகும். தெக்கணுமூர்த்தி தேசிக ரியற்றிய தசகாரியம், உபதேசப்பஃறொடை யென்னு மிரண்டு ஞான நூல்களும் கி. பி. கரு-வது நூற்றாண்டிற் றோன்றியனவாகக் கருதலாம். அவர் சின்னப்பட்டத்தில் வீற்றிருந்தபோதே சிவனடி சேர்ந்தனர். பெரிய பட்டத்திலிருந்த அம்பலவாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை என்னும் பத்துநூல்களை யருளிச்செய்தார். தசகாரிய மென்பது வீடெய்துமுயிர்கள் அறியற்பாலனவாய தத்துவரூபம், தத்துவ தெரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம் சிவதெரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் பத்துமாம். அவர் இவற்றைப் பலப்பலவாறு விரித்துரைத்தனர். ஏகான்மவாதிகளும் இப்பெயருடைய நூல்களியற்றியுள்ளார். மேற்கூறிய நூல்கள் சைவாதீனத் தலைவர்களாகிய பண்டார சந்நிதிகளாற் செய்யப்பெற்றமையால் பண்டாரசாத்திர மென்று பெயர் பெறுவன. இவற்றோடு ஈசானதேசிக ரியற்றிய தசகாரியமும், பின் வேலப்பதேசிகரியற்றிய பஞ்சாக்கரப் பஃறொடையுஞ் சேர்ப்பின், பண்டாரசாத்திரம் பதினான்காதல் காண்க. இவை மெய்கண்டசாத்திரம் பதினான்கிற்குந் துணைநூல்களாகத் திகழ்வன. மேற்கூறிய அம்பலவாண தேசிகரின் மாணவருள் ஒருவர் வைணவப் பிராமணராயிருந்து சிவசமயம்

புகுந்து தீக்கை பெற்று உலகுடைய நாயனு ரென்ற திருப் பெயருடன் விளங்கினர். அவர் தம் தேசிகர்மீது செய் தருளிய விருத்தங்கள் பத்தும் நயமிக்கன. சிவபுரம் பிள்ளை யென்பாரும் அம்பலவாணதேசிகர்மீது புகழ்மாலை செய்தனர்.

தருமபுர வாதீனத்தைச் சார்ந்த சம்பந்த சரணாலய சுவாமிகள் மைசூரரசரான் மதிக்கப்பெற்றவர். அவர் அரசர் வேண்டுகோட் கிணங்கிக் கந்தபுராணச் சுருக்க மென்னும் நூலைச் செய்யுளா லியற்றினர். அவர் மைசூ ரரசர்பாற் பெற்ற பெருநிதியினைக் குருலிங்க சங்கமங்கட் கெனவே வைத்தனர். அடியார் குழாங்கள் செய்யுந் தொழிலைப்பற்றி இவர் கூறிய பாட்டு நினைவுகூரத்தக்கது.

ஆய்வார் பதிபசு பாசங் களினுண்மை யாய்ந்துகொண்டு
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன்றி ரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்பிர காசநற் றொண்டர்களே.

திருவாரூரிலிருந்த ஞானப்பிரகாச ரென்னும் பெரிய வரே தருமபுரவாதீனத் தலைவர். ஆறாவது பட்டத்தி லிருந்த திருஞான சம்பந்த தேசிகர் திருவடியைச் சார்ந் தவர் சம்பந்தசரணாலயரென் றறிக.

துறைசை யாதீனத்திற் பதினோராவது பட்டத்தி லிருந்த பின்வேலப்ப தேசிகர் காலத்திலே சிவஞான முனி வர் திகழ்ந்தவராவர். அக் காலத்திலே சின்னப்பட்டத்தி லும் வேலப்பதேசிக ரென்னும் திருப்பெயருடையவ ரொருவரிருந்தனர்.(இப்பொழுதுள்ள துறைசை யாதீனத் தலைவர் கக-வது பட்டத்திலுள்ளவர் போலும்) பெரிய பட்டத்திலிருந்தவர் திருப்பறியலூர்ப் புராணம் பாடினர். சின்னப்பட்டத்திலிருந்தவர் பஞ்சாக்கரப் பஃறொடை, ஞான

பூசாவிதி, மரபட்டவணை யென்னும் நூல்களியற்றியருளினர்.

தருமபுர வாதீனம்:—உமாபதி சிவாசாரியர் மாணுக்கருள் ஒருவர் மச்சுச் செட்டியார் என்பவர். இவர் சீகாழிச் சைவவேளாளர். இவரியற்றிய நூல் ஞானபூசைத் திருவிருத்தம். இவர் உலகை நோக்காது இறைவனை நோக்கியே யிருத்தற்பொருட்டுத் தம் வீட்டு மாடியி லிருந்தமையால், மச்சுச்செட்டியா ரென்ற பெயர் இவர்க்கு அமைந்தது. இவருடைய மாணுக்கர் நால்வருட் சிறந்தவர் கங்கை மெய்கண்டார். இவர் மாணுக்கர் சீகாழிச் சிற்றம்பல நாடிகள். இவர் சித்தக்காட்டிலே அறுபத்து நான்கு மாணுக்கர்களுடன் சமாதியுற்றனர். சிற்றம்பல நாடிகள் இயற்றிய நூல்கள் துகளறு போதம், சிவப்பிரகாசக் கருத்துரைச் சூத்திரம், திருச்செந்தூ ரகவல் முதலியன. அவர் மாணவராகிய தத்துவப் பிரகாசர் தத்துவப் பிரகாச மென்னுமோர் சித்தாந்த நூலியற்றியுள்ளார். சிற்றம்பல நாடிகளின் மாணுக்கராகிய பழுதைகட்டி ஞானப்பிரகாசரின் மாணுக்கர் திருவாரூர் கமல ஞானப்பிரகாசர். இவ ரியற்றிய நூல்கள் சிவானந்த போதம், பிரசாதக் கட்டளை, அத்துவாக் கட்டளை, சிவபூசை யகவல் முதலியன. இவர்தம் முதன் மாணுக்கரே தருமபுர வாதீனத்தை நிலை நாட்டிய ஞானசம்பந்ததேசிக ராவர். இவர் பாண்டி நாட்டுச் சீவில்லிபுத்தூர் வேளாளர். இவரியற்றிய நூல்கள் சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, பரமானந்த விளக்கம், முத்திநிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் முதலியன.

தருமபுரத்தில் நான்காவது பட்டத்திலிருந்த மாசிலாமணி தேசிகர் குமரகுருபர அடிகளுக்கு ஞானோபதேசஞ் செய்தவர். ஆறாவது பட்டத்திலிருந்த திரு

ஞான சம்பந்தரின் மாணுக்கர் வெள்ளியம்பலத் தம்பிரான் என்பவர் (1630). இவர் திருநெல்வேலிச் சிந்து பூந்துறையி லிருந்தகாலை துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளுக்குப் போதகாசிரியராய்த் திகழ்ந்தார். இவர் முத்திநிச்சய மென்பதற்கு ஓர் உரையும், சிவஞான சித்தியார்க்கு ஞானுபரணவிளக்க மெனும் விரிவுரையு மியற்றினர். தருமபுரவாதீனம் எட்டாவது பட்டத்திலிருந்த அழகிய திருச்சிற்றம்பலதேசிகரால் சுவர்க்கபுரமடம் ஏற்படுத்தப் பட்டது. அம் மடத்துத் தம்பிரான் அழகிய திருச்சிற்றம் பலத் தம்பிரான் என்பவரால், திரிபதார்த்ததீப மென்னு நூலியற்றப்பட்டது. சுவர்க்கபுர மடம் சின்னுட்களுக்கு முன் நிலைகுலைந்தது. (இப்பொழுதுள்ள தருமபுரவாதீனத் தலைவர் இருபத்திரண்டாவது பட்டத்தி லுள்ளவர் போலும்.) இவ் வாதீனப் பெரும்புலவருள் ஒருவராகிய வடுகநாத தேசிக ரென்பவரால் திருமுல்லைவாயிற்புராண மியற்றப்பெற்றது. இத் தேசிகர் இலக்கணம் வைத்திய நாத நாவலரின் நான்காவது புதல்வர்.

இவ் வாதீனத்துப் பண்டார சாத்திரங்களும் பிறநூல் களும் பல வுள்ளன. அவை ஞானப்பிரகாசர் தசகாரி யம், போதானந்த சித்தியார், திரிபதார்த்த ரூபாதி தச காரியம், பதிபசு பாசப் பனுவல், சிவானந்த மாலை, சாம் பிரதாய தீபம், ஞானுவரண விளக்கக் குறள், சித்தாந்த நிச்சயம், சதமணிக் கோவை, பரமத சங்கற்ப பரமோப தேசம், நிராகரணம், பரமத திமிரபானு, சிவானுபோக சாரம் முதலியன. இத்துடன் ஆதீன காலம் முடிந்தது. இனித் தனிப்புலவர் வரலாற்றினை ஆய்வாம்.

பதினெலாம் நூற்றுண்டின் இறுதி

பதினென்காவது நூற்றுண்டிலே தோன்றிய சில சிறு நூல்கள் ஈண்டுக் கருதற்பாலன. சிவில்லிப்புத்தூரிற்

நிகழ்ந்த புலவ ரொருவர் உவமான சங்கிரக மென்ற அணிநூ லியற்றினர். காங்கேயன் என்பா ரியற்றிய உரிச் சொல் நிகண்டும் அக்காலத்ததே யாம். இவரைச் செங்கற் பட்டி லிருந்த ஒரு துறவி யென்று சிலர் கூறுவர். கொங்கு மண்டல சதகம் ௯௧-ம் பாட்டில் இவர் கொங்குநாட்டு மோரூரில் வாழ்ந்தவ ரென்று குறிக்கப்பட்டது. இவர் வேளாளமரபினர்.

தொல்காப்பியத் தேவ ரென்னும் புலவரால் திருப்பா திரிப்புலியூர்க் கலம்பக மென்ப தியற்றப்பட்டது. இக்கலம் பகத்தை இரட்டையர்கள் புகழ்ந்துரைத்தமை காண்க. அவர்கள்,

"தொல்காப் பியத்தேவர் சொன்னதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைப்ப தேறுமோ?

என்றனர்.

வைணவருள் அருளாள பெருமாள் என்பவர் பிரமேய சார மென்னு நூலியற்றினர்.

அதிகாரம் ௧௬

பதினைந்தாவது நூற்றாண்டு

காளமேகப்புலவர் பதினான்காம் நூற்றாண்டி னிறுதியி லும் பதினைந்தாம் நூற்றாண்டின் முதலிலும் திகழ்ந்த பெரும் புலவர். இவர் கும்பகோணத்து வைணவ அந்த ணர்; சீரங்கக் கோயிலில் மடைப்பள்ளி வேலை பார்த்தவர். மோகனாங்கி யென்னுந் திருவானைக்காச் சிவன்கோயிற் றாசியாற் சைவராய், ஒருநா ளிரவு திருவானைக்காவி லெழுந் தருளியிருக்கும் அகிலாண்டநாயகி தம்பல முமிழப் பெற்று இவர் வரகவியாயினர். இவர் இயற்பெயர் வரதர்.

எம் முறையில் எச்சொல்லை எப்புலவர் எவ்வாறு அமைத்துப் பாடவேண்டினும், அவ்வாறே உடனே தெளிதமிழிற் பாடவல்ல ஆசுகவி. சிலேடை பாடுவதிலும் நகைச்சுவையமையப் பாடல் பாடுவதிலும் இவர் இணையற்றவர். 'ஆசுகவிமாரி யகிலவுலகமெலாம் வீசுகவி காளமேக' மெனப் பிறராற் புகழப்பெற்றவர். (இவர் முதலிற் பாடிய நூல் திருவானைக்கா வுலா வென்பது)

> "கங்கையினன் கங்கையினன் காசியிலான் காசியிலான்
> பைங்கடல்சூழ் பாரிடத்தான் பாரிடத்தான்"

என்பதில், கம்-தலை, கையினன்-கையினுடையவன்; கங்கையைத் தரித்தவன்; காசியை (இல்-வீடு) வீடாக உடையவன்; பாரிடம்-நிலம், பாரிடம்-பூதம்.

இராமைய னென்னுமோர் அரச வேலைக்காரன் திறமில்லாத ஒரு குதிரையி லேறி மெள்ள மெள்ளப் போதலைக் கண்டு இவர் கூறிய பாட்டு,

> "முன்னே கடிவாள மூன்றுபேர் போட்டிழுக்கப்
> பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
> வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
> மாதம்போங் காத வழி."

ஒரு தேவடியாள் காதிற் கொவ்வாத கடிய குரலிற் பாடுவதைக் கேட்டு அவளை இவர் இகழ்ந்துரைத்த அடிகள்,

> "கழுதைகெட்ட வண்ணான் கண்டேன்கண் டேனென்று
> பழுதையெடுத்தோடிவந்தான் பார்த்து."

திருமலைராயன் பட்டணத்திலிருந்த அதிமதுர கவி யென்பாரோடு வீரவாது நிகழ்த்தி வென்ற இவர் பேராண்மை, இவர் திருவருட் பேறுடையா ரென்பதை வற்புறுத்தும். திருமலைராயனிடம் அரண்

மனைப் பாவலனாயிருந்த அதிமதுர கவி அறுபத்து நான்கு மாணவரோடு மிகச் செருக்குற்றிருந்தான். அவன் சிவிகையின்மேலேறிச் சென்றகாலை, அவனுடைய பரிசனத்தோடு கலந்த காளமேகத்தை அவனுடைய மாணவர் நோக்கி அதிமதுரகவியின் புகழைப் பரவச்சொன்ன காலை, நகையாடி அதிமதுரம் இனிய கள்வெறி என்று பொருள்பட உரைத்தார். இதனைக் கேள்வியுற்றுச் சினங்கொண்ட அதிமதுரகவி, 'காளமேகத்தைப் பிடித்துக் கொண்டுவா' என்று ஆளனுப்ப, அவரும்,

"தூதைந்து நாழிகையி லாறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலைசொல்லத்
துகளிலா வந்தாதி யேழுநா ழிகைதனிற்
றொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாண்முழுதுமே
பாரகா வியமெலா மோரிரு தினத்திலே
பகரக்கொ டிக்கட்டினேன்
சீதஞ்செ யுந்திங்கண் மரபினா னீடுபுகழ்
செய்யதிரு மலைராயன்முன்
சீறுமா றுகவே தாறுமா றுகள்சொல்
திருட்டுக் கவிப்புலவரைக்
காதங் கறுத்துச் செருப்பிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்துவெற்றிக்
கல்லணையி னொடுகொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேகநானே"

என்று தம் பெருமை கூறும் பாட்டொன்று பாடி, அரண்மனைக்கு விரைந்து சென்றார்.

காளமேகம் அரசவை செல்லுங்காலை இருக்க இடமின்மையை முன்னறிந்து கலைமகளைப் பாடி அரசிருக்கையிலேயே இடம் நீளப்பெற்று வைகினர்.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
யரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்."

பிறகு இருபுலவரும் சொற்போர் நிகழ்த்திய பின்னர் யமகண்டம் பாடக் காளமேகம் ஒப்புக்கொண்டு, சதுரத் தீக்குழிக்கு மேல் இரும்புத்தூண் முடிவிலிருந்து, கீழே கொதிக்கிற எண்ணெய்க் கொப்பறையையும், நான்கு பக்கத்து இருப்புத்தூணைத் தவறு நேரிட்டால் அசைக்க அவைகளிற் கட்டப்பட்ட யானைகளையும், தமது அரையிலுங் கழுத்திலுங் கட்டியுள்ள கத்திகளையும் பொருட்படுத்தாது விரும்பியவர்கள் விரும்பியவண்ணமே கவிமாரி பொழிந்தும், திருமலைராயனும் அவன் கவிஞனும் தம்மை மதியாமை கண்டு, அப்பட்டணத்தில் மண்மாரி பெய்க வென வெஞ்சொற் கூறிப்போந்தார். இவர் முதலிலே திருமலைராயன் அரசவை சென்றமர்ந்தபோது அங்குள்ள போலிப்புலவரைப் பார்த்துப் பாடிய பாட்டு,

" வாலெங்கே நீண்ட வயிறெங்கே யிரண்டு
காலெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராசர் போற்றும் புலவீர்காள் நீங்கள்
கவிராச ரென்றிருந்தக் கால் "

என்பது.

(வடமொழியிற் கபி - குரங்கு. கபி, தமிழிற் கவியாயிற்று.) (காளமேகப் புலவர் சிவபெருமானே முழுமுதற்கடவுளென்று நிலைநாட்டப் 'பரப்பிரம விளக்க' மென்னு நூ லியற்றினர்.)

" பங்கயக்கண் மாலைப் பரத்துவனென் றேவியாசன்
கங்கைக் கரையுரைத்த நைந்நாவன்—றங்கவற்குத்
தம்பிக்க மால்வந்து சங்கரனே யெவ்வுயிர்க்கும்
எம்பிரா னென்று னிசைந்து."

இறுதியில் இவர் திருவாரூர் சென்று இரட்டையர் பாடி முடிக்காது மதிலில் எழுதியிருந்த,

"நாணென்று னஞ்சிருக்கு நற்சாபம் கற்சாபம்"

என்ற முதலடியைக் கண்டு,

"பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே
சீராரூர் மேவுஞ் சிவனேநீ யெப்படியோ
நேரார் புரமெரித்த நேர்"

என்ற மற்றையடிகளையும் பாடிமுடித்தன ரென்ப.

இஃதறிந்த இரட்டையர் காளமேகம் இறந்த ஞான்று அவர் உடல் தீயினால் வெந்தழிதல் கண்டு, அதனை

"ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தழலாய் வேகுதே யையையோ
மண்தின்ற பாணமென்ற வாய்"

என்று வருந்திப் பாடிய பாட்டிற் குறித்தன ரென்க.

இதனாற் காளமேகப்புலவர் இரட்டையர் காலத்திலிருந்து அவர்களுக்குமுன் சிவபதமடைந்ததாகத் தெரிகின்றது.

இரட்டையர்

(இரட்டைய ரென்னும் இரு புலவர்கள் ஒருங்கு சேர்ந்து பல பதிகளுக்கும் சென்று சிவபிரான்மீது பாமாலை புனைந்தனர்.) இவர்கள் சோழநாட்டிலுள்ள ஆலந்துறையிற் செங்குந்தர் மரபிற் பிறந்தவர்கள். ஒருவர் ஒரு பாட்டின் முற்பாதி பாட, மற்றொருவர் அதன் பிற்பாதியைப் பாடுதல் வழக்கம். இவர்கள் ஆறுவிலக்குதல் முதலான அற்புதங்க ளியற்றியதாகக் கேள்விப் படுகிறோம். இவர்களுள் ஒருவர் முடவர்; மற்றொருவர் குருடர். முடவரைக் குருடர் சுமந்துசென்று ரென்றும்,

முடவர் வழிகாட்டின ரென்றுங் கூறுப. (இளஞ்சூரிய ரென்றும் முதுசூரிய ரென்றும் அவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் இயற்றிய திருவாமாத்தூர்க் கலம்பகம் நய மிக்கது. தில்லைக்கலம்பகம், ஏகம்பநாதருலா, கச்சிக் கலம்பகம் முதலியன பாடி அவர்கள் வரபதியாட்கொண்டா னென்னுங் கொங்குமன்னனாற் போற்றப்பெற்றவர்.) 'கலம்பகத்திற் கிரட்டையர்க' ளென்றதுங் காண்க. அவர்கள் திருவண்ணாமலையிலிருந்த சம்பந்தாண்டா னென்னுஞ் சமணப் புலவர் விரும்பிய 'சமுத்தி' யென்னுஞ் சித்திரக்கவி பாடினதாகவுங் கேள்வி. திருவக்கபாகை வரபதியாட்கொண்டானை அவர்கள் பாடிய பாட்டு வருமாறு :—

" சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்ட நாயன் றமிழ்க்
கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே "

விசயநகர அரசர்களில் மல்லிகார்ச்சுன ராயர், விருபாட்சராயர் என்பவர்களின் காலமாகிய 1449—1465—1485 வரையிலுள்ள ஆண்டுகளில் அவர்கள் பிரதிநிதியாகத் தென்னாட்டில் அரசுசெலுத்தியவர் சாளுவர் திருமலைராயர். அவரைப்பற்றிய சிலாசாசனம் சீரங்கத்தில் கிடைத்துள்ளது. அது சாலிவாகன சகாப்தம் 1385-ல் ஏற்பட்டது. காளமேகப் புலவர் காலம் அது வென்று கூறுப.

நெற்குன்றவாண ரென்றும் ஒரு வேளாள குல திலகர் தொண்டைநாட்டு நெற்குன்ற மென்னுமூரிலே சிறந்த வள்ளலாய்த் திகழ்ந்தது மன்றிச் செவ்விய பாவலராயும் விளங்கினர். இவர் 'திருப்புகலூர் அந்தாதி' ஒன்று மிக அழகாகப் பாடியுள்ளார். இவர் தம்முடைய வீட்டிலில்லாதபோது ஆண்டுச் சென்ற காளமேகப் புலவருக்கு அவருடைய தாதி ஒருத்தி பரிசளித்தாளென்றும்,

அதனைக் கேட்டுகந்து தாமும் அப்புலவர்க் கோரடிமை யென்று இவர் ஒரு செய்யுள் செய்ததாகவும் கேட்கப்படு கின்றது. அந்தப் பாட்டு வருமாறு :

"கற்குங் கவிவல்ல அந்தணர் கோனபிகாளிக்கு யாம்
விற்கும் பரிசன மாகிவிட்டோம் வடவேங்கடமும்
பொற்குன் றமும்புகழ்க் கங்காநதியும் பொதியமும்போல்
நெற்குன் றமுநம் மரபும் எந்நாளு நிலைநிற்கவே."

ஊனுக்கு வாராதிருப்பாய்
விருப்பாகி உயர்வானிலே
வீணுக்கு நின்னுக மெலிகின்ற
தெவ்வாறு வெண்டிங்களே."

இரட்டையர்கள் பாடிய ஏகாம்பர நாதருலாவில் குறிக்கப்பட்ட திருமல்லிநாதன் உயர்சம்புபதி என்பவன் சகாப்தம் 1331-முதல் 1383-வரை ஆண்ட இராசநாராயண சம்பு என்பவனுவன் என்று சாசனக்காரர்கள் கருதுவ தால், அக்காலமே இரட்டையர்கள் வரபதி ஆட்கொண் டானைக் குறிப்பதால், அவனைக் குறிக்கும் வில்லிப்புத்தூர ரும் இரட்டையர் காலத்தவராவர். அருணகிரிநாதர் சோமநாதன் என்ற மடாதிபதி ஒருவரைத் தமது திருப் புகழில் புகழ்ந்துள்ளார். அவருக்குச் சகாப்தம் 1370-ல் நன்கொடை யளிக்கப்பட்டதாக திருவண்ணுமலைக் கடுத்த புத்தூர்ச் சாசனமொன்றில் குறிக்கப்பட்டுள்ளது.

காளிமுத்துப் புலவர் (1422-1482) பராக்கிரமபாண் டியனைப் பாடியிருத்தலால், அவர் அப்பாண்டியன் காலத் தவராவர். அவனைப் பாடிய பாட்டு வருமாறு:—

"கடந்தூங்கு வேழப் பிடர்க்கே வரக்கண்டு கண்கள்முத்துத்
தடந்தூங்க வாடுங் கிளிக்கென்செய் வேன்மணி வாய்திறக்க
விடந்தூங்கு பாம்பின் படத்தின் மிசைதிமி தித்தியெனப்
படந்தூங்க ஆடும் புயலே பராக்ரம பாண்டியனே."

அருணகிரிநாதர்

இவர் காலத்திலே சந்தவிருத்தப் பெருங்கடலாகிய திருப்புகழ் பதினாறாயிரம் பாடிய அருணகிரிநாதர் திகழ்ந்தனர். இவர் ஒரு செட்டியார்க்குப் பரத்தைமாதிடம் பிறந்தவரென்ப. முருகப்பெருமான் திருவருள் பெற்றுக் கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம், உட்கூற்று வண்ணம் என்னும் பிற நூல்களையும் இவரியற்றினர். இவர் கந்தரந்தாதி பாடி வில்லிபுத்தூராரை வென்றனரென்ப; சம்பந்தாண்டானென்பானை உபாசனையில் வென்றவர். அவன் தான் உபாசிக்குந் தேவியை வரவழைக்க முடியவில்லை. இவர் முருகப்பிரானை யாவர்க்குங் காட்சியருளச் செய்தனர். இவர்கள் காலத்திலாண்ட மன்னன் பிரபுடதேவராசன் என்பான். அவன் கருநட வேந்தன் போலும். அருணகிரியார் பாடிய பெருநூலாகிய திருப்புகழிலே இன்பக்கலையினை யெடுத்து விதந்து அதன் றீமையிற் றப்பிக் கடவுணெறி தலைப்படவேண்டுமென்று அளவற்ற பாடல்களில் வற்புறுத்தினர். இவர் இளமையிற் கழிபெருங் காமுகராயிருந்து, பின்னர் முற்செய் பெருந்தவத்தாற் குமரக்கடவுளின் திருவருள் தலைக்கூடினர். இவர் அருள்பெற்றவரென்பதைத் தாயுமானார் 'கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தையருணகிரி' என்றமையாலறிக. இவர் பாடிய திருப்புகழ்ச் சந்த விருத்தங்களில் இரண்டொன்று காட்டுகிறோம்.

"சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சகடசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே

கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே."

"ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டு
மாதியரு ணசலம மர்ந்தபெரு மாளே"

வில்லிபுத்தூராழ்வார்

அருணகிரிநாதருடன் வாதாடினவர் திருமுனைப்பாடி நாட்டிற் சனியூரிற் பிறந்து, பெரியாழ்வார் திருநாமமிடப் பெற்ற சீவில்லிபுத்தூரார் என்னும் வைணவ அந்தணராவர். அவர் மெய்ப்புலமை யில்லாரோடு சொற்போர் புரிந்து தோற்றவர்களது காதைக் குறும்பியளவாக் குடைந்து தோண்டி வெட்டினரென்னும் வரலாறு கேட்கப்படுகின்றது. அருணகிரிநாதரது கந்தரந்தாதிக்கு அவர் தட்டின்றி உரை கூறிவந்தபோது, அதன் 54-ம் கவியாகிய 'திதத்தத்த' என்னும் யமகப்பாட்டிற்குப் பொருள் கூறச் சற்றுத் திகைத்தவுடன், அது தோல்வித்தானமாதலறிந்து பின்னிட்டோடினரென்ப. இவர் அருணகிரிநாதர்

கட்டளைக் கிணங்கியே சிவபிரானை யிகழாது 'பிள்ளையார் வணக்க' முதலியன கூறிப் பாரதநூல் இனிது செய்து முடித்தனர். பாரதத்தைப் பிள்ளையார் மேருவில் எழுதினா ரென்ற கதையால், அக் கடவுள்வணக்கம் ஏற்புடைக் கடவுள்வணக்க மென்பாரு முளர். திருவக்கபாகையி லாண்ட கொங்கர்குல மன்னனாகிய வரபதியாட்கொண் டான் வேண்ட இவர் பாரதம் பாடினா ரென்ப. இவர் தம் தம்பியது தாயபாகத்தைத் தாமே எடுத்துக்கொண்ட மையால், இவர்க்கு நல்லறிவூட்டுங் கருத்தோடு மன்னன் இவரைப் பாரதம் பாடுவித்தானென்னுங் கதை பொருத்த மாய்த் தோன்றவில்லை. இவர் கொங்கர்கோனது வண் மையைப் பாரதத்துட் சில விடங்களிற் சிறப்பித்துள் ளார்.

"கோவல்சூழ் பெண்ணை நாடான் கொங்கர்கோன் பாவை வேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை யென்ன
மேவல ரெமரென் றுமல் வெங்களந் தன்னி னின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனக மாரி."

இவர்தான் வடமொழிச் சந்தங்களையும் 'தத்திதாந் தம்' 'அவ்வியயம்' முதலிய சொல்வகைகளையு மிகுதியாகச் சிதைத்துத் தமிழ்ப்பெருங் காப்பியத்தில் வழங்கினவர். சந்தச்செய்யுள் செய்வதில் வல்லவர். இதனாலும் இவர் அருணகிரிநாதர் காலத்தவரென்று கருதலாம். இவர் நூற்குப் பாயிரஞ் செய்தவர் இவர் மகனாராய வரந் தருவார். வில்லிபுத்தூரார் சிவபரத்துவங் காட்டி இயற் றிய செய்யுள் ஒன்று வருமாறு:—

ஓரேனந் தனைத்தேட வோளித்தருளு மிருபாதத்
தொருவ னந்தப்
போரேனந் தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்
புனங்க ளெல்லாஞ்

சீரேனல் விளேகிரிக்குத் தேவதையாங் குழவியையுஞ்
செங்கை யேந்திப்
பாரேனே யுலகனைத்தும் பணிவுடனே புகழ்ந்திடத்தன்
பதியின் வந்தாள்.

அதிகாரம் உ௰

பதினாறும் நூற்றாண்டு

தத்துவப் பிரகாசர் என்னும் புலவர் 16-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'தத்துவப் பிரகாசம்' என்ற நூல் இயற்றினார்.

அரிதாசர் — (1507—1530) அரிதாசர் என்னும் வைணவப் புலவர் இரண்டாயிரம் பாடல்களில் 'இருசமய விளக்கம்' என்னும் தத்துவநூ லெழுதி, அதன்கண் சைவ, சுமார்த்த, வைணவ சமயங்களைப்பற்றித் தாமறிந்ததை விரித்துரைத்தார்.

பாண்டி நாட்டிலுள்ள நல்லூரில் பொற்கொல்லர் மரபிற் பிறந்த வீர கவிராய ரென்பார் கி. பி. 1524-ல் அரிச்சந்திர புராணம் பாடியுள்ளார்.

"பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தனம் இனிநமக் குளதென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"

என்பது அரிச்சந்திர புராணத்தில் வரும் ஓர் அழகிய செய்யுள்.

அருளாள தாசர் என்பவர் நெல்லி நகரிற் பிறந்து கி. பி. 1543-ல் பாகவதம் இயற்றினார்.

குருகைப் பெருமாள் கவிராயர்: திருநெல்வேலியைச் சேர்ந்த ஆழ்வார் திருநகரியில் திகழ்ந்த திருக்குருகைப்

பெருமாள் கவிராயர் என்பார் மாறனலங்காரம் என்னும் பெரியதோர் அணிநூ லியற்றினர். (கி. பி. 1548—1552). 'மாறன் கிளவிமாலை' என்னும் சிறு காப்பியமும் இவர் இயற்றினர் என்ப. இக்காலத் திறுதியில் திருநெல்வேலிச் சில்லா செங்கோட்டையில் திகழ்ந்த கவிராச பண்டிதர் என்பார் சங்கராசாரியார் வடமொழியிலியற்றிய சவுந் தரியலகரியைத் தமிழில் மொழிபெயர்த்தனர்.

மறைஞான சம்பந்தர் (கி. பி. 1555) சிதம்பரத்தி லிருந்த துறவியாவர். ஆகமநூற் பயிற்சி சான்றவர். அவர் சிவதருமோத்திரம், சைவசமயநெறி முதலிய சைவநூல்கள் இயற்றியுள்ளார்.

அனதாரியப்பர் (கி. பி. 1564) என்னும் தொண்டை நாட்டு வாயற்பதியூரில் திகழ்ந்த பெரும்புலவர் சுந்தர பாண்டிய மென்னும் மதுரை மான்மியத்தைத் திருந்த வந்தவன் என்னும் வள்ளல் வேண்டுகோளால் தமிழில் செய்தனர் என்ப.

இந்நூற்றாண்டிலேயே செவ்வைச்சூடுவ ரென்னும் வேம்பத்தூர் வேதியப் புலவர் விண்டு பாகவதத்தை இனிய செந்தமிழ்ப்பாவில் இயற்றினர்.

நிரம்ப அழகிய தேசிகர் என்பார் சிவஞான சித்தி யார் சுபக்கத்திற்கோர் உரையியற்றியுள்ளார். திருவருட் பயனுக்கும் அவர் உரைகண்டனர். வேதாரணியத்தில் சைவவேளாளர் குலத்தில் சைவாசிரியர் மரபில் பிறந்த வர். இவர் பாடிய பெருங்காப்பியம் சேதுபுராணமாகும். இலக்கண நயங்களைப் பாட்டில் அமைத்துக்காட்டுவதில் மிக்க திறமை வாய்ந்தவர். 'செல்வமுண்டாக்கும்' என்னும் கருத்தை,

"வெறுங்கையு ரென்னும் சொல்லின்
மென்மையை வன்மையாக்கும்"

என்பதால் தெளிவித்தனர். 'வெறுங்கை' என்பது 'வெறுக்கை' என்ற விடத்துச் செல்வமென்று பொருள் படுதல் காண்க.

பரஞ்சோதிமுனிவு ரென்பார் திருமறைகாட்டில் சைவ வேளாள ஆசிரிய மரபில் பிறந்தவர். இவர் நிரம்ப அழகிய தேசிகரோடு உடன் கல்விபயின்றதாக ஒரு சரித்திரம் கேட்கப்படுகின்றது. அங்ஙனமாயின் இவர் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில் திகழ்ந்தவராவர். இவர் வடமொழிக் காந்தத்தின் ஈசசங்கிதையில் கூறப் பட்ட திருவாலவாய் மான்மியத்தைத் தமிழில் செய்வதாகத் தமது நூற்பாயிரத்துட் செப்புகின்றார். இவருடைய திருவிளையாடற் புராணம் சொன்னடையிலும் அன்பு விளைக்கும் தன்மையிலும் சுந்தரபாண்டியம், வேம்பத் தூரர் திருவிளையாடல் முதலிய பிற கூடன்மான்மியங் களை வென்று மேம்பட்ட தென்னலாம். பெருங்காப்பிய நயங்களும் இதன்கண்ணேயே சிறந்துள்ளன. அளவிலும் இது பெரியதாகும். இந் நூலாசிரியர் சைவசித்தாந்த உணர்ச்சி மிக்கவர் என்பது இதன்கண் உள்ள பாட்டுக் களால் நன்கு விளங்கும்.

"பூதங்களல்ல பொறியல்ல வேறு
புலனல்ல உள்ள மதியின்
பேதங்களல்ல இவையன்றி நின்ற
பிறிதல்ல என்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச
வெளியென்ப கூடல் மறுகில்
பாதங்கள் நோவ வளையிந்த நதி
பகர்வாரை ஆயு மவரே."

ஆனால், இவர் ஆரியக் கோட்பாடுடையவர். வரலாற்று ராய்ச்சிக்கு இவர் நூல் மிகப் பயன்படுவதில்லை. சிதம்

பரப் பாட்டியல் பாடிய பரஞ்சோதியார் என்பவர் இவரின் வேறுவர்.

அதிவீரராம பாண்டியர் (கி. பி. 1565) நிரம்ப அழகிய ருடைய மாணுக்கர் ஆவர். திருவாரூர்ப் புராண மியற்றிய சம்பந்த முனிவரும் நிரம்ப அழகியரின் மாணுக்கர். நிரம்ப அழகியரின் ஆசிரியராகிய இராமநாத முனிவர் கி. பி. 1598-ல் இராமேசுவரத்தில் ஆடல் மண்டபம் கட்டினார். இவருடைய மற்ருெரு மாணுக்கர் ஞானக்கூத்தர். இவர் பஞ்சநதிப் புராண மியற்றியுள்ளார்.

அதிவீரராம பாண்டிய ரென்னும் மன்னர் (தமது நைடதத்தால் பெரும்புகழ் படைத்தனர். 'நைடதம் புலவர்க் கௌடதம்' என்றது காண்க.) இவர் கொற்கையில் அரசாண்டவர் என்ப. தென்காசியில் இவர் சிறப்புடன் வீற்றிருந்து அத் திருக்கோயிலைக் கட்டினார் என்று தெரிகிறது. பாண்டிய மன்னருள் இறுதியாகப் புலமை பூண்டவர் இவரே. (இவர் கூர்மபுராணம், காசிக்காண்டம், இலிங்க புராணம், மாகபுராணம் என்னு மதுர காவியங்களையு மியற்றினர். இன்னும் இவர் கரிவலம்வந்தநல்லூர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் சிவபிரான்மீது கருவைப் பதிற்றுப் பத்தாந்தி இயற்றினர். இது 'குட்டித் திருவாசகம்' என்று புகழப்படுகிறது) இவர் தமையன் வரதுங்க பாண்டியனும் கல்வி மிக்கவரே. அவர் பிரமோத்தர காண்டம், கொக்கோகம் என்னும் நூல்களை இயற்றினர் என்ப. வரதுங்க பாண்டியனை அதிவீரபாண்டியனுடைய தம்பி என்பது முண்டு.

வரதுங்கராம பாண்டியன் மனைவி நிறைந்த கல்வியுடையவர். இவர் பிரிவாற்றுமையைக் குறித்துப் பாடிய பாட்டுப் பின்வருவது.

"செப்பாரும் முகிழ்முலையார் எல்லாரும்
கணவருடன் சேர்ந்து வாழ
ஒப்பாரும் இல்லாளென் கணவனுடன்
யான்கூடி உற வாடாமல்
வெப்பாலும் மிருகாமத் துயராலும்
நாடோறும் மெலிந்து வாடி
இப்பாடு படவென்றே இறைவனென்
தலையோட்டில் எழுதி னானே."

இவரே நைடதத்தை 'நாய் விரைந்தோடி இளைத்தாற் போன்ற தன்மையுடைய' தென்று கூறி, அது சென்று தேய்ந் திறுத லென்னும் குற்றமுடைத்தென்று குறிப் பித்தார் என்ப. 16-ம் நூற்றாண்டிலே சைவ சித்தாந்த உரையாசிரியர்கள் பலர் திகழ்ந்தனர். சோழநாட்டிலுள்ள சூரியனார் கோயில் ஆதீனத் தலைவராய் விளங்கிய சிவாக் கிர யோகிகள் என்பார் சிவஞான சித்தியார் சுபக்கத் திற்கு ஒரு நல்லுரை இயற்றினர். இவர் வடமொழிச் சிவ ஞான போதத்திற்குப் பன்னீராயிரம் கிரந்தமுடைய ஒரு பேருரை இயற்றினார். இவர்தம் பிறநூல்கள் சைவ பரி பாஷை, தத்துவதரிசனம், சித்தாந்த தீபிகை, வேதாந்த தீபிகை, பஞ்சராத்திர மதபேடிகை முதலியன. இவர் கிருட்டின தேவராயர் காலத்தவர்.

இலங்கையினின்றும் சோழநாட்டிற்கு வந்த ஞானப் பிரகாசர் என்பார் சிவஞானசித்தி சுபக்கத்திற்கு ஓர் உரை இயற்றினர். இவர் கார்காத்த வேளாள மரபினர். வட நாடு சென்று வடமொழி நன்கு பயின்றவர். திருவண்ணா மலைச் சைவ ஆதீனத்தில் இவர் துறவு பூண்டு பல நூல்க ளியற்றினர். இவர் ஒரு புதையல் கண்டெடுத்து மடமுங் குளமும் கட்டினர் என்ப. இவர் பௌட்கர ஆகமத்திற்கு விரிவுரை இயற்றினர் என்ப. இவர் காஞ்சிபுரத்தில் சைவ முதலிமார்க்கு முதன்முதல் ஆதீனத் தலைவராய் விளங்

கிய ஞானப்பிரகாசரின் வேறானவர். காஞ்சிபுரம் ஞானப்பிரகாசர் மடம் கி. பி. 1511-ல் நிலைநாட்டப்பட்டது.

திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் என்பார் சிவஞான சித்தியார் பரபக்கத்துக்கு உரை வகுத்தனர். இவர் திருவொற்றியூர்ப் புராணமும் இயற்றினர். இவரும், திருவுத்தரகோசமங்கைப் புராண மியற்றிய மாசிலாமணிச் சம்பந்தரும் கமல ஞானப்பிரகாசருடைய மாணாக்கராவர். இவர் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர். திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் சங்கற்ப நிராகரணத்திற்கும் உரை எழுதியுள்ளார். சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு உரை இயற்றிய மறைஞான தேசிகர் கண்கட்டி மறைஞானசம்பந்தருடைய சீடர்.

குகை நமச்சிவாயர் என்பார் திருவண்ணாமலையில் ஒரு குகையில் யோகம் இயற்றிக்கொண்டிருந்த ஒரு சித்தர். அவர் செய்த நூல் அருணகிரி அந்தாதி. அவருடைய மாணாக்கர் குரு நமச்சிவாயர் என்பவர். அவர் செய்த நூல்கள் சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா, பரம ரகசிய மாலை என்பன. அவர் சுமார் கி. பி. 1592-ல் வாழ்ந்தவர் என்பது தமிழ்நாவலர் சரிதையால் விளங்குகின்றது.

இரேவண சித்தர் (கி. பி. 1594) என்பார் பேரளத்தில் பிறந்து சிதம்பரத்திலிருந்த வேளாளப் புலவர். இவர் சிவஞான தீபம் என்னும் ஞான நூலும், பட்டீச்சுரப் புராணமும், அகராதி நிகண்டும் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இயற்றினர்.

ஆறுமுகசுவாமிக ளென்பார் குகை நமச்சிவாயரின் மாணாக்கர். இவர் நிட்டானுபூதி என்ற நூலியற்றினர். இது மொழிபெயர்ப் பென்ப. இதற்கு முத்துக்கிருட்டின பிரமம் உரை வகுத்தார்.

அதிகாரம் உக

பதினேழாம் நூற்றாண்டு

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே (1636-1659) திருமலைநாயக்கர் மதுரையில் ஆண்டபோது மணவாளதாசர் என்னும் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும், சைவ எல்லப்ப நாவலரும், குமர குருபர சுவாமிகளும் தத்தம் சமயங்களை நிறுவுதலில் தலைநின்றனர்.

பிள்ளைப்பெருமாளையங்கார் என்பவர் சோழநாட்டு வைணவப் பிராமணர்; திருவரங்கத்தில் வாழ்ந்தவர். இவர் சிலேடை, யமகம், திரிபு முதலியன அமைத்துப் பாடுவதில் வல்லவர். இவர் திருவரங்கக் கலம்பகத்தில் செய்த சிவநிந்தனையை மறுத்து, எல்லப்ப நாவலர் மனைவி அருணைக் கலம்பகத்திலோர் பாட்டுப் பாடினர் என்ப.

அப்பாட்டு வருமாறு :—

“கருடனோடை மச்சமாமை கமல மோட முற்கரங்
காட்டிலோட முன்றிராமர் கண்டமட்டி லோடவே
மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே
வஞ்சமுள்ள கண்ணனோடை மாரனீறச் சேனனும்
இருளினோடை முண்டகத்தன் ஏங்கியோட வென்றவர்
நீறுருதங் குயிரளித்த ஏந்தன் யாவன் வேதமே
அருளுமந்த முதல்வன் யாவன் அருணைகண்டு வாழ்மினோ
ஆரநாதி மூலமென்ப தறிகிலாத மாக்களே”

ஐயங்கார் ஒரு பசுவினால் முட்டப்பெற்று முடிவுற்றார். இவரியற்றிய சிறு காப்பியங்கள் அட்டப்பிரபந்த மெனப்படும். அவை அழகரந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கத் தூசற்றிரு நாமம், திருவேங்கடத் தந்தாதி, திருவேங்கட மாலை, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி யென்பன.

சைவ எல்லப்ப நாவலர் தொண்டைநாட்டிலே தாழை நகரில் பிறந்து வாழ்ந்தவர். இவர் பெருமை அருணாசலப்புராணத்தினாலும், அருணைக் கலம்பகத்தாலும் இனிது விளங்கும். இவர் கலம்பகத்தில் சைவத்தின் ஒப்புயர்வின்மையை எடுத்துமொழிந்தார்.

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம் இல்லெனும் நான்மறைச்
செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவார மும்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாள்எம்
உயிர்த்துணையே."

சைவத்தை நிலைநாட்டினமையால் இவர் 'சைவ' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டார். இவரும் சிலேடையில் வல்லவர்.

"ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ அம்மானை
அன்னமறி யாரெடுப்ப தையமோ அம்மானை"

என்ற இடத்தில் அன்னம், சோறு, அன்னப்பறவை என்றிரு பொருள்படும். (ஐயம், பிச்சை, சந்தேகம்.) இவர் செவ்வந்திப்புராணம், திருவெண்காட்டுப் புராணம், திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம் முதலியன பாடினவர். சௌந்தரியலகரிக்கு உரை கண்டனர்.

இவர் காவிரிப்பூம் பட்டினத்துக்கருகிலுள்ள இராதாநல்லூரில் பிறந்தவர் என்பாரும் உளர்; தருமபுர ஆதீனத்தில் கல்விபயின்றவர் என்ப.

இவரின் வேறான எல்லபூபதி என்பார் தாழை நகரில் பிறந்தவர் என்றும், அவரே சவுந்தரியலகரிக்கு ஆசிரியர் என்றும், அவரே திருவாரூர்க் கோவையும், அருணை

யந்தாதியும், அருணாசலப் புராணமும் பாடினவர் என்றும் கூறுவர். அவர் காலம் சுமார் கி. பி. 1572 என்றும் கூறுவர்.

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே இமய முதல் குமரிவரை, திருமலை நாயக்கர் காலத்தில் சைவத்தை நிலைநாட்டின பெருந்தகையார் குமர குருபரராவர். திருநெல்வேலிச் சில்லா சீ வைகுண்டத்தில் சைவவேளாள மரபிற் பிறந்து, ஐந்தாண்டுவரை ஊமையாயிருந்து, திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளால் பேசுந் திறம்பெற்று, ஐந்தாவதாண்டிலேயே அப்பெருமான்மீது, 'கந்தர் கலிவெண்பா'ப் பாடியருளினார். முருகப்பெருமான் கனவில் தோன்றி அவரைக் 'குமர குருபர' என்றழைத்தமையால் அவர் அப்பெயர் பெற்றனர். அவர் தம்மூரிலுள்ள கயிலாயநாதர் மீது 'கயிலைக் கலம்பகம்' என்னுமோர் நூலியற்றினர். பின் தம் பெற்றோரிடம் விடைபெற்றுக்கொண்டு அவர் மதுரைசென்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடித் திருமலைநாயக்கர் முன் அரங்கேற்றும்போது, அங்கயற்கண்ணம்மை பூசாரியின் குழந்தை வடிவாய்த் தோன்றி, அரசன் கழுத்திலிருந்த முத்தாரத்தை எடுத்து அடிகள் கழுத்தில் அணிந்திட்டு மறைந்தருளினமை கண்டு யாவரும் வியப்புற்றனர். அரசன் அடிகட்குப் பொன்முழுக்குச் சாத்தி விருதுகள் பல அளித்தனன். பின் அடிகள் திருவாலவாய் அண்ணல் மீது மதுரைக்கலம்பகம் பாடினார். அரசரது வேண்டுகோட்கிணங்கி, அறவுரைகள் பலவும் இனிது தொகுத்து, அவர் 'நீதிநெறி விளக்கம்' என்னுமோர் நூல் இயற்றினர்.

அடிகள் திருசிரபுரஞ் சென்று பிள்ளைப்பெருமாளையங்காரை வாதில் வென்ற செய்தி கேட்கப்படுகின்றது. பின்னர் அவர் திருவாரூரை அடைந்து, 'திருவாரூர் நான்

மணிமாலை' பாடியருளினர். அடிகள் அப்பால் தருமபுர மடத்தை யடைந்தார். அங்கு வீற்றிருந்த மாசிலாமணி தேசிகர், பெரிய புராணத்திலுள்ள 'ஐந்து பேரறிவும்' என்ற திருப்பாட்டிற்கு அவரை அனுபவப்பொருள் கேட்டகாலை, விடைகூறத் தடைப்பட்டவுடன், அடிகள் அத்தேசிகர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, அவர் கட்டளைப்படி தில்லைக்குப் புறப்பட்டு, வழியிலே புள்ளிருக்கும் வேளூராகிய வைத்தீசுரன் கோயிலை அடைந்து முருகப்பெருமான் மீது 'முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்' பாடிப் பணிந்தனர். அவர் சிதம்பரஞ் சென்று 'சிதம்பர மும்மணிக்கோவை' பாடினர். பின்னர் அடிகள் அடியார் வேண்டுகோட்கிணங்கிப் பல்வகை யாப்பிற்கும் காட்டுக ளடங்கிய 'செய்யுட் கோவை' என்னும் அழகிய நூல் இயற்றி அருளினர். சிவகாமி அம்பிகை மீது 'இரட்டைமணி மாலையும்' அவர் பாடினர். பின்னர்த் தருமபுரத்திற்கு மீண்டு, அவர் தேசிக மூர்த்திகளால் ஆட்கொள்ளப்பட்டு 'பண்டார மும்மணிக்கோவை' என்னுஞ் சைவசித்தாந்தச் சிறுகாப்பிய மியற்றினர். பின் அவர் கட்டளைப்படித் தம் பொருளைக்கொண்டு அறஞ் செய்வான் காசிக்குப் போய் உலக முதல்வனை வணங்கிக் 'காசிக் கலம்பகம்' பாடியருளினர். அங்கிருந்த மகமதிய அரசன்பாற் சென்று 'சகல கலா வல்லிமாலை' பாடிக் கலைமகளருளால் 'இந்துத்தானி' மொழி வரப்பெற்று, சிங்க முதுகின்மேற் கோடல், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோலைத் தாங்குதல் முதலிய வியத்தகு செயல்கள் பல இயற்றி, அவர் அரசனால் பெரிது மதிக்கப்பெற்றுக் காசியில் கேதாரநாதர் முதலிய திருக்கோயில்களும், குமாரசாமி முதலிய மடங்களும் கட்டி அறங்கள் பல புரிந்தனர். காசிமடத்தின் கிளைமடமாகவே தஞ்சாவூர்ச் சில்லாவிலுள்ள திருப்பனந்தாள் மடம் ஆதியில் ஏற்பட்டது.

இவ ரியற்றிய பண்டார மும்மணிக்கோவையின் ஒரு பகுதி வருமாறு.

“ திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப்புரி வதுவே
ஆங்கது புரிதற் கரிதெனி னிங்கொரு
சனனம் யான் வேண்டுவ தினிதரு ளெனக்கே

அதுவே,
ஐந்தரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கு
மிந்திர னாகி வாழ்ந்திருப்பதோ வன்றே
மலரோ னாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
அடலரா வணையி லறிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே.

அவைதாம்,
ஆரா வின்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே
அன்னவை யொழியமற் றென்னைகொல் பிறவெனில்
விழுத்தகு கல்வியும் ஒழுக்கமும் இலராய்ப்
பழிப்புள ராயினு மாக வழுத்தி நின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து திருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாகி நின்
னருளையு மயரா தவதரிப் பதுவே.”

இதன் இன்னொரு பகுதி வருமாறு :—

“ மாசி லாமணி ஞானசம் பந்த
வாக்கு மனனும் யாக்கையு மொன்றுய்ச்
சொற்றரு கரண மற்றிவை மூன்று
நின் புகழ் நவிற்றியு நினைத்து நின்றுணைத்தா
ளன்புட னிறைஞ்சியு மின்பமுற் றனவா
லவகர ணங்களே யல்லமற் றம்ம
சிவ கரணங்களாய்த் திரிந்தன வன்றே

அதனுல்,
திரிகர ணங்களென் றுரைசெயு மப்பெய
ரொரு பொருட் கிளவியெல் லோர்க்கு
மிருபொருட் கிளவியா யிருந்ததின் றெனக்கே.''

சீகாழி இசைவேளாண் குலத்திற் பிறந்த முத்துத் தாண்டவராயர் பதம் 17-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்டது.

அமிர்தகவிராயர்: (1637-72) பதினேழாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பாண்டிநாட்டுப் பொன்னுங்காலில் வேளாள குல திலகராய்த் தோன்றி, இராமநாதபுரத் தலைவராய இரகுநாத சேதுபதி அவையினைப் பொலிவுறச் செய்தனர். சேதுபதி பல புலவர்களை நோக்கி, அகப்பொருள் துறை ஒவ்வொன்றிற்கும் பல பாடல்கள் பாடக்கூடுமோ என்ன, அமுத கவி, 'நான் நூறு பாடுவேன்' என்றனர். பிறர் 'இவர் நான்கு நூறு பாடுகிறேன் என்கிருர்' என்று அழுக்காற்றினுல் இழித்துப் பேச, அவர் அத்துணைப் பாடல்களைப் பாடத் துணிந்து, 'நாணிக் கண்புதைத்தல்' ஒரு துறைக்கே நானூறு பாட்டுப் பாடி 'ஒரு துறைக் கோவை' என்னும் பிரபந்தத்தை முடித்ததும், புலவரும் மன்னரும் அவர் திறமையை வியந்தனர். அதில் ஓர் அருமையான பாடல் வருமாறு :—

"அங்கங் கலிங்க மலையாளம் ஈழமனைத் தும்வென்ற
சிங்க விசய சயரகு நாதன் சிலம்பிற் பொன்னே
சங்கிலி யாரையுங் கண்டேன் பரவை தனையுங் கண்டால்
மங்கல சுந்தர னென்றெனை யேதொழு மண்டலமே''.

சர்க்கரைப் புலவர் (1645-70) என்னும் சைவப் புலவர் இராமநாதபுரம் கடார ஊரினர். இவர்

திருச்செந்தூர்க் கோவை பாடினர். இரண்டாவது சர்க்கரைப் புலவர் மிழலைச் சதகம் பாடியுள்ளார். அவர் பரம்பரையில் வந்த இராமசாமிப் புலவர் என்பார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தி லொரு தமிழ் ஆசிரியராய்த் திகழ்ந்தவர்.

சவ்வாதுப்புலவ ரென்ற மகமதியர் முகையதீன் 'ஆண்டவன் பிள்ளைத்தமிழ்' என்று ஒரு காப்பியஞ் செய்தவர். இவர் மைத்துனர் ஒரு புலவர் அரேபியாவில் மெடினா நகரைச் சிறப்பித்து ஓர் அந்தாதி பாடியுள்ளார். இப் புலவர் சர்க்கரைப் புலவர் காலத்தவர்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் (1647) என்பார் பாண்டிநாட்டிலே மிதிலைப்பட்டியார். இவர் தளவாய் இரகுநாத சேதுபதி செய்த திருப்பணிகளையும், கல்வி, செல்வம் பிறவற்றையும் விதந்தோதித் 'தளசிங்கமாலை' என்னும் அழகிய சிறுகாப்பியத்தைக் கட்டளைக் கலித்துறையில் பாடினவர்.

"ஞாயிறு போய்விழத் திங்கள்வந் தெய்திட நண்ணியசெவ்
வாயனல் வீசப் புதனம்பு தூவநல் வியாழன் வர
வேயுறு வெள்ளி வளை சோர நானுனை மேவுதற்குத்
தாய்சனி யாயின ளேரகு நாத தளசிங்கமே".

அந்தகக் கவி வீரராகவ முதலியார் (1654) என்பவர் 17-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தொண்டைமண்டலத்திற் பூதூரில் பிறந்தவர். இவர் குருடராயிருந்தமையால் "ஏடாயிரங்கோடி எழுதாது தன்மனத் தெழுதிப் படித்த விரகர்". இவர் இலங்கைசென்று பரராச சேகர மன்னர்பால் யானை முதலிய சிறந்த பரிசில் பெற்றவர். இவர் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருவாரூருலா, கழுக்குன்ற மாலை, சந்திரவாணன் கோவை, கழுக்குன்றப் புராணம் முதலியன இயற்றியவர்.

பரராச மன்னரிடம் பொற்பந்தம் பெற்றபோது இவர் பாடியது,

" பொங்குமிடி யின்பந்தம் போயதே என் கவிதைக்
கெங்கும் விருதுபந்தம் ஏற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது".

மன்னர் அம்பும் வில்லும் கையிற் கொண்டு தன் கோலம் எவ்வாறிருந்த தென்று கேட்டபோது இவர் பாடியது,

" வாழு மிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ இங்கில்லை—ஆழி
அலையடைந்த செங்கை அபிராமா இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு."

பரராச சேகர மன்னனின் மருகனாகிய அரச கேசரி யென்பார் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்து வளர்ந்து, ஆழ்வார் திருநகரியிலிருந்த ஒரு கவிராயரிடம் தமிழ் கற்றுத் தேர்ந்து, காளிதாசரின் இரகுவம்சத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர். திலீபமன்னன் காமதேனுவை வணங்கி, இரகுவைப் பெற்றதையும், இரகு அயனையும், அயன் தசரதனையும் பெற்றதையும், தசரதன் இராமனையும், இராமன் குசனையும் பெற்றதையும் கூறுவது; அந்நூல் அரிய சொன்னடை உடையது. இவ்வாசிரியரது சங்கநூற் புலமையும் இதன்கண் வெளியாகின்றது. இதில் தமிழ்ச்சொற்களே மிக்குப் பயின்றுவந்தமை காண்க.

" புன்கட் குதவா வேட்டையினவா வெறும் பொய்யேற்
றின்கட் பேரவா மாதராரவா விந்த விறை வன்
தன்கட் பட்டவா தழைத்தவா விலை யெனில் தவறில்
என்கட் பட்டவா வெய்திடு மனத்திடை இவற்கே."

இது நடுக்காலக் கம்பர் தமிழை ஒப்பதென்ப. இலங்கையில் பரராச சேகரனுக்குப்பின் அரசாண்டவன்

செகராச சேகரன் என்பான். இவன் தன் பெயரால் ஒரு மாலைநூல் தோற்றுவித்தான்; தமிழை வளர்த்தான்; தக்கிண கைலாச புராணம் என்னும் நூலையும் பாடினன்.

கற்பனைக் களஞ்சியம் என்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகள் (கி. பி. 1652) தொண்டைநாட்டில் துறைமங்கல மென்னுமூரில் வாழ்ந்தவர். இவர் தம்பியார் வேலைய சுவாமிகள், கருணைப்பிரகாசர் என்னு மிருவராவர். இவர் தகப்பனர் பூசைச்சாமியை இழந்தமையால் இலிங்க தாரணம் செய்துகொண்டு வீரசைவரானர். திருநெல்வேலியில் தருமபுர ஆதினத்திலிருந்த வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இவர் இலக்கணம் கற்றவர். விரும்பிய வண்ணம் கவிபாடவல்லவர். வெள்ளியம்பலத் தம்பிரானுக்கு எதிரியாயிருந்த புலவரோடு வாதாடித் திருச்செந்தூர் முருகர்மீது 'நிரோட்டக யமக அந்தாதி' என்னும் முப்பது பாட்டுப்பாடி அவரை இவர் வென்ருர். இதழ்கள் சேராமற் சொல்லும் மொழிகளையே அமைத்துப் பாடுவது இத்தகைய சிறுகாப்பியம். இவரது 'நால்வர் நான்மணிமாலை' சைவ சித்தாந்த சமயத் தலைவர்களது பெருமையை விளக்குவதில் இணையற்றது.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ,
வாதிசிர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே,
யாதோ சிறந்த தென்குவி ராயின்,
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவா சகமிங் கொருகா லோதில்
கருங்கன் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே."

நீதி நூல்களுள் நன்னெறி இயற்றியவர் இவரே. சீகாளத்திப் புராணத்தில் நடு இரண்டு சருக்கம் இவர் பாடினர். இவர் தம்பி கருணைப்பிரகாசர் சீகாளத்திச் சருக்கம்வரை பாடினர். வேலையதேசிகர் அதில் எஞ்சிய பன்னிரண்டு சருக்கமும் பாடினர். ஆக அப்புராணம் மூவரால் பாடப்பெற்றது.

கருணைப்பிரகாசர் சிவப்பிரகாசரைக் கூறுமிடத்து இறைமுதல் ஞமத்தோ டியைதரும் விளக்கப் பேரோன் என்றனர். இவ்வாறு பல இடங்களில் சிறப்புப் பெயர் களைப் பொதுச் சொற்றொடர்களால் விளக்குதல் இவர்க்கு வழக்கம். இவர், 'இட்டலிங்க வகவல்' என்னுஞ் சிறு நூலு மியற்றினர். சிவப்பிரகாச சுவாமிகள் திருக்கூவப் புராணம், கைத்தல மாலை, வெங்கைக் கோவை, சோண சைலமாலை முதலிய பலநூல் செய்தவர். இவரது வட மொழித்தேர்ச்சி தர்க்கபாடை மொழிபெயர்ப்பு முதலியவற்றால் விளங்கும். இவர் தமது வீரசைவ சமய சம்பந்தமாகப் 'பிரபுலிங்க லீலை' என்னும் பெருங் காப் பிய மியற்றினர். அது கற்பனை நயங்களும் சொற்பொரு ணயங்களும் பொதுளியுள்ளது. மேலும் இவர் 'ஏசு மத நிராகரணம்' என்னும் நூல் செய்து வீரமாமுனிவர் தமது கிறித்து சமயத்தைப் பரவவொட்டாது தடுத் தனர்.

சொக்கநாதப்புலவ ரென்பார் தொண்டைநாட் டினர். மதுரையில் அரங்க கிருட்டினப்ப நாயக்கரின் (கி. பி. 1653) அமைச்சராய்த் திகழ்ந்த திருவேங்கட நாதய்யரென்பார் காலத்தவர். இவர் பாடிய பாட்டு வருமாறு:

"வல்லப்பனம் மையப்பன் தருதிருவேங்
கடராம னெழிற்சீராமன்

வல்லக்கொண் டமனுடனே மாதைவேங்
    கடேசனைப்போல் வரிசை தந்தான்
செல்லத்தம் பியருடனே மாவையில்வாழ்
    கறுப்பண்ணன் தெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தான் அதுநமக்கோர்
    ஆயிரம்பொன் பரிசுதானே.

இப் புலவர் நகைச்சுவை யமைத்துப் பாடுதலில் சிறந்தவர்.

"செல்லாரும் பொழில்புடைசூழ் புலியூரம்
    பலவாண தேவா வும்மைக்
கல்லாலும் வில்லாலும் செருப்பாலும்
    பிரம்பாலும் கடிந்துசாடும்
எல்லாரும் நல்லவரென் றெண்ணியரு
    ளீந்தென்ன விகழ்ச்சியொன்றும்
சொல்லாமல் மலரால்விட் டெறிந்தவனைக்
    காய்ந்ததென்ன சொல்லுவீரே."

சோழநாட்டிலே மாதை என்னு மூரில் பிறந்து, மதுரையிலே அமைச்சராய்த் திகழ்ந்த திருவேங்கட நாதய்யர் என்பார் வைத்தியநாத நாவலரைப் பெரிதும் பேணி இலக்கணவிளக்கம் இயற்றுவித்தனர். பிரபோதச் சந்திரோதய மென்னும் வேதாந்த நூலை நாடகமாக இயற்றினவர் இவரே. வைத்தியநாத நாவலர் அதனைப் பாடினார் என்பாருமுளர். வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம் நன்னூலையும், பதினோராவது நூற்றாண்டுக்குப்பின் தோன்றிய பொருள், யாப்பு, அணி நூல்களையும் பின்பற்றி ஐந்திலக்கணத்தையும் விரித்துக்கூறும் பெருநூல். பிற்காலத்தார்க்குத் தொல்காப்பியம் போன்றிலங்கிய திதுவே. ஆசிரியர் சிவஞான யோகிகள் இந்நூற் குற்றங்களை 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்னும் நூலுள் மறுத்தனர். இவர்தம் பிற நூல்கள் திருவாரூர்ப் பன்மணிமாலை, நல்லூர்ப் புராணம், மயிலம்மை பிள்ளைத்

தமிழ் என்பன. படிக்காசுப் புலவர் முதலியவர்க்கு இவ ராசிரியர். யாழ்ப்பாணத்து வைத்தியநாத முனிவரின் இவர் வேறுவர். அவர் சிதம்பரத்தில் தங்கி 'வியாக்கிர பாத புராணம்' என்னும் நூல் செய்தவர்.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்களில் ஐந்தாவது பட்டத்திலுறைந்த மாசிலாமணி தேசிகர்பால் ஞான தீக்கையும், சங்காபிடேகமும் பெற்ற ஈசான தேசிகர் அல்லது சுவாமிநாத தேசிகர் திருநெல்வேலியில் மயி லேறும்பெருமாள் பிள்ளையிடம் தமிழ்க் கல்வியும், செப் பறைக் கனகசபாபதி சிவாசாரியரிடத்தே வடமொழிக் கலையும் பயின்றனர். இவரும் இவர் காலத்தில் ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்த சுப்பிரமணிய தீக்கிதரும், திருவா ரூரில் வதிந்த இலக்கணவிளக்க ஆசிரியராய வைத்திய நாத தேசிகரும் வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் ஒன்றென்ற கொள்கை யுடையவர்கள். சுவாமிநாத தேசி கர் இலக்கணக்கொத்து என்ற தமது நூலில், தமிழைச் சற்றிழித்துக் கூறினமையால், இவர் வரலாற்றுணர்ச்சி யில்லாமல் வடமொழிப்பற்று மிகையுமுடையரென்பது தெளியப்படும்.

> "ஐந்தெழுத் தாலொரு பாடையு முண்டென
> அறையவு நாணுவ ரறிவுடை யோரே"

என்று தமிழைக் கூறுமிடத்துப் பொதுவெழுத்துக்களை வடமொழிக்கே யுரிய எழுத்துக்கள் என்றது திரிபுணர்ச்சி யாலன்றோ? இவர் தொல்காப்பியம், திருவள்ளுவர், திருக்கோவையார் மூன்றிலுமே தமிழிற்சிறந்த கருத்துக் கள் காணப்படுமென்றும், இன்னும் தெரியாதன உள வாமாயின் வடமொழியிற் காண்க என்றுங் கூறியது, இவரது ஒருபாற் கோடிய பற்றினையுணர்த்தும். தசகாரிய மென்ற பண்டார சாத்திரத்தையும், சிவஞானபோதச்

சூர்ணிக் கொத்தையும் இவர் இயற்றினர் என்ப. இவர் சங்கர நமச்சிவாய புலவர் முதலியோர்க்குத் தமிழ் கற்பித்தவர்.

சுப்பிரமணிய தீக்கிதர் (கி. பி. 1665) என்னும் பிராமணர் 'பிரயோக விவேகம்' என்னுமோர் நூல் செய்து தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணமொன்று என்று காட்டுமுகத்தான் வடமொழிக் கேற்றங் கற்பிக்க முன் வந்தவர். இவர் கொள்கை ஆசிரியர் சிவஞான யோகிகளால் சூத்திர விருத்தியில் மறுக்கப்பட்டொழிந்தது.

வென்றிமாலைக் கவிராயர் (1654) திருச்செந்தூரார். காவை வடமலையப்ப பிள்ளையன் இவர் காலத்தவர். திருச்செந்தூர்ப் புராணம் செய்தவர் இவரே.

ஏகசந்தக்கிராகி என்பார் காவை வடமலையப்பபிள்ளையின்மீது 'வடமலை வெண்பா' என்னும் நூல் பாடினர்.

உமாறுப் புலவர் (கி. பி. 1665) என்னும் மகமதியப் புலவர் சீறாப்புராணம் பாடி சீதக்காதியின் மந்திரியாகிய அப்துல்காசி முன் அரங்கேற்றிப் பரிசு பெற்றனர். அது 12,000 பாட்டுடையது. இவர் அவுரங்கசீப்பின் காலத்தவர்.

கடிகைமுத்துப் புலவர் (1665) திருநெல்வேலிச் சில்லா எட்டையபுரம் குறுநில மன்னரின் அரண்மனைப் பாவலராய் விளங்கினர். சிலேடை, யமகம், திரிபு அமைத்துப் பாடுவதில் வல்லவர். இவர் வெங்கடேசுவர எட்டபூபதிமேல் பல தனிப்பாடல் பாடினர். இவர் பாடிய 'சமுத்திர விலாசம்' என்னும் நூல் 'கழிக்கரைப் புலம்பல்' என்னும் துறையொன்றின் மேலது. சிவகிரிச் செமீன்தார் மீது பாடிய திக்கு விசயமும் திருவிடைமருதூரந்தாதியும் இவருடைய பிற நூல்கள்.

கி. பி. 1678-ல் திருவாவடுதுறையில் இருந்த நமச்சிவாய தம்பிரான் என்பவர் இருபா விருபஃ தென்பதற்கு உரை வகுத்தனர். பாண்டிப் பெருமாள் என்பார் சிவஞான போதத்திற்கோர் உரை கண்டனர்.

ஆழ்வார் திருநகரிலிருந்த காரிரத்தினக் கவிராயரென்பவர் மாறனலங்கார உரையும், பரிமேலழகர் நுண்பொருண் மாலையும் பிற நூல்களும் இயற்றினர்.

படிக்காசுப் புலவர் தொண்டை மண்டலத்தில் களந்தையில் பிறந்த செங்குந்த மரபினர். இவர் காலம் 1686—1723 வரையாகும். இவர் இலக்கணவிளக்கமியற்றிய வைத்தியநாத நாவலர்க்கு மாணவர். இவர் சந்தப்பாட்டில் வல்லவரென்பது, 'பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாலொருவர் பகர்வொணுதே' என்பதனுல் தெளிவாம். தொண்டை மண்டல சதகம் பாடினவர் இவரே. இரகுநாத சேதுபதி காலத்தில் காயற்பட்டினத்திருந்த சீதக்காதி என்னும் முகமதிய வள்ளலை இவர் பாடிய தனிக்கவிகள் பல வுள்ளன.

"தேட்டாளன் காயற் றுரைசீதக் காதிசிறந்த வச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டிவைத்தான் தமிழ் நாவலரை
ஓட்டாண்டியாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
பொட்டானவனும் ஒளிந்தான் சமாதி குழிபுகுந்தே"

என்பது சீதக்காதி இறந்த பின் இவர் அவனைப் பாடிய பாட்டு. வேலூர்க்கலம்பக மென்பதும் இவர் பாடியதே. 'அடகெடுவாய் பல தொழிலும்' என்று தொடங்கும் கவியும் இவர் பாடியதென்ப.

திருக்குருகூர்ச் சிறிய ரத்தினக் கவிராயர் என்பவர் இரசை வடமலையப்ப பிள்ளையனைப் புகழ்ந்து 1693-ல் புலவராற்றுப்படையைப் பாடினர். மச்சபுராண மியற்றியவர் (கி. பி. 1707) இவ்வடமலையப்ப பிள்ளையனே ஆவர்.

அதிகாரம் ௨௨

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி

தொண்டைநாட்டிலே பேறையூரிலே சங்கம குலத்திலே சாந்தலிங்கசுவாமிக ளென்னும் பெரியார் திகழ்ந்தனர். அவர் கொள்கைகள் வீரசைவச் சார்பாயன. அவர் பேரூரிலே மடமொன்று நிறுவி அவணிருந்து வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், கொலை மறுத்தல், நெஞ்சுவிடு தூது முதலிய தத்துவ நூல்கள் இயற்றினர். சாந்தலிங்க சுவாமிகளது மாணாக்கராய்த் திருப்போரூரில் வாழ்ந்த சிதம்பர சுவாமிகள் தம் ஆசிரியரின் நூல்களுக் குரை வகுத்தனர். உபதேச உண்மை, உபதேசக் கட்டளை, பஞ்சதிகார விளக்கம் என்னும் ஞான நூல்களும், திருப்போரூர்ச் சந்நிதி முறை, தோத்திரமாலை முதலிய துதி நூல்களும், திருப்பாதிரிப் புலியூர்ப் புராணமும் இயற்றினர்.

கோனேரியப்ப முதலியார் உபதேச காண்ட மியற்றிய காலமும் அதுவே. மறைஞான தேசிகர் என்பார் தில்லையில் வாழ்ந்திருந்த சைவர். அவர் தமிழில் அருணகிரிப்புராண மியற்றினவர்.

கண்ணுடைய வள்ளல் சீர்காழியில் திகழ்ந்த சைவத் துறவி. ஒழிவிலொடுக்கம் என்னும் ஐக்கியவாத நூல் செய்தவர் இவர். இதற் குரைகண்டவர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள்.

சிவஞான வள்ளல் வள்ளலார் சரித்திர மியற்றினவர்.

சட்டைநாத வள்ளல் வாதுளாகமச் சாரமாகச் சதாசிவரூப மியற்றினர்.

தருமபுரம் பத்தாவது பட்டத்திலெழுந்தருளி யிருந்த சிவஞான தேசிகர்பால் ஞானோபதேசம் பெற்ற சிதம்பரநாத முனிவர் என்பார், குறட்பாவால் 'நித்திய கன்ம நெறி' என்னு நூலியற்றினர்.

பல பட்டைச் சொக்கநாத புலவர் தொண்டைநாட்டினர். இவர் படிகாசப் புலவர் கவியைப் புகழ்ந்து பாடியிருப்பதோடு பலப்பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார். 'அழகர் கிள்ளை விடு தூது' என்னும் சிறுகாப்பியம் இவரால் செய்யப்பட்டது.

மதுர கவிராயர் தொண்டைநாட்டு அகரம்பேட்டிற் பிறந்தவர். இவர் திருக்கச்சூர் நொண்டி நாடகம் பாடியிருக்கின்றார். இவர் பல தனிப்பாடல்களும் இயற்றினர். இவரும் பிரம்பூர் ஆநந்தரங்கன் மீது தனிப்பாடல்கள் பாடியுள்ளார்.

வீரமா முனிவர் (1680—1746) பிரான்சு தேசத்திலிருந்து தென் தமிழ் நாட்டிற்கு வந்து திருநெல்வேலிச் சில்லாவில் வடக்கன்குளம் என்னு மிடத்தில் 1714-ல் தங்கித் தமது பாதிரி வேலையைத் தொடங்கினர். அவர் தமிழரைப்போலவே வேடம் பூண்டு இந்திய குருக்கள் போலச் சிவிகையிற் சென்றனர். தமிழ்க் கல்வியை நன்கு பயின்று பாடுந் திறமை பெற்று 1724-ல் இயேசுவின் வாழ்க்கையைக் கூறும் 'தேம்பாவணி' என்னும் பெருங்காப்பிய மியற்றினர். 1729-ல் அதற் குரை வகுத்தனர். இவர் ஐந்திலக்கணத் தொன்னூல் என்னும் இலக்கண நூலும், சதுரகாரதியும், வேதியரொழுக்கமும் இயற்றினர். இவரது 'அவிவேக பூரண குருகதை' யென்பது ஒரு வேடிக்கை நூல். இவர் 1746-ல் திருநெல்வேலிச் சில்லாவில் மரணமடைந்தார். இவர்தம் பிறநூல்கள் திருக்

காவலூர்க் கலம்பகம், வேத விளக்கம், அடைக்கல மாலை என்பன. வீரமாமுனிவர்க்குப் பெரிதும் துணைபுரிந்த தமிழர் சுப்பிர தீபக் கவிராயர் சைவராயிருந்து கிறித்தவரானவர். இவர் "நாமக் கூளப்பன் காதல்' என்னு நூலினை இயற்றித் திரிசிரபுர நாயக்க மன்னனை மகிழ்வித்தனர் என்ப.

சீரங்கத்திலிருந்த அட்டாவதானி என்னும் பிராமணப்புலவர் நாமக்கூளப்ப நாயக்கனுக்கு 'விறலிவிடுதூது' பாடிக்கொடுத்தார். இது காமநூல்.

பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் (1706-1744) திகழ்ந்த பெரியார் தாயுமான சுவாமிகள். இவர்தம் பாடல்கள் இப்பொழுது பலரால் போற்றப்படுதல் போலப் பிறபாடல்கள் போற்றப்படவில்லை. தாயுமானவர் திருமறைக்காட்டிலே சைவவேளாளர் குலத்தே கேடிலியப்ப பிள்ளையின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர். திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்கராகக் கேடிலியப்ப பிள்ளை அமர்ந்த போது தாயுமான சுவாமியின் திருவருளாற் பிறந்து, அக் கடவுளின் பெயரே இடப்பெற்று, வடமொழி தென்மொழி இரண்டிலும் பயிற்சியுற்று, மௌனகுரு என்பாரிடம் அறிவுரைபெற்றனர். தந்தையாரிறந்தவுடன் அரசவேலையிலமர்ந்து நாயக்கரிறந்தபின் அரசி தன்பாற் காட்டிய தவறிய காதல் காரணமாக இவர் ஒருநாளிரவு ஊரைவிட்டோடிப்போய் இராமநாதபுரத்தில் தம் தமையனேரோடிருந்தார். இவர் அவரது கட்டாயத்திற்காக ஒரு பெண்மணியை மணந்து, ஒரு குழந்தை பிறந்தவுடன் அவளை இழந்து துறவு பூண்டு யோகஞானங்களில் தலைசிறந்தார். இவர் சைவசமயத்தின் விரிந்த நோக்கங்களைத் தம் இனிய பாடல்களில் வெளியிட்டார்.

கி. பி. 1732-ல் நல்லாப்பிள்ளை என்பார் தொண்டை நாட்டிலே மதலம்பேடு என்னுமூரிற் பிறந்தவர். வில்லி பாரதத்தைப் பதினென்காயிரம் பாட்டுடைய பெருநூலாக்கினர்.

நாசி காளிமுத்து என்பவள் வருணகுலாதித்தன் மடல் பாடினள்.

நமச்சிவாயப் புலவர் (1707-1761) பிரம்பூர் ஆநந்தரங்கனைப் புகழ்ந்து பாடியிருத்தலால், அவரைத் தொண்டைநாட்டி லிருந்தவராகக் கூறுப. அவர் பாடிய தனிப் பாடல்கள் பல வுள்ளன. திருக்கருவை, திருக்காளத்தி, திருக்குடந்தை, திருக்கழுக்குன்றம், தில்லை, திருமாலிருஞ் சோலை, மதுரை முதலான திருப்பதிகளிலுள்ள கடவுளரையும் அவர் பரிந்து பாடியிருக்கின்றார். அவர் ஆநந்தரங்கப் பிரபுவைப் பாடிய பாட்டு வருமாறு :

“ பானுகிர ணம்பார்க்கும் பங்கே ருகநிலவு
தானும் வரப்பார்க்குஞ் சகோரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கண் மாவிசையா நந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண். ”

பாண்டிநாட்டிலே திருக்குற்றாலத் தருகிலுள்ள மேலகரத்தில் திகழ்ந்த சிறந்த கவி திரிகூடராசப்ப கவிராயர் என்பார். இவரது குற்றாலக் குறவஞ்சி மிக அழகான சிறு காப்பியம். குறவஞ்சிப் பிரபந்தங்களுள் தலைசிறந்த திதுவே. இவர் குற்றாலத் தலபுராணம், குற்றால மாலை, குற்றாலச் சிலேடை, குற்றால யமகவந்தாதி முதலிய பன்னூ லியற்றினவர். இவருக்குக் குறவஞ்சிக்காக இனும் செய்த நிலத்தின் தாமிரசாசனம் கொல்லம் 891-ல் பிறப்பிக்கப் பட்டது.

ஒப்பிலாமணிப்புலவர் என்பவர் தஞ்சைச் சரபோசி மன்னன் காலத்தவர். இவரியற்றிய பெருநூல்

சிவரகசியம் என்பது. அது நாலாயிரத்துக்கு மேற்பட்ட பாட்டுக்களையுடையது.

சீகாழியிலே அருணசல கவிராயர் என்பவர் (1712-1777) இராம நாடகஞ் செய்து நாடகத் தமிழைப் புதுப்பித்தார்.

சீகாழிப்புராண மியற்றினவரு மிவரே. இவ ரியற்றிய பிறநூல்கள் அசோமுகி நாடகம், சீகாழிக்கோவை, அனுமார் பிள்ளைத்தமிழ் என்பன. இவர் தருமபுரத்தி லிருந்த அம்பலவாணக் கவிராயரிடம் கல்வி பயின்றவர்; தரங்கம்பாடி வேளாள மரபினர். தில்லையாடி மணலி முத்துக்கிருட்டின முதலியாரிடம் இராமநாடகத்தை அவர் அரங்கேற்றினர்.

இந் நூற்றாண்டிலே சரபோசி மன்னன் (1711-1727) அவையிலே அமாவாசையைப் பௌர்ணமி என்று தவறாகக் கூறி அதனை உண்மையாக்கினவர் அபிராமி பட்டர். இவர் திருக்கடவூரில் வாழ்ந்த ஆதிசைவர் போலும். இவர் பாடிய அபிராமியந்தாதி உமையம்மைபால் பேரன்பு விளக்கவல்லது. அந்த அந்தாதியைப் பாடினபின் அம்மை தன் திருத்தோட்டினை மேலே எறிந்து மதிபோல் ஒளிவிடப் பணித்தருளினள் என்ப. இவர் 'விழிக்கே அருளுண்' டென்ற பாட்டுப் பாடிய உடன் இவ்விந்தை நிகழ்ந்த தென்பர்.

"விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினையே"

வரதபண்டிதர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் ஊரார்; சைவ அந்தணர். இவர் சிவராத்திரிப் புராணம் பாடின

வர். இவர் பாடிய 'கிள்ளைவிடுதூது' முதலிய சிறு காப்பியங்களுஞ் சில உள.

இவர்க்குப் பின் பாண்டிநாட்டிலே நெல்லைநாதர் என்பார் பாடிய 'சிவராத்திரிப் புராணம்' ஒன்றுண்டு.

ஆண்டிப்புலவ ரென்பவர் தொண்டைமண்டலத் தூற்றங்கா லூரினர். இவர் ஆசிரியப்பாவில் நிகண்டொன்றும், உரையறி நன்னூலொன்றும், நன்னூற்கு ஆசிரியப் பாவமைந்த உரையு மியற்றினர்.

அரபத்தநாவலர் பரதசாத்திர இலக்கண மென்னும் நூலினாசிரியர். இவர் திருப்பெருந்துறையிலிருந்த வேளாண் புலவர். அரபத்த நாவலரென்பார் அழகர் கலம்பக மியற்றினரெனவும், வேம்பத்தூரிலிருந்த தமிழ்ச்சங்கத்தார் அழகர் பிள்ளைத்தமிழ் இயற்றினர் எனவுங் கூறுப. இச்சங்கத்தாரே அழகர் கலம்பகம் இயற்றினார் என்பாரு முளர்.

பாண்டிநாட்டிலே விக்கிரமசிங்கபுரமென்னும் ஊரிலிருந்த நமச்சிவாய கவிராயர் பாவநாசத்து உலகம்மை மீது உலகம்மையந்தாதி முதலிய பல நூல்களியற்றினர். சிங்கைச் சிலேடை வெண்பா என்னுநூலும் இவர் இயற்றியதே. அதனொரு பாட்டு வருமாறு:—

"மாலைக் குழன்மடவார் வார்விழியு மாளிகையுஞ்
சேலைக் கொடிதிகழுஞ் செங்கையே—ஆலைக்
கரும்பனைக் காயங்கெடுத்தார் காலாந்தத்தாடல்
விரும்பனைக் காயங்கெடுத்தார் வீடு"

அருமருந்து தேசிகர் திருச்செந்தூர் சைவப் புலவர். அவர் அரும்பொருள் விளக்க நிகண்டென ஒரு நூல் செய்தனர். அஃது எழுநூறு விருத்தமுடையது. அவர் அதனைத் தில்லையி லரங்கேற்றினர்.

குமர குருபர தேசிக ரென்பார் ஆத்தும ராமாயணம், ஞானக் குறவஞ்சி யென்னும் நூல்களை யருளிச்செய்தார்.

குமாரசாமி தேசிகர் பாண்டிநாட்டில் வீரவநல்லூரில் பிறந்து திருச்செந்தூர் ஆதீனத்திலே வசித்தவர். இவர் 'குமாரசுவாமியம்' என்னும் சோதிடநூலொன் றியற்றியுள்ளார்.

இராமானந்த சுவாமிகள் 'சங்கற்ப நிராகரண' மென்னும் வேதாந்தநூல் இயற்றினர். இது அருணாசலசுவாமிகள் இயற்றிய உரையுடன் விளங்குகின்றது.

தாண்டவராய சுவாமிகள் இயற்றிய 'கைவல்ய நவநீதத்திற்கும்' அருணாசல சுவாமிகள் உரைகண்டனர்.

சடகோபதாச ரென்னும் வைணவப் புலவர் 'அரிசமயதீப' மென்ற பெருநூலியற்றினர்.

அழகியநம்பி என்பார் 'குருபரம்பரை' என்னும் வைணவக்குருமார் சரித்திரம் விரிவாகச் செய்துமுடித்தார்.

அப்புள்ளையார், ஆழ்வார்கள் வாழித்திருநாமம், திருவந்தாதியுரை, திருவிருத்தவுரை யியற்றினர்.

சாந்தக் கவிராய ரென்பவர் 'இரங்கேச வெண்பா' என்னு நூலில், ஒவ்வொரு பாட்டிலும் ஒரு திருக்குறளும் அதற்குதாரணமு மமைத்துள்ளார். இவர் வேளாளர்.

சாந்துப்புலவ ரென்பார் பாண்டிநாட்டுச் சிறுகம்பையூரினர்; 'மயூரகிரிக் கோவை' பாடினவர்.

உபேந்திராசிரிய ரென்பார் 'சினேந்திர மாலை' என்னும் சோதிடநூல் இயற்றினர்.

கும்பகோணம் வலங்கிமானிலுள்ள மீகாம னென்பார் 'அறிவானந்த சித்தி' என்னு நூலியற்றினர்.

ஞநநாரச்சாம் பிள்ளை என்பவர் ‘சரமோபாய நிர்ணய’மென்னும் நூலியற்றினார்.

விசயராகவபிள்ளை என்பார் எழுதிய ‘குருபரம்பரைப் புராணம்’ 4161 செய்யுளுடையது.

சாந்தலிங்க கவிராயரென்பார் போலிவேடத்தாரை எள்ளி நகையாடும் இயல்பினர். சோழநாட்டுத் தண்டலை என்னும் ஊரினர். இவர் பாடிய ‘தண்டலையார் சதகம்’ என்கிற சைவத் தோத்திர நூலுள்,

“ காதிலே குண்டலங்கள் கையிலே
செபமாலை கழுத்தில் மார்பில்
மீதிலே தாழ்வடங்கள் மனதிலே
கரவடவாம் வேடம் பூண்போன்
....
தழுதழுத்துப் பாடுவதின் மவுனமா
யிருப்பதுவே தக்கதாகும்”

என்றாங்கு ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு பழமொழி அமைத்திருப்பதால் அந்நூல் பழமொழி விளக்கமெனவும் பெயர் பெறும்.

அம்பலவாண கவிராயர் அறப்பளீசுர சதகம் பாடினவர். குருபாத தாசரென்பார் குமரேச சதக நூலாசிரியர். நாராயணபாரதி என்பார் தொண்டை நாட்டு வெண்மணியூரினர்; வைணவப் பிராமணர்; இவர் திருவேங்கட சதகம் பாடியவர். இந்நூற்கு மணவாள நாராயணசதகமென்றும் பெயர். கோவிந்த சதகமென்பதும் இவரியற்றியதே. திவ்வியகவி நாராயணதாசரென்பார், நாராயண சதகமென்று வேறொரு நூல் யாத்தனர். கோபாலகிருட்டின தாச ரென்பார் எம்பிரான் சதகமென்ற நூலியற்றினர்.

பகழிக்கூத்த ரென்பவர் திருநெல்வேலிக்கடுத்த சந்நியாசிக் கிராமத்தினர். திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழால் அவர் பெயர் விளங்குகிறது.

ஞானக்கூத்தர் என்பார் சிவன்பாக்கத்துச் சைவத் துறவி. இவர் 'விருத்தாசல புராணம்' பாடினவர்.

மார்க்கசகாய தேவர் 'திரு விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்' பாடினர்.

தலைமலைகண்ட தேவர் திருநெல்வேலிச் சீமை காட டார்ந்தகுடி திருப்புடை மருதூரீசர்மீது 'மருதூர் யமக வந்தாதி' பாடினவர்.

சொக்கப்ப நாவலர் தஞ்சைவாணன் கோவைக்கு உரைவகுத்தார்.

சிதம்பரத்துக்கருகில் வசித்த மாரிமுத்துப்பிள்ளை 1755-ல் பிறந்தவர். இவர் புலியூர் வெண்பா, சிதம்ப ரேசர் விறலிவிடுதூது என்னுமிரண்டுமியற்றினர். சித்திரக் கவி பாடுவதில் வல்லவர்.

முத்துராச ரென்னும் உறையூர்ப்புலவர் 'கயிலாய மாலை' என்று கலிவெண்பாவிற் பாடிய நூலில் சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி நல்லூரிலாண்டது, தென்றமிழ் நாட்டி லிருந்து பல வேளாளரைக் குடியேற்றினது, கயிலாய நாதர் கோயில் கட்டுவித்தது முதலிய வரலாற்றினை விதந்தோதுகின்றார்.

அதிகாரம் உ௫

சிவஞான முனிவர் காலம்

(பதினெட்டாம் நூற்றண்டின் பிற்பகுதி)

சிவஞான முனிவர் பாண்டிய நாட்டிலே பாவநாசத் திருப்பதிக் கருகிலுள்ள விக்கிரம சிங்கபுரத்திலே வரத் தால் ஆனந்தக் கூத்தர் என்பார்க்கு அவர் மனைவியாகிய மயிலம்மைபால் தோன்றிய அருந்தவ மகனாவார். முக்களா

லிங்கர் என்பது அவர் இயற்பெயர். ஐந்தாண்டிலேயே தம்மூர்க்கு யாத்திரையாய் வந்த திருவாவடுதுறை ஆதீனச் சிவனடியார்களாகிய துறவிகள் சிலரைத் தமதில்லத்திற் கழைத்துச்சென்று இவர் தம் தாயாருக் கறிவித்து அவர்கட்குத் திருவமுது செய்வித்தனர். ஆயகாலை இவர் அழகிய ஒரு வெண்பாப் பாடியருளினர். அது வருமாறு:

"அருந்ததிஎன் னம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
மானந்த வாத மயில்."

இப்பாடலை விருந்துண்ட அடியார் பாடியதாகவும் கூறுப. பின் துறவடைந்து வீடுபேறெய்து முள்ளத்துடன், பெற்ஞேர்பால் விடைபெற்று, அத்துறவிகளோடு இவர் துறைசை சென்று, ஆண்டு ஆதினத் தலைவராய்த் திகழ்ந்த பின் வேலப்ப தேசிகரிடம் அருளுரைபெற்று, அவராற் 'சிவஞானயோகி' யென்னுஞ் சிறப்புத் திருப்பெயரளிக்கப்பெற்றுப் பல மாணவர்க்குப் பல்கலையும் பயிற்றுவித்தார். இவர் தொண்டை நாட்டிலே குளத்தூர், தொட்டிக்கலை முதலிய இடங்களிற் பன்னாள் வதிந்தனர். இவர் இயற்றிய நூல்கள் பல. இவரது வரலாற்று விவரம் தனி நூல்களிற் காண்க. சோமேசர் முதுமொழி வெண்பா திருக்குறட் செய்யுள்கட்கு உதாரணந் தருவது. கலைசையந்தாதி முதலியன உருக்கம் விளைப்பன. முல்லைவாயிலந்தாதி முதலியன யமகம் திரிபின் றிறங் காட்டவல்லன. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் முதலியன கற்பனைநயஞ் சிறந்தவை. சித்தாந்த மரபு கண்டன முதலியன இவரது கண்டனத் திறமையையும் வடமொழி வன்மையையும் உணர்த்துவன. காஞ்சிப் புராணம், தொண்டை மண்டலச் சிறப்பும் சித்திரக் கவிநயமுங் குறிப்பது. தொல்

காப்பியச் சூத்திரவிருத்தி முதலியன ஆராய்ச்சி நூல் களிற் றலைசிறந்தவை. இவரியற்றிய சிவஞான போதப் பேருரையே திராவிட மாபாடிய மெனப்பட்டு இவரது பெரும்புகழை என்றும் நிலைநிறுத்தவல்லது. இவர் கி. பி. 1785-ல் சிவனடி சேர்ந்தனர்.

கடவுண் மாமுனிவர்

கடவுண்மாமுனிவர் சிவஞான முனிவரின் முதன் மாணாக்கராய கச்சியப்பரின் நண்பர். தமது உடலிற் கண்ட பிணி நீங்கும் வண்ணம் கச்சியப்பராற் றிருவாத வூரடிகள் புராணம்பாட ஊக்கப்பட்டவர். இவர் தேசி கரோ தம்பிரானோ தெரியவில்லை.

சிதம்பரநாத முனிவர்

சிவஞானமுனிவர் மாணாக்கர் பன்னிருவர். அவருள் இலக்கணம் சிதம்பரநாத முனிவர் 'திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்' எழுதியவர்.

கச்சியப்ப முனிவர்

மற்றொருவராகிய கச்சியப்ப முனிவர் திருத்தணிகை வேளாளர்; அவ்வூர்க் கந்தப்பையர்க்கு ஆசிரியர். திருத் தணிகைப் புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், விநாயகபுராணம், திருவானைக்காப்புராணம், காஞ்சிப் புராணம் பிற்பகுதி, சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ், கச்சியானந்தருத்ரேசர் வண்டுவிடு தூது, பதிற்றுப்பத்தந்தாதி, திருத்தணிகை யாற்றுப்படை, பஞ்சாக்கரவந்தாதி முதலியன அவர்தம் நூல்கள். அவை களிற் சிறந்த பெருங்காப்பியமாகிய திருத்தணிகைப் புராணம் கற்பனை நலத்திலும் சொல்லருமையிலும் இணை யற்றது.

சுப்பிரமணிய முனிவர்

சிவஞான முனிவரின் மற்றொரு மாணாக்கராகிய தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் சுப்பிரமணியர் திருவிருத்தமும், திருத்தணிகைத் திருவிருத்தமும் பாடி அவற்றை ஓதிவந்த இருவர்க்கு முறையே குட்டநோயும், குருட்டுத்தன்மையும் நீங்கும்வண்ணஞ் செய்தனர். இவர் நூல்கள் துறைசைக் கோவை, கலைசைக் கோவை, கலைசைச்சிலேடை வெண்பா, சிதம்பரேசர் வண்ணம், திருக்குற்றாலச் சித்தித் திருவிருத்தம், பழனி முருகக் கடவுள் பஞ்சரத்தினமாலை, திருச்சிற்றம்பலத்தேசிகர்மீது சிந்து, பஞ்ச ரத்நமாலை, அம்பலவாண தேசிகர்மீது ஆனந்தக் களிப்பு முதலியன.

சோமசுந்திர பிள்ளை

சிவஞான முனிவரின் மற்றொரு மாணவர் இராமநாதபுரம் சோமசுந்திரபிள்ளை. அவர் மாணவர் முது குள்ளத்தூர்ச் சரவணப்பெருமாள்கவிராயர்; இவர் சீட்டுக்கவிபாடுவதில் வல்லவர்.

சங்கரமூர்த்திக் கவிராயர்

மற்றொருவராகிய சிவஞானமுனிவரின் மாணவர் சங்கரமூர்த்தி கவிராயர் என்பார் இராசபாளையத்திலே கார்காத்த வேளாளர் மரபிலே பிறந்தவர். இவர் கன்னிவாரி செமீன்தார்மீது கோவை பாடி யானைக்கன்றும் ஊரும் பெற்றவர்; சேற்றூர்ச் செமீன்தார்மீது 'பள்ளுப்' பாடினவர். இவர் பாடிய தனிப்பாடல்களும் பல. கற்பனையில் வல்லவர் இவர்.

"ஒரு கையிலே யன்னம் ஒருகையிலே சொன்னம்
வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச்
சீமானா மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்."

முத்து வீரிய உபாத்தியாயர்

முத்து வீரிய உபாத்தியாயர் 'முத்துவீரிய' மென்னும் யாப்பு நூல் செய்தது எக்காலத்தென்று விளங்கவில்லை.

கந்தசாமிப் புலவர்

கந்தசாமிப் புலவரென்பார் திருப்பூவணத்தி லிருந்த சைவர். இவர் திருப்பூவணவுலா, திருப்பூவணப் புராணம், ஆப்பனூர்ப் புராணம் என்பவை யியற்றினர்.

சென்னமல்லையர்

வீரசைவராய் விளங்கிய சென்னமல்லைய ரென்பவர் சிதம்பரத்திற் பச்ச கந்தையர் மடத்தில் வசித்தவர். இவர் பெயர் 'சிவ சிவ வெண்பா' வால் நிலையுறுகின்றது.

வண்ணக்களஞ்சியப் புலவர்

வண்ணக்களஞ்சியப் புலவர் என்பவர் 'மீசல்' என்னு மூரிற் பிறந்து, மதுரையில் ஒரு தம்பிரானிடங் கல்வி கற்றுப் பல நூலியற்றி, நாகூர் சென்று, தமது முகையதீன் புராணத்தை மிக்க திறமையோடு அரங் கேற்றினர். அதற்குப் பரிசாக அங்கே ஒரு செல்வன் மகளை மணந்து வாழ்ந்தனர்.

மதாறு சாகிபு புலவர்

மதாறு சாகிபு புலவ ரென்பவர் 'மிதிறு சாநா' என்னுங் காப்பிய மியற்றினர்.

அவியார் புலவர்

அவியார் புலவ ரென்பவர் 'இந்திராயன் படைப்போர்' 'இபுனி ஆண்டான் படைப்போர்' என்னும் நூல்களி னாசிரியர்.

மகம்மது ஊசெயின்

'பெண்புத்தி மாலை' யென்ற சிறு குறணூல் மகம்மது ஊசெயின் என்பவரா லியற்றப்பெற்றது.

நயினு மகம்மதுப் புலவர்

நயினு மகம்மதுப் புலவர் 'முன்கிரின்மாலை' யென்னு நூலியற்றினர்.

உலகநாதன்

உலகநாதன் என்னும் அம்பட்டப் புலவர், உலகநீதி யென்னு நீதிநூலினைத் தந்தனர்.

கணபதி தாசர்

கணபதி தாசர் 'நெஞ்சறி விளக்க'மென்னு நூறு செய்யுள் கொண்ட சிறு நூலியற்றினர். அதின் ஒவ்வொரு பாட்டிலும் 'சிவ நாக நாத' என்ற பெயர் வருகிறது.

பின்வேலப்ப தேசிகர்

பின்வேலப்ப தேசிக ரிருவருள் முன்னவர் 'திருப்பறியலூர்ப் புராணஞ்' செய்தவர்.

கந்தப்பையர்

கந்தப்பையரென்பார் கச்சியப்பர் மாணவர்; இவர் சங்கம குலத்தார். இவர் தணிகையுலா, தணிகைக்கலம்பகம், தணிகையந்தாதி, தணிகைப் பிள்ளைத் தமிழ் முதலியன செய்தவர்; பழமலையந்தாதியுரை, செந்தி னிரோட்டக யமக வந்தாதியுரை முதலிய பல உரைகள் வகுத்தவர். தணிகாசலவனுபூதி யென்றொரு நூலு மிவர் செய்ததாகத் தெரிகின்றது.

இவர் மகனார் சரவணப்பெருமாளையர் பல நூல்களுக் குரையும் இலக்கண நூல்களு மியற்றினர்.

அதிகாரம் உச

ஆங்கிலச்சார்புக் காலம்

(கி. பி. பத்தொன்பதாம் நூற்றூண்டு)

கி. பி. பத்தொன்பதா நூற்றூண்டின் முற்பகுதியிலே முந்திய நூற்றூண்டிற் போலவே பலவகைச் சிறுகாப்பியங்களும், சில நாடகங்களும் புலவர்களால் மிகுதியாக எழுதப்பட்டுவந்ததோடு, பல அறிஞர்களாற் பொதுமக்களுக்குப் பயன்படும் உரைநடை நூல்களும் பல எழுந்தன. பெருங்காப்பியங்கள் மிகுதியும் புராணவடிவாகவே இயற்றப்பட்டன. கதைத்தலைவர் ஒருவரைக் குறித்து நெடுங்காப்பியம் பாடும் வழக்கம் அருகிவிட்டது. பத்தொன்பதாவது நூற்றூண்டின் பிற்பகுதியிலே தலபுராணங்கள் மிகுதியாக இயற்றப்பட்டன. அவற்றோடு தோத்திரப் பாடல்களும் முருகதாசராலும் இராமலிங்க அடிகளாலும் அளவற்றன பாடப்பட்டன; மொழிபெயர்ப்பு நூல்களும் பல எழுந்தன. இந்நூற்றூண்டிலியற்றப்பட்ட சோதிட நூல்கள் சில. கிறித்துமதப் புலவர்கள் சிலர் பொதுவாகவும் தங்கள் சமயச் சார்பாகவும் பாட்டு நூல்களும் உரைநடை நூல்களு மியற்றினர். அகராதிகள் சில அமைக்கப்பெற்றன. தமிழ் மொழியின் இலக்கண இலக்கியங்களை ஐரோப்பியப் பாதிரிமார் கற்று ஆராய்ச்சி நூலும் மொழிபெயர்ப்பு நூலும் எழுதினர்.

சரவணப்பெருமாள் கவிராயர்

பதினெட்டாவது நூற்றூண்டின் பிற்பகுதியிலே சிறந்து விளங்கின பெரியாராகிய ஆசிரியர் சிவஞான முனிவரின் மாணவர்களி லொருவராகிய இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளையிடம் கல்விபயின்ற சரவணப்

பெருமாள் கவிராய ரென்பவர் முத்துராமலிங்க சேதுபதியின் அரண்மனைப் புலவராய்த் திகழ்ந்தனர். இவர் முதுகுளத்தூரிற் பிறந்தவர். நகைச்சுவை நயம் விளங்கக் கற்பனை அமைத்துத் தனிப்பாடல்கள் பாடுவதில் இவர் மிக்க வல்லமையுடையவர். யானை, குதிரை, வெள்ளி, பட்டு முதலியன வேண்டுமென்பார், கையிலே மூக்குள்ளதொன்று, மாயன் பிறப்பிலொன்று, வாரமது ஒன்று, வெளுத்த சந்திரனொன்று தமக்கு வேண்டுவதாகக் கவியுரைத்தனர். (பணம் விடுதூது, அசுவமேதயாக புராணம், விநாயகர் திருமுக விலாசம் முதலியன இவராற் பாடப்பட்டன.) வசைமொழிகளைத் தொகுத்துரைப்பதில் இவரைவிட வல்லவரில்லை; தமது செருக்குத் தோன்றப் பாடுவதிலும் அங்ஙனமே. இவர் உலக வழக்கிலுள்ள மொழிகளையே அமைத்துத் தட்டுத் தடையின்றிப் பாவியற்றும் திறமுடையவர்.

இவர் சேதுபதியின் அமைச்சர் முத்திருளப்ப பிள்ளைமீது 'காதல்' பாடியுள்ளார். இவர் அட்டாவதானம் செய்பவராதலின், அச்சொல்லை இவர் பெயர்க்குமுன் வைத்து வழங்குவ துண்டு. புலவர்க்கு அஞ்சி அவர்க்குப் பொருளீய மனமில்லாது ஒளிப்பாரின் செயலை நகைச்சுவை மிகப் புனைந்துரைத்த பாட்டின் பகுதி வருமாறு:

"ஆரடி வீதியிலொ ரேடுகொண் டோடியே
யவசரம தாய்வருகிறார்
ஐயையோ புலவன்மார் போலே யிருக்கின்ற
தியாரென்று மெல்லவெட்டிப்
பாரடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும்
பாதைவழி போகிறதுதான்
பரண்மே லெனைத்தூக்கி விட்டுவிடு தாளையடை
பழிகாரி கதவுபோடு
கூர்மைமொழி கேட்டதிக சீக்கிரம் வந்திடுவர்

குதிருக்குள் ளேயொளித்துக்
கொள்ளடி யெனப்புகலும் லோபியர்கள்............"

இப் புலவர் இந்நூற்றாண்டின் றொடக்கத்திற் பிறந்தவ ராவர்.

இராமானுச கவிராயர்

இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளையின் மற்றொரு மாணவர் இராமானுச கவிராய ரென்பார். இவர் இராமநாதபுரத்திற் பிறந்து சென்னையில் வாழ்ந்திருந்தவர். இவர் பாடிய 'பார்த்தசாரதி மாலை,' 'திருவேங்கட அநுபூதி,' 'வரதராசப்பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி' முதலிய சிறு காப்பியங்களால் இவர் வைணவரென்று தெரிகின்றது. இவர் குலத்தில் வடுக ரென்பாருமுளர். பச்சையப்ப முதலியார் முதலிய சில வள்ளல்களை இவர் புகழ்ந்து பாடியுள்ளார். இவர் சங்கராசாரியரையும் பாடியுள்ளார்.

திருக்குறள், நறுந்தொகை, நன்னூல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களுக்குக் காண்டிகை யுரை வகுத்திருப்பதால், இவர் சிறந்ததோருரையாசிரியராவர். இவர் 'ஆத்மபோதப் பிரகாசிகை' யென்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவரால் எழுதப்பட்ட இலக்கணச் சுருக்கம் ஒன்று உண்டு.

வேதகிரி முதலியார்

இராமாநுச கவிராயருடைய மாணவர் வேதகிரி முதலியா ரென்பவர்; தொண்டைமண்டலத்திலுள்ள களத்தூரினர். இவர் 'மநுநீதி சதகம்' 'நீதிசிந்தாமணி' முதலிய நீதி நூல்களை இயற்றியவர். இவர் எழுதியுள்ள இலக்கியக் களஞ்சியமும் இலக்கணக் களஞ்சியமும் பல்வகை இலக்கண இலக்கிய நூல்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட நற்பகுதிகள் உடையன.

விசுவநாதசாத்திரியார்

யாழ்ப்பாணத்து அராலியைச் சார்ந்த விசுவநாத சாத்திரியா ரென்பார், (வண்ணைக் குறவஞ்சி, நகுல மலைக் குறவஞ்சி என்னும் நூல்களை யியற்றினவர்.) இவர் சிலேடை பாடுவதில் வல்லவர். இவர்தம் குறவஞ்சிகளில் அயன், அரி, அரன் மூவர்க்கும் பொருந்தும் சிலேடைகள் அமைத்துள்ளார். இவரது அஞ்சக்கரத்த ரென்ற சொற் றொடர், 'அஞ்சம் கரத்தர்' என்று பிரிக்கப்பட்ட காலை, அன்னக்கொடி தாங்கிய கையையுடையவர் எனப் பொருள்பட்டு அயனைக் குறிக்கும்; 'அம் சக்கரத்தர்' என்று பிரிவுற்றகாலை, அழகிய சக்ராயுதம் உடையவ ரென்று பொருள்பட்டுத் திருமாலுக்குரியதாகும்; 'அஞ்சு அக்கரத்தர்' என்று பிரிக்கப்பட்ட விடத்து, ஐந்தெழுத் துடையார் என்று பொருள்பட்டு அரனைக்குறிக்கும். இங் ஙனம் வந்த சிலேடைகள் பலப்பல:

வீரராகவ முதலியார்.

முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியா ரென்பவர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் வேறுவர். இவரும் தொண்டை நாட்டுப் பொன்விளைந்த களத்தூரினரே. இவர் வைணவர். நம்மாழ்வாரைச் சிறப்பாக வழிபட்டவர். (திருவேங்கடக் கலம்பகம், திருக்கண்ணமங்கை மாலை, திருவேங்கட முடையான் பஞ்சரத்தினம், வரதராசர் பஞ்சரத்தினம், பெருந்தேவித்தாயார் பஞ்சரத்தினம் முதலிய நூல்கள் இயற்றினர்.)

சேனாதிராயர்

சேனாதிராயர் என்னும் ஒரு புலவர் ஆறுமுக நாவலருக்கு ஆசிரியராய்த் திகழ்ந்தவர். இவர் யாழ்ப் பாணத்து இருதலை யென்னும் ஊரினர். இவர் சைவ

வேளாள வகுப்பினர்; கூழங்கைத்தம்பிரான் என்றவர் பால் கல்வி பயின்றவர். இவர் மிகுந்த நினைவாற்ற லுடையவராதலின், புதிதாக யாவராவது பாட்டொன்று கூறக்கேட்டால் அதனை இருமுறை கேட்டுத் தாமதனை மீட்டும் உரைக்கும் ஆற்றலுள்ளவர். இவர் நல்லை வெண்பா, நல்லைக் குறவஞ்சி முதலிய சிறு காப்பியங்க ளியற்றினர். தமிழகராதி யொன்று இவர்தாம் முதன் முதற் றொகுத்தன ரென்ப. பாநய முள்ள புதுச்சொற் றொடர் அமைப்பதில் இவர் மிகச் சிறந்த திறமுடையவர். சிலேடை பாடுவதிலும் வல்லவர். இதுகாறுங் கூறிய காப்பியப் புலவர்கள் யாவரும் ஆறுமுக நாவலர் காலத் துக்கு முற்பட்டுத் தோன்றியவராவர்.

கந்தப்பிள்ளையும் அநந்தபாரதியும்

இவர்கள் காலத்திடையே நாடக இலக்கியங்கள் இயற்றினோரும் சிலர். ஆறுமுகநாவலரின் தந்தையாரான கந்தப்பிள்ளை யென்பவர் இராமவிலாசம், சந்திரகாசம் முதலியன இயற்றினர். தஞ்சையிலிருந்த அநந்தபாரதி அய்யங்கார் உத்தரராமாயண கீர்த்தனை, பாகவத தசமத் கந்த நாடகம், யானைமேலழகர் நொண்டிச்சிந்து முதலிய இசை நாடகச் சார்பான நூல்க ளியற்றியவர். இவர் 1786 முதல் 1846 வரை நிலவுலகத்தி லிருந்தவரென்ப.

இராமச்சந்திரகவிராயர்

இராமச்சந்திரகவிராய ரென்னும் புலவர் இராசு குலத்தைச் சேர்ந்தவர்; தொண்டை மண்டலத்தில் இராசு நல்லூரென்னுமிடத்திற் பிறந்து சென்னையில் வதிந்தவர். இவர் சகுந்தலை விலாசம், தாருகாவிலாசம், இரங்கோன் சண்டை நாடகம், இரணியவாசகப்பா முதலிய நாடகச் சார்பான நூல்களை இயற்றியவர். இவர் எல்லிசுதுரை

யென்பவராலே புகழ்ந்து பாடப்பெற்றவர். இவர் 'சதபங்கி,' 'நவபங்கி' முதலிய சித்திரக்கவிகள் பாடுவதில் வல்லவர். யாவர்க்கும் விளங்கும் இயற்சொற்களினால் நகைச்சுவை ததும்பும்படி பாடுவதிற் றிறமையுடையார் இவர்.

"வஞ்சகர்பானிடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசலொறு முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணுங் கோப மாகப்
பஞ்சவரி லொருவன்வில்லா லடித்த புண்ணும்
பாரென்றே காட்டிநின்றான் பரமன்றானே."

துன்பங்கள் பலவும் ஒருங்கு சேர்ந்து ஒருவனை வருத்துமியல்பை இவர் மிகவும் அழகாக ஒரு செய்யுளாற் குறித்துள்ளார்.

"ஆவீன மழைபொழிய வில்லம் வீழ
வகத்தடியாள் மெய்நோவ வடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவ ரெதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடுவென் றாரே."

சுன்னாகம் முத்துக்குமாரகவிராயர், பீதாம்பர புலவர் என்பாரும் சேனாதிராயர் காலத்தவர். இருவரும் சித்திரக்கவிப் புலவர்கள். பின்னையவர் செய்த நூல்களிற் சிறந்தது 'மறைசைக்கலம்பக' மென்பது.

ஆண்டான்கவிராயர்

வசை பாடுவதில் நல்ல ஆண்டான்கவிராய ரென்பார் திருநெல்வேலிச் சில்லாவிலுள்ள ஒட்டப்பிடாரத்திற்

பிறந்தவர். இவர் வைணவ அந்தண ரென்ப. இவர் இந் நூற்றாண்டின் தொடக்கத்திற் றிகழ்ந்தவர்.

நல்லவீரப்ப பிள்ளை

நல்லவீரப்பபிள்ளை என்பவர் இராமநாதபுரத்தைச் சார்ந்த முதுகுளத்தூரினர். இவர் முருகப் பெருமான் மீது பள்ளு, குறவஞ்சி பாடியுள்ளார். முருகப்பெருமான் திருவருளால், எமன் அணுகான் என்பதைப் பல படப் பாராட்டியுள்ளார். உலகவழக்குச் சொற்களை நயமுறச் செய்யுட்களில் அமைப்பதில் இவர் வல்லவர்.

'பேயா தடிமுர டாவந்த காபொய்ப் பிரட்டுருட்டா
நீயாவென் முன்னுக்கு வாரா தடாநெடு மான்மருகன்
மாயாவ தாரன் கொடுமூரன் றந்த வயதெனக்குத்
தோயா விதமென்ன போடாநின் புத்தியுந் துர்ப்புத்தியே'

சேறைக் கவிராசபிள்ளை

சேறைக் கவிராசபிள்ளை யென்பார் சோழநாட்டினர்; கணக்கர் மரபினர். இவர் சிறந்த ஆசு கவிராயர். 'சேயூர் முருகனுலா,' 'வாட்போக்கிநாத ருலா' 'அண்ணாமலையார் வண்ணம்' முதலிய சிறு காப்பியங்களை இயற்றியவர்.

தாச்சி அருணாசல முதலியார்

சென்னையைச் சார்ந்த திருமயிலையில் சுமார் 84 ஆண்டுகட்குமுன் திகழ்ந்த தாச்சி அருணாசலமுதலியா ரென்பவர் திருமயிலைக் கபாலீசர் கற்பகாம்பிகை மீது பல பதிகங்களும், திருமுல்லைவாயில் மாசிலாமணியீசர் பதிகம் முதலியனவும் இயற்றியுள்ளார். செட்டிமக்கள் திரைகடலோடியுந் திரவியம் தேடுதலை இவர் ஓரெடுத்துக் காட்டால் விளக்கும் செய்யுள் பின்வருவது:

"குப்பத்துச் செட்டி குமாரன் கடருண்டி
முப்பத்து முக்காத முங்கடந்து—கப்பலதில்
ஆபத்து வாரா தகற்றி யவனதிக
லாபத்துக் காளாயி ஞன்"

மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் என்பவர் பழனியிற் பிறந்தவர். இவர் கம்மியர் குலத்தவர். இவர் மூன்ருவ தாண்டில் அம்மைநோயாற் கண்ணிழந்தும் முருகப் பெருமான்றிருவருளால் அகக்கண் ஒளிவிளங்கப் பெற்றுப் பன்னூல்களையும் படிக்கக் கேட்டுணர்ந்து பாமாரி பொழிவதில் வல்லவராயினர். இவர் முத்துராமலிங்க சேதுபதியிடம் 'கவிச்சிங்கநாவலர்' என்ற பட்டம் பெற்றவர். இவர் கி. பி. 1836 முதல் 1884 வரை வாழ்ந்தவர். பொன்னுச்சாமித்தேவர் மீதும் இவர் கவியியற்றியதாகத் தெரிகின்றது. அவர் அட்டநாகபந்தம், சதுரங்க பந்தம் முதலியவற்றிற்கு இலக்கணம் வகுத்துள்ளார். இவரது பிரபந்தத்திரட்டொன்று பழனிச்சாமி ஆசாரி என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. சிலேடை பாடுவதிலும் இவர் மிக வல்லவர். பேரையூரிலிருந்த ஒரு வீரசைவப் புலவரை இவர் புகழ்ந்துள்ள பாட்டு வருமாறு :—

"மலைத்தவனு மலைத்தவனு குவன்சரத நாமகனே
மகளே யென்பர்
கலைத்திறமை கம்பனுமோர் கம்பமென நிற்பனுனைக்
கண்டா லென்று
விலைக்கமுகு கற்பகக்கா விந்திரற்கு வெண்கவரி
யிரட்டும் பேரை
நிலைத்தபுகழ் வீரசைவ லிங்கையதே சிகவுனக்கார்
நிகரா வாரே."

இராம பாரதி

இராம பாரதி யென்பவர் 'ஆத்திசூடி வெண்பா'வென்னும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் 'ஆத்திசூடி'யின் ஒவ்வொரு சூத்திரத்துக்கும் ஒவ்வொரு கதையினை எடுத்துக்காட்டாக ஒவ்வொரு வெண்பாவிலும் அமைத்திருக்கிறார். இவரது நூலால் இவர் சைவரென்று விளங்குகின்றது.

நிசகுணயோகி

நிசகுணயோகி யென்பவர் 'விவேக சிந்தாமணி' யென்னும் ஒரு நீதிநூல் இயற்றியுள்ளார். இது படியாதார்க்கும் எளிதில் விளங்கும் சொல் நடையில் அமைந்துள்ளது. இவர் காலம் பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதி.

ஒப்பிலாமணிப் புலவர்

ஒப்பிலாமணிப் புலவர் என்பவர் குமணன் கதையைப் பாடினவர். இவர் 'சிவரகசிய'த்தைத் தமிழில் மொழி பெயர்த்த இப்பெயருடையாரின் வேறானவர்.

வெண்பாப்புலிக் கவிராயர்

வெண்பாப்புலிக் கவிராயரென்பார் பாண்டிநாட்டிலே மணப்பச்சேரி என்னுஞ் சிற்றூரில் வசித்திருந்த சைவப் பண்டார மரபினர். இவர் சிவகங்கைச் சிற்றரசர் முதலியோரால் ஆதரிக்கப்பட்டவர். வெண்பாப் பாடுவதில் இவர் தலைசிறந்தவராதலின், இவர்க்கு இப்பெயர் அமைந்தது போலும்.

வெறிமங்கை பாகக் கவிராயர்

வெறிமங்கை பாகக் கவிராயர் என்பவர் பாண்டிநாட்டிற் கொடுங்குன்றத்திற் பிறந்தவர். இவர் மருங்காபுரிச் சிற்றரசராற் போற்றப்பெற்று, அவர்மீது குற

வஞ்சி, உலா, கோவை முதலியன இயற்றினவர். இவர் பாடியுள்ள 'நற்றாயிரங்கல்' என்னுந் துறையமைந்த பாட்டில், பாலை நிலத்தின் பருக்கைக் கற்களின் வெம்மையை மிக அழகாகப் புனைந்து கூறியது காண்க.

"நன்றே நடாத்துமெம் மங்கைபங் காளர்தந் நாட்டினிலே
அன்றே யிராம னணைகட்டும் போதங் கவன்படைகள்
குன்றேன் சுமந்தவெம் மான்சென்ற பாலைக் குறும்பரலில்
ஒன்றே யிடிலக் கடல்முற்றும் வற்ற வுறிஞ்சிடுமே."

முத்துசாமிப்பிள்ளை முதலியோர்

தேவிப்பட்டினம் முத்துசாமிப்பிள்ளை, கோடீச்சுரக் கோவை பாடிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், 'செயங்கொண்டார் சதகம்' பாடிய இளையாற்றங்குடி முத்தப்ப செட்டியார் முதலிய பல புலவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரே. சுந்தர கவிராய ரென்பவர் எக்காலத்தவரென்று தெளிவாக விளங்கவில்லை. இவர் அழகிய அகத்துறைப் பாடல்கள் பாடியுள்ளார். இவர் தலைவன் தலைவி பிரிவாற்றாமையால் வருந்துவதைத் தாமே துய்த்துப் பாடியதுபோலப் பாடிய பாட்டு வருமாறு:—

"நறையொழுகுங் குழலாளை யமுதொழுகு
மொழியாளை நயன வேலிற்
பிறையொழுகு நுதலாளைப் பிரிந்திருக்க
விப்பிறப்பிற் பெரிதும் யான்செய்
குறையெதுவோ மதன்கணைக்கு மிகவருந்த
வெனைவிதித்த கொடியோ னன
மறையவனுங் கலைமகளைப் பிரிந்திருந்தாற்
றெரியுமிந்த வருத்தந் தானே."

சரவணதேசிகர்

இக்காலத்திலே, சமய நூலுண்மை யுணர்த்தும் பாட்டு நூலெழுதியவர்கள் சிலரே. சரவணதேசிக ரென்

பார் 'வீட்டுநெறியுண்மை,' 'தேவிகாலோத்திரம்' என்னும் அரிய நூல்களை இயற்றினார்.

சுந்தரதேசிகர்

சுந்தரதேசிக ரென்பவர் 'திருக்கோவையாருண்மை' யென்னும் சிறுநூல் இயற்றியுள்ளார்.

சரவணமுத்துப்புலவர்

யாழ்ப்பாணத்து நல்லூர் சரவணமுத்துப்புலவர் என்பவர் ஆத்மபோதப் பிரகாசிகை, வேதாந்த சுயஞ்சோதி முதலிய சில நூல்கள் மிகுந்த வடமொழிக்கலப்புடன் எழுதியுள்ளார்.

அப்பாவையரும் தில்லைநாயகரும்

அப்பாவையர் என்பவர் தம்மை ஆதரித்த நெல்லிக் குப்பம் தாண்டவராயர் பெயரினாலே 'தாண்டவமாலை' யென்னுஞ் சோதிடநூலையும், திருவானைக்காத் தில்லை நாயக சோதிடர் என்பவர் 'சாதகசிந்தாமணி' யென்னுஞ் சோதிடநூலையு மியற்றினார்.

பரசுராமகவிராயர்

புரசைவாக்கம் பரசுராம கவிராய ரென்பவர் 'சிறுத் தொண்டர் விலாசம்' என்னும் நாடகச் சார்பான நூலியற்றினார்.

திருச்சிற்றம்பல தேசிகர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே உரை நடைநூல்க ளியற்றியவருள் முதலாவர் திருச்சிற்றம்பல தேசிக ரென்பவர். இவர் 'கம்பராமாயண வசனம்,' 'உத்தர காண்ட வசனம்' முதலியவைகளைக் கி. பி. 1815-ம் ஆண்டில் இயற்றினார்; யார்க்கும் இலக்கணம் விளங்கும்

பொருட்டுத் தொல்காப்பியத்தைத் தழுவி எழுத்துச் சொல்லிலக்கண நூல் உரைநடையில் இயற்றினர்.

தாண்டவராய முதலியார்

தாண்டவராய முதலியார் என்பவர் கி. பி. 1824-ல் 'பஞ்சதந்திரத்'தை மகாராட்டிரத்திலிருந்து மொழி பெயர்த்தனர். இவரும் 'இலக்கண வினு விடை,' 'கதா மஞ்சரி' என்னும் நூல்களைச் சிறுவர்பொருட்டு இயற்றியுள்ளார். இவர் சென்னையில் வதிந்தவர். இவர் திவாகரம், சூடாமணி, சதுரகராதி என்னும் நூல்களை முதன்முதல் அச்சியற்றினர்.

வீரமார்த்தாண்ட தேவர்

செங்குந்தர் மரபைச் சார்ந்த வீரமார்த்தாண்ட தேவ ரென்பவர் பஞ்சதந்திரத்தை விருத்தப் பாவினுல் பாடியுள்ளார்.

விசாகப்பெருமாளையரும் சரவணப்பெருமாளையரும்

திருத்தணிகையில் திகழ்ந்த வீரசைவப் புலவராகிய கந்தப்பையரின் மக்களான விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையர் என்னும் இருவரும் பல உரைநடை நூல்களை யெழுதி உலகிற்குதவினர். விசாகப்பெருமாளையர் சென்னை மாகாண அரசியலார் கலாசாலைத் தமிழாசிரியராகத் திகழ்ந்தனர். இவர் நன்னூலுக்கு ஒரு காண்டிகை யுரையும், யாப்பிலக்கண அணியிலக்கண வினுவிடையும் இயற்றியுள்ளார். இவர் டாக்டர். வின்சுலோவின் தமிழகராதிக்கு மிகவும் துணைபுரிந்தவர். சரவணப்பெருமாளைய ரென்பவர் இராமானுசக் கவிராயருடைய மாணுக்க ரென்பர். இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நறுந்தொகை, நன்னெறி, மூதுரை, வெங்கைக்கோவை, பிரபு

லிங்கலீலை, திருவள்ளுவமாலை நைடதத்தின் ஒரு பகுதி என்னும் இவற்றிற்கு உரை வகுத்தனர். பாலபோத இலக்கண வினாவிடை, இயற்றமிழ்ச் சுருக்கம், அணியியல் விளக்கம் என்னும் நூல்களை இயற்றினதோடமையாது களத்தூர்ப் புராணம் ஒன்றும் இவர் இயற்றியுள்ளார். கி. பி. 1830-வது ஆண்டில் இவர் திருக்குறளுக்குப் பரிமேலழகருரையை முதன் முதல் அச்சிட்டனர். திருவாசகம், திருவிளையாடல், நாலடியார் முதலியவற்றையும் இவர் பதிப்பித்ததாகத் தெரிகிறது.

நாகநாத பண்டிதர்

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் நாகநாத பண்டிதர் என்பார் 1826 முதல் 1854 வரை நிலவுலகத்தி லிருந்தனர். இவர் வடமொழிப் புலமை சான்றவராதலின், மேகதூதம், பகவத்கீதை, இதோபதேசம், சாந்தோக்கிய உபநிடதம் முதலியவைகளைத் தமிழில் மொழிபெயர்த்தனர்.

ஆறுமுக நாவலர்

மேற்கூறிய உரைநடை நூலியற்றியவர்கள் யாவருள்ளும் தலைசிறந்தவர் யாழ்ப்பணத்து நல்லூர் ஆறுமுக நாவலராவர். இவர் 1823 முதல் 1879 வரையில் இவ்வுலகிற் றிகழ்ந்தனர். இவர் சேனாதிராயருக்கும், சரவணமுத்துப் புலவருக்கும் மாணவரென்ப. பொன்னம்பல பிள்ளை, சபாபதி நாவலர் முதலியவருக்கு இவர் ஆசிரியர். தமிழ்க் கல்வியையும் சைவ சமயக் கல்வியையும் பரவச் செய்தற்பொருட்டுக் கல்லூரிகளைச் சிதம்பரம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் நிலைநிறுத்தியும், சென்னையில் அச்சியந்திரசாலை அமைத்து அவற்றின் வாயிலாகப் பல உயர்ந்த தமிழ் நூல்களையும் சைவ நூல்களையும் பிழையற

நன்கு பதிப்பித்தும், சைவசமயச் சொற்பொழிவுக ளியற்றியும், மாணவர்க்கு வேண்டும் சிறு உரைநடை நூல்கள் பல இயற்றியும் பெரிதும் உழைத்தமையால் இவர் பெருமை இன்றும் நின்று நிலவுகின்றது; என்றும் நிலவுதற் குரியது. இவர் நைட்டிகப் பிரமச்சரிய விரதங் காத்து மிகுந்த பேரன்போடு நாடோறும் சிவ வழிபாடு இயற்றின வர். கிறித்துவமத கண்டனம், மாயாவாத மத கண்டனம் முதலியன இயற்றுவதில் இவர் வல்லமையுடையவர்; சமய நூற் சார்பாக நம்பிக்கையின் திட்பத்தைப் பெரிதும் பாராட்டுபவர்; இக்கால ஆராய்ச்சி முறையினும் இடைக் காலப் பத்திமுறையினை மிகவும் போற்றுபவர்.

இவராற் பரிமேலழகருரை, திருக்கோவையுரை, நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோக விவேகம், கந்த புராணம், சேது புராணம், பாரதம், சைவ சமய நெறி யுரை, தருக்க சங்கிரகம் முதலிய நூல்கள் அச்சியற்றப் பட்டன; சிறுவர்கள்பொருட்டு நான்கு பாலபாடங் களும், இரண்டு சைவ வினாவிடைகளும், இலக்கணச் சுருக்கம் ஒன்றும், பெரிய புராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலியவை களும் பிழையற்ற இனிய நடையில் இவரால் எழுதப்பட் டிருக்கின்றன. இவரால் இயற்றப்பட்ட பெரியபுராண சூசனம் என்பது முற்றுப்பெறவில்லை. இலங்கைப் பூமி சாத்திரம், சிதம்பர மான்மிய வசனம், கோயிற் புராண உரை முதலியனவும் இவரியற்றியவைகளே. இவரைக் காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்றது காண்க. இவர் ஒன்றிரண்டு செய்யுட்களே இயற்றியதாகத் தெரிகின்றது. 'அகாலச் சித்திவிநாயக விருத்தம்' இவராலியற்றப்பட்ட செய்யுள் நூலென்ப.

இராமலிங்க அடிகள்—1823-1874

பத்தொன்பதாவது நூற்றாண்டில் திகழ்ந்த பாவலருள் தலைசிறந்தவர் இராமலிங்க அடிகள் என்பார். இவர் தென்னாற்காடுச் சில்லாவின் மருதூரிற் பிறந்து சென்னையில் ஐந்து முதல் இருபத்துநான்கு ஆண்டுவரை வாழ்ந்திருந்து, பின்னர் எட்டாண்டுகளாகத் தில்லை முதலிய திருப்பதிகளை வணங்கிச் சென்று கருங்குழியில் பதினாறாண்டுகள் வதிந்திருந்து, பின்னர் வடலூரினை அடைந்து நான்காண்டுகள் கழிந்ததும் தமது ஐம்பத்து மூன்றாம் ஆண்டினில் வீடெய்தினர். இளமை தொடங்கியே மிகுந்த உள்ளத்துறவும், இறைவன்பால் அளவற்ற பேரன்பும் உடையராய்த் திகழ்ந்தமையான், இவர் ஒன்பதாம் ஆண்டிலேயே முருகப்பெருமான் மீது யாவருள்ளத்தையும் உருக்கும் இனிய செந்தமிழ்ப் பாடல்கள் பாடத் தொடங்கினர். இவர் பதின்மூன்றாம் ஆண்டு முதல் குடும்பப் பற்றொழித்துத் திருவருளையே துணைக்கொண்டு தமது அருள் வாழ்க்கையை நடத்திவந்தனர். இவர் பாடிய பாடல்களனைத்தும் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் இனிமையுங் கனிவும் இறைவன்பாற், கற்பாரது உள்ளத்தைப் பேரன்பினாற் பிணைக்குந் தன்மையவாய் இருந்தமையான், இவர் மாணாக்கர்கள் அவற்றின் தொகுப்பைத் 'திருவருட்பா' என்று வழங்கினர். அதனை அங்ஙனங் கூறுதல் தகாதென்றும், தேவார திருவாசகங்களையே அவ்வாறு கூறுதல் வேண்டுமென்றும் ஆறுமுக நாவலரும் அவரைச் சார்ந்தவர்களும் போராடிப் பெருவழக்கு நிகழ்த்தினர். அடிகள் சைவத் திருநெறித் தலைவர் நால்வர்பாலும் கழிபேரன்புடையாரென்பது, அவர்கள்மீது அடிகள் பாடிய இன்தமிழ்ப் பதிகங்களால் இனிது விளங்கும். தாழ்வெனுந் தன்மையிற்

சிறந்த அடிகள் தம்மை நால்வரோ டொப்பாகவாதல் தம்முடைய பாடல்களை அன்னோர் திருவருட்பாடல் களுக்கு ஈடாகவாதல் கருதினார்களென்று கொள்ளுதல் இழுக்காகும். தம்பால் நிகழ்வன யாவும் திருவருளின் ஆற்றலினாலேயாம் என்று அடிகள் கருதினமையால், தம் முடைய பாடல்களைத் தம் மாணவர்கள் அருட்பா வென் றுரைத்ததை மறுத்திலரென்க. தேவார திருவாசகங்கள் முதலிய பன்னிரு திருமுறைகளையே அருட்பா வென்று கூறும் வழக்கம் ஆறுமுக நாவலர் காலத்துக்கு முன் இருந்ததாகத் தோன்றவில்லை.

தேவார திருவாசகப் பொருளைக் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் எளிதிற் புகட்டும் நயமிக்க அமுதப் பாக்கள் அடிகளால் இயற்றப்பட்டுள்ளமையால், பலர் அவற்றை நன்கு கற்றோதி நலம்பெறுதல் கண்கூடாகக் காணலாம். பிற்காலத்துப் பெரும் புலவர்கள் புகழ்ப் பாமாலைகளினும் செந்தமிழ்ச் சொல்நயமும் உள்ள முருக் கும் பொருட்கனிவும் இவர் திருப்பாடல்களுக்குச் சிறப் பாக அமைந்துள்ளன. எவ்வகைச் சுவையும் நிறைந்த இவர் பாடல்களுட் கனிவுமிக்கன சில வருமாறு :—

“நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோவெண்ணத் தான்படுமோ
கான்படு கண்ணியின் மான்படுமாறு கலங்கி நின்றேன்
ஏன்படு கின்றனை யென்றிரங் காயென்னி லென்செய்வனே.”

‘நான் மறந்தே னெனினுமெனைத் தான்மறவா னெனது
நாயகனென் றுடுகின்றேன் எனினுமிது வரையும்
வான் மறந்தேன் வானவரை மறந்தேன்மா லயனை
மறந்தேனம் முருத்திரரை மறந்தேனென்னுடைய
ஊன்மறந்தே னுயிர்மறந்தே னுணர்ச்சியெலா மறந்தேன்
உலகமெலா மறந்தேனிங் குன்னைமறந் தறியேன்
பான்மறந்த குழவியைப்போல் பாரேலிங் கெனையே
பரிந்துநின தருட்சோதி புரிந்து மகிழ்ந் தருளே.’

சுப்பிரமணிய தேசிகர்

பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலே திருவாவடுதுறை யாதீனத்திற் றலைமை பூண்டிருந்த சுப்பிரமணிய தேசிகமூர்த்திகள் தமிழ்ப்புலவர்களை மிகவும் போற்றிவந்தனர். அவர்களாலே ஆறுமுக நாவலர்க்கு 'நாவலர்' என்னும் பட்டம் அளிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இவர் சிவஞானசித்தியாருக்குப் பதவுரை இயற்றினர்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை

துறைசை ஆதீனத்திற்குரிய பெரும் புலவ்ராயிருந்தவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. இவர் மாணவர்கள் பலர் தமிழ்க்கல்வியை யாண்டும் பரப்பினர். தாக்ஷிணாத்ய கலாநிதி மகாமகோபாத்தியாயராகிய உ. வே. சாமிநாத அய்யர் அவர் மாணவர்களில் ஒருவர். பிள்ளையவர்கள் நால்வகைக் கவி பாடுவதிலுந் திறமை வாய்ந்தவர். நாளொன்றுக்கு முந்நூறு பாட்டுப் பாடுவது இவர்க்கு எளிதென்ப. இவர் செய்த பெருநூல்கள் தலபுராணங்களாகும். இவர் பதினாறு தலபுராணங்கள் பாடியுள்ளார். அவற்றுட் சிறந்தது திருநாகைக்காரோணப் புராணம். திருக்குடந்தை, மாயூரம், திருத்துருத்தி, திரு உறந்தை, திருக்குறுக்கை வீரட்டம், திருவாழ்கொளிபுத்தூர், ஆற்றூர், மண்ணிப்படிக்கரை, வீரவனம், திருமுல்லைவாயில் முதலிய திருப்பதிகளுக்கு இவர் புராணம் பாடியுள்ளார். சூதசங்கிதை இவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தேவராச பிள்ளை யென்பார் பேரால் வெளியிடப்பட்டுள்ளது: அது மூவாயிரம் பாட்டுடையது.

'குசேலோபாக்யானம்' இவரால் இயற்றப்பட்டதென்ப. இவராற் பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் பத்து

என்ப. அவற்றுட் பலபல திருப்பதிகளிலே வீற்றிருக்கும் இறைவியின்மீது பாடப்பட்டவை. திருஇடைகழி முருகர்மீது ஒரு பிள்ளைத்தமிழ் இவராற் பாடப்பட்டுள்ளது. இவரது சேக்கிழார் பிள்ளைத்தமிழ் மிகவும் பாராட்டற்பாலது. துறைசை அம்பலவாண தேசிகர்மீதும் இவர் ஒரு பிள்ளைத்தமிழ் பாடினர்.

இவர் செய்த அந்தாதிகள் பதினொறென்ப. அவை தில்லை யமக அந்தாதி, திருவானைக்காத் திரிபந்தாதி, திருச்சிராப்பள்ளி யந்தாதி, திருத்துறைசை யந்தாதி, திருஞானசம்பந்தர் பதிற்றுப்பத்தந்தாதி முதலியன. திருஞானசம்பந்தர் ஆநந்தக்களிப்பு என்ற சிறுகாப்பியமும் இவராற் பாடப்பெற்றது. இவரால் நான்கு மாலைகள் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் திருவானைக்கா இரட்டை மணிமாலை, துறைசைச் சுப்பிரமணிய தேசிகர் மாலை என்பவை பெரிதும் பாராட்டற்பாலன. திருவாரூர்த் தியாகராசலீலை, திருவிடைமருதூர் உலா, காழிக் கோவை, எறும்பியீச்சரம் வெண்பா என்பன இவர்தம் பிற சிறுகாப்பியங்களாகும். இவரால் பலவகைச் சித்திரக் கவியும் பாடப்பெற்றுள்ளன. இவரைப்போலத் தமிழிலே அளவிறந்த நற்பாடல்கள் இயற்றினோர் வேறொருவரும் இல்லை. இவராற் செய்யப்பட்ட தனிப்பாடல்களும் பல. குமரகுருபர அடிகளது வரலாறும், சிவஞான முனிவர் வரலாறும் இவராற் செய்யுளில் இயற்றப்பட்டுள்ளன. தம்முடைய பாட்டினை ஒரு தனிச்செய்யுளில் இவர் கொடி முந்திரிக் கனிக்கு உவமித்துள்ளார். அப்பாட்டு வருமாறு:

"முருகார்பூந் தடஞ்சூலவு மாவடுதண் டுறைத்தலத்து
முதல்வா தெய்வத்
திருநாவுக் கரசர்முதன் மூவர்தமிழ்த் தேனுண்டு
தெவிட்டு நிற்குத்

தருநாவுக் கினிமையிஃ தெனக்கொடிமுந் திரிக்கனியான்
றருத லன்பின்
ஒருவேடன் றருதசையு மமிழ்தினுஞ்சீர்த் தெனவுண்ட
வுறுதி கொண்டே.''

சேக்கிழார் பிள்ளைத்தமிழிற் சிறந்ததொரு செய்யுள் வருமாறு :

"பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ
பயனில தாகுஞ் சிந்தா மணிவழி
படர்த லெனப்போதித்
துத்திச் சுவையொரு தோள்வைத் திடுபு
லுயர்த்தோன் மனமடியா
ருறுசெய லுடைப் புரிமதிவலவ
வொலிவரு கந்தர்திற
முத்தித் திறமல வென்றள விலர்பான்
முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ வயற்கண் மடைச்செறி
முத்த மணைத்திணையுந்
தத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ.''

கோபாலகிருட்டின பாரதியார்

கோபால கிருட்டின பாரதியார் என்பவர் நந்தனர் சரித்திரக் கீர்த்தனையும் பிற தனிக் கீர்த்தனைகளும் பாடினர். முத்துராகவ முதலியார் என்பவர் பாரத கீர்த்தனம் பாடியுள்ளார்.

புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான்

புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான் என்பவர் கவி பாடுவதிற் புலியென்று பட்டம் பெற்றவர். இவர் பிற் காலத்தவர்.

வேதநாயகம் பிள்ளை

இவரோடொத்த காலத்தவராய்த் திகழ்ந்த மற்றொரு புலவர் வேதநாயகம் பிள்ளை யென்பார். இவரும் தம் காலத்தவராயிருந்த துறைசை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகரிடம் மிகுந்த நட்புப் பாராட்டியவர். திரிசிரபுரத்துக் கருகிலுள்ள வேளாண்குளத்தூரிலே பிறந்த இவர் சீர்காழி, மாயூரம் (திருமயிலாடுதுறை) முதலிய இடங்களில் 'ஜில்லா முனிசீப்' (District Munsif) ஆக இருந்தவர். இவர் கத்தோலிக் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர். இவர் பொதுநோக்குடையவ ரென்பது இவரது 'சர்வசமய சமரசக் கீர்த்தனை' யால் விளங்கும். நீதி நூல், பெண்மதிமாலை யென்னும் இவர் நூல்கள் செய்யுள் வடிவின. பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி வரலாறு என்னும் இவர் நூல்கள் ஆங்கிலப் புதுக்கதைகள் (Novels) போல்வன. நகைச்சுவை புணர்த்து எல்லாருள்ளத்திலும் நன்கு பதியத்தக்க முறையில் நீதிகளை யெடுத்துக் கூறுவதில் இவர் திறமை வாய்ந்தவர். இவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கருள் ஒருவர் என்றுங் கூறலாம். இவர் கி. பி. 1889-ம் ஆண்டில் இவ்வுலகை நீத்தனர். இவர் தமது வேலையினின்று விலகிய காலைக் கூறிய பாட்டுக்கள் மிகவும் நகைச்சுவை பயப்பன. அவற்றுளொன்று வருமாறு :

" ஆதியையர் சுப்பைய ரப்பைய ரென்றுபய
வாதியைய ராக வருவோர்பேர்—ஓதியே
பன்னாள் கழித்தேன் பரனேயுன் னாமமினி
எந்நாளும் பேசவர மீ."

இவர் சுப்பிரமணிய தேசிகர்மீது பாடிய பாட்டுக்கள் பலவற்றுள் ஒன்று வருமாறு :

" சூர்வந்து வணங்கு மேன்மைச் சுப்பிர மணிய தேவே
நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றிராத் திரியே மீண்டேன்

ஊர்வந்து சேர்ந்தே னென்ற னுளம்வந்து சேரக் காணேன்
ஆர்தந்து சொலினுங் கேளே னவனையிங் கனுப்பு வாயே.''

மதுவூன் உண்ணும் உயர்குலத்தாரைக் கடிந்து இவர் கூறிய பாட்டுக்கள் பலவற்றுள் ஒன்று வருமாறு :

''ஆரண வாயினர் மாடாடு கோழி யடித்தவித்துப்
பாரணஞ் செய்யப் பழகிக்கொண் டார்மது பானத்திலும்
பூரண ராயின ரின்னவர்க் கிந்தத்துற் புத்தி தந்த
காரணங் கண்டயற் கோர்சிரங் கொய்தனன் கண்ணுதலே.'

இராமலிங்க தம்பிரான்

துறைசைச் சுப்பிரமணிய தேசிகர் காலத்திலே பல தம்பிரான்கள் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்தவராய்ப் பாவியற்றும் திறமையோடு திகழ்ந்தனர். அவருட் புலிக்குட்டி இராமலிங்க தம்பிரான் செவ்விய ஆசுகவி பாடுவதில் இணையற்றவர். இவர் காலஞ்சென்று ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாகின்றன. இவர் துறைசை யாதீனத்தைச் சார்ந்த ஒரு கிளைமடத்தில் அமர்ந்திருந்தகாலை, ஆதீனத் தலைநகர்க்கண் வைகப்பெறுமையால் வருந்தின போது, பிற எந்த வாதீனத்திற்காவது செல்லலாமென்று அவ் ஆதீனத்தலைவர் குறிப்பித்ததற்கு விடையாகக் கூறிய பாட்டு:

''கோமுத்தி யடைந்தேன்முன் றருமபுர மெவ்வாறு
குறுகு வேன்பின்
தோமுற்ற சொக்கபுர மிதுவுமொரு பொருளாமோ
துறவி யானேற்
கேமுற்ற குன்றக் குடிவாழ்க்கை மேனெஞ்ச
மிசையு மோசொல்
காமுற்ற கூடலுந்தா னுமோசுப் பிரமணிய
கருணைக் குன்றே.''

'இவரது திருவாயை இவர் அடக்கட்டு'மென்று கூறிய ஒருவர்க்கு விடையாகத் தந்த பாட்டுப் பின் வருவது :

"செந்தமிழ் பாடும்வாய் திருவாய்மற் றெவ்வாயும்
நிந்தை மலஞ்சொரிவாய் நீர்சொரிவாய்—மூந்தவே
நாறும்வா யாரு நகைக்கும்வாய் மூடனே
தேறுவா யிச்சங் கதி."

முருகதாச அடிகள்

முருகதாசசுவாமிகள் என்பார் வண்ணக்கவிகள் இயற்றுவதில் வல்லவர். இவர் திருநெல்வேலியிலே சைவ வேளாண் மரபிலே பிறந்து முருகப் பெருமானைச் சிறப்பாக வழிபட்டு அவ்வழிபாட்டின் பயனாகப் பாவியற்றும் வல்லமை பெற்றவர். இவர் திருச்செந்தூர், பழனி முதலிய திருப்பதிகளிற் சில காலந் தங்கியிருந்து திருவாமாத்தூரில் வதிந்தனர். சென்ற நூற்றாண்டின் இறுதி வரை இவர் திகழ்ந்தனர். தண்டபாணிசுவாமிக ளென்றும், திருப்புகழ்ச்சுவாமிக ளென்றும் இவருக்குப் பெயருண்டு. இவர் தில்லைத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம், ஏழாயிரப் பிரபந்தம் என்னுந் துதிநூல்களையும், திருச்செந்தூர்க்கோவை, திருச்செந்தூர்த் திருப்புகழ், திருமயிலைக் கலம்பகம், சென்னைக் கலம்பகம் முதலிய சிறு காப்பியங்களையும், ஆமாத்தூர்த் தலபுராணம், அருணகிரிநாதர் புராணம் முதலிய புராணங்களையு மியற்றினர். இவர் எழுபது புலவர்கள் வரலாற்றைப் 'புலவர் புராணம்' என்னும் நூலிற் கூறியுள்ளார். வண்ணத் திலக்கணம், அறுவகை யிலக்கணம் என்னும் இலக்கண நூல்களும் இவர் இயற்றினரென்ப. இவர் சந்தப்பாடல்கள் மிகநெடியன. இவர் நெய்தற்றொழிலை வியந்துகூறியதாகச் சொல்லும் பாட்டு இது.

"செய்யுந் தொழிலனைத்துஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை—வையகத்தில்
தெள்ளு தமிழ்வேதஞ் செப்பியநாட் சீர்படுத்தும்
வள்ளுவனார் கொண்டதல்ல வா."

முத்துராமலிங்க சேதுபதி

முத்துராமலிங்க சேதுபதி என்பார் இந் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே இராமநாதபுரம் மன்னராய்த் திகழ்ந்து பன்னூல்க ளியற்றியவர். முருகர் அநுபூதி, பிரவாகர மாலை, வள்ளிமணமாலை, சரசசல்லாபமாலை, சடாக்கர சாரப் பதிகம், நீதிபோதம், பால போதம் முதலியன இவரியற்றிய நூல்கள். இவர் சிலேடை பாடுவதில் மிகுந்த ஆற்றலுடையவர். இவர் பெருங் கொடைவள்ள லாய்த் திகழ்ந்து கி. பி. 1873-ல் விண்ணுல கடைந்தனர்.

பாற்கர சேதுபதி

இவர் குமாரர் பாற்கர சேதுபதி தமிழறிவு சான் றோராயிருந்தமையோடு நாவலர்க்கும் வரையாது வழங் கிய கொடைவள்ளல். அவர் சிவபதம் உற்றகாலை வேம்பத் தூர்ப் பிச்சுபாரதியார் என்பார் பாடிய பாட்டு,

" மையினையுஞ் சிந்தா மணியினையும் வென்றகொடைக்
கையினையும் வாய்ப்பிரசங் கத்தினையும்—துய்யபுகழ்
நின்றைக் காளத்தி நிகர்பாற் கரபூபா
என்றைக்குக் காண்போ மினி."

சின்னச்சரவணப் பெருமாள் கவிராயர்

சின்னச் சரவணப்பெருமாள் கவிராயர் என்பவர் பெரிய சரவணப்பெருமாள் கவிராயருக்குப் பேரர். இவர் திருச்சுழிய லந்தாதி, (கழுகுமலை ஒரெழுத்தந் தாதி), புவனேந்திர னம்மானை, கயற்கண்ணி மாலை, கந்த வருக்கச் சந்த வெண்பா, குன்றக்குடிச் சிலேடை வெண்பா என்னுஞ் சிறு காப்பியங்கள் பல இயற்றினவர். இவர் பாற்கர சேதுபதி அரண்மனைப் புலவராயிருந் தவர்.

பொன்னுசாமித் தேவர்

இராமநாதபுரம் சிற்றரசில் தலைமை அதிகாரியா யிருந்த பொன்னுசாமித்தேவர் முத்துராமலிங்க சேது பதிக்கு மூத்தவரென்ப. இவர் ஆறுமுக நாவலர் காலத்தில் மிகப் புகழுடன் விளங்கினர்; இவர் யமகம் பாடுவதில் வல்லவர்; கடல் வருணனையொன்று பாடியுள்ளார்.

முத்துவீரப்ப பிள்ளை யென்னும் புலவர் இவரோடுடன் பயின்றனர். இருவருந் தம்முள் கடவுளுண்மையைப்பற்றி வழக்கிட்டு வினாவிடைகளாகப் பல பாடல்கள் பாடியுள்ளார்.

திருநெல்வேலிப் போற்றிமுத்துப் பிள்ளை யென்பவர் பொன்னுசாமித் தேவரைப் பற்றி மிக அழகாகப் பாடியுள்ளார்.

"இப்புவியி லென்கவலை யெப்பொழுது தீருமினி
யேதுமொரு வழியுமறியேன்
ஈசனார் தம்மிடம் பேசுவோ மென்னினு
மிரந்தவனு மலைகிருனே
மற்புயன் றிருமா லிடத்தினிற் செல்லவோ
மண்ணுண் டுறங்கினனே
மலரயனு மனமெடுத் தலைகிறு னேபுதுவை
வளர்பொன்னு சாமிசமுகம்
இப்பொழுது சேரலா மொப்பிலா மூத்த மிழி
லெதினும்வல் லவனச்சுதே
என்கவி யவன்செவிக் கன்பா யிருக்குமோ
விருநிதிய முதவுவானோ
செப்புநீ புகலிடம் ஞானநெறி யடையவோ
சித்தமொரு நிலையில்லையே
தினமெனுளம் வேண்டவரு கருணைமழை சார்ந்துபொழி
திருவருள்செய் காந்திமதியே"

திரிசிரபுரம் கோவிந்தபிள்ளை யென்பவரும் பொன்னுசாமித் தேவரைப் பாடியுள்ளார். இவர் 1890 வரை

நிலவுலகிற் றிகழ்ந்தவர். இராசமன்னார்கோயில் தல புராணமும் அலங்காரக் கோவையும் இவர் இயற்றினர்.

விறலிவிடுதூது பாடிய சீரங்க அட்டாவதானியார் வேறு; முத்துராமலிங்க சேதுபதி யவர்கள் அரண்மனைப் புலவராயிருந்த அட்டாவதானம் கிருட்டிணையங்காரென்பவர் வேறு.

பொன்னுசாமித் தேவர் காலத்திலே முதுகுளத்தூரில் சுப்பிரமணியபிள்ளை யென்பவரும் சிறந்த புலவராய்த்திகழ்ந்தனர். முன்னையவர் நாலுமந்திரி கதை, பஞ்சதந்திரம், வீரகுமார நாடகம், விடநிக்கிரக சிந்தாமணி யென்னுஞ் செய்யுள் நூல்களை இயற்றியவர். இவர் கூறு ஆண்டு நிலவுலகில் திகழ்ந்தவர். பூவாருசாமிப்பிள்ளையின் மகனார் ஆறுமுகம்பிள்ளை யென்பவர் அரிச்சந்திர வெண்பாவையும், மதுரை யமக வந்தாதி முதலிய சிறு காப்பியங்களையு மியற்றினர்.

பொன்னுசாமித் தேவர் காலத்திலேயே சோழநாட்டிலே தில்லையாம்பூரிற் பிறந்த சந்திரசேகர கவிராயர் என்பவர் தனிப்பாடற்றிரட்டு என்னும் புத்தகத்தை யச்சிட்டனர். இவர் துலக்காணத்தம்மன் பதிகம் ஒன்று பாடினர். இவர் இயற்றிய சோதிட நூல் வருடாதி நூலென்ப.

பாண்டித்துரைத் தேவர்

பொன்னுசாமித் தேவர்களின் மகனாராகிய பாண்டித்துரைத் தேவர்கள் இப்போதுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிலைநாட்டினவர். இவர் தமிழிலக்கண இலக்கிய ஆராய்ச்சியும், சைவ நூலறிவும் நன்குடையவர். இவர் சைவமஞ்சரி, துதிமஞ்சரி, பன்னூற்றிரட்டு என்னுந் தொகை நூல்களை இயற்றியுள்ளார். ஆசிரியர் சிவஞான

யோகிகள் மீது இனிமை மிக்கதோர் இரட்டை மணிமாலை இவர் பாடினார். இராச இராசேச்சுவரி பதிகம் ஒன்று இவர் தமது தெய்வத்தின்மேற் பாடினாராம். இவர் சிவஞான சுவாமிகள் மீது பாடிய இரட்டைமணி மாலையில் ஒரு செய்யுள் வருமாறு:

"கலைதேர்நமச்சி வாயகுரு கருணைக்கடலிற் றிளைத்தாடிக்
கலகப்பாசத் தொடரறுத்துக் காமத்தறியை யறவீழ்த்தி
யலையுஞ்சமய தருக்களைக்கீ ழடிவேரோடு மகழ்ந்தெறிந்திட்
டருளின்படாத்தை முகமேற்கொண் டாதிவேதா கமங்களெனுந்
தொலையாமணிக ளிருமருங்குந் தொனிக்கச் சைவ மதம்பொழிந்து
துங்கமோடு மூலகமுற்றுஞ் சுற்றும்வெற்றி வாரணமே
மலையாதருளு முனிவர்சிகா மணியேவருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான வள்ளால்வருக வருகவே."

எட்டயபுரமும் சேற்றூரும்

பாண்டிய நாட்டுச் சேற்றூர்ச் செமீன்தாராய் விளங்கிய சுந்தரராசு பாண்டியரென்பார் ஒரு சிறந்த பாவலர். அவர் தலயாத்திரைக் கவிகளும் திருவிழாக் கவிகளும் பல இயற்றியுள்ளார். அவரும் சுப்பிரமணிய தேசிகர் காலத்தவரே.

சுந்தரராசு பாண்டியர்க்கு ஆசிரியராக இருந்த அரண்மனைப் புலவர் இராமசாமிக் கவிராய ரென்பவர் பல அருமையான பாடல்கள் பாடியுள்ளார்.

முகவூர்க் கந்தசாமிக் கவிராயர் என்பார் சேற்றூர்ச் செமீனில் அரண்மனைப் புலவர் பரம்பரையில் வந்தவர். அவர் சுப்பிரமணிய தேசிகரோடு ஒருசாலை மாணாக்கர்; நினைவாற்றலும் சொற்பொழி வாற்றலும் உடையவர்; 1823 முதல் 1877 வரை நிலவுலகில் வாழ்ந்தவர்.

அவர் மகனார் மீனாட்சிசுந்தரகவிராய ரென்பவர் எட்டயபுரம் செமீனில் அரண்மனைப் புலவராயிருந்தார்.

எட்டயபுரம் இளவரசர்மீது ஒருதுறைக்கோவை, முருகர் அனுபூதி, குதிரைமலைப் பதிகம், கழுகுமலைத் திரிபந்தாதி முதலிய நூல்கள் இவராலியற்றப்பட்டுள்ளன. யமகம் பாடுவதில் மிக்க திறமை வாய்ந்தவர்.

"கண்டுவண்டு நிகர்மதுர மொழிவிழிமா துன்பவனி
காதல் கொண்டு
கண்டுவண்டு கரநழுவ வுடைநெகிழ வணைவிரித்த
காம னம்பின்
கண்டுவண்டு மதிமயங்கு மிவளையணை புராணமிலக்
கணமோ டேநி
கண்டுவண்டு திகள்பெருக வுணரிருத யாலயசிங்
கார மாலே."

இராச செகவீர ராமகுமார எட்டயப்ப மன்னன் வேண்டுகோளின்படி குவலயாநந்தம் இவரால் மொழி பெயர்க்கப்பட்டது.

சேற்றூர்ச் செமீனில் திகழ்ந்த இராமசாமிக் கவிராயரின் மக்கள் மூவர். அவர்களுள் மு. ரா. அருணசல **கவிராயர்** என்பார் சிவகாசித் திருப்பதிப் பெருமான் மீது பல சிறு காப்பியங்கள் செய்தவர். சிவகாசிப் புராண மொன்றும் இவர் இயற்றியுள்ளார். பல அந்தாதிகளும் பல பிள்ளைத்தமிழ்களும் பல பதிகங்களும் இவர் இயற்றியிருக்கிறார். 'குறுக்குத்துறைச் சிலேடை வெண்பா' என்பதும் இவர் பாடியதே. ஆறுமுக நாவலர் வரலாற்றை இவர் பாட்டில் அமைத்துள்ளார். இவர் திருச்செந்தூர்ப் புராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருக்குற்றலப் புராணம் முதலிய புராணங்களுக்கு உரைநடை நூல்கள் வகுத்துள்ளார். 'சிவரகசியம்', 'கம்பராமாயண ஆரணிய காண்ட உரை' முதலியவற்றை இவர் அச்சிற் பதிப்பித்துள்ளார். இவர் பாடல்களுட் சில வருமாறு:—

“சேற்றூர் மிகச்சீதஞ் செய்யுமென்றோ செம்பொனுயர்
மாற்றூரு மேனி மழகளிறே—போற்று
மயிலுகந்த கந்தர்முன்பு வந்துதித்த தேவே
வெயிலுகந் திருந்த விதம்.”

“வடவேங் கடமலையில் வாழ்முருகா நிற்கும்
திடமோங்கு நின்சீர் தெரிந்து—மடமோங்க
நாமத்தைச் சாத்தினார் நம்மையுமென் செய்வாரோ
காமுற்றிங் காரிருப்பர் காண்.”

இவருடைய தம்பி சுப்பிரமணிய கவிராய ரென்பவர் திருவாவடுதுறை அம்பலவாணதேசிகர் காலத்தே ஆதீனப் புலவராய்த் திகழ்ந்தனர். இவர் ‘ஞானமிருத’த்தை அச்சிற் பதிப்பித்துள்ளார். ‘செப்பறைப் பிள்ளைத்தமிழ்’ இவரால் இயற்றப்பட்டது.

இவர் உடன்பிறந்தார் கந்தசாமிக்கவிராயர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்நூற் பரிசோதகராயிருந்து ‘தனிச் செய்யுட் சிந்தாமணி’ இயற்றியவர்.

துரியகவி திருமலைக்கொழுந்து கவிராய ரென்பார் இற்றைக்குச் சுமார் 80 ஆண்டுகட்கு முன்னர்ச் சிக்கிலி ஐயர் குளம் என்னும் ஊரிலே கம்மாள மரபிற் பிறந்தவர். இவர் மதுக்குடியில் நோக்கமுள்ளவர்போல் சில அடிகள் இயற்றியுள்ளார்.

“தாசீசா வொன்றைத் தராவிடிலோ இன்றைக்கு
நீசீசா வென்றே நிகழ்த்துவேன்”

என்றது காண்க.

அழகிய சொக்கநாதபிள்ளை யென்பவர் திருநெல்வேலியைச் சார்ந்த தச்சநல்லூரிற் பிறந்து நெல்லைக் காந்திமதியம்மைமீது பிள்ளைத்தமிழ்மாலை, அந்தாதி முதலியன பாடினவர். இவர் தம்மைப் போற்றிவந்த முத்துசாமிப்பிள்ளை யென்பார்மீது ‘காதல’ லொன்று பாடியுள்

ளார். இவர் சிலேடை பாடுவதில் வல்லவர். சில வருமாறு :—

சிவனுக்கும் தேங்காய்க்கும் :—

" கல்லா லடியுறலாற் கண்மூன் றிருப்பதனல்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையாற் கங்கா குலமுத்து சாமிமன்னு
கள்ளிதழி யானிகர்தேங் காய்."

தாம்பிரபன்னிக்கும் சந்திரனுக்கும் :—

" மீனைப் பொருந்திடலான் மிக்ககலை தேர்ந்திடலால்
தானக்க மண்டலமே சார்ந்திடலான்—மானத்தால்
அம்புவிக்கோ ராபரண மானமுத்து சாமிமன்னு
செம்புந்தி நேர்சந் திரன். "

இவர் 1885-ல் காலஞ்சென்றவர். இவர் அடைமொழியின்றிப் பாடிய பாட்டுக்களில் ஒன்று வருமாறு :-

"நாய்நரிசிங் கம்மாடா னைமிளா பன்றிகடு
வாய்குதிரைக வரிமான்புல்—வாயொட்
டகங்கழுதை யாட்டுக்க டாபுலிகாண் டாமி
ருகங்க ரடியெ ருமை."

மகம்மதியர்களுக்குள் குணங்குடி மத்தான் சாயபு என்பவருடைய பாடல்கள் மிகவும் அன்பு விளைப்பன. 'அகத்தீசர் சதகம்', 'நந்தீசர் சதகம்' முதலிய சிறுகாப்பியங்களும் தனிப்பாடல்களும் இவர் இயற்றியுள்ளார். இவர் வாலையை வழிபட்டுச் சித்தமார்க்கத்தில் நின்றவர்; 'கிறித்துமத கண்டன வச்சிரதண்டம்' என்னும் ஒரு நூல் இயற்றியுள்ளார். இவர் மகமது நபியையும் பாடினவர். இவர் காலம் இந்நூற்றுண்டின் முற்பகுதியென்றும், 18-ம் நூற்றுண்டென்றுங் கூறுவாருமுளர். தேவகோட்டைச் சின்னைய செட்டியா ரென்பவர் வன்றொண்ட செட்டியா ரென்பார்க்கு மாணவராய் அவர்பால் இலக்கிய நூலறிவுஞ் சித்தாந்த நூலறிவும் பெற்றவர். இவர் 'தேவைத்

திரிபந்தாதி', 'அருணைச் சிலேடை வெண்பாமாலை' செய்தவர். இவர்தம் சொற்பொழிவுகள் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன.

கல்விக் களஞ்சியப் புலவரென்பவர் மதுரையையடுத்த மேலூரிலே உமாறுப் புலவர் மரபிலே பிறந்தவர். 'சீராப் புராண வண்ணம்,' 'சித்திரக் கவித்திரட்டு' என்னும் நூல்கள் இயற்றியவர். இவர் முருகர்மீதும் பல பாடல்கள் பாடியுள்ளார்.

திருநெல்வேலியிலே கிருட்டினபிள்ளை யென்ற கிறித்துவப் புலவரொருவர் கிறித்து சமயச் சார்பான இரட்சணிய யாத்திரிகம் முதலிய பல நூல்கள் இயற்றியுள்ளார்.

தேவராய சுவாமி யென்பவர் 'கந்தர் சட்டிக் கவசம்' என்னும் ஒரு சிறு நூல் இயற்றியுள்ளார்.

சுப்பிரமணிய புலவரென்னும் மருத்துவப் புலவர் 'பதார்த்தகுண சிந்தாமணி', 'தைலவருக்கச் சுருக்கம்' முதலியன இயற்றினர்.

சுமார் 75 ஆண்டுகட்குமுன் சென்னையில் வசித்த முத்துராம முதலியா ரென்பவர் மகாபாரதக் கீர்த்தனம் என்னும் இசை நூல் இயற்றியுள்ளார். கீலநூர்ச் சோதிட சார்வ பௌமர் என்பவர் சாதகாலங்கார மென்னும் சோதிட நூல் இயற்றியுள்ளார்.

சென்னையில் வசித்த காசி விசுவநாத முதலியா ரென்பார் டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம் என்னும் நாடக நூல்களையும், வேதப்பொருள் விளக்கம், யாப்பிலக்கண வினவிடை யென்னும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

சென்னை இராசதானிக் கலாசாலையில் கணிதநூற் பேராசிரியராய்த் திகழ்ந்த ராவ்பகதூர் அரங்கநாதமுதலி

யார் எம். ஏ. என்பார் தமிழறிவு சான்றோராய்க் 'கச்சிக் கலம்பக' மென்னும் சிறுகாப்பிய மொன்றை இயற்றினர்.

திருவனந்தபுரம் அரசினர் கலாசாலையில் தத்துவ சாத்திரப் பேராசிரியராய்த் திகழ்ந்த சுந்தரம் பிள்ளை எம். ஏ. 'மனோன்மணீய' மென்னும் அழகிய நாடகக் காப்பியத்தை மக்களியற்கை செவ்விதின் விளங்கும் நயஞ் செறிந்திலங்க இயற்றியுள்ளார். இவருடைய தத்துவக் கொள்கையை அதற்கு உள்ளீடாகவும் அமைத்தனர். இப்பொழுதுள்ள தமிழ் நாடகக் காப்பியங்களில் தலையாயது இவருடைய நூலே. அதில் இவர் கூறியுள்ள தமிழ்த்தெய்வ வணக்கம் யாவராலும் போற்றற்பாலது. இவர் செய்த 'நூற்றொகை விளக்க' மென்னும் ஓரரிய நூல் ஆங்கிலத்திலும் தமிழிலுமுள்ள நுண்ணூல்களைத் தொகுத்து வகுத்துக் காட்டுவது.

இவர் இக்காலத் தமிழ் ஆராய்சிக்கு அடிப்படை கோலியவர். தமிழும் தமிழரும் ஆரிய வகுப்பு முறையுட்படாத தனிப்பெருமை உடைமையை நிலைநாட்டித் தமிழ்ப்புலவர் கண்ணைத் திறந்தவர். தமிழாராய்ச்சிக் குறைபாடுடைய ஐரோப்பிய ஆரியப் புலவருடைய தப்புக் கொள்கைகளைக் கண்டொதுக்கித் தமிழ் வரலாற்றின் உண்மையை விளக்கும்பொருட்டு இவரியற்றிய நூல் 'திருஞானசம்பந்தர் காலநிச்சய' மென்னும் ஆங்கிலக் கட்டுரையாகும். இவர் நெடுநாளிருந்து தமிழர்க்கு நலம் புரியாது 1897-ல் இவ்வுலகை நீத்தமை தமிழ்மக்களது தவக்குறைவே.

யாழ்ப்பாணத்துப் புலவர்களுள் சங்கரபண்டிதரென்பார் சுமார் அறுபது ஆண்டுகட்கு முன் திகழ்ந்தவர். அவர் வேளாள மரபினர். அவர் வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தலினும், சைவ சமயத்தை நாட்டுதலி

லும் மிக வல்லவர். அவர் 'சைவப்பிரகாசனம்' என்னும் தருக்க நூல் இயற்றியவர். 'சிவதூடண கண்டனம்' 'கிருத்து மத கண்டனம்' என்பன இவர்தம் மறுப்பு நூல்கள். சிவபூசையந்தாதி முதலியவற்றிற்கு இவர் உரையும் எழுதியுள்ளார். இவருடைய மகனார் சிவப்பிரகாசப் பண்டிதரும் வடமொழி வல்லுநரே.

யாழ்ப்பாணத்து உடுப்பட்டிச் சிவசம்புப் புலவரென்பவர் பாற்கர சேதுபதியின் மீது 'கல்லாட சாரக் கலித்துறை' யென்னும் நூல் இயற்றியுள்ளார். செந்தில் யமக வந்தாதி, புலோலி நான்மணிமாலை, யாப்பருங்கலக் காரிகை உரை முதலியன இவர் இயற்றிய பிற நூல்கள்.

சங்கர பண்டிதரின் மாணுக்கராகிய முருகேசபண்டிதரென்பவர் இலக்கணப் பயிற்சி மிக்குடையவர். இவர் சுன்னுகம் குமாரசாமிப் புலவர்க்கு ஆசிரியர். மயிலணிச் சிலேடை வெண்பா, நீதிநூறு, சந்திரசேகர விநாயக ஊஞ்சல் முதலிய நூல்கள் இவருடையன. நடுவெழுத்தலங்கார முதலிய சித்திரக் கவிகள் பாடுவதில் இவர் வல்லவர். புராண விரிவுரை செய்வதிலும் இவர் வல்லவர்.

சிவசம்புப் புலவரின் மாணுக்கராகிய கணபதிப் புலவர் வடமொழிப்பயிற்சி மிக்கவர். இவர் 'வில்கணீயம்' என்னும் வடமொழிக் காப்பியத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர்.

வண்ணார்பண்ணைக் கணேச பண்டிதரென்பார் இவரின் வேறுவார். இவர் இளைசைப் புராணம் இயற்றியவர்.

மானிப்பாய் சதாசிவபிள்ளை யென்னும் சிறித்துவப் புலவர் பாவலர் சரித்திர தீபகம், நன்னெறிக்கதா சங்கிரகம் முதலிய நன்னூல்களியற்றினர்.

யாழ்ப்பாணங் கணபதியைய ரென்பவர் பல நாடகங்கள் இயற்றியுள்ளார். அதிரூபவதி நாடகம், அபிமன்னு

நாடகம்,அலங்கார ரூபவதி நாடகம், மலையகந்தி நாடகம், வைத்தியலிங்கக் குறவஞ்சி என்பன இவர் இயற்றியவை. இவரும் சணேச பண்டிதரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. இவர் 'இயேசுமத சங்கற்ப நிராகரண' மென்னும் அரிய நூலின்வாயிலாகக் கிறித்துமதத்தின் கொள்கையும் மறுப்புங் கூறியுள்ளார்.

தமிழையுந் தமிழ்ப்புலவர் பலரையுங் காத்துவந்த யாழ்ப்பாணம் உடுப்பட்டிக் கதிரைவேற்பிள்ளை யென்பார் ஒரு பெரிய அகராதி தொகுத்தவர்.

டாக்டர் கால்டுவெல் என்னும ஆங்கிலப் பாதிரியார் திருநெல்வேலிச் சில்லாவில் இடையன்குடி யென்னுமிடத்தில் நெடுநாள் வதிந்திருந்தார். தமிழ் ஆராய்ச்சி செய்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தமிழ்க்கிளைமொழிகளையும் நன்கு கற்று, இம்மொழிகளின் இலக்கணங்களனைத்தையும் ஒப்பிட்டு மொழிநூல் உண்மைக்கு ஏற்றவாறு ஒப்பிலக்கண மென்று ஆங்கிலத்திற் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரேயே இயற்றியுள்ளார். அது தமிழ்மக்களாற் போற்றற்பாலது.

டாக்டர் ஜீ. யூ. போப் என்பவர் சைவ சித்தாந்த நூல்களை இனிது கற்று மிக ஆர்வத்தோடு திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் செவ்விய உயர்தர முறையில் அச்சிட்டுள்ளார். இவர் திருக்குறளினையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவர் மிகுந்த தமிழ்ப்பற்றுடைய ரென்பது இவர் இவ்வுலகம் நீத்ததற்கு இடும் நினைவுக்கல்லில் 'தமிழ் மாணவர்' என்று குறிக்கப்படுவதனால் விளங்கும். ஆசிரியர் திருவள்ளுவனாரை 'மன்பதைப் பெரும் பாவலர்*'ரென்று இவர் கூறியது காண்க.

* Bard of universal man.

பாண்டிநாட்டிற் கரிவலம்வந்த நல்லூருக்கு அடுத்த சென்னிகுளம் என்னும் சிற்றூரிலே பிறந்து, சேற்றூர், ஊற்றுமலை யென்னும் செமீன்களிலே அரண்மனைப் புலவராய்த் திகழ்ந்தவர் **அண்ணாமலை ரெட்டியார்.** இவர்தம் காவடிச் சிந்து, சிந்துகள் யாவற்றினுஞ் சிறந்ததென்ப. சொல் வளமும் ஆற்றொழுக்கும் அதன்கண் அமைந்திருப்பது போல யாண்டுங் காண்டலரிது. 'சங்கரநாராயண கோயிற் றிரிபந்தாதி' 'நவநீத கிருட்டினன் பிள்ளைத்தமிழ்' என்பன இவரியற்றிய பிற நூல்கள். இவர் கி. பி. 1890-ம் ஆண்டில் இவ்வுலகை நீத்தனர்.

இனிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்த உரைநடைநூல் வரலாற்றைப்பற்றி ஆராய்வோம்.

சென்னை **வீராசாமிச் செட்டியா** ரென்பவர் 1856-க்குப் பின் 'விநோதரச மஞ்சரி' யென்னும் உரைநடைநூல் எழுதினர். இவர் தெளிதமிழ் நடையிற் பல அரும்பொருள்களைப் பற்றியும், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகம், காளிதாசர் முதலிய புலவர்களைப்பற்றியும் கட்டுரைகள் எழுதித் தொகுத்துள்ளார்.

பொன்னுசாமித் தேவர் காலத்திலிருந்த சோழநாட்டுக் கபித்தலம் **துரைசாமி மூப்பனார்** என்பவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். அவர் அயோத்திமா நகர மான்மியம், மகாபாரதச் சுருக்கம், கம்பராமாயண அருங்கவிப் பொருள் விளக்கம், சானகி பரிணயம் என்னும் பெரு நூல்களை யியற்றினவர்.

முடிச்சூர் **அப்பாவு முதலியா** ரென்பவரும் வைணவச் சமயத்தினரே. இவர் கூரேசவிசயம், தென்னாசாரியப்பிரபாவ தீபிகை, சற்சம்பிரதாய தீபிகை, விட்டுணுதத்துவ விளக்கம், இராமானுச நூற்றந்தாதியுரை என்னும் சமய

நூல்களை யியற்றினர். இவரியற்றிய கண்டன நூல்களுக்கு மறுப்பெழுதியவர் சோமசுந்தரநாயகர்.

சென்னை ஆதிமூல முதலியா ரென்பவர் 'கதா சிந்தாமணி' யென்னும் நூலியற்றியவர். இவர் வின்சுலோ அகராதிக்குத் துணை புரிந்தவர்.

காஞ்சிபுரம் சபாபதி முதலியா ரென்பவர் பச்சையப்ப முதலியார் கலாசாலையில் தலைமைத் தமிழ்ப்புலவராயிருந்தவர். இவர் 'சைவசமய விளக்க வினவிடை', 'பிரமோத்தர காண்டப் பொழிப்புரை' என்னும் நூல்களியற்றினர். இவர் சந்தநயமிக்க தனிப்பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

சிந்தைகுடி கொண்டெனது செந்தமிழ்ப ரிந்தினிது
தொந்தமொடு வந்தருள்சொ ரிந்துமல—பந்தமற
வேயருளு மீசரொரு வேயடியி லேயுறைவர்
ஆயுமறை பேசவரி யார்.

தொழுவூர் வேலாயுத முதலியா ரென்பவர் இராசதானிக் கலாசாலையில் தலைமைத் தமிழாசிரியராய் இருந்தன ரென்ப. இவர் 'திருவெண்காட்டடிகள் வரலாறு', 'வேளாண்மரபியல்', 'சங்கரவிசயம்' என்னும் உரை நூல்களியற்றியவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் திகழ்ந்த இரு பேரறிவாளர் சபாபதிநாவல ரென்பாரும், சோமசுந்தர நாயகருமாவர். இருவரும் சைவசித்தாந்தப் பெரும்புலவராவர். சபாபதி நாவலர் யாழ்ப்பாணத்துள்ள வடகோவையிற் பிறந்து கல்வி பயின்று தில்லையிற் பல நாள் வதிந்தவர். இவர் திருவாவடுதுறை ஆதீனப்புலவராயுந் திகழ்ந்தனர்; உயர் தமிழ் நடையிற் சொற்பொழிவாற்றும் ஆற்றலுடையவர். இவர் சிவஞானபாடியத்தைத் தெளிவுறக்கற்றுச் சிந்தாந்த முடிபுணர்ந்து சிவஞான முனிவரைத் தமது குலதெய்வமாகக் கொண்டார்; சிதம்பர

சபாநாதர் புராணம், சிவகருணாமிர்த மொழிபெயர்ப்பு, பாரததாற்பரிய சங்கிரகம், இராமாயண தாத்பரிய சங்கிரகம் என்னுஞ் செய்யுள் நூல்கள் இயற்றினரேனும் **திராவிடப் பிரகாசிகை** யென்னும் இவரது செவ்விய உரைநடையிலக்கியமே இவரது பேரை நிலைநிறுத்துவதாகும். இவர் ஆறுமுக நாவலரின் மாணாக்கரென்ப.

ஆறுமுக நாவலரின் மருகரும் மாணாக்கருமாகிய **பொன்னம்பலபிள்ளை** யென்பார், சிறந்த நற்றமிழ்ப் புலவர். அவர் கம்பராமாயணச் சொற்பொழிவிற் றலைசிறந்தவர்; பாரதத்தில் ஆதிபருவத்திற்கு உரை வகுத்தவர்.

சோமசுந்தர நாயகர் (1846-1901) சென்னைச்சூளையில் வதிந்தவர். வடமொழி தென்மொழி யென்னும் இருமொழிச் சமய நூல்களையும் நிலைக்கண்டுணர்ந்தவர். இவர் யாவருள்ளத்தையும் கவரும் சமயச் சொற்பொழிவு இயற்றுவதில் இணையற்ற திறமை வாய்ந்தவர். இவர் பாற்கர சேதுபதியின் பேரவையின்கண் 'வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்' என்னும் பட்டம் பெற்றவர்; வைணவ முதலிய பரசமயங்களைக் கண்டிப்பதில் வல்லவர். இவர் திருஞானசம்பந்தப் பெருமானைத் தமது குலதெய்வமாக வழிபட்டவர்; சைவசமய உண்மைகளை உலகினர்க்கு விளக்கும்பொருட்டுப் பலப்பல உரைநடை நூல்களியற்றியவர். இவர்தம் உரைநடை நூல்கள் சமயச்சார்பின ஆதலால், வடமொழிக் கலப்பு மிக்கன; சொல்வளமும் மறுப்பு நயமும் ஆண்மைச் சுவையும் பொதுளித் திகழ்வன. இவர் இயற்றிய செய்யுட்கள் மிகுதியும் செந்தமிழ்ச் சொற்களாலாயனவே. இவரியற்றிய நூல்கள் ஆசாரியப் பிரபாவம், சிவபாரம்மியப் பரதெரிசினி, சிவாதிக்ய ரத்நாவளி, மெய்கண்ட சிவதூடண நிரோதம்,

சித்தாந்த சேகரம், ஆபாசஞான நிரோதம், வேதசிவாகமப் பிரமாணியம், பிரமாநுபூதி, சிவநாமப் பஃறொடை வெண்பா முதலியன.

தமிழ்ப் பெரு நூல்களை அச்சியற்ற முயன்றவருள் மிக உழைத்தவர் யாழ்ப்பாணம் ராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை (1832-1901) யென்பார். சுன்னாகம் முத்துக்குமார கவிராயரிடம் இவர் கல்வி பயின்றவர். இவர் ஆங்கில மொழியிலும் வல்லவராய்ப் புதுக்கோட்டை நீதிமன்றத் தலைவராய் இருந்தவர். இவர் வீரசோழியம், இறையனாரகப்பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரம், இலக்கண விளக்கம் என்னும் பெருநூல்களை ஆராய்ச்சி மிக்க பதிப்புரையோடு வெளியிட்டனர். இவர்தம் பதிப்புரைகள் ஆராய்ச்சிக் கட்டுரைக்கு எடுத்துக்காட்டாவன. இவர் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். யாழ்ப்பாணத்தில் ஏழாலை யென்னுமிடத்தில் தமிழ்ப் பாடசாலை யொன்று தாபித்து, முருகேச பண்டிதர் வாயிலாகவும், குமாரசாமிப் புலவர் வாயிலாகவும் தமிழ்க் கல்வியைப் பரப்பினவர். இவரது அச்சியற்றுந் திறத்தைக் குமாரசாமிப் புலவர் புகழ்ந்து பாடிய செய்யுள் வருமாறு:—

"ஏட்டி லிருந்த அருந்தமிழ் நூல்க ளெனைப்பலவும்
தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்குப செந்தமிழ்சேர்
நாட்டி லளித்துயர் தாமோ தரேந்திரன் நண்ணுபுகழ்
பாட்டி லடங்குந் தகைத்தோ புலவர்கள் பாடுதற்கே."

அதிகாரம் ௨௫

தற்காலம்

(கி. பி. இருபதாம் நூற்றாண்டு)

இந் நூற்றாண்டிலே உரைநடை நூல்கள் மிகுதியாக எழுதப்படுவன ஆயின. மேலைநாட்டுச் சார்பினால் வரலாற்றாராய்ச்சி முறையைத் தமிழறிஞர் பலர் கைக்கொள்வாராயினர். தமிழ்ச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதற்குரிய அவைகள் பல இடங்களிற் றோன்றின. அச்சுக்கூடங்களும் முன்னையினும் மிகுதியாயின. தமிழ் நூல்களையும் ஆங்கில நூல்கள் போலச் செவ்வையான அச்சிற் பதிப்பித்துக் கண்கவர் வனப்புடன் வெளியிடும் முயற்சியும் ஏற்படலாயிற்று. இம் முயற்சியிற் றலைசிறந்த சங்கம் 'தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்'. இக் கழகம் சிறப்புறத்தோன்றி நடைபெறுவதற்கு இதனை நிறுவியவரும், இதன் அமைச்சருமாகிய வ. திருவரங்கம் பிள்ளையின் விடாமுயற்சி பாராட்டத்தக்கது. இதில் ஊக்கத்தோடு தனியே உழைத்தவருட் சிறந்தவர் சென்னைப் போலீசு உயர்தர வேலையிலிருந்து காலஞ்சென்ற கனம் பவானந்தம் பிள்ளையாவர்.

இந் நூற்றாண்டிற் செய்தித்தாள்களும் மிகவாயின. நாடகங்களும் புதுக்கதைகளும் புலவராலும் பாமரராலும் அளவின்றி இயற்றப்பட்டன. உயர்தரத் தமிழ்க்கல்வி பயின்று தேர்தற்குரிய தேர்வுகள் தென்னாட்டிலும் இலங்கையிலும் சில தமிழ்ச் சங்கங்களால் ஏற்படுத்தப்பட்டன. ஆராய்ச்சி முறை புதுவதாகத் தோன்றியபின்னர்த் தமிழ்ப்புலவோர் வடமொழிச் சார்பினரும், தனித்தமிழ்ச் சார் பினருமாக இருவகைப் படுவாராயினர். மதுரைத்

தமிழ்ச் சங்கமும், கரந்தைத் தமிழ்ச்சங்கமும் முறையே இரு வகைச் சார்பிற்கும் எடுத்துக்காட்டாகும்.

அரசாங்க சம்பந்தமான புதினத்தாள்களிற் சில செவ்விய தமிழ்நடையை மேற்கொண்டன. சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் தமிழ்வளர்ச்சிக்குரிய சில முறைகள் தழுவப்பட்டுள்ளன. (மாட்சிமை தங்கிய ஆங்கில அரசரால் அளிக்கப்பட்ட பொருள்கொண்டு தமிழகராதி நூலொன்று ஆறு பெரும் புத்தக வடிவமாக ஆக்கி அமைக்கப்பட்டுள்ளது.) அதன் முக்கிய பதிப்பாசிரியர் ராவ் சாகிப். எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் பி. ஏ. பி. எல். ஆவர். இன்னும் சென்னைச் சைவசித்தாந்த சமாச அமைச்சர் திருவாளர். ஏம். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் பி. ஏ. பி. எல்., முயற்சியால் திருமுறை நூல்களும், மெய்கண்ட நூல்களும், திருப்புகழ், நாலாயிரப் பிரபந்தம், சங்க இலக்கியம் முதலியவைகளும் நல்ல அச்சில் பதிக்கப்பெற்று, அடக்க விலைக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (நூல் வெளியீட்டு முயற்சியில் சென்னை இராயப்பேட்டைச் சாது அச்சுக்கூடத்தினர் முயற்சி பெரிதும் பாராட்டற்பாலது) புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் அன்பு நிலையத்தார், சுவாமி சுத்தானந்த பாரதியார் நூல் பலவற்றையும் நன்முறையில் அச்சிட்டுள்ளார்கள். நகரத்தார் நாட்டிலுள்ள பாகனேரித் தமிழ்ச்சங்கத்தாரும் தமிழ் நூல்கள் வெளிவருதற்குத் தக்க துணை புரிந்து வருகின்றனர்.

தமிழ் வளர்ச்சியின்பொருட்டு நடைபெறவேண்டிய வேலைகளெல்லாம் இனிச் சிதம்பரம் அண்ணாமலைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ளுதல் கூடும்.

அச்சின் வசதி மிகுந்த இக் காலத்திலே செய்தித் தாள்கள் பல வெளிப்பட்டும் பொதுமக்களுக்கு நிகழ்

காலச்செய்திகளையும் பல நற்கொள்கைகளையும் அறிவுறுத்துகின்றன. அவை யாவற்றுள்ளும் தலைசிறந்தது 'நவ சக்தி' என்னும் கிழமைத்தாள் ஆகும். தமிழில் அரசியலியக்கக் கருத்துக்களை விரிவுற நன்கு தெரிக்கும் தாள் அதுவே. அது இப்பொழுது நின்றுவிட்டது போலும்.

தருமபுர ஆதீனத்தாரால் நடத்தப்பட்டுவரும் 'ஞானசம்பந்தம்' என்னும் திங்கட்டாளானது தமிழையும் சைவத்தையும் வளர்த்தற்குப் பயன்படுகிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் திங்கட்டாளாகிய 'தமிழ்ப்பொழிலும்', திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் 'செந்தமிழ்ச் செல்வி' யும், மறைமலையடிகள் நடத்திவரும் அறிவுக்கடலாகிய 'ஞானசாகர'மும் உயரிய தமிழ் நடையும், நுண்ணிய மாண்புமிக்க ஆராய்ச்சி நயங்களும் பொதுளித் திகழ்வன ஆதலால், அவை தமிழாராய்ச்சி மாணவர்களால் பெரிதும் போற்றத்தகுந்தன. கரந்தைத் தமிழ்ச்சங்க வாயிலாகத் தமிழுக்கும் தமிழர்க்கும் தம் உடல், பொருள், ஆவி மூன்றினையும் பெரிதும் உதவிய செந்தமிழ்ப் புரவலர் த. வே. உமா மகேசுரம் பிள்ளையவர்கட்குத் தமிழுலகம் செய்யக்கடவதாய கைம்மாறென்னே!

(தமிழ்த் தொன்னூலாராய்ச்சியின் பொருட்டுத் திரிசிரபுரம் பண்டிதர் சவரிராய பிள்ளை என்னும் கத்தோலிக்கக் கிறித்துவப் புலவரால் சில ஆண்டுகளாகச் செவ்வையாக நடத்தப்பட்டுவந்த "*தமிழர் பழமை" என்னும் பத்திரிகை இப்போது நின்றுவிட்டது. அதிற் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வந்துள்ளன.)

*Tamilian Antiquary.

மேலைநாட்டு ஐரோப்பியப் புலவருட் சிலர் தமிழினை விருப்பத்தோ டாராய்ந்து முன்னினும் மிகுதியாகக் கற்கத் தொடங்கினர். ரெவரண்டு பாப்பிலி, பிரான்சு தேசத்து சூலியன், வின்சன் முதலியோர் தமிழ்க்கல்வி நிரம்பியவர்கள். சென்ற நூற்றாண்டிறுதியிலே ஆங்கில அறிவியல் நூலைத் தமிழில் மொழிபெயர்க்கு முயற்சி தொடங்கப் பெற்று, யாழ்ப்பாணத்தில் கிரே என்பவர் எழுதிய "அனாடமி*" என்னும் மருத்துவநூலைத் தமிழாக்குவதன் கட்சென்றது.

இந் நூற்றாண்டில் தக்க பாவலர் மிகச்சிலரே. இதன் தொடக்கத்தில் வாழ்ந்த புலவருள், பாண்டிநாட்டுக் கொட்டாம்பட்டியிலே கி. பி. 1864-ம் ஆண்டிற் பிறந்த கருப்பையா பாவலர் என்பவர் பல சிறு காப்பியங்கள் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய கோவை, அந்தாதி, மாலை முதலியன பல. திருச்செந்தில் திரிபந்தாதி, ஓரெழுத்தந்தாதி, நாமக ளிரட்டைமணிமாலை, ஐந்திணைக் கோவை, திருக்கோட்டாற்றுக் கலம்பகம், அழகர் பதிகம் என்னும் இவை அவற்றுட் சிறந்தன. 'விக்டோரியா பேரரசியார் வரலாறு' இவரால் இயற்றப்பட்டது. இவர் தமிழ்நாடெங்குஞ் சென்று ஆங்காங்கே பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் பழனிக்குமாரபிள்ளை யென்னும் வள்ளல்மீது பாடிய பாட்டொன்று வருமாறு:

"கல்லாத மூடர்கள்பாற் கவியுரைக்கிற்
கற்பனைசொற் கனிவின் சாரம்
எல்லாநன் கறிவரா ரறியாதார்க்
குரைத்தல்கம ரினிலே பாலை
இல்லாமற் கவிழ்த்த தொக்கும்
என்பதுநீ யறியாயா வின்பாச்சொல்ல
வல்லாருன் பாலன்றி யெவர்க்குரைப்பர்
பழனிக்கு மாரவேளே."

* Gray's Anatomy.

மற்றொன்று காண்போம்.

தேங்குழலப் பங்தோசை யித்தியமா வுடலிற்
றிகழ்வடையப் பழம்பணியா ரங்களொலா நீத்தே
ஓங்கியழு தலட்டுபல காரமுள வனைமார்க்
கொடுங்கிப்பா யசங்கர்த்த வுற்றார்க்கு மஞ்சி
வீங்கியபக் கோடாமூலை யிற்பூந்தினவு கொண்டுன்
விரகத்தி லதிரசமுற் றன்பிட்டு வந்தாள்
தாங்குதனின் கடன்செந்தில் வேலரசே யவணின்
றன்பாலா யடைதலெழி றருமுறுக்குத் தானே.

சுப்பிரமணியபாரதி யென்பார் அரசாங்க இயக்கங் களில் மிகுதியும் ஈடுபட்டவ ரெனினும், யாவர்க்கும் விளங் கும் எளிய இனிய தமிழ்ச் சொற்கோவைகளால் நாட்டுப் பற்றும் நம் மொழிப்பற்றும் மிகும் வண்ணம் செவ்விய பாடல்கள் பல இயற்றியுள்ளார். இவர் உவமைகள் இயற்கை நலம் பெரிதும் வாய்ந்தன.

மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினல்
கைகொட்டிச் சிரியாரோ.

மதுரைக்கடுத்த சோழவந்தானில் வேளாளர் மரபிற் பிறந்த அரசஞ் சண்முகம் பிள்ளை யென்பவர் இலக்கியம், இலக்கணம், ~~சித்தா நூல்,~~ சோதிடம் என்பவைகளில் அளவிறந்த தேர்ச்சியுடையவர். இவர் சில ஆண்டுகட்கு முன் காலஞ்சென்றார். இவர் சோழவந்தான் கிண்ணி மடத்துத் தம்பிரானிடம் கல்வி கற்றவர். இவர் மதுரைச் சங்கக் கலாசாலையில் போதகராயு மிருந்தார். ஒரு பாட் டிற்குப் பல பொருள் கூறுவதில் இவர் இணையற்றவர்; பல் வகைச் சித்திரக் கவி பாடுவதிலும் இவருடைய திறமை மிக வியக்கத்தக்கது. ஏகபாத நூற்றந்தாதி மாலை, மாலை மாற்று, இன்னிசை இருநூறு, அந்தாதித் தொடை, நிகண்டு முதலிய அரிய நூல்கள் இவரால் இயற்றப்பட்

டன.) இவர் நுண்மாண் நுழைபுலமுடையா ரென்பது இவர்தம் 'திருக்குற ளாராய்ச்சியாலும்', 'தொல்காப் பியப் பாயிரவிருத்தியாலும்' தெற்றெனப் புலப்படும்.

சண்முகம் பிள்ளை யென்னும் மற்றொரு பெருந்தமிழ்ப் புலவர் திருமயிலாப்பூரிற் சிறந்து விளங்கினர். இவர் செவ்விய உரைநடையில் பல கட்டுரைகள் தாள்களில் எழுதியுள்ளார். இவர்தம் இலக்கண ஆராய்ச்சியும், சைவ சித்தாந்த நூலாராய்ச்சியும் மிகவும் போற்றத்தகுந்தன. மணிமேகலையை முதன்முதல் அச்சிட்டு வெளியிட்டவர் இவரென்ப. 'திருமுல்லைவாயிற் புராணம்' இவரால் இயற் றப்பெற்றது. இவர் பல மாணவர்க்குக் கல்வி பயிற்றிய வர்.

சென்னைக் கிறித்துவக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகத் திகழ்ந்த வி. கோ. சூரியநாராயண சாத்திரி யார் என்பவர் மதுரையிற் பிறந்து சபாபதி முதலியா ரென்பவரிடம் கல்வி பயின்றவர். ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டம் பெற்றவர். இவர் தமிழுக்காக இடைவிடாது உழைத்து மிக இளமையில் (1903-ம் ஆண்டு) இவ்வுலகை நீத்தனர். இவர்க்கு இயற்றமிழ் மாணவர் பலர். அந்தண ருள் நடுநிலைமையும் தமிழார்வமும் உள்ளவர்களில் இவரைப்போல் எவரும் இல்லை. இவர் உயரிய செந்தமிழ் நடையிற் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர்; நாடகப் புலமை சான்றவர்; பாவன்மை யுடையவர்; நல்ல புதுக் கதைகள் (நாவல்) எழுதியவர்; மேலைநாட்டுச் சார்பாய வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்; கூத்தப்பெரு மானிடம் பேரன்புடையவர். இவர் இளமையில் இறந்தது யாவராலும் துயருறத்தக்கது. இவர் 'ஞானபோதினி' என் னும் திங்கள் தாளுக்குச் சில ஆண்டுகளாக உடன்தாட் டலைவராக விருந்தனர். ரூபாவதி, மான விசயம், கலாவதி

என்னும் நாடகநூல்கள் இயற்றியுள்ளார். 'மானவிசய' மென்பது களவழிநாற்பதின் கதையினை யுட்கொண்டது. "பாவலர் விருந்து' என்னும் இவரது நூல் பல பொருள் களைப் பற்றிய பாடல்களின் றொகை. இவரது 'தனிப்பாசு ரத்தொகை' என்னும் காதற்பாட்டு அக்காலத்துச் சென்னை கவர்னருக்கு ஏற்பிக்கப்பட்டு, டாக்டர் சி. யூ. போப் பையரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுளது. இவரது 'நாடகவியல்' என்னும் இலக்கண நூல் நாடக முறையை நவில்வது. 'மதிவாணன்' என்பது உயரிய தமிழ் நடையி லெழுதப்பட்ட ஒரு சிறந்த புதுக்கதை. இவரது மொழியாராய்ச்சி 'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூலினால் இனிது விளங்கும்.

பச்சையப்பன் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண் டிதராயிருந்த செல்வக் கேசவராய முதலியார். எம். ஏ., தமிழில் மிகுந்த ஆர்வமுடையவர். இவர் செந்தமிழ் நடையில் கட்டுரைகள் எழுதுவதிலும், மாணவர்க்குத் தமிழ்ப்பற்று விளைப்பதிலும் வல்லவர். தமிழில் எம். ஏ. தேர்வில் முதன்முதல் தேறியவர் இவரென்ப. தம் மக்களுக்குப் பண்டைத் தமிழாசிரியர்கள் பெயரையே இவர் அமைத்திருப்பது கருதத்தக்கது. தாழ்மனமும் தூய உள்ளமும் உடைய இவர் விரைவில் இவ்வுலகை நீத்தது தமிழர் தவக்குறைவே. தமிழைப் பற்றி இவரெழு திய கட்டுரை தமிழ்ப் பெருமையையும் தமிழரது நாக ரிகச் சிறப்பையும் இனிது விளக்கும் செவ்வியதோர் தனி நூலாகத் திகழ்கின்றது. அதனுள் இவர் தமிழ் நூல்களில் வடமொழிக்கலப்பை ஆய்ந்து அளவுகண்டுள்ளார். இக் கட்டுரையின் முடிவில் அகத்தியர் காலந்தொட்டு இக் காலம் வரையிலுள்ள புலவர்களின் பெயர்களையும், அவர் நூல்களின் பெயரையும் இவர் தொகுத்துவைத்த அட்

டவணை இலக்கியவரலாறு எழுதுவதற்குப் பெரிதுந் துணை புரிவதாகும்.

புதுக்கதைகள் (நாவல்கள்) ஆங்கிலநாட்டில் தக்க புலவர்களால் மக்களியற்கையையும், உலகவியற்கையையும், அவ்வப்போது ஆராய்ந்த புதுக்கருத்துக்களையும், கொள்கைகளையும், கடுத் தின்னுதாரைக் கட்டிப் பூசிக் கடுத் தின்பித்தாற்போலப் பொதுமக்களுக்கு நயமுற அறிவுறுத்துவான் எழுதப்படும் பல்வேறு வகைபட்ட உரையிலக்கியமாகும். இதன் இயல்பறியாது இந்நாட்டிலே தமிழ் நன்கு பயிலாதவர்களும் தம் மனம் போனவாறு இவ்வகை இலக்கியத்தைப் பிழைபட்ட உரைநடையிலெழுதிப் பரப்புவது வழக்கமாய்விட்டது. இவ்வழக்கத்தை முழுதும் மாற்றத் தக்கவழியில் தமிழறிஞர் முயலவேண்டும். பொருள் நயமில்லாத சொற்பிழை மலிந்த கதைகளை அறவே கண்டித் தொதுக்குவதுடன் பள்ளிக்கூடத்திற் பாடங்களாக வைத்தலையும் அகற்றவேண்டும். படித்தவர்களுட் சென்னை இராசதானிக் கல்லூரியில் நூற்கோவையாளராய்* இருந்த யாழ்ப்பாணம் சரவண பிள்ளை பி. ஏ. என்பார் 'மோகனாங்கி' என்னும் ஒரு தமிழ்ப்புதுக்கதை இயற்றியுள்ளார். இராசமைய ரென்பார் 'கமலாம்பா' ளென்னும் ஓரழகிய கதை யியற்றினர். இவ்விருவரும் இக்காலத்தில் இல்லை.

('பஞ்சாமிர்தம்' என்னும் பத்திரிகையின் தலைவராயிருந்த மாதவைய ரென்பவர் புதுமைகள் எழுதுவதில் வல்லவரென்ப. 'பத்மாவதி', 'விசய மார்த்தாண்டம்' என்னும் இவர் நூல்கள் செவ்விய உரைநடையில் உலகியலை விளக்குவன.) சித்தார்த்தர் என்னும் புத்தர் வரலாற்றை இவர் தனித்தமிழில் எழுதியிருப்பது மிகவும் போற்றத்தக்

* Librarian.

கது. இவர் வடமொழிப்பற்றிலுங் குறைபாடுடையரல்லர். இவர் எழுதிய பிறநூல்கள் முத்து மீனாட்சி, உதயவன், குசிகர் குட்டிக்கதைகள், தக்கிண சரித்திர வீரர் முதலியன. குறள்நானூறு திரட்டி இவர் பதித்துள்ளார்.

இந் நூற்றாண்டின் றொடக்கத்திலே சைவ சித்தாந்த நூலறிவினைப் பரப்புதற்காகப் பல பெரியார் முயன்றனர். அவர்களுட் சிறந்தவர் அட்டாவதானம். பூவை. கலியாண சுந்தர யதீந்ர அடிகள் ஆவர். இவர் வேளாள மரபினர். இவர் பலர்க்குத் தமிழுஞ் சித்தாந்தமும் போதித்தவர். 'சித்தாந்த' மென்னும் பத்திரிகைக்குத் தலைவராய்ப் பல காலம் விளங்கினார். இவர் 'தாயுமானவர் பாடற்றிரட்டு'க் குச் செவ்வையான உரை வகுத்துள்ளார்; இக்காலத்து ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்.

சென்னையில் சில காலத்துக்கு முன் தமிழ்ப் புலவர்க்கு அறிவுத்துணையாய் இருந்து காலஞ்சென்ற கனகசுந்தரம் பிள்ளை கிறித்துவக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியராய் விளங்கியவர். இவர் யாழ்ப்பாணத்திற் பிறந்தவர். நூல்களைப் பிழையற அச்சிட உதவிபுரிவதில் இவர் இணையற்றவர். 'இல்லாண்மை' என்னும் ஓர் உரை நடை நூலும் இவர் இயற்றியுள்ளார். பல்கலைக்கழகத்தார் மேற்கொண்டுள்ள தமிழகராதிக்கும் சிலகாலம்தலைமை பூண்டிருந்தார். 'தமிழ் நாவலர் சரிதை' முதலிய நூல்களைப் பிழையறக் காலக்குறிப்புடன் இவர் வெளியிட்டிருக்கிறார்.

சின்னாட்கு முன்னர் காலஞ்சென்ற சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமிழ் நூலும் வட நூலும் நிலை கண்டுணர்ந்தவரென்ப. இவர் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரிய ராகத் திகழ்ந்தவர். பழைய ஆராய்ச்சி முறையில் இவர் தலைசிறந்தவர். இவரது 'தமிழ்ப்புலவர் சரித்திரம்' அகராதி

முறையில் எழுதப்பட்டுப் பெரிதும் பயன் தருகின்றது. தக்க பெரும் புலவர் சிலருடைய வரலாறுகள் அதனுட் காணப்படவில்லை.

திருப்பரங்குன்றில் நெடுநாள் வதிந்திருந்த யாழ்ப்பாணம் காசிவாசி செந்தில்நாத ஐயர் ஆறுமுகநாவலரின் மாணுக்கர். இவர் சைவசமயச் சார்பான வடநூல்களையும் தென் நூல்களையும் நன்கு பயின்றவர். இவருடைய தம்பி சிவசம்புநாத ஐயர் இவர்க்கு மிகுதியுந் துணைபுரிந்து இவருடன் ஒருங்கு வாழ்ந்தனர். செந்தில்நாத ஐயர் மணஞ் செய்துகொள்ளவில்லை. இவர் சைவ சித்தாந்த நன்னெறி நின்றவர். புறச்சமய மறுப்பில் சோமசுந்தர நாயகருக்குப் பின் இவரே தலைநின்றவ ரெனலாம். இவர் கிறித்துமத நூலாகிய பைபிலின் கண்டனமாக 'விவிலிய குற்சித' மென்னுமோர் சிறு நூல் இயற்றியுள்ளார். இவரியற்றிய நூல்களுள் நீலகண்ட பாடிய மொழிபெயர்ப்பு பெரிதும் பாராட்டுதற்குரியது. இவரியற்றிய பிற நூல்கள் சிவஞானபோத வசனுலங்கார தீபம், தேவார வேதசாரம், சீகாழிப் பெருவாழ்வின் காருண்ய மாட்சி முதலிய பல.

யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியா ரென்பாரும் பழைய முறை யாராய்ச்சியிலும், சைவசித்தாந்த உரை நூல்கள் எழுதுவதிலும் சிறந்தவர். ('பிரபஞ்ச விசாரம்' இவரது சிறந்த நூல்.)

திருநெல்வேலி பால்வண்ண முதலியா ரென்பவரும் சைவ சித்தாந்தத்துக்காகப் பெரிதும் உழைத்தவர். இவர் சித்தாந்தக் கருத்துக்களடங்கிய பல கட்டுரைகள் எழுதியதோடு, துகளறுபோதம், திரிபதார்த்த இலக்கணம் முதலிய சைவநூல்களை வெளியிட்டனர். தனித்தமிழிலே 'சொற்பொழி வாற்றுப்படை' யென்னும் உரைநூல் இயற்றியுள்ளார். தமிழ்ச்சொற்கள் அனைத்திற்கும் வேர்ச்

சொல்* காண்பான் இவர் தமது வாழ்நாண் முடிவிலெடுத்துக்கொண்ட முயற்சி முற்றுப்பெறுமுன் இவ ரிறந்தது துயருறத்தக்கது.

நற்றிணைக்கு உரை வகுத்த கும்பகோணம் நாராயணசாமி ஐய ரென்பார் சிறந்த சங்கநூற் பயிற்சியுடையவர். அவர் விரைவில் இவ்வுலகம் நீத்தது வருந்தத்தக்கது.

யாழ்ப்பாணத்து நா. கதிரைவேற் பிள்ளை யென்னும் புலவர் சைவசமயத்தை நிலைநாட்டுவதில் அளவற்ற ஊக்க முடையவர்; சதாவதானஞ் செய்தவர். இவரது கல்வித் திறமை இவர் தொகுத்த தமிழ்ப்பேரகராதி, சைவபூடண சந்திரிகை, சிவச்சேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம் முதலிய நூல்களானும், கூர்ம புராணம், சிவராத்திரி புராணம், பட்டினத்தார் புராணம், அருணைக்கலம்பகம் முதலிய நூல்களுக்கு இவர் கண்ட உரைகளானும் சொற்பொழிவுகளானும் செவ்விதின் விளங்கும். இவர் சென்னை இராயப்பேட்டையில் பாலசுப்பிரமணிய பக்தசன சபையையும் வேறு பல சைவ சபைகளையும் ஏற்படுத்தியவர்; முருகப்பெருமானிடத்துப் பேரன்புடையவர். இவர் தம்மீது இராமலிங்க அடிகளின் மாணுக்கர்கள் தொடுத்த வழக்குகளில் வெற்றிபெற்று தமிழ்மறைக்கு ஆக்கந்தேடினார். இவர் இளமையிற் காலஞ் சென்றது வருந்தத்தக்கது.

திருநெல்வேலியைச் சார்ந்த திருமந்திர நகரத்துள் சில காலங்கட்கு முன்னிருந்த ஆறுமுக நயினார் பிள்ளை யென்பவர் நுணுகிய தமிழறிவும் சைவசித்தாந்த நூலறிவும் உடையவர். தமிழர் தனிப்பெருமையை எடுத்து விளக்குவதில் மிகச் சிறந்தவர். இவர் 'மெய்கண்டான்' என்னும் தாள் ஒன்று செவ்விதாக நடத்திவந்தார்.

* Root.

சாலிய அந்தணர் புராணமும் சிவகலைப் புராணமும், இவர் இயற்றியுள்ளார். தமிழ்த்தொண்டிற் சிறந்த இவர் விரைவில் விண்ணுலகம் எய்தினமை மிகவும் துயருறத்தக்கது.

தஞ்சையிற் சிறந்த வழக்கறிஞராயிருந்து ஆறுதலடைந்திருந்த திருவாளர் சீனிவாச பிள்ளை யென்பார் செவ்விய 'தமிழ் வரலாறு' ஒன்று எழுதியிருக்கிறார். அஃது இரண்டு பகுதிகளையுடையது. அதனுட் சில கொள்கைகள் மறுக்கத்தக்கன.

செங்கற்பட்டுச் சில்லா மாகறல் என்னும் ஊரைச் சார்ந்த காலஞ்சென்ற கார்த்திகேய முதலியா ரென்பவர் தமிழ்ப் பெரும்புலமையும் இடைவிடா ஆராய்ச்சியும் உடையவர். இவரது தமிழ்ப்பற்று அளப்பில்லாதது. இவர் வரலாற்று ஆராய்ச்சி முறையிற் பெரு விருப்புடையவர்; ஆங்கிலம் பயிலாதவர். மிகுந்த உழைப்போடு இவர் எழுதியுள்ள 'மொழிநூ'லென்பது எளிதில் அறியாத பல பொருள்களை நுணுக்கமாக எடுத்துரைப்பதெனினும், அதன் ஆராய்ச்சி பெரிதுந் திருத்தமடைதற் குரியது.

பாம்பன் குமரகுருதாச அடிக ளென்பார் வேளாளர் மரபிற் பிறந்து, உயர்ந்த துறவற நிலையில் நின்று, முருகனது திருவருள் பெற்றுச் சைவசமயத்தை நிலைநாட்டுவான் கூரிய ஆராய்ச்சியோடு பட்ட புறச்சமய மறுப்பு இயற்றுவதிற் றலைசிறந்தவராய்த் திகழ்ந்தார். இவரது 'சைவசமய சரபம்' அதற்கொரு தக்க சான்றாம். இவரியற்றிய 'நாலாயிரப் பிரபந்த விசாரம்' ஆழ்வார்களின் கொள்கைகளைத் தெளிவுற விளக்கிச் சைவத்தை நிலைநாட்டுவது. இவர்தம் பரிபூரணானந்தபோதம், தகராலய ரகசியம், சிவஞான தீபம் முதலிய தத்துவநூல்கள் இவர்தம் சீரிய உபநிடத ஆராய்ச்சியையும், சைவசித்தாந்த நுண்ணூலாராய்ச்சியையும் இனிது விளக்கும். இவர் பாடியுள்ள

'சேந்தன் செந்தமிழ்' என்னும் சிறுநூல் தனித்தமிழ்ச் சொற்களாலமைந்த ஐம்பது வெண்பாக்களையுடையது. இவரியற்றிய பாடல்கள் முருகப்பெருமானின் புகழை விளக்குவனவாய்ப் பலவகைப்பட்டுப் பெருகி நிற்பன. சித்திரக்கவிகள் பாடுவதிலும் இவர் வல்லவர். இவர் பாடல்களிற் பல சந்தச் சொல்நய முடையன. இவர் முருகப்பெருமான் வரலாற்றினைக் 'குமாரசுவாமியம்' என்னும் பெருங்காப்பியமாகப் பாடியுள்ளார். இவர் பல சமய ஆராய்ச்சியுடையவர்; விரிந்த நோக்குடையவர். இவர்க்கு மிகவுங் கடமைப்பட்ட சைவவுலகம் இவரைத் தக்க அளவு போற்றாதிருந்தமை தவக்குறையே.

திருநெல்வேலிக் கடுத்த தச்சநல்லூரில் வாழ்ந்திருந்த இலக்குமண போற்றி என்பார் திருக்குறள் விளக்கத்திற் றலைசிறந்தவர். சுமைல்சு* என்பார் எழுதிய 'ஒழுக்க' முதலிய நூல்களை இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

துறைசையாதீனப் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் கல்வி பயின்று, கும்பகோணம் கலாசாலையிலும், சென்னை அரசாங்கக் கல்லூரியிலும் தலைமைத் தமிழாசிரியராயிருந்து, மகா மகோபாத்தியாயர் என்னும் பட்டம் பெற்ற அந்தணர் சிகாமணியாகிய உ. வே. சாமிநாதையர் பத்துப்பாட்டு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பெருங்கதை முதலிய உயரிய இலக்கியங்களைப் பழைய ஏடுகளிலிருந்து செவ்விய முறையில் அச்சுக்குக் கொண்டுவந்த தனிப்பெருமைக்கு உரியவராவர். வேம்பத்தூரார் திருவிளையாடல், நன்னூல் மயிலைநாதருரை, திருக்காளத்திப் புராணம் முதலிய பிற்காலத்து நூல்களையும் இவர் பதித்துள்ளார். இவர் நூலா

* Smiles.

ராய்ச்சியிலும், அடங்கிய நெறியில் நின்று நூல்களை இடைவிடாது படிப்பதிலும், ஒவ்வொரு நூலின் பொருளையும் பலபட வகுத்துந் தொகுத்தும் ஒழுங்குபடுத்திப் பதிப்பிடுவதிலும் சிறந்தவர். சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றிலும் இவர் எழுதியிருக்கும் அரசர் வரலாறு, புலவர் வரலாறு, அரும்பொருள் விளக்கம் முதலியன இவரது ஆராய்ச்சி உழைப்பை நன்கு விளக்கும். புத்த சரித்திரம், உதயணன் கதை, சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலியவற்றின் கதைச்சுருக்கம் முதலியன இவருடைய உரைநடை நூல்கள். இவரது பேருழைப்புக்குத் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது. இவருடைய பிறநூல்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், என் வாழ்க்கை வரலாறு, கண்டதும் கேட்டதும், புதியதும் பழையதும் முதலியன. இவர்கள் எண்பத்து நான்கு வயதுக்கு மேல் வாழ்ந்திருந்து, கி. பி. 1942-ல் இவ்வுலகு நீத்தனர்.

இலங்கைத் திருவிளங்க மென்னும் வழக்கறிஞர் 'சிவப்பிரகாச'த்திற்கோர் தெளிவுரை வகுத்தவர்.

திருநெல்வேலிக் குறுக்குத்துறையி லிருந்த திருப்பதி சாரச்சாமி என்னும் பெரியார் சிவப்பிரகாசத்துக்கோர் விரிவுரை இயற்றினர்.

வட ஆர்க்காடுச் சில்லாவைச் சேர்ந்த, காலஞ்சென்ற சிறுமணவூர் முனிசாமி முதலியார் என்பவர் பொது மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் இயற்றியுள்ளார்; சித்த நூல்களிற் பல அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார். அவருடைய நூல்களிற் சிறந்தன பிரபஞ்சோற்பத்தி, நாரதர் கலகம், வைத்திய ரத்நாகரம், மூலிகை மர்மம், அநுபவ வைத்தியம், சிவமகா மந்திரம், நவக்கிரக மந்திரம், சோதிட விளக்க சிந்தாமணி, நவகண்ட ஆரூடம் முதலியன.

பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியராகத் திகழ்ந்த ஆ. சிங்காரவேலு முதலியா ரென்பார் பட்டினத்தடிகள் பாடல்கட்கோர் உரை வகுத்துள்ளார். 'அபிதான சிந்தாமணி' என்னும் இவரது பெருநூல் தமிழ்க்கலைப் பேரகராதியாக மிகப் பயன்படுகின்றது. யாழ்ப்பாணத்து முத்துத்தம்பிப்புலவரது 'அபிதான கோச'மும் இத்தன்மையதே.

சென்னைக் கிருட்டிணம்பேட்டைத் திருவாளர் குப்புசாமி முதலியார் என்பார் பல ஆண்டுகளாகச் சைவசித்தாந்த மகாசமாச அமைச்சராயிருந்தார். இவரியற்றிய 'திருக்குறள் விளக்கம்' மூன்று புத்தகங்களாலாகிய பெரியதோர் உரைநடை நூல். இது பல அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றது.

காலஞ்சென்ற காரைக்குடிச் சொக்கலிங்கஞ் செட்டியா ரென்பவர் சைவத்தை நிலைநாட்டுவதில் மிகவும் பாடு பட்டவர். இவர் நகரத்தார் மரபினர். இவர் அந்தாதிப் பதிகம், பிள்ளைத் தமிழ் மாலை, கோவை, ஊசல், சந்தவிருத்தம், நாமாவளிக் கண்ணி, சிலேடை என்னும் சிறுகாப்பிய வகைகட்குரிய இலக்கியங்கள் பல இயற்றியுள்ளார். திருப்பத்தூர்ப்புராணம், பெருந்தோட்டத்து அகத்தீச்சுரப்புராணம் முதலிய புராண காவியங்களும் இவர் இயற்றியுள்ளார். இவரியற்றிய பாட்டு நூல்கள் நாற்பத்தொன்பது; உரைநடை நூல்கள் பதினொன்கு. அவற்றுட் சிறந்தன வேதாந்தத் தெளிவு, மாயாவாதக்கோண் மறுப்பு, சிவஞான போதார்த்த லகுவசனம் என்பன.

திருப்பாதிரிப்புலியூர் வீரசைவ ஞானியார் மடத் தலைவராகிய சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிக ளென்பார் தமிழ் நூல்களையும் வட நூல்களையும் நன்கு பயின்று யாவருள்ளத்தையும் கவரவல்ல எளிய

தமிழ் நடையில் புராணப் பெருஞ்சொல்லும் சித்தாந்த விரிவுரையும் இயற்றும் திறமை வாய்ந்தவர். இவர் பலர்க்குச் சமயக்கல்வியும் தமிழ்க்கல்வியும் அளித்தவர்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, தில்லையிலும் திருநெல்வேலியிலும் செப்பறையிலும் வதிந்திருந்து, தில்லையில் சிவஞானத் திருத்தளியை நிறுவியவரும், அதன் தலைவருமாகிய செப்பறைச் சிதம்பர சுவாமிகளென்பார் சைவசித்தாந்தத்தைப் பற்றிய இருமொழி நூல்களிலும் கூரிய ஆராய்ச்சியுடையவர். இவர் சைவ சித்தாந்த நுட்பங்களை நுணுகியறிவதில் இணையற்றவர்; துறவற ஒழுக்கத்திலும் அத்தகையரே: தேவாரத்துள் 'தோடுடைய செவி' முதலிய சில அரிய செய்யுட்களுக்கு இவர் அகலவுரை வகுத்துள்ளார்; அப்பர் சுவாமிகள் திருவிருத்தத்திற்கும், சிவப்பிரகாசத்திற்கும் செவ்விய உரை எழுதியுள்ளார்; திருக்குறளில் சில செய்யுட்களுக்கும் விரிவுரை இயற்றியுள்ளார். இவர் மறுப்பு நூல்கள் எழுதுவதில் ஊக்கமுடையவர். 'தொல்காப்பியச் சண்முக விருத்தி மறுப்பு' முதலியன இவர்தம் எதிர் நூல்கள். இந்நூல்கள் உயரிய கடிய நடையிலிருப்பதால் பலர்க்கும் பயன்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, திருவனந்தபுரத்தில் உயர்தர வேலையிலிருந்து, திருநெல்வேலிச் சில்லா சிவசைலத்திலே ஆறுதலடைந்திருந்த பொன்னம்பலம்பிள்ளை என்பார் இராமாயண ஆராய்ச்சியில் தேர்ச்சியுடையவர். இக்கால ஆராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டவர். இவரது 'வஞ்சிமாநகராராய்ச்சி'யும் நுட்பமிக்கதே. "தமிழர் பழமை*" என்பதில் இவருடைய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

திருநெல்வேலிச் சில்லா விருதை சிவஞானயோகிகளென்பார் கோயிற்பட்டியிலுள்ள தமிழ் வைத்திய

* Tamilian Antiquary.

சங்கம், திராவிடர் கழகம், பக்திவிலை கழகம் என்னும் அவைகளைச் செவ்விதின் நடாத்திவந்தவர்கள். இவருடைய ஆராய்ச்சி பல தாள்களில் வந்துள்ளன. இவர் சித்தநூற் பயிற்சி சான்றவர். தமிழின் தனிமாண்பினை நிலைநாட்ட முன்வந்தவருள் இவரே முதல்வரென்ப. இவர் நீலகண்ட பாடியத்தைத் தமிழில் சூத்திர யாப்பால் மொழிபெயர்த்தனர். வச்சிர சூசிகௌபநிடதத்தை அகவற்பாவால் தமிழில் செய்துள்ளார். இவர் தம் முதுமைப்பருவத்திலும் முயற்சியில் தலைசிறந்தவர்.

பள்ளிக்கூடங்கட்குரிய பாடப் புத்தகங்கள் எழுதுவதில் தலைசிறந்தவர் ஆசிரியர் கா. நமச்சிவாய முதலியாரென்பவர். இவர் பல தொகுப்பான பாடப்புத்தகங்கள் எழுதியுள்ளார். சில பெருநூல்களும் இவரால் அச்சிடப்பட்டுள்ளன. இவர் தமிழ்ப்புலவர் பலர்க்குத் தக்க உதவி செய்துள்ளார். திருநெல்வேலியிற் பிறந்து சென்னைக் கிறித்துவக் கலாசாலையிலும், இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிலும் உயர்தரத் தமிழ்ப் போதகாசிரியராயும், தமிழகராதித் தலைவராயு மிருந்தனர். அனவரத விநாயகம் பிள்ளை எம். ஏ., எல்., டி., என்பார், 'தமிழ்ப்பெருமக்கள் வரலாறு', 'சைவசித்தாந்த வரலாறு' முதலிய உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார். இவர் சொல்லாராய்ச்சியில் சிறந்தவர். நச்சினார்க்கினியருரையைப்பற்றிய ஓராராய்ச்சி நூலும் இயற்றியிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரென்பார் தேவார அடங்கன்முறை, சிவஞான பாடியத்தின் முற்பகுதி முதலியவற்றை ஆராய்ச்சியுடன் செவ்வையாக அச்சிட்டுள்ளார். தூத்துக்குடி பொ. முத்தைய பிள்ளையவர்கள் சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலியவற்றிற்குப் புத்துரை வகுத்துள்ளார்.

தஞ்சைப்புலவர் உலகநாத பிள்ளை யென்பார் தமிழ்ப் பெரும் புலமையும் இக்கால ஆராய்ச்சியும் உடையவர். இவர் எழுதியுள்ள 'கன்றும் கனியுதவும்', 'கரிகால்வளவன்' முதலிய உயர்ந்த உரைநடை நூல்கள் புலவரால் போற்றத்தக்கன. இவர் ஆங்கில அரசிளங் குமரரிடம் கிள்ளாத்துப் பரிசு பெற்றவர்.

க. ப. சந்தோஷம் என்பார் வட ஆர்க்காட்டு வேலூரில் 'வூர்கீஸ்' உயர்நிலைப் பள்ளிக்குத் தலைவராய் விளங்கிய தமிழ்க்கலை வல்லார். அவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் நகைச்சுவை மிக்கனவாக எழுதியுள்ளார். தமிழ் நாகரிக ஆராய்ச்சியிலும் தமிழை வளர்ப்பதிலும் மிக்க ஆர்வமுடையவர். அவர் 1943-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதுமையடைவதன் முன் இவ்வுலகை நீத்தது மிகவும் துயர முறத்தக்கது.

சென்னை அரசாங்கத்தில் அளவைப்பெரும்பிரிவில் மேற்பார்வைக்குரிய உயர்தர வேலையிலமர்ந்து ஆறுதலடைந்திருந்து காலம் சென்ற பா. வே. மாணிக்க நாயக்கர் என்பார் தமிழ்த் தாய்க்குத் தொண்டு புரிந்த தலைமகனுவார். இவரது நுண்மாணுழைபுலம் யாவராலும் வியக்கத் தக்கது. இவர் துளுவ வேளாளப் பெருமரபினர். ஒலி நூலாராய்ச்சியில் இவருக்கிணையானவர் எவரும் இல்லை. தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சியினுலே "எவ்வகைப் பேச்சொலிக்கும் அடிப்படையாய முதலெழுத்தொலிகளும், சார்பொலிகளும் தமிழின்கண்ணேயே பண்டைத் தமிழ்ப் பேரறிஞரால் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன," என்னும் பெருமையை இக்காலத்தே முதன் முதற் கண்டு, தமிழ் எழுத்துக்களைக் கொண்டே உலகின் கண்ணுள்ள எல்லாமொழிகளின் சொற்களையும் எழுதக் கூடுமென்று யாவருக்கும் அங்கைநெல்லி போல் எடுத்து

விளக்கி, "எல்லா மொழிக்கும் பொதுவாய வரிவடிவை அமைப்பதற்குத் தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவே உறுதியான அடிப்படை," என்று நிலைநாட்டிய தனிப்பெருஞ் சால்பு இவர்க்கே யுரியது. தமிழ்நாட்டினரின் குடிவாழ்க்கைக்கும், அரசியலுக்கும் திருவைந்தெழுத்தே அடிப்படையான மந்திரமென்று தெற்றென விளக்கிய உயர் மாண்பும் இவர்க்கே உரியது. யாவர்க்கும் ஒத்த பொதுநெறி ஒழுக்கத்தை நகைச்சுவை நயந்தோன்ற வகைச்சுவைச் சீர்மையுடன் அறிவுறுத்தும் இவரது வன்மை இவரியற்றிய 'The Madras Zoo' முதலிய சிறு நூல்களில் காணப்படும். பல்வகைத்தாய ஆங்கில அறிவியல் நூல்களுட் போந்த சிறப்புச் சொற்களுக்கெல்லாம் தனித்தமிழ்ச் சொற்கள் அமைப்பதில் இணையற்ற திறமை வாய்ந்தவர். இவர் சித்தர்நூற் பயிற்சி மிக்குடையவர். தனித் தமிழிலே பேசுவதிலும் எழுதுவதிலும் தலைசிறந்தவர். கம்பராமாயணத்தை வால்மீகி நூலோடொப்பிட்டுப் பார்த்து அவ்விரண்டு நூல்களின் ஒற்றுமை வேற்றுமை நயத்தை வகுத்துரைப்பதில் வல்லமை வாய்ந்தவர். இவர் எழுதிய நூல்கள் 'அஞ்ஞானம்', 'தமிழ்மறை விளக்கம்', 'தமிழ் அலைகைத் தொடர்' முதலியன. இவர் நீடிய வாழ்க்கைபெறுது பிரிந்தமை தமிழர் தவக்குறையே.

இதுகாறும் இந்நூற்றுண்டிற் காலஞ்சென்ற புலவர்களைப்பற்றி ஒருவாறு சொல்லப்பட்டது. இனி இப்பொழுதுள்ள புலவர் பெருமக்களைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் சிறந்து விளங்கும் தமிழ்ப் புலவர்களுள் திருநாராயண ஐயங்கார் அச் சங்கத்தாளாகிய 'செந்தமிழ்' என்பதற்குப் பதிப்புத் தலைவராவார். இவரெழுதிய 'நன்னூற் குறிப்பு' இவரது ஆராய்ச்சி நுட்பத்தை இனிது விளக்கும். இவர் அரசிளங் குமாரரிடம் கிள்ளாத்துப் பரிசு பெற்றவரில் ஒருவர்.

இச் சங்கத்தின் சிறந்த அங்கத்தினராயும், சேதுபதியின் அரண்மனைப் புலவராயும் திகழும் ரா. இராகவையங்கார் சில காலம் 'செந்தமிழ்'ப் பதிப்புத்தலைவராய் இருந்தார். இவர் தென்னவராயன் புதுக்கோட்டையைச் சார்ந்தவர். இவர் வஞ்சிமாநகர், சேதுநாடுந் தமிழும், நல்லிசைப்புலமை மெல்லியலார், தமிழ் வரலாறு முதலிய செவ்விய உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார். செந்தமிழ்த்தாளில் கம்பரைப் பற்றிப் பல அரிய நுண்ணிய கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் கம்பராமாயணச் சொற்பொழிவில் வல்லவர் என்ப. இவரியற்றிய பாட்டு நூல்கள் பாரிகாதை, அபிஞ்ஞான சாகுந்தலம், தொழிற் சிறப்பு என்பன. பாற்கரசேதுபதியைப் பற்றியும் பிரிவாற்றுமை காரணமாக இவர் பல வெண்பாக்கள் பாடினர். இவர் வடமொழியிலும் சிறந்த பயிற்சியும் ஆர்வமும் உடையவர். இவரது ஆராய்ச்சி வன்மையைப் பழந்தமிழ்ப் புலவர் போற்றுகின்றனர்கள்.

இவருடைய மைத்துனரான மு. இராகவையங்கார் தமிழகராதிப் பதிப்புக்குத் துணைபுரிந்தவர். இவர் சேரன் செங்குட்டுவன், தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, வேளிர் வரலாறு என்னும் உரைநடை நூல்கள் எழுதினவர். இவரது அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் 'ஆராய்சித் தொகுதி' என்னும் தொகை நூலாக விளங்குகிறது.

இலங்கை நவநீத கிருட்டின பாரதியார் 'உலகியல் விளக்கம்' என்னும் உரைநடை நூல் இயற்றியுள்ளார்.

தஞ்சாவூர்ச் சில்லா வாலையானந்த சுவாமிகளென்பார் இக்காலத்தில் சைவசித்தாந்தத்திற்காகப் பெரிதும் உழைப்பவர். இவர் எழுதிய 'சிவஞான போத விளக்க'மும், சித்தாந்தப் படமும் மிகவும் போற்றற் குரியன.

திருநெல்வேலிச் சில்லா வெள்ளக்கால் என்னும் ஊரில் தொண்டைமண்டல உயர்தர வேளாளர் மரபிற் றோன்றிய ராவ் சாகிப். சுப்பிரமணிய முதலியார் என்பவர் தமிழ் நூலும் ஆங்கிலமும் இனிது பயின்று, மாட்டு மருத்துவத் தொழின்முறையில் அரசாங்க உயர்தர வேலையிலமர்ந்து ஆறுதலடைந்திருப்பவர்கள். தமிழ்மக்கட் குரிய உயரிய நன்னெறியில் ஒழுகும் நடுநிலை திறம்பா உள்ளத்தவர். இவர் தமிழரின் தனிப்பெருமையையும் உயர் நாகரிகத்தையும் எடுத்து விளக்குவதில் இணையற்ற ஆர்வமுடையவர். கம்பராமாயண நயங்களைத் தெரிந்துரைப்பதில் மிக வல்லவர். 'கம்பராமாயண இன்கவித்திரட்டு' என்னும் இவரது நூல் அதற்குத் தக்க சான்றாகும். இக்காலத்து வரலாற்றாராய்ச்சியிலும் இவர் தலைசிறந்தவரென்பது 'இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்தியச் சாதி வரலாறும்' என்னும் இவரது உரைநடை நூலால் தெற்றெனப் புலப்படும். இவரது பாவன்மை அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம், நெல்லைச் சிலேடை வெண்பா முதலிய சிறு காப்பியங்களால் இனிது விளங்கும். ஆங்கிலத்தில் மில்டனுர் எழுதிய 'சொர்க்க நீக்க'த்தின் முதற் காண்டத்தையும், எர்பர்ட் பென்சர் கல்வியைப் பற்றி எழுதிய வியாசத்தின் ஒரு பகுதியையும் முறையே செய்யுள் நடையிலும், உரை நடையிலும் இவர் மொழிபெயர்த்துள்ளார். இவரது விடாமுயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது. எல்லாரும் இறைவனை வேண்டுதற்குப் பயன்படத் தக்கதாய் 'அனைவரும் வேண்டல்' என்னுமொரு சிறு நூல் இயற்றியுள்ளார். இவரது எண்பதாம் ஆண்டு நினைவுமலர் ஒன்று வெளிவந்துள்ளது.

துடிசைக் கிழார் சிதம்பரனுர் என்பார் தனித் தமிழ்ப் பெரும் பற்றுடையவர். இவருடைய ஆராய்ச்சி

கள் பல தாள்களில் கட்டுரைகள் வடிவாக வந்துள்ளன. இவரியற்றிய நூல்களாவன, நித்திய கரும விளக்கம், உருத்திராக்க மகிமை, துடியலூர்ப் புராணம் முதலியன. சேக்கிழார் காலத்தைப்பற்றிய இவரது அரிய ஆராய்ச்சி 'கரந்தைக் கட்டுரை'யில் வெளிவந்துள்ளது.

திருவனந்தபுரம் இசைத்தமிழ்ச் செல்வர் தி. இலக்குமணபிள்ளை திருவிதாங்கூர் அரசாங்கத்தில் உயர்தரப் பொருள்நிலையாளராயிருந்து ஆறுதலடைந்திருப்பவர். இவர் 'நினைவாட்சி' என்னுமொரு நூலியற்றி, அதன்கண் யாவர்க்கும் பொதுவாகிய உயர்ந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இவர் 'இரவிவர்மன்' என்னும் நாடக நூலும் எழுதியுள்ளார். இசைத்தமிழ்ப்புலமையில் இணையற்றவர். தெலுங்கில் தியாகையர் கீர்த்தனம் போலத் தமிழில் சிறந்த பல்வகை இன்னிசைப்பாடல்களமைப்பதில் இவர் மிக்க திறமை வாய்ந்தவர். இசைக் கல்வியைப் பிறர்க் கீவதிலும் ஆர்வமுடையவர். இவர்தம் உயரிய கடவுட் கொள்கையும், தாழ்மனமும் இவரை அறிந்தார் பலராலும் போற்றப்படுகின்றன.

கோயமுத்தூரில் வழக்கறிஞராயிருக்கும் சி. கே. சுப்பிரமணிய முதலியார் இலக்கண இலக்கியப் பயிற்சியும், சைவசித்தாந்த நூலறிவும் மிக்குடையவர். இவர் சிவனடிப் பேரன்பு மிக்கவர்; சைவசமய சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். மணிவாசகப் பெருமான், திருவள்ளுவனார் கூறிய நீத்தார்பெருமை யனைத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக ஆதல் விளக்கும்பொருட்டு இவர் இயற்றிய 'மாணிக்கவாசகர் பெருமை' போற்றற் குரியது. இவர் பெரிய புராணத்திற்கு ஒரு பேருரை இயற்றிவருகிறார்.

சென்னைச் சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., தமிழிலும் சைவத்திலும் அளவற்ற ஆர்வமுடையவர். சைவசித்தாந்தச் சொற்பொழிவியற்றுவதில் திறமை சான்றவர். இக்கால வரலாற்றாராய்ச்சியில் தலைசிறந்தவர். இவர் பல அரிய கட்டுரைகள் இயற்றியுள்ளார். இவர் எழுதிய நூல்கள் 'சைவசமய உணர்ச்சிக்காக நாம் செய்யவேண்டிய வேலை யாது?' 'சிவ சின்னங்கள் அணிவதேன்' முதலியன.

திருநெல்வேலிச் சில்லா குலசேகரன் பட்டினம் இராமநாத பிள்ளை என்பார் தமிழறிவு சான்ற சிவநெறியாளர். தனித் தமிழிலேயே எப்போதும் பேசுதலும் எழுதுதலும் தம் பெருங்கடமையாகக் கொண்டவர். இவரது தமிழார்வம் நாடெங்கும் பரவுவதாக. இவரியற்றிய நூல்கள் தனித்தமிழ் மணங் கமழ்வன. அவை மனையறம், திருவள்ளுவர் திருநாள், மணவிளக்கம், மனை விளக்கம் முதலியன.

சென்னை இராயப்பேட்டைத் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் செந்தமிழ் நயந்தோன்ற எழுதுவதிலும் பேசுவதிலும் தலைசிறந்த வண்மையாளர். இவர் சென்னை இராயப்பேட்டை வெசிலிக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராய் இருந்தவர். தமிழ்ப்புலவர் குழாத்துள் அரசியலியக்கங்களில் மிகவும் பயின்றவர் இவரே. இவர் 'தேசபக்தன்' தாளுக்கு ஆசிரியராய் இருந்தவர். இவர் 'நவசக்தி' என்னும் தாளுக்கும் தலைவராயிருந்தார். இவரியற்றிய செவ்விய உரை நூல்கள், என் கடன் பணி செய்து கிடப்பதே, காந்தியடிகளும் மனித வாழ்க்கையும், பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுட்காட்சியும் தாயுமானாரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்,

தமிழ்நூல்களில் பௌத்தம், தமிழ்த் தென்றல், தமிழ் நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார், பெரியபுராணக் குறிப்புகள் முதலியன. இவர் இளமையில் சில தமிழ் நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். இவரெழுதிய நூல்கள் தமிழறிஞர் பாராட்டத்தக்கன. இவருக்குத் தமிழ்நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது. இவரது அறுபதாமாண்டு நிறைவுவிழா மிக முழக்கமாகக் கி. பி. 1943-ல் தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பட்டது.

திருநெல்வேலியைச் சார்ந்த முந்நீர்ப்பள்ளம் பூரணலிங்கம் பிள்ளை பி. ஏ., ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த புலமையுடையவர். இவர் சிலகாலம் 'ஞானபோதினி' என்னும் செந்தமிழ்த் தாளுக்குத் தலைவராய்த் திகழ்ந்தவர். இவர் பல அரிய கட்டுரைகள் எழுதிப் பல தாள்களில் வெளியிட்டுள்ளார். தமிழிலக்கிய வரலாற்றை முதன் முதல் தொகுத்தெழுதியவர் இவரே. அஃது ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. 'தமிழ் இந்தியா' என்னும் இவரது நூல் தமிழர் நாகரிகத்தின் தொன்மையையும், கடவுட் கொள்கையின் உயர்வினையும் செவ்விதின் தெரிப்பது. இவர்தம் உரைநடை நூல்கள் பல.

திருநெல்வேலிக் கார்காத்த வேளாளர் மரபிற்குரிய இரா. ப. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்., என்பார் செந்தமிழ் நலங்கனிந்த சொற்பொழிவாற்றுவதிலும் உரைநடை யெழுதுவதிலும் ஒப்பற்ற ஆர்வமும் திறமையும் உடையவர். இவர் எழுதிய 'திருக்குறள் நூல்நயம்', 'தமிழ்நாட்டுப் பெண்மணிகள்' முதலிய நூல்கள் இனிமை மிக்க செந்தமிழ் உரைநடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவருடைய 'கம்பராமாயணக் கட்டுரை' ஆராய்ச்சித் திறம் மிக்கது. இப்போதிவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவாளர் பதவியிலுள்ளார்.

மதுரை அமெரிக்கன் மிசன் கல்லூரித் தமிழாசிரிய ராயிருக்கும் கார்மேகக் கோனர் சிறந்த சங்க நூற் புலவர். இஃது அவர் எழுதிய 'பண்டைப் புலவர் வரலாறு' என்பதனால் விளங்கும்.

தூத்துக்குடிக்கடுத்த ஒட்டநத்தமென்னும் ஊரினரா கிய செகவீரபாண்டிய னென்பார் கம்பராமாயணச் சொற்பொழிவாற்றுதலில் வல்லவர். இவர் 'திருக்குறட் குமரேச வெண்பா' வென்னும் பெருநூலொன்று இயற்றி யுள்ளார்.

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை என்பார் சோதிடநூல் வாயிலாகச் சிலப்பதிகாரக் கால முதலியவற்றைத் திட்ப மாகத் தீர்மானித்துள்ளார். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க அமைச்சராயிருந்து 'கலைச்சொல்லாக்கம்' என்னும் நூல் வெளிவரப் பெருந்துணை புரிந்தவர். அந்நூல் ஆயிரக்கணக்கான ஆங்கில அறிவியற் சொற்களுக்கீடான தக்க தமிழ்ப் பதங்களைக் கொண்டுள்ளது.

மணி. திருநாவுக்கரசு முதலியார் சென்னைப் பச்சை யப்பன் கலாசாலையில் தமிழாசிரியராயிருந்து புகழ்படைத் தவர். 'செந்தமிழ்ச் செல்வி'யின் தொடக்கத்தில் அதற்குப் பத்திராதிபராய் இருந்தவர் அவரே. அவர் ஆறு புலவர் வரலாறுகள் அமைந்த ஓர் அழகிய உரைநடை நூல் இயற்றியுள்ளார். அவர் இளமையில் காலம் சென்றது துயருறத்தக்கது.

தமிழ்ப் புதுக்கதைகள் மிகுதியாக எழுதுபவருள் ஆரணி குப்புசாமி முதலியார், பொன்னுசாமிப் பிள்ளை முதலியோர் சிறந்தவர். இவர்களுடைய உரைநடை திருத்த முறுதற்குரியது.

நாடகநூல்கள் இயற்றுவாருள் சென்னைச் சிறு வழக்குமன்றத் தலைவராயிருந்தவரும், சுகுணவிலாச

சபையின் அமைச்சரும் ஆகிய சம்பந்த முதலியா ரியற்றிய நாடகங்கள் பெரிதும் பாராட்டப்படுகின்றன. அவற்றுட் சிறந்தன லீலாவதி சுலோசனை, மனோகரன், சாரங்க தரன், இரண்டு நண்பர்கள், மார்க்கண்டேயர் முதலியன.

பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியா ரென்பார் மகி பாலன்பட்டியில் நகரத்தார் மரபிற் பிறந்தவர். சிலப்பதி காரம், சிந்தாமணி, திருவாசகம் முதலிய தமிழ்ப் பெரு நூல்களின் நுண்ணிய நயங்களைத் திட்பமாகவும் தெளி வாகவும் எடுத்துரைப்பதில் தலைசிறந்தவர்; இருமொழி யிலும் வல்லவர். 'சுக்கிரநீதி' என்னும் பெரு நீதிநூலைப் பிழையற்ற அழகிய செந்தமிழ் நடையில் இவர் மொழி பெயர்த்துள்ளார். அந்நூலினால் இவர் மொழிபெயர்ப்புத் திறம் விளங்கும்; சுலோசனை, உதயணன் கதை முதலிய உரை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்; செய்யுளியற் றுவதிலும் வல்லவர். 'மிருச்சகடிகம்' என்னும் வடமொழி நாடக நூலைத் தழுவி உரையிடையிட்ட பாட்டுடைச் செய் யுளாக 'மண்ணியல் சிறுதேர்' என்னும் அழகிய நூலினை இயற்றியுள்ளார். இவருடைய இலக்கிய நயமும் சமய உணர்ச்சியும் செறிந்த கட்டுரைகள் 'தமிழ் உரைநடைக் கோவை' என்றும் 'சமய உரைநடைக்கோவை' என் றும் கூறப்படும் இரு புத்தகங்களாக வெளிவந்துள் ளன. இப்பொழுது சாணக்கிய நீதிநூலைத் தமிழில் மொழிபெயர்த்து வருகிறார். அரிய ஆராய்ச்சித் திறம் வாய்ந்த இலக்கிய நயம் செறிந்த நூல்கள் அவர்களால் இன்னும் வெளிவருதற்குரியன. அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராயும், தமிழ்ப் பேராசிரியராயு மிருந்து, தற்போது ஆராய்ச்சிப் பகுதியில் உயர்பதவியில் அமர்ந்துள்ளார். தமிழும் வடமொழியும் கற்றவர்களில் முதன்முதல் "பெரும்பேராசிரியர்" (மகா

மகோபாத்தியாயர்) என்னும் பட்டம் பெற்றவர் இவரே. கி. பி. 1941-ல் இவரது அறுபதாமாண்டு நிறைவுவிழாவை நினைவுகூர்தற்பொருட்டு 'மணிமலர்' என்ற அழகிய கட்டுரைத்திரட்டு வெளிவந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்போது இசைத்தமிழாலோசனைக் கழகத்தின் தலைவராய் நியமனம் பெற்றுள்ளார். சென்னை, சிதம்பரம், திருவிதாங்கூர் என்னு மூன்று இடங்களிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்ப்பாடத் திட்டக்குழுத் தலைவராகவும் திகழ்ந்துள்ளார். மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையால் நடத்தப்படும் தமிழ்ப்புலவர் கலாசாலை தோன்றுதற்கும், சிறப்பாய் நடைபெறுதற்கும் காரணராயும், ஆதரவாளராயும் இருப்பவர். தமிழ்நாட்டிலுள்ள பல தமிழ் மாநாடுகளிலும், சைவசித்தாந்த மாநாடுகளிலும் தலைமை பூண்டு அரிய சொற்பொழிவுகள் இயற்றிவருகின்றார். இலக்கிய நய ஆராய்ச்சியில் இணையற்ற தமிழ்த் தலைவராகிய இவர் இன்னும் பல்லாண்டு திகழ்ந்து தமிழ்நாட்டுக்குப் பெரும் பயன் அளிக்குமாறு இறைவன் திருவருள் புரிவானாக.

மறைமலையடிகளின் அருமை மகளாகிய **நீலாம்பிகை** என்னும் பெண்மணி ஒப்பற்ற தனித்தமிழ்ப் பற்றுடையவரென்பது தனித்தமிழிலேயே முற்றிலு மெழுதிய அவரது 'தனித் தமிழ்க் கட்டுரை' என்னும் நூலால் தெள்ளிதிற் புலனாகும். அவ்வினிய உரைநடை நூல் கட்டுரை எழுதக் கருதுவார்க்குச் சிறந்ததோர் முன்மாதிரியாக விளங்குகின்றது. அவரது 'முப்பெண்மணிகள் வரலாறு'ம் அத்தகையதே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலவராய் விளங்கிய நாவலர் பண்டித. ந. மு. **வேங்கடசாமி நாட்டார்** என்பவர் புரைதீர்ந்த தமிழ்ப் பெரும் புலமையுடையவர். இவர் மாணவர்க்குக் கல்வி போதிப்பதில் ஒப்பற்ற ஊக்க

மும் திறமையும் உடையவர். சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவர். இக்கால ஆராய்ச்சியிலும் கைதேர்ந்தவர். இவர் நல்லிசைப் புலவர் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை நுண்ணிதின் ஆய்ந்து, தனித்தனி வெவ்வேறு உரைநடை நூல்கள் இயற்றியுள்ளார். அகத்தியர், நக்கீரர், கபிலர் என்னும் பெரும் புலவர்க்கு வாழ்க்கை வரலாறு வகுத்துள்ளார். இப்படியே மற்றப் புலவர்க்கும் வாழ்க்கை வரலாறு அமைதல் மிகவும் வேண்டியதொன்றே. இவரது வரலாற்றாராய்சியின் திட்ப நுட்பங்கள் 'கள்ளர் சரித்திரம்' என்னும் இவரது உரைநடை நூலில் காணப்படும். இவரது இலக்கிய ஆராய்ச்சியின் நயங்கள் 'கண்ணகியின் கற்பு மாண்பு' என்னும் இவரது கட்டுரையின்கண்ணே மிளிர்ந்திலங்குவன. இவர்பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திற் கெழுதியுள்ள செவ்விய உரை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்கட் குரிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்கள் பலவற்றிற்கும் இவர் எளிய இனிய உரை வகுத்துள்ளார். இவரியற்றிய சிலப்பதிகார உரையும், அகநானூற் றொருபகுதியின் உரையும் வெளிவந்துள்ளன. மணிமேகலைக்கும் பதிற்றுப்பத்திற்கும் இவர் உரை எழுதி வருவதாகக் கேள்வி. செந்தமிழ் விளக்கும் பெருந் தொண்டினையே தமது வாழ்வாகவும் வைப்பாகவும் கருதும் இப்புலவர்தலைவர் வாயிலாக இன்னும் வெளிவராத பல தமிழ்ப் பெருநூல்கள் அச்சூர்தி யேறி உலவும்வண்ணம் தமிழ்ப் பெருஞ் செல்வர்கள் முன்வந்து பொருளுதவியும் ஊக்கமும் அளிப்பாராக. இவரது அறுபதாமாண்டு கி. பி. 1944-ஏப்பிரலில் நிறைவுறுகின்றது.

வரதநஞ்சையபிள்ளை சேலம் ஜில்லா சலகண்டபுரத்தில் வாழ்பவர்; கணக்கர் மரபினர். தமிழ் இலக்கண

இலக்கியம், சைவசித்தாந்தம், சோதிடம் என்பவற்றில் வல்லவர். அவருடைய கலைவன்மையையும் கற்பிக்கும் திறமையையும் மதித்துக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் அவருக்கு 'ஆசிரியர்' என்னும் பட்டமளித்தனர். (அவர் தற்காலத் தமிழ்ப்புலவர்களைப்பற்றி விரிந்த நூலொன்றியற்ற முயன்றுவருகின்றார்.)

சோழநாட்டிலே நாகபட்டினத்துக்கு அருகிலே காடம்பாடி யென்னும் ஊரிலே சைவவேளாண் மரபினராய்த் தோன்றிக் கல்வியறிவொழுக்கங்களில் தலைசிறந்து, சென்னைக் கிறித்துவக்கலாசாலையில் தமிழாசிரியராய்த் திகழ்ந்து, துறவுநிலையுற்று, இப்போது பல்லாவரத்தில் பொதுநிலைக் கழகத்தலைவராய் வீற்றிருக்கும் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் தமிழ்நாடு செய்த பெருந்தவத்தின் தவவுருவினராவர். செந்தமிழினையும், சிவநெறியினையும் அவற்றின் பகைவரால் நலிவுறாவண்ணம் பாதுகாத்து அவற்றிற்குப் பேரறிவின் அடிப்படையிட்டவராதலின், தமிழ்ச் சைவ உலகத்தாரால் தமது தலைமணியாக இவர் போற்றற்பாலர். தனித்தமிழிலே தேனும் பாலுங் கலந்தனைய தீஞ் சொற்சுவை மிக்க இழுமெனும் இனிய உயரிய உரைநடை எழுதுவதிலும் சொன்மாரி பொழிவதிலும் இவர்க்கு ஒப்பாவார் எவருமிலர். இவரது சொல்லினிமைக்கு ஏற்பக் குயிலோசை போன்ற குரலினிமையும் இவர்க்கு இயற்கையில் அமைந்துள்ளது பெருமகிழ்ச்சிதரத்தக்கது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்த பண்டைத் தமிழ் நாகரிகநிலையினுக்குப் புத்துயிரளித்து, அதனை இன்றும் என்றும் நின்று நிலவச்செய்தற்குரிய பெருமுயற்சியினை இவர் தமது தலையாய கடமையாகக் கொண்டவர்.

பண்டைத் தமிழ் நாகரிக ஆராய்ச்சியில் இவர் தலைசிறந்தோரென்பது 'பண்டைத் தமிழரும் ஆரியரும்' என்னும் இவரது உரைநடை நூலால் தெற்றெனப் புலனாகும். தமிழ்ச்சங்க இலக்கியங்களைப் பலபட வகுத்தும் தொகுத்தும் இனிது விளக்கும் இவரது பேராற்றல், முல்லைப்பாட் டாராய்ச்சியுரை, பட்டினப்பாலை யாராய்ச்சியுரை, திருக்குறளாராய்ச்சி, குறிஞ்சிப்பாட் டாராய்ச்சி முதலிய நூல்களால் மலையிலக்காக விளங்கும். வடமொழி நான்மறை, மறை முடிவுகள் (உபநிடதங்கள்) மிருதி நூல்கள், கற்ப சூத்திரங்கள், இதிகாசங்கள், யோக நூல்கள், சிவாகமங்கள் என்னும் வடமொழிப் பெரு நூல்களையும், மேலைநாட்டு ஆங்கில மெய்ந்நூல்களையும் பிற நுண்ணூல்களையும் நுணுகியாராய்ந்து, அவற்றின் அரிய உண்மைகளைக் கேட்போர் உள்ளத்தைப் பிணிக்குந் தகைத்தாய எளிய இனிய முறையிலே தமிழ் நன்மக்களுக்கு விரித்து விளங்க அறிவுறுத்தும் இவரது தனிப்பெருந்திறமை, இவர் நடத்திவரும் 'அறிவுக் கடல்*' என்னும் பத்திரிகையிற் போந்த பல கட்டுரைகளினும் சிறப்புற்று விளங்குகின்றது. இவரது வரலாற்றுராய்ச்சி வன்மை, "வேளாளர் யாவர்" "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்" என்னு நூல்களில் வெள்ளிடை விலங்கலாகத் திகழ்கின்றது.

தமிழ்ப்புலவர்களுள் மேலைநாட் டாராய்ச்சிமுறையினையும், மேலைநாட் டெரிய கருத்துக்களையும் தமிழ் மக்களுக்கு எடுத்து விளக்கிப் பெரும்பயன் விளைப்பதில் முதன்முதல் முயன்றவரும், அம்முயற்சியில் தனிமேம்பாடுற்றவரும் இவரே. நூல்களுக்கு அகலவுரை காணும் இவராற்றல் இவரது 'திருவாசக விரிவுரை'யால் நன்கு

---

* ஞானசாகரம்

போதரும். நாவலெழுதல் முறை இத்தகையதென்று நம்மவர்க்கு நன்கு அறிவுறுத்தும் இவர் நூல்கள் 'கோகிலாம்பாள் கடிதங்கள்', 'நாகநாட்டரசி' என்பன. பண்டைச் செந்தமிழ்ச்சுவை ததும்பும் செய்யுளியற்ற வல்ல இவரது திறமை, 'திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை', 'சோமசுந்தரக் காஞ்சி' என்னும் சிறு காப்பியங்களால் இனிது விளங்கும். ஆங்கிலத்திலும் வடமொழியிலும் உள்ள சிறந்த நூல்களை மூல நூல்களின் சொற்பொருளாற்றல் குறைவுபடாவண்ணம் தெள்ளிய செந்தமிழ் நடையில் மொழிபெயர்க்கும் சீர்மை, முறையே இவரியற்றிய 'சிந்தனைக் கட்டுரைகள்', 'சாகுந்தல நாடகம்' என்னும் நூல்களால் இனிது விளங்கும். சைவ சித்தாந்த மகா சமாசத்தை நிறுவிச் சிலவாண்டுகளாக அதனைச் சிறப்புற நடத்தினவர் இவரே. 1940-ல் இவர் சென்னையில் நிகழ்ந்த தமிழர்சமய மாநாட்டில் தலைமை பூண்டு இயற்றிய பேருரை 'தமிழர் மதம்' என்னும் நூலாக அமைந்துள்ளது.

உலகெங்கும் தமிழ் மணமும் சிவ ஒளியும் பரவி ஓங்குக. ஈண்டுக் குறித்த பெரும்புலவர்கள் வாயிலாகவும், அவர்வழி வரும் எதிர்காலப் புலவர்கள் வாயிலாகவும் தென்னாட்டிலும், பிற எந்நாட்டிலும் தமிழ் நூலறிவும், பழந்தமிழ்ப் பெரு நாகரிகமும், தமிழரது உயரிய கடவுட் கொள்கையும் நிலைபெற்றுத் தழைத்தோங்கி, மன்பதைகட்குப் பெரும்பய னளிக்கும்வண்ணமும், தமிழறிஞர் ஊக்கமுற் றெழுந்து கழிபேரார்வத்துடன் தளர்வின்றி இடைவிடாது முயலும் வண்ணமும், அச்சீரிய பெருமுயற்சி தழைக்கும் வண்ணமும் எல்லாம் வல்லமுழுமுதற் கடவுள் திருவுளங்கொண்டு திருவருள் நல்குவாராக.